நவ
பாரதச்
சிற்பிகள்

வ. உ. சிதம்பரம் பிள்ளை

என். சம்பத் — பெ. சு. மணி



நவ பாரதச் சிற்பிகள்

வ. உ. சிதம்பரம் பிள்ளை

மூலம் :

ஆர். என். சம்பத் — பெ. சு. மணி

தமிழாக்கம் : பெ. சு. மணி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்

இந்திய அரசு.

ஆகஸ்ட், 1995 (அஸ்வின, 1917)

ISBN : 81-230-0281-4

பதிப்புரிமை: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

விலை ரூ. 70.00

புது தில்லி, பாட்டியாலா ஹவுசிலிருக்கும் இந்திய அரசு, செய்தி ஒலிபரப்பு அமைச்சக பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், இயக்குநர் வெளியிட்டது.

விற்பனை நிலையங்கள்: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், சூபர் பஜார், கன்னாட் சர்க்கஸ், புது தில்லி-110 001. காமர்ஸ் ஹவுஸ், கரீம்பாய் ரோடு, பல்லார்டு பியர், பம்பாய்-400 038. எஸ்பிளனேட் ஈஸ்ட், கல்கத்தா 700 069. எல்.எல்.ஏ. ஆடிடோரியம், 736 அண்ணா சாலை, சென்னை-600 002. பீகார் ஸ்டேட் கோ-ஆப்பரேடிவ் பாங்கு பில்டிங், அசோகா, ராஜ் பத், பட்னா-800 004. பிரஸ் ரோடு, திருவனந்தபுரம்-695 001. 10-பி, ஸ்டேஷன் ரோடு, லக்னோ-226 019.

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை-600 014.

முன்னுரை

மாபெரும் தேசபக்தரான வ. உ. சிதம்பரம் பிள்ளையைப்பற்றி ஆங்கிலத்தில் ஆதாரபூர்வமான செய்திகளுடன் வெளிவரவேண்டியது, நீண்ட காலத்தேவையாகும்.

'கப்பலோட்டிய தமிழன்' எனும் என்னுடைய சிறிய, பிரபலமான தமிழ்நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று 1972-இல் வெளிவந்தது. இப்பொழுது ஆங்கிலத்திலிருந்து தமிழில் வெளிவரும் இந்த மொழிபெயர்ப்பு நூல், முழுமையான வாழ்க்கை வரலாற்று நூலாகும்.

தமிழில் வ. உ. சி.யைப்பற்றி வெளிவந்த முதல் நூல் என்னுடைய 'கப்பலோட்டிய தமிழன்' எனும் நூலாகும். இது, 1944-இல் வெளிவந்தது. இந்த நூல் வ. உ. சி. யைப்பற்றி பலர் அறிந்துக்கொள்ள உதவியதுடன், தமிழில் நூல்கள் தொடர்ந்து எழுத ஊக்கமும் அளித்தது. தமிழ்நாட்டு பாமரமக்களும் புரிந்துக்கொள்ளும் வகையில், வ. உ. சி.யைபபற்றி மாநாடுகளையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தினேன். வ. உ. சி.யின் மகத்தான அரசியல் பங்களிப்பையும், அவருடையத் தமிழ்த் தொண்டுகளையும், சைவசித்தாந்தப் புலமையையும் நான் எடுத்துரைத்தேன். இவையெல்லாவற்றையும் நான் ஓர் இயக்கமாகவே நடத்தினேன்.

1946-இல் நான் தமிழரசுக் கழகத்தை அமைத்தேன். இந்திய தேசியக் கண்ணோட்டத்தில் தமிழ் மொழி—பண்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் புத்துணர்ச்சி காணப் பிரசாரம் செய்யும் அமைப்பாகத் தமிழரசுக் கழகம் விளங்கியது. இதற்காக 'தமிழ்முரசு' எனும் இதழையும், பிறகு 'செங்கோல்' எனும் இதழையும் நடத்தினேன். இந்த இரண்டு பத்திரிகைகளையும் வ. உ. சி.யின் வாழ்க்கை, அவருடைய பணிகள்

முதலானவற்றைப் பரப்பிடப் பயன்படுத்தினேன். ஆண்டு தோறும் வ. உ. சி. மறைந்த நாளான நவம்பர் 18 ஆம் நாளை "வ. உ. சி. நினைவுநாளாக"க் கொண்டாடத் தமிழகமெங்கும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தேன். தமிழரசுக் கழகத்தின் பத்திரிகைகளை, வ. உ. சி. நினைவு மலர் களாகவும் வெளியிட்டு வந்தேன்.

ஆனால் என்னுடைய இந்த முயற்சிகள் எல்லாம் தமிழகத்தில் மட்டும் நடைபெற்றன. இப்பொழுது, இந்த வெளியீடு இன்னும் பரவலான இடங்களில் சென்று தேசபக்தர் வ. உ. சி.யைப்பற்றி மேலும் பலர் அறிய வாய்ப்பளிக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

ஆங்கிலத்தில் வெளிவந்த மூல நூலின் ஆசிரியர் களான டாக்டர் என். சம்பத்தையும், பெ. சு. மணியை யும் 'நன்கு அறிவேன். முன்னவர், சென்னை மாநிலக் கல்லூரியில் இருந்து பணி ஓய்வு பெற்ற சம்ஸ்கிருதப் பேராசிரியர். அடுத்தவர் ஊக்கமுள்ள திறனாய்வாளர். இவர் தமிழ்நூலாசிரியர்கள், அரசியல் தலைவர்கள், விடுதலைப் போராட்டம் போன்ற தலைப்புகளில் நூல் களை எழுதுவதில் ஆர்வமுடையவர். தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதக்கூடியவர். பெரும்பாலும் பலரும் அறிந்திராதச் செய்திகளைத் தமது நூல்களில் வழங்கி வருபவர். இவரை தமிழ் எழுத்தாளராக நான் கடந்த முப்பது ஆண்டுகளாக அறிவேன். மகாக்வி பாரதி யாருக்கு இவர் ஆற்றி வரும் இலக்கியத் தொண்டு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

இவர்கள் இருவரும் இணைந்து வ. உ. சியைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதியுதை திரு. பெ. சு. மணி தமிழாக்கம் செய்தது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த நூலைப் படித்தபொழுது, தேசத்தின் தென்கோடியில் தோன்றிய அஞ்சா நெஞ்சினரான விடுதலைப் போராட்ட வீரர், எவ்வாறு தேசியக் கண்ணோட்டத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ளார் என்பது மனநிறைவைத் தருகின்றது.

கல்லூரிகளில் இந்த நூலைப் பாடநூலாக வைக்க நான் பரிந்துரை செய்கின்றேன். இதனால், விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியை மட்டுமல்லாமல், தேச பக்தி உணர்வையும், மானத்தையும் இளைஞர்கள் பெறு வார்கள்.

பத்து அத்தியாயங்களில், கவர்ச்சியானத் தலைப்பு களில் அமைந்துள்ள இந்த நூல், வீரம் மிக்க அரசியல் தலைவர் காலச் சூழலையும், அவர் தொழிற்சங்க இயக் கத்தின் தென்னிந்தியாவில் முன்னோடியாக விளங்கிய தையும், சைவசித்தாந்தம், தமிழ் மொழி-இலக்கியத்தில் அவர் பெற்றிருந்த பலதுறைப் புலமையையும் எடுத் துரைக்கின்றது.

இந்திய அரசாங்கத்தின் செய்தி-ஒலிபரப்புத் துறை யின் சார்பில் புத்தக வெளியீட்டு பிரிவால் 'நவபாரதச் சிற்பிகள்' எனும் தொடரில் இந்தியப் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளியிடப்பட்டு வருவது, நமது நன்றியறிதலுக்குரியது. இது மிகவும் புனித்மானப் பணி; இளைஞர்கள் சிறந்த நல்லுணர்வுகளுடன் தேசியத் தில் பங்கேற்று, நாட்டை உருவாக்கும் செயல்களில் ஈடுபட்டு சரியான திசையில் செல்ல இத்தகைய வெளி யீடுகள் தூண்டவல்லன.

தமிழ் நாட்டின் மாபெரும் தேசபக்தரும், பேரறிஞரு மான ஒருவருக்கு அஞ்சலி செய்யும் இந்த அரசியல் வாழ்க்கை வரலாற்று நூல் வரவேற்கத்தக்கதாகும்.

ம. பொ. சிவஞானம்

பொருளடக்கம்

முன்னுரை

1. எதிர்ப்புச் சூழலின் உருவாக்கம் ... 1
2. மாவீரனின் தோற்றம் ... 48
3. அரசியல் வானில் எழுஞாயிறு ... 61
4. சுதேசி இயக்கமும் கப்பலோட்டிய சாதனையும் ... 78
5. விடுதலைப் போராட்டக் களத்தில் ... 108
6. அடக்குமுறைகளும், வரலாறு காணாத கடுந்தண்டனையும் ... 136
7. செக்கிழுத்தச் செம்மலின் சிறைவாசம் ... 184
8. சிறைவாசத்திற்குப் பின் தொடர்ந்தப் பணிகள் ... 193
9. காந்தி சகாப்தத்தில் வ. உ. சி. ... 205
10. வ. உ. சி.யின் தமிழ்த் தொண்டு ... 229
11. முடிவுரை ... 251
12. பிற்சேர்க்கைகள் (ஆங்கிலத்தில்) ... 259

1. **V.O.C.'s** Letter to Gandhi
2. "The Struggle at Madras"
— Bande Mataram — Calcutta-30.3.1908, Sri Aurobindo.
3. "The Tuticorin Victory"
— Bande Mataram — Calcutta-13.3.1908 — Sri Aurobindo.
4. Speech of the Late Prime Minister Indira Gandhi
5. The Swadeshi Movement in Ceylon — Ceylon observer, April-6, 1906.

1

எதிர்ப்புச் சூழலின் உருவாக்கம்

ஒரு நாட்டின் வரலாற்றில், நூற்றாண்டுகள் ஒரு பொருட்டல்ல. நீண்டகாலப் பரப்பில் மக்கள் எதிர் கொள்ளும் அறைகூவல்கள் இன்றியமையாதன; மிக முக்கியமானவையாகும். அவர்கள் திரண்டெழுந்து வெளிப்படுத்தும் மனவெழுச்சி; அவர்கள் போற்றிப் புகழ்ந்து பின்பற்றுகின்ற பெரும் இலட்சியங்கள், பெரும் விருப்பங்கள்; அவர்கள் ஜீரணித்த ஏமாற்றங்கள், விரக்திகள்; அவர்கள் பிறந்த நாட்டின் மீது இடை விடாது சொரியும் அன்பும் மரியாதையும்; காலந்தோறும் வழிநடத்தும் பெருமதிப்புடைய மரபின் மீது கொள்ளும் தனிப் பற்றும் ஆகியன அனைத்தும் ஒரு நாட்டின் காலப் பரப்பில் குறிப்பிடத்தக்கனவாகும்.

பழம்பெரும் நாடான பாரத நாடு, ஆன்மிகத்தையும், மரபார்ந்த உணர்வுகளையும் போற்றிக் கொண்டு வருவதால் 'புண்ணிய பூமி' என்றும் கருதப்பட்டு வருகின்றது. தேசியம், தேசப்பற்று எனும் நவீனக் கருத்துகள் பாரதத்தின் பண்டையக் காலங்களில் காணப்படவில்லை என்பது உண்மைதான். ஆனாலும், காலப்போக்கில் பலவகைப்பட்ட இனங்களுடன் கொண்ட தொடர்பால் இந்த நவீனக் கருத்துகள் காலத்திற்கேற்ப ஏற்றுக் கொள்ளப்பட்டன. நாட்டுப் பற்றில் இந்தியர்கள் பிற நாட்டார் எவர்க்கும் பின்தங்கியவர்கள் அல்லர் என்பது சோதனைமிக்க காலகட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வெளிப்பாடு ஒன்று பாரத கண்டத்தின் தென் பகுதியில் நிகழ்ந்தது. இதற்குரிய காலத்தையும், களத்தையும் கண்டு எதிர்ப்புச் சூழலை உருவாக்கியவர்களுள் ஒருவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. இவர்

பேராற்றல் படைத்தவர்; நாட்டுப் பற்று மிக்க தேசிய வாதி; செயல்வீரர்; அந்நிய ஆட்சியை எதிர்த்த விடு தலைப் போராட்டத்தில் உடல், பொருள், ஆவி அனைத் தையும் அர்ப்பணித்தவர். இவருடைய வீர வரலாற்றைக் கூறுவது, இந்த நூல்.

மேற்கு மலபார் கடற்கரையில் கப்பாடு எனும் சிற் றூரில் முதன் முதலாக ஓர் ஐரோப்பியன் 1498, மே மாதம் 27-ந் தேதியன்று கரையிறங்கினான். அந்த ஐரோப்பியன் பெயர்தான் வாஸ்கோடகாமா. ஐரோப் பிய நாடுகளில் ஒன்றான போர்த்துகல் நாட்டைச் சேர்ந்தவன், அவன். வர்த்தகத் தொடர்பிற்காக, 'சன் கேப்ரியல்' எனும் கொடிக் கப்பலில் இந்தியக் கடற் கரையோரத்தில் காலெடுத்து வைத்தான், வாஸ்கோட காமா. இந்திய மண்ணில் மேலை கடலோடிகள் அலை அலையாய் வருவதற்கு முதன் முறையாக வழி வகுத்த வனும், இவனே. வர்த்தக உறவு கொள்ள வந்தவர்கள், பிற்காலத்தில் அரசியல் ஆதிக்கத் திட்டங்களையும் தீட்டி னார்கள். இந்த அரசியல் ஆதிக்க வரலாற்றை முடிவிற் குக் கொண்டு வந்த இந்தியாவின் விடுதலை நாளான 1947, ஆகஸ்டு 15-இல் அந்நிய ஆதிக்கத்தின் இறுதிச் சின்னமாகத் திகழ்ந்த மவுண்ட் பேட்டன் பிரபு, மூவண்ண தேசியக் கொடியை ஏற்றுவித்து வணங்கினார். அந்நிய ஆதிக்கத்தையும், சுரண்டலையும் முடிவிற்குக் கொண்டு வந்த இந்தச் சுதந்திர நாள் விடுதலை பெற்ற இந்தியா வின் புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. மிகப் பழமை வாய்ந்த இந்தியாவின் இந்த வரலாற்று நிகழ்வை சுதந்திர பாரதத்தின் முதல் பிரதம மந்திரியான ஜவஹர் லால் நேரு அவர்கள், "காலத்தின் விலக்க முடியாதச் சந்திப்பு" எனக் குறிப்பிட்டார்.

வாஸ்கோடகாமா முதல் மவுண்ட் பேட்டன் வரையி லான நெருக்கடி மிக்க 449 ஆண்டுக் காலப் பரப்பில் எவ்வளவோ நிகழ்ந்துவிட்டன. பல சோதனைகளையும், பலவகையான அறைகூவல்களையும் இந்தியா சந்திக்க வேண்டியிருந்தது.

வாஸ்கோடகாமாவைத் தொடர்ந்து பல ஆங்கிலேய, ஐரோப்பிய வர்த்தகக் குழுக்கள் இந்தியாவை தங்கள் இலக்காகக் கொண்டு வந்தன. 1600-இல் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, 1602-இல் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி, 1644-இல் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி முதலானவை வர்த்தக நோக்கங்களுடன் இந்தியாவையும், கீழ்த்திசையையும் நோக்கி பயணக் குழுக்களாக அணி வகுத்துக்கொண்டு புறப்பட்டன.

1896-இல் சுவாமி விவேகானந்தர் தமது இங்கிலாந்து விஜயத்தின் பொழுது, லண்டனில், ''இந்தியா-லண்டன்'' எனும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறிய பின்வரும் கருத்து நிலைமையை தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது.

''உலக நாகரிகத்தில் பேராற்றல் கொண்ட இந்திய வர்த்தகத்திற்காக ஐரோப்பா கடந்த காலத்தில் போராடியது. அது போராட்டத்தில் வென்றது, மானுட சமுதாய வரலாற்றில் ஒரு திருப்பம் என்று அழைக்கப்படும் அளவிற்கு அமைந்தது எனலாம்''.

இந்திய மண்ணில் வேரூன்றிய நிலையில் இந்த அயல்நாட்டு வர்த்தக சமூகங்கள், உள் நாட்டில் சுதேச ஆட்சியாளர்கள், அரசர்களிடையே நிலவியப் போட்டிப் பகைகளை தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டின. சுதேச அரசர்களை அரசியல், நிர்வாகத் துறைகளில் சதுரங்க விளையாட்டின் பகடைக் காய்களாக நகர்த்தி—நகர்த்தி மெதுவாகத் தங்க்ள் மேலாதிக்கச் செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டன. இவ்வாறாக வர்த்தக நோக்கு என்பது அரசியல் நோக்காக மாற்றம் பெற்று, காலனியாதிக்கம் தோன்றிட வழியமைத்தது. அரசியல் மேலாண்மையின் உச்சக்கட்டப் போட்டியில் பிரிட்டன் தனது காலனியாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டது. இதன் விளைவாகத்தான், ''பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் சூரியன் எப்பொழுதும் மறைவதில்லை'' என வின்ஸ்டன் சர்ச்சில் பெருமிதத்துடன் பிரகடனப்படுத்த முடிந்தது.

பிரிட்டனின் அரசியல் சூழ்ச்சியை முன்னுணர்ந்து 1756-இல் வங்காள நவாப் சிராஜ் உத்தௌலா, தனது மகனிடம் பின்வருமாறு எச்சரித்தார்.

''ஆங்கிலேயர்கள் தங்கள் உள்ளங்களில் பொன்னாசையையும், அரசியல் அதிகாரச் சிற்றின்ப வேட்கையையும் வளர்த்துக் கொண்டவர்கள். இவ்வுண்மையை அவர்களுடைய கீழைநாட்டு நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. கடவுளிடம் பெற்ற நல்லொழுக்கப் போதனைகளை அவர்கள் சிறிதும் மதிப்பதில்லை. அவர்களுடைய அரசியல், அதிகார வேட்கைகள், அவர்களுடைய கடவுள் நம்பிக்கைக்கு எதிரானவை. ஆங்கிலேயர்களை நசுக்கிவிடு' என்று மீண்டும் ஒருமுறை மகனே உன்னிடம் கூறுகின்றேன். பண்டகசாலைகளுக்காகவும், போர்வீரர்களுக்காகவும் அவர்களுக்கு உன்னுடைய நாட்டில் அனுமதி தந்தால், விரைவில் உன்னுடைய நாடு, அவர்களுடைய நாடாகிவிடும்.''

இந்த எச்சரிக்கை எடுபடாதவாறு, சந்தர்ப்பச் சூழலும் சதி செய்துவிட்டது. இதைப் பற்றி கார்ல் மார்க்ஸ் கூறியதாவது: ''மொகலாயப் பேரரசர்களின் சர்வ சக்தி வாய்ந்த தலைமை, மொகலாய ராஜப் பிரதிநிதிகளால் தகர்க்கப்பட்டது. மொகலாய ராஜப் பிரதிநிதிகளின் அரசியல் அதிகாரம் மராட்டியர்களால் தகர்க்கப்பட்டது. மராட்டியர்களின் அரசியல் அதிகாரம் ஆப்கானியர்களால் தகர்க்கப்பட்டது. இவ்வாறு அனைவரும் போராடிக் கொண்டிருந்தபொழுது, பிரிட்டன் விரைந்து நுழைந்து அனைவரையும் அடக்கி ஆள முடிந்தது.''

இந்தியா தனது நெடிய வரலாற்றில் பெரும்பான்மையான அந்நிய படையெடுப்புகளைக் கண்டுள்ளது. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியா, திருப்பி மறிக்க முடியாத ஒரு நிலைப்பாட்டில் தள்ளப்பட்டது. இதைத் தெளிவுபடுத்துகின்றது, உலகப் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான ஆர்னால்ட் டாயின்பீயின் பின்வரும் சொற்கள்.

''மேலை நாட்டினருடன் நிகழ்ந்த மோதல்களில், இந்தியாவிற்கு ஏற்பட்ட அனுபவத்தை உலகத்தின் பிற சமூக அமைப்பு எதுவும் பகிர்ந்து கொள்ள முடியாது. மேலைநாட்டு ஆயுதங்களால் மட்டும் வென்றெடுக்கப் படவில்லை; அதன் பிறகு மேலைநாட்டு ஆட்சி நிர்வாகி களால் ஆளப்பட்டது.... பதினெட்டாம் நூற்றாண்டில் மொகலாய முஸ்லீம் அரசு சிதைந்தபொழுது, உடனடி யாகத் தொடர்ந்து இந்து மன்னர்களின் ராஜ்ஜியங்கள் நிறுவப்பட்டு விடுமோ என்று சில கணங்கள் நினைக்கத் தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டில் மொகலாயப் பாரம்பர்யம் இழுபறி நிலையில் இருந்தபொழுது, மராட்டிய இந்து சக்தி குழப்பங்களின் பெரும் பகுதியை வென்றெடுத்துவிடும் என்றும் கருதப்பட்டது. பதினெட் டாம் நூற்றாண்டில் முகலாய ராஜ்யத்தை, மராட்டிய இந்து ராஜ்யமாக மாற்றிட எடுக்கப்பெற்ற முயற்சியை, இவ்விரண்டையும் விட மிக்க சக்தி வாய்ந்த மேலை நாட்டு கரம் தலையிட்டு தோல்வியடையச் செய்து விட்டது.''

1857-இல் இந்திய வரலாற்றில் மற்றொரு திருப்பு முனை ஏற்பட்டது. அந்நிய ஆட்சிக்கு எதிராக மொக லாயப் பேரரசின் இறுதிப் பேரரசர் பகதூர்ஷா தலை மையில் இந்து-முஸ்லீம் அரசர்கள், போர் வீரர்கள், நிலப் பிரபுக்கள் ஆகியோர் ஒன்றுபட்டு எழுச்சியுற்ற னர். ஆனால், இந்த எழுச்சி கொடிய அடக்குமுறை களால் ஒடுக்கப்பட்டது. அதுவரை நிலவிய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியுரிமையை பிரிட்டிஷ் பேரரசு நேரடியாக ஏற்றுக்கொண்டது. புதிய நிர்வாகம், மக்களின் சமய-சமூக நம்பிக்கைகளில் தலையிடாது என்றும், நிர்வாகத்தில் இந்தியர்களுக்கும் போதிய அள வில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் வாக்குறுதிகள் வெளியிடப்பட்டன. இதன் காரணமாக ஆங்கில வழிக் கல்வியும், ஆங்கிலமறிந்த இந்தியர்கள் உயர்தர சமூக அங்கீகாரத்தையும், மதிப்பையும் நாட்டு மக்களிடையே பெற்றார்கள்.

கலாசார எழுச்சிகளும், இயக்கங்களும்

ஆங்கிலம் கற்ற இந்தியர்களிடையே, ஆங்கில மொழிக் கல்வி, இலக்கியம் மற்றும் பிற படிப்புகளாலும் அரசியல் கருத்துகள் பற்றிய விழிப்புணர்வு தோன்றியது. பிரிட்டிஷ் ஆட்சி நிர்வாக அமைப்பு காரணமாக, இந்தியா ஓர் அரசியல் ஒருமைப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. சக்தி வாய்ந்த இந்த சாதனம் இந்தியாவை ஓர் ஒழுங்கமைந்த கட்டமைப்பில் கொண்டுவந்தது. இதன் விளைவாக சமூக பழக்க வழக்கங்களிலும், சமய நம்பிக்கைகளிலும், புதுமை நாட்டங்களிலும் புதியத் தாக்கம் தோற்றுவிக்கப்பட்டது. புதிய கலாசாரக் கட்டமைப்புகள் பற்றியச் சிந்தனைகளும், விழிப்புணர்வும் தலையெடுத்தன. இந்தியாவின் பழம்பெரும் ஞானத்தையும், பண்பாட்டையும் பெரிதும் மதித்து வந்த இந்தியர்களிடையே புதிய சிந்தனையோட்டம் கால் கொண்டது. மேலைநாட்டு நடை, உடை பாவனைகளை தங்களது வாழ்க்கை முறையாக கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளும் போக்கைக் கண்காணித்து, பண்டைய பாரதத்தின் மகோன்னத தங்கள் மீது பற்றும், பாசமும் ஏற்படுத்தவல்ல விழிப்பைத் தோற்றுவிக்க பல கலாசார இயக்கங்கள் எழுந்தன.

ஐரோப்பாவில் இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கமும், ஜெர்மனியில் தோன்றிய சீர்திருத்த இயக்கமும் பெருமளவில் கலாசார புத்தெழுச்சிக்கு, ஊக்கமளித்தன. இதனுடைய உடன் நிகழ்வாக தேசிய உணர்வின் விழிப்பும் கூட வெளிப்பட்டது. இதைப் போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவிலும் பல கலாசார இயக்கங்கள் தோன்றி கலாசார தேசிய எழுச்சியுடன், அரசியல் தேசியத்தின் தோற்றத்திற்கும் துணை புரிந்தன. அரசியல் தேசியமும், தேசபக்தி உணர்வும் கலாசார அடித்தளங்களைக் கொண்டு வளர்ச்சியுற்றது.

பல மதங்களைக் கொண்ட இந்திய நாட்டில் சமயத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை நேருஜி தமது ''இந்திய தரிசனம்'' (டிஸ்கவரி ஆப் இந்தியா) எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''பல நூற்றாண்டுகளாக சமயம், சக்தி வாய்ந்த மேலாதிக்கக் கோட்பாடாகத் திகழ்ந்தது. தத்துவம் கூட சமயத்திடம் பணிந்து நடக்க வேண்டியதாயிற்று. இதன் காரணமாகத்தான், இந்தியாவில் தொடக்கக் காலத்தில் தேசியம் தோன்றி உருக்கொண்டு வளர்ச்சிப் பெற்றக் காலத்தில், அது பலவகையான சமயக் கோட்பாடுகள், சமயச் சீர்திருத்தங்கள் வாயிலாகத் தன்னை வெளிப் படுத்திக் கொள்ள முயன்றது.''

பெரிதும், சிறிதுமான பல இயக்கங்களில், ஒன்பது இயக்கங்கள் குறிப்பிடத்தக்கன. ஏனெனில் இவை தேசிய அரசியலிலும் ஆழ்ந்தத் தாக்கங்களை ஏற்படுத்தின. இந்த இயக்கங்களின் பெயர்கள், பின்வருமாறு:

1. பிரம்ம சமாஜம்; 2. பிரார்த்தனை சமாஜம்; 3. ஆர்ய சமாஜம்; 4. தியோசாபிகல் சொஸைடி; 5. இராமகிருஷ்ணா மிஷன்; 6. வஹாபி இயக்கம்; 7. அலிகார் இயக்கம்; 8. டியோபாண்ட் தார்-உல்-உலூம்''; 9. அகமதியா இயக்கம்.

1. பிரம்ம சமாஜம்:

'பிரம்ம சமாஜம்' என்ற பெயர், பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம் என்னும் பொருளுடையதாகும். உருவ வழிபாட்டை எதிர்த்த ராஜா ராம்மோகன்ராய், உபநிடதத்தில் கூறப்படும் 'பிரம்மம்' எனும் சொல்லைத் தேர்ந்தெடுத்தார். மாசற்றது, உருவமற்றது, குணமற்றது, மாறுபாடு இல்லாதது எனும் பொருள்களை ஏற்கும் 'பிரம்மம்' எனும் சொல்லை ராஜா ராம்மோகன்ராய் ஏற்றுக்கொண்ட பொழுது, நிர்க்குண பிரம்மத்திற்குப் பதிலாக சகுணபிரம்மத்தை ஏற்றுக் கொண்டார். அவர் சகுணவழிபாட்டிற்குரிய பிரம்ம துதிப் பாடல்களை வங்க மொழியில் இயற்றியுள்ளார்.

''ராஜா ராம்மோகன்ராய் அந்தப் பரம்பொருளையே—அழியாத சத்தியத்தையே—தெளிவாக்கினார். அந்தப் பரம்பொருளையே அவர் அந்த நாட்டு பழக்கம்,

மக்களின் பழக்கம் என்ற சிக்கலில் இருந்து விடுவித்து, வங்காளிகளுக்கோ, பாரத நாட்டினருக்கோ மட்டுமின்றி உலகத்தார் அனைவருக்கும் காட்டினார். அந்தப் பரம் பொருளையே அவர் உணர்ந்தது, நம் பழைய முனிவர் களைப் போலவே''. இவ்வாறு பிரம்ம சமாஜியான கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் விளக்கியுள்ளார். 20-8-1828-இல் கல்கத்தாவில் பிரம்ம சமாஜத்தை நிறுவினார், ராஜா ராம்மோகன்ராய். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சமய-சமூக முரண்பாடுகளை சமன் செய்ய உருவாக்கப்பெற்ற பிரம்ம சமாஜத்திற்கு முன்னோடிகளாக, 1815-இல் கல்கத்தாவில் 'ஆத்மிய சபா' எனும் அமைப்பையும், 1823-இல் 'யூனிடேரியன் சர்ச்' எனும் அமைப்பையும் நிறுவினார், ராஜா ராம் மோகன்ராய் (1772-1883).

உடன்கட்டை ஏறுதல் எனும் சதியை ஒழிக்கவும், விதவை மறுமண ஆதரவு, குழந்தை மணம் எதிர்ப்பு, பலதார மண எதிர்ப்பு, ஆங்கிலக் கல்விக்கு வரவேற்பு முதலான சமூக உள்ளடக்கங்களுடன் ஆன்மிக—சமய விவாதங்களையும் ஊக்குவித்தது, 'ஆத்மிய சபா'.

பரமபிதா, தேவகுமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நிலை தெய்வாம்சக் கோட்பாடுகளைக் கொண்ட ''டிரினிடேரியனிஸம்'' எனும் கிறித்துவ சமயக் கோட் பாட்டை எதிர்த்த ''யூனிடேரியனிஸம்'' எனும் கிறித்துவ சமயக் கோட்பாட்டை ஆதரித்தது 'யூனிடேரியன் சர்ச்'.

உலகத்திலேயே முதன்முதலில் பல சமயத்தினரும் ஒன்றுகூடி பரம்பொருளை வழிபட வழிவகுத்தார், ராஜா ராம்மோகன்ராய். தமது பன்மொழிப் புலமையையும், பல சமய சாத்திர ஞானத்தையும் கொண்டு உலக சமயங் களிடையே ஒப்பாய்விற்கும் முதன் முதலில் முயற்சி யெடுத்தவர் ராஜா ராம்மோகன்ராய்.

மிக விரிந்த உலகப் பார்வை கொண்டு, புதிய இந்தியாவின் பிறப்பிற்கு பல தொடக்கங்களை முதன் முதலில் உருவாக்கி, ''இந்திய மறுமலர்ச்சியின் விடி

வெள்ளி'' என வரலாற்றுப் புகழ்கொண்டார், ராஜாராம் மோகன்ராய்.

''இப்போது இந்தியா முழுவதும் கிளைகள் வீசி அனேகப் பெரியோருக்கு ஞானக் கனியும், சாந்தி நிழலும் கொடுத்து உதவி புரிவதாகியப் பிரம்ம சமாஜ மென்ற பெருவிருக்ஷத்திற்கு ராம்மோகனரே வித்தூன்றிய வர்'' எனத் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாராட்டியுள்ளார்.

1898-இல் தேசபக்த மெய்ஞானி என்றும் போற்றப் பெற்ற சுவாமி விவேகானந்தர், ''ராஜா ராம்மோகன் ராயின் போதனைகளில் மூன்று முக்கியமானச் செய்தி கள் உள்ளன. வேதாந்தத்தை அவர் ஒப்புக் கொண்டது; அவரது தேசபக்தி; இந்து-இஸ்லாமியர்களை சமமாகக் கருதியது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரம்ம சமாஜம் மூன்று கிளைகளாக விரிந்தது. தேவேந்திரநாத் தாகூர் தலைமையை ஏற்றுக்கொண்ட ஆதி பிரம்ம சமாஜம்; கேசவசந்திர ஸென்னின் தலை மையை ஏற்றுக்கொண்ட இந்திய பிரம்ம சமாஜம்; பண்டிட் சிவநாத சாஸ்திரியின் தலைமையை ஏற்றுக் கொண்ட சாதாரண பிரம்ம சமாஜம் ஆகியன சமய, சமூக, தேசிய சீர்திருத்தங்களில் முனைப்புடன் தொண் டாற்றியுள்ளன. குறிப்பாக சாதாரண பிரம்ம சமாஜம் இந்திய தேசிய விடுதலைப் போராட்ட உணர்விற்கு பெரும் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளித்தது. இதன் விவரங்களை புகழ்பெற்ற பிரம்ம சமாஜியும், விடு தலைப் போராட்டத் தளபதியுமான விபின் சந்திரபால், தமது ''இந்திய விடுதலைப் போராட்டமும், பிரம்ம சமாஜமும்'' எனும் நூலில் அளித்துள்ளார்.

''சாதி வேறுபாடுகள், கணக்கற்ற அதன் உட்பிரிவு கள் அனைத்தும் மக்களிடையே தேசபக்தி உணர்வு மலரத் தடைகளாய் உள்ளன. ஆகவே மதத்தில் ஏதாவ தொரு மாறுதல் நிகழவேண்டும்; அதுவும் அரசியல் சமூக நலன்களுக்கு ஏற்றதாக அமையவேண்டும்'' என்று

1818-இல் ராஜா ராம்மோகன்ராய் தமது பிரிட்டிஷ் நண்பர் ஜேம்ஸ் ஸில்க் பக்கிங் ஹாம் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். சமூக அரசியல் பொதுவாழ்க்கையில் எதிர்ப்புச் சூழலை உருவாக்கியதில் பிரம்ம சமாஜம் ஒரு முன்னோடி இயக்கமாகும்.

பிரார்த்தனை சமாஜம்

அன்றைய பம்பாய் மாநிலத்தில் பிரம்ம சமாஜத்தின் தாக்கம் காரணமாக "பிரார்த்தனை சமாஜம்", படித்த மேல்தட்டு வர்க்கத்தில் பிரம்ம சமாஜம் தோன்றியதைப் போல, தோன்றியது. 'பிரம்ம சமாஜம்' எனும் பெயருக்குப் பதிலாக பிரார்த்தனை சமாஜம் பெயரிடப்பட்டதற்குக் காரணம் யாதெனில் அக்கால கட்டத்தில் கேசவ சந்திர ஸென் காரணமாக பிரம்ம சமாஜம் கிறித்துவ சமயச் சார்பில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியது என்று கருதப்பட்டதால், அப்பெயர் பம்பாய் மாநிலத்தில் இந்துக்களிடையே கடும் எதிர்ப்பைத் தோற்றுவிக்கும் என்பதாலேயே ஆகும்.

மானவ தர்ம சபா (1843) பரமஹம்ஸ சபா (1849) எனும் இரு சமய—சமூக சீர்திருத்த அமைப்புகள் பிரார்த்தனை சமாஜத்திற்கு முன்பாக பகிரங்கமாக இயங்காமல் ரகசியமாக இயங்கின. இதற்குக் காரணம், வைதிக இந்துக்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள விருப்பமின்மையேயாகும்.

1864-இல் கேசவ சந்திரஸென் பம்பாய் மாநிலத்தில் பிரம்ம சமாஜப் பிரசாரத்திற்காகச் சுற்றுப் பயணம் செய்தார். பரமஹம்ஸ சபாவின் மறைவிற்குப் பிறகு ஓர் அமைப்பை நிறுவி பகிரங்கமாகச் செயலாற்ற முனைந்த சீர்திருத்தவாதிகள் சிலர் பம்பாயில் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்கா என்பவர் தலைமையில் கூடி மார்ச் 31, 1867-இல் பிரார்த்தனை சமாஜத்தை நிறுவினர். இதன் பிரசார இதழாக "சுபோத பத்ரிகா" மே 4, 1873-இல் வெளிவந்தது. மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம்

ஆகிய மும்மொழிகளில் பிரசாரக் கட்டுரைகள் வெளிவந்தன.

மகாகோவிந்த ரானடே, ராமகிருஷ்ண கோவிந்த பண்டாரகர், நாராயண் சந்தவார்கர் முதலான சமய-சமூக-அரசியல் சிந்தனையாளர்கள் பிரார்த்தனை சமாஜத்தை வழி நடத்தினார்கள்.

''மனிதனிடத்தில் அன்பு செலுத்துவது, கடவுளிடத்தில் செலுத்தும் அன்பில் இருந்து எப்படி பிரிக்க முடியாததோ, அவ்வாறே சமூக சீர்த்திருத்தத்தில் இருந்து, சமயத்தைப் பிரிக்க முடியாது'' எனும் கோட்பாட்டை மகாகோவிந்த ரானடே வலியுறுத்தினார். இந்த இயக்கம் பரந்துபட்ட மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெறவில்லையென்றாலும், கலாசார—மனிதாபிமான தேசியச் சிந்தனையை வளர்த்து, அரசியல் தேசியச் சிந்தனைக்கு ஆக்கமளித்தது. இந்த இயக்கத்தைச் சார்ந்த பலர் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு வழிகாட்டியவர் மகாகோவிந்த ரானடே.

ஆர்ய சமாஜம்

ஆர்ய சமாஜத்தை அமைத்தவர் சுவாமி தயானந்த சரஸ்வதி (1824-1883). பம்பாயில் 10-4-1875-இல் இந்த அமைப்பு தோன்றினாலும், இதன் இறுதி வடிவம் லாகூரில் 1877-இல் உருவாக்கப்பட்டது.

குஜராத்தியரான சுவாமி தயானந்த சரஸ்வதி அமைத்த ஆர்ய சமாஜம் பஞ்சாப், உத்திரபிரதேசம், ராஜஸ்தான் முதலான பிரதேசங்களில் சக்தி மிக்க மக்கள் இயக்கமாகச் செல்வாக்கு பெற்றது.

வேதநெறி இலட்சியங்களை அடித்தளமாகக் கொண்டு, வேதகாலத்திற்கு பிந்தைய சமய-பௌராணிகக் கோட்பாடுகளை, மூட நம்பிக்கைகளை, சடங்குகளை, உருவ வழிபாட்டை முற்றிலுமாக எதிர்த்தவர் சுவாமி தயானந்தர்.

இதற்காகவே ''வீறார்ந்த வேத காலத்திற்கு திரும்புங்கள்'' எனும் முழக்கத்தை ஆர்ய சமாஜத்தின் முழக்கமாக எதிரொலித்தார். வேதங்களை பிரதேச மொழிகளில் மொழி பெயர்த்து, பாமர மனிதனின் தலை வாயிலிலும் வேதநெறியின் பிரவேசத்திற்கு வழிவகுத்தார்.

வேத சமய, பிற சமயங்களைப் பற்றித் தமது கருத்துகளை சத்யார்த்த பிரகாசம் எனும் நூலில் விளக்கியுள்ளார், சுவாமி தயானந்தர். இந்த நூல் 1875-இல் இந்தி மொழி மூல நூலாக வெளிவந்தது. சமஸ்கிருத மொழிப் பற்றில் தோய்ந்து பொது மேடைகளில் பேசியும், விவாத அரங்குகளில் தர்க்கம் செய்தும் வந்த சுவாமி தயானந்தர், கல்கத்தாவில் பிரம்மசமாஜத் தலைவர் கேசவ சந்திர ஸென்னின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, இந்தி மொழியையே தொடர்பு மொழியாகப் பயன்படுத்தினார். இந்தியை தேசிய மொழியாகவும் பிரகடனப் படுத்தினார். இந்த நூல் தவிர இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் ரிக், யஜுர் வேத உரைகள், அஷ்டாத்யாயிபாஷ்யம், ரிக் வேத உரைக்கு முன்னுரை முதலானவை சுவாமி தயானந்தரின் வேத நெறிப் பற்றிய பரிமாணங்களை விளக்க வல்லன.

விக்கிரக வழிபாட்டு எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, விதவை மறுமணம், பெண் கல்வி, தேசிய கல்வி, தேசியப் பற்று, மூட நம்பிக்கைகள் எதிர்ப்பு, புரோகித-சடங்கு அமைப்புகளுக்கு எதிர்ப்பு, கிறிஸ்துவ-இஸ்லாமிய சமயத்தினர் செய்து வந்த மதமாற்றங்களுக்கு கடும் எதிர்ப்பு முதலான இலட்சியங்களை ஆர்ய சமாஜம் தீவிரமாகப் பரப்பி வந்தது.

தமது எதிர்ப்புகளை தற்காப்பு முறையாகவும், தாக்குதல் முறையாகவும் ஆர்ய சமாஜம் வெளிப்படுத்தியது. இதற்காக 'சுத்தி', 'சங்கடனம்' எனும் இரு இயக்கங்களை ஆர்ய சமாஜம் உருவாக்கியது. மதம் மாற்றப்பட்ட இந்துக்களை மீண்டும் இந்து மதத்தில் சேர்த்திட 'சுத்தி' இயக்கம் பாடுபட்டது. இந்துக்களை வலுவான சமய

ஒற்றுமையின் கீழ் அணிதிரட்டும் அமைப்பாக 'சங்கடனம்' எனும் இயக்கம் செயலாற்றியது.

சுவாமி தயானந்தர் அரசியலில் நேர்முகமாகப் பங்கேற்கவில்லையென்றாலும், நாட்டுப்பற்றை மக்களிடையே பரப்பிட பெரும்பாடுபட்டார். பாரதத்தை "ஸ்வர்ண பூமி", "ஆர்யா வர்த்தம்" என்று சிறப்பித்துக் கூறி வேண்டியதைத் தரும் பாரச மணி என்றும் போற்றினார். "அகண்ட", "சுதந்திர", "சுயாதீன", "நிர்ப்பய" ஆட்சி பாரதத்தில் ஏற்படவில்லையே என அவர் வருந்தியதும் உண்டாம். "சத்யார்த்த பிரகாசம்" எனும் தமது நூலில் ஆறாவது அத்யாயத்தில் "அந்நிய ஆட்சி எவ்வளவு நன்மைகள் செய்தாலும், அந்த ஆட்சி நம்மவர் ஆட்சிக்கு ஒரு மாற்றாகாது" எனும் கருத்தை பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"அந்நிய அரசாங்கம், சமயக் காழ்ப்பற்று, சுதேசிகள் — விதேசிகளிடையே நடுநிலைமையைக் கையாண்டு நீதி — பரிவு — உதவி நோக்குகளுடன் திகழ்ந்தாலும், அது மக்களுக்கு முழு நிறைவான மகிழ்ச்சியை அளிக்காது."

அரவிந்தர், தமது "பங்கிம் — தயானந்தர் — திலகர்" எனும் நூலில் தயானந்தரின் வேதநெறிக் கொள்கையில் தேசிய உணர்வின் கூறுகளைக் காண்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

லாலாலஜ்பத்ராய், சுவாமி சிரத்தானந்தர் மற்றும் பல ஆர்ய சமாஜிகள் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் மகத்தானப் பங்களிப்புகளை அளித்துள்ளனர்.

கலாசார இயக்கங்களில் எதிர்ப்புச் சூழலின் களத்தை பெரும் பரப்பளவில் விரிவுப்படுத்தியது, ஆர்ய சமாஜம்.

தியோசாபிகல் சொஸைடி

'தியோசபி' என்ற ஆங்கிலச் சொல், இரு கிரேக்க மொழி வேர்ச் சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

'தியோ' என்றால் கடவுள், 'ஸோபியா' என்றால் ஞானம் என்பது பொருளாகும். தமிழில் 'பிரம்ம ஞானசபை' என்று பொதுவாக குறிப்பிடப்பெற்று வருகின்றது. இந்த இயக்கம், இந்து சமய அமைப்பிற்கு வெளியே இருந்து தோன்றினாலும், இந்து சமய— ஆன்மிகக் கோட்பாடுகளை உலகின் பல பகுதிகளில் பலமொழிகளில் பரப்பியது, 'தியோசாபிகல் சொஸைடி'. உலகளாவிய இதன் கிளைகளும், பிரசார இதழ்களும், சிறுவெளியீடுகளும், சமய வகுப்புகளும், கூட்டங்களும் இந்து சமய—ஆன்மிகத் தத்துவங்களையும் பரப்புவதில் துணைபுரிந்தன.

தியோசாபிகல் சொஸைடி 1875-இல் அமெரிக்கா வில், நியூயார்க்கில், எலினாபெட்ரோவ்னா பிளா வெட்ஸ்கி (1831-1891) என்னும் ரஷ்யப் பெண்மணி யாலும், கலோனியல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் (1832-1907) என்னும் அமெரிக்கராலும் அமைக்கப்பெற்றது. பிளாவட்ஸ்கி தலைவராகவும், ஆல்காட் செயலாளராக வும் பொறுப்பேற்றனர்.

ஆர்ய சமாஜத் தலைவர் சுவாமி தயானந்த சரஸ்வதி யிடம் பிளாவெட்ஸ்கியும், ஆல்காட்டும் அமெரிக்காவில் இருந்து கடிதத் தொடர்பு கொண்டனர். ஆல்காட் தமது ஒரு கடிதத்தில் ''கிழக்கில் இருந்து ஒளி பெற விரும்பு வதாக'' குறிப்பிட்டு, இந்தியாவில் தியோசாபிகல் சொஸைடியின் நுழைவிற்கு சுவாமி தயானந்த சரஸ்வதி யின் ஒத்துழைப்பைப் பெற்றார். 1879-இல் பிளா வெட்ஸ்கியும், ஆல்காட்டும் இந்தியாவில் தங்கள் பணி யைத் தொடர பம்பாயில் வந்திறங்கினர். 'தியோ சபிஸ்ட்' எனும் மாத இதழைத் தொடங்கி, அதன் மூலம் தியோசாபிகல் சொஸைடியின் கொள்கைகளைப் பரப் பினர். சாங்கியம், யோகம், வேதாந்தம்' முதலானத் தத்துவங்களை தங்களது கொள்கைகளுக்கு ஏற்ப இணைத்து பிரச்சாரம் செய்தனர்.

தியோசாபிகல் சொஸைடியின் கிளைகள் ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலான

பல நாடுகளில் இருந்தன. உலகத்தின் பதினாறு மொழிகளில் அதன் பத்திரிகைகள் வெளிவந்தன. இவற்றின் மூலம் இந்து சமயத் தத்துவஞான நூல்கள் அறிமுகமாகத் தொடங்கின.

1882 முதல் தியோசாபிகல் சொஸைடியின் தலைமையகம் சென்னை அடையாற்றிற்கு மாற்றப்பட்டது.

தேசம், இனம், மொழி, சாதி முதலான பல சிற்றெல்களைக் கடந்து உலக சகோதரத்துவ இலட்சியத்தை வலியுறுத்தி, பழைய—புதிய சமயத் தத்துவங்கள் அனைத்தையும் பரப்புவதில் தியோசாபிகல் சொஸைடி பெருநாட்டம் கொண்டது. இந்தியாவின் பிரபல பத்திரிகையாசிரியர்கள், அரசியல் இயக்கத் தலைவர்கள் சிலர் தியோசாபிகல் சொஸைடியுடன் தொடர்பு கொண்டனர். இதன் விவரம், பின்வருவது.

பம்பாய் மாநில அரசியல் அமைப்பான பம்பாய் அசோசியேஷனைச் சார்ந்த பர்துன்ஜி, திலங்; பூனாவில் இருந்த அரசியல் அமைப்பான பூனா சர்வ ஜனிக மகாசபையைச் சார்ந்த எம். பி. நாம்ஜோஷி, ''இந்தியன் ஸ்பெக்டேடர்'' எனும் பிரபல பத்திரிகையின் ஆசிரியர் பி. மலபாரி, கல்கத்தா ''அமிர்தபஜார் பத்திரிகை''யின் ஆசிரியர் எஸ். கே. கோஷ்; ''இந்தியன் மிர்ரர்'' பத்திரிகையின் ஆசிரியர் நரேந்திரநாத் ஸென், அலகாபாத்தில் இருந்து வெளிவந்த ''பயனீர்'' ஆசிரியர் ஏ. பி. ஸின்னட்; ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், ரகுநாதராவ், மாதவராவ்.

இந்திய தேசியச் சிந்தனையாளர்கள் பலர், தியோசாபிகல் சொஸைடியின் பணிகள் பலவற்றை பாராட்டியுள்ளனர். லோகமான்ய பாலகங்காதர திலகர் தமது ''கேசரி'' எனும் இதழில், (29-3-1903-இல்) தியோசபி இயக்கத்தைப் பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

''இந்து மதத்தை மதிக்காமல், வேறு எவ்விடத்திலோ ஊக்கம் பெற்றவர்கள் மீண்டும் இந்து மதத்தில் நாட்டம்

கொள்ளக் கருவியாய் இருந்தது "தியோசபி" என்பதை நினைவில் கொள்ள வேண்டும்."

தியோசாபிகல் சொஸைடி வளர்ச்சியில் புத்தெழுச்சியை உருவாக்கிய அன்னிபெசண்ட் அம்மையார் (1847-1933) களத்தில் இறங்குவதற்கு முன்பு பல இந்திய தியோசபிஸ்ட் சொஸைடியினர் இந்திய தேசிய அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினார்.

1884-இல் டிசம்பர் இறுதியில், தியோசாபிகல் சொஸைடியின் ஆண்டு மாநாட்டிற்கு வந்தவர்களில் பதினேழு பிரதிநிதிகள் சென்னை நகர பிரபல தியோசபிஸ்ட்டான ரகுநாதராவ் வீட்டில், மயிலாப்பூரில், கூடி அனைத்திந்திய அளவில் அரசியல் சமூக நலன்களுக்கான ஒரு மாநாட்டைக் கூட்ட முடிவெடுத்தனர். இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து கூடிய பதினேழு பிரதிநிதிகள் பற்றிய விவரம், பின்வருமாறு:

சென்னையில் இருந்து எஸ். சுப்பிரமணிய ஐயர், பி. ரங்கய்ய நாயுடு, பி. அனந்தாசாருலு; கல்கத்தாவில் இருந்து, பாபு நரேந்திரநாத்ஸென், சுரேந்திரநாத் பானர்ஜி, எம். கோஷ்; பம்பாயில் இருந்து, கே. டி. திலங், வி. என். மாண்ட்லிக், தாதாபாய் நவ்ரோஜி; பூனாவில் இருந்து, ஸி. விஜயரங்க முதலியார், பாண்டுரங்க கோபால், வடமேற்கு மாகாணத்தில் இருந்து, காசி பிரசாத், பண்டிட் லட்சுமி நாராயணன், பஞ்சாப்பில் இருந்து ஸர்தார் தயான்சிங்; பெனாரஸில் இருந்து, லாலா ஹரீஷ் சந்தர்; அலகாபாத்தில் இருந்து சாருசந்திர மித்ரா; அவுத்தில் இருந்து லாலாஸ்ரீராம்.

இவர்கள் கூடிய கூட்டமே, இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றத்திற்கு மூலகாரணம் என்னும் ஒரு கருத்து கூறப்படுவதுண்டு. 1919-இல் வெளிவந்த "இந்தியாவும் சுயாட்சியும்" எனும் தமிழ் நூலில் உள்ள ஒரு கருத்து, பின்வருவது.

"இப்பொழுது ராஜ சக்கரவர்த்தி முதல் சாதாரண அதிகாரி வரையில் யாவராலும் மதிக்கப்படும் காங்கிரஸ்

மகாசபைக்கு அவர்களே மூலபுருஷர்கள். ஆகவே, அவர்களை நாம் அனைவரும் கொண்டாடுதல் பொருத்தமென்பதில் தடையுண்டோ?''

''இந்தியா எவ்வாறு சுதந்திரத்தை உருவாக்கியது'' எனும் தமது ஆங்கில நூலில் அன்னிபெசண்ட் அம்மையாரும், 1884-டிசம்பர் மாத தியோசாபிகல் மகாசபைக்குப் பிறகு பதினேழு இந்தியப் பிரமுகர்கள் கூடி முதல் காங்கிரஸ் மகாசபையைக் கூட்ட வேண்டுமென்று முடிவெடுத்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் இயக்கத்தின் புகழார்ந்தத் தலைவர்களுள் ஒருவரான விபின் சந்திரபால் அவர்களும், தமது ''என் வாழ்நாள் நினைவுகள்'' எனும் நூலில் தியோசாபிகல் சொஸைடியின் ஆண்டு மகாசபையின் வெற்றி இந்திய அரசியல் காங்கிரஸ் மகாசபையைக் கூட்ட வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டியது எனும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

பிற கலாசார அமைப்புக்களைச் சார்ந்த சிந்தனையாளர்கள், அரசியல் சிந்தனைகளை வெளியிட்டு அவற்றை அமைப்பு வாயிலாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனும் பேராவலை ஏற்படுத்தியது போன்ற தியோசாபிகல் சொஸைடி கூட, தமது உறுப்பினர்கள் உள்ளங்களில் தேசிய வேட்கையை ஏற்படுத்தி, தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

இந்திய தேசிய காங்கிரஸ் தமது ஆண்டு மகாசபையை டிசம்பர் மாத இறுதியில் நடத்திக் கொண்டு வந்தது தற்செயலானதன்று. தியோசாபிகல் சொஸைடி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாத இறுதி வாரத்தில் மகாசபையை நடத்தியதைப் பின்பற்றி, காங்கிரசும் கூடி வந்தது.

அன்னிபெசண்ட் அம்மையாரின் ''ஹோம் ரூல்'' எனும் அரசியல் இயக்கம் பெரும் வரவேற்பைப் பெற்று செல்வாக்கு பெற்றதற்கு, தியோசாபிகல் சொஸைடியின் செல்வாக்கும் பெருமளவு காரணமாகும்.

இராமகிருஷ்ணா மிஷன்

1886, ஜனவரி இரண்டாம் வாரத்தில், காசிப்பூரில், குருதேவர் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது திருக் கரங்களால் தமது சீடர்களுக்கு காவியுடைகள் வழங் கினார். சுவாமி விவேகானந்தர் தலைமையில் தோன் றிய இந்தத் துறவியர்கள் குழு, ''இராமகிருஷ்ணர் வழிமுறை'' என வரலாற்றில் குறிப்பிடப்பட்டு வரு கின்றது.

1886 செப்டம்பர் 16-இல் குருதேவர் மகாசமாதி யடைந்தார். இதைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தர் வழிகாட்டுதலின் பேரில் 1886 அக்டோபர் 19-இல் கல்கத்தா அருகே பாராநகர் என்னுமிடத்தில் 'இராம கிருஷ்ணாமடம்', நிறுவப்பட்டது. 1.5.1897-இல் கல்கத்தாவில் சுவாமி விவேகானந்தர் 'இராமகிருஷ்ணா மிஷன்' எனும் பெயரில் மேலும் ஓர் அமைப்பை இராம கிருஷ்ணர் இயக்கத்திற்காக உருவாக்கினார். இதன் பின்வரும் இரு இலட்சியங்கள் குறிப்பிடத்தக்கன.

1. துறவுநெறி மேற்கொண்டு ஆன்மிக சாதனைகள் புரிய புதிய துறவியர் அணியை அமைத்தல். சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை பாரெங்கும் அனுப்பி, இராம கிருஷ்ணர் வாழ்ந்து காட்டிய வேதாந்த வாழ்க்கை நெறி யைப் பரப்பிட ஆக்கம் அளித்தல்.

2. சாதி, இன, நிற பேதமில்லாமல், ஆண்—பெண், குழந்தைகள் அனைவருக்கும் சமூகத் தொண்டாற்ற வழிவகை கண்டு செயலாற்றுதல்.

ஆன்மிக நோக்கும், சமூக நோக்கும் இராமகிருஷ்ணா மிஷன் இலக்கியங்களில் நிறைந்துள்ளது. இந்திய தேசிய எழுச்சிக்கு இவற்றுள் சில பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், அரசியலைப் பற்றி மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ இராமகிருஷ்ணா மிஷன் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. ஆன்மிகம், அறம்,

ஒழுக்கம் முதலான இலட்சியங்களுக்காகவே பாடுபட்டு வருகின்றது. இராமகிருஷ்ணர், விவேகானந்தர் மற்றும் பலதுறவியர்களிடமிருந்து இந்திய தேசியத் தலைவர்கள் ஆக்கமும், ஊக்கமும் பெற்று வந்தனர்.

1893 செப்டம்பர் 11-இல் கூட்டப்பெற்ற சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பேருரைகள், இந்து சமயத்திற்கு மட்டுமல்லாமல், இந்திய தேசியத்திற்கும் தனிப்பெரும் சிறப்பைத் தேடித் தந்தது. சுவாமி விவேகானந்தரை ''தேசபக்த மெய் ஞானி'' எனக் கொண்டாடி மாபெரும் வரவேற்பு தொடர்ந்தாற் போல கொழும்பு முதல் அல்மோரா வரையில் அவருக்கு அளிக்கப்பட்டதும், வரலாற்றுச் செய்தியாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆசிரியராக அலங்கரித்த ''பாலபாரதா'' எனும் ஆங்கில மாத இதழின் நவம்பர் 1907-ஆம் வெளியீட்டில், சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு பற்றி ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''அன்று இந்து சமயத்தின் வரைவிலக்கணம் மீண்டும் எழுதப்பட்டது. அதே நாளில் இந்திய தேசியத்தின் விதைகள் தூவப்பட்டன.''

சமூக வாழ்க்கையின் நல்லிணக்கத்தின் அடித்தளமாக ஆன்மிகம் அமைகின்றது. ஆன்மிக விழிப்பின் வளர்ச்சி தேசிய உணர்வையும், அரசியல் உணர்வையும் ஊக்கு விக்கின்றது. ''ஆத்மாவைக் காத்துக்கொள்ள வேண்டும் எனும் பேரொலியின் பகிரங்க் முழக்கம் தான் சுயராஜ்ய முழக்கமும் ஆகும்'' என்றும் விளக்கம் கூறப்பட்ட துண்டு.

வரலாற்று நோக்குடைய சிறந்த வரலாற்றாசிரியர் எனும் நிலையில் சுவாமி விவேகானந்தர், ''இந்தியாவில் வரலாறு வளர்ந்த முறை'' எனும் கட்டுரையில் ஆன்மிகத்திற்கும், அரசியலுக்கும், இடையே நிலவும் தொடர்பை பின்வருமாறு வரைந்துள்ளார்.

''ஆன்மிக எழுச்சி தோன்றும் பொழுதெல்லாம், பெரும்பாலும் எப்பொழுதும் அரசியல் ஒற்றுமை பின் தொடர்ந்துள்ளதை நாம் இந்திய வரலாற்றின் முழுவதி லும் காண்கின்றோம். கிட்டத்தட்ட இந்தியத் துணைக் கண்டத்தின் இந்த அரசியல் ஒற்றுமை தன்னை ஈன் றெடுத்த ஆன்மிக வேட்கைக்கும் ஆக்கம் தருகின்றது.''

பொதுவாக உலகெங்கும் தேசியமும், தேசபக்தியும் தோன்றிய பொழுது, பாமர மக்கள் பற்றிய சிந்தனை மலர்வதில்லை. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. ஆனால், 'தேச பக்த மெய்ஞானி' சுவாமி விவேகானந்தர் இந்தக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டிய முதல் மனிதர் ஆவார். தேசிய அணுகுமுறையிலும், சமூக உணர்விலும் பாமர மக்கள் பற்றிய சிந்தனையின் இன்றியமையா மையை வலியுறுத்தியவர், சுவாமி விவேகானந்தர். தேசிய வாழ்க்கையில் பாமர மக்கள் பங்கேற்க விடா மல், அவர்களைத் தனிமைப்படுத்தி ஒதுக்கியதை ''தேசிய மகாபாவம்'' என்று முதன் முதலில் முழங்கிய வர் சுவாமி விவேகானந்தர். அக்காலத்தில் எந்த அரசி யல் தலைவர்களின் சிந்தனைகளிலும் வெளிப்படாத புரட்சிகரக் கருத்தை வெளியிட்டவர் வீரத்துறவி விவேகானந்தர்.

தமது இந்தப் புதிய தேசியக் கருத்தை பலமுறை எடுத்துரைத்து வந்தார், சுவாமி விவேகானந்தர். 1896 மார்ச் 23-இல் தமது அருமை சென்னைச் சீடர் மண்ட யம் அழகிய சிங்கம் பெருமாளுக்கு எழுதியக் கடிதத்தில், ''இந்தியாவின் ஒரே ஒரு நம்பிக்கை, பாமர மக்களே; மேல்தட்டு வகுப்புகள் பௌதிகமாகவும், நடத்தை ரீதி யிலும் இறந்தொழிந்தன'' என்று சாற்றியுள்ளார்.

செயல் துடிப்பும், வலிமையும் வாய்ந்த ''புதிய இந்தியா'' எங்கிருந்து உதயமாக வேண்டும் எனும் புரட்சிகர கருத்தை சுவாமி விவேகானந்தர், தமது ''ஐரோப்பிய பயணம் பற்றிய நினைவுக் குறிப்புகள்'' எனும் தொடர் கட்டுரையில் பின்வருமாறு முழங்கி யுள்ளார்.

''கையில் கலப்பைத் தாங்கும் உழவர் குடிசைகளில் இருந்தும், மீனவர், சக்கிலியர், தோட்டிகள் ஆகியோர் குடிசைகளில் இருந்தும் புதிய இந்தியா உயிர்பெற்று எழட்டும்.''

இந்தியா அடிமைப்படுத்தப்பட்டதின் வரலாற்றுக் காரணத்தையும் சுவாமி விவேகானந்தர் தமது பேருரைகளில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில், 1893 ஆகஸ்ட்டில், பேராசிரியர் ஜே. எச். ரைட் என்பவர் வீட்டில், ''வரலாறு கண்ட வஞ்சம்'' எனும் தலைப்பில் உணர்ச்சி பெருக்குடன் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

''இந்திய நாட்டில் நாங்களும் ஆண்டவனது வெஞ்சினத்தை நுகர்கின்றோம். பணம் ஈட்டுதற் பொருட்டு அவர்கள் ஏழை மக்களை வாட்டி வதைத்தார்கள்; துன்பக் குரலை அவர்கள் கேட்டார்களில்லை. பசிப்பிணியால் 'சோறு', 'சோறு', என்று ஓலமிட்ட பொழுது, செல்வத்தில் திளைக்கின்றவர்கள் தங்கம், வெள்ளி பாத்திரங்களில் உணவருந்தினார்கள்... இந்திய நாடு பல ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் தோல்வியுற்று அல்லற்பட்டது. இறுதியில், ஆங்கிலேயரும் வந்தனர்... எந்நாட்டின் மக்கள் மீது ஆண்டவன் அருள் சொரியவில்லை. அவர்கள் ஏழை மக்களுக்கு இரக்கம் காட்டவில்லையே. அவர்களுடைய இரக்கமற்ற தீச்செயல்கள் ஏழை மக்களை மிகவும் சிறுமைப்படுத்திவிட்டன. அவர்களுடைய உதவி தேவையாய் இருக்கிறபொழுது அவர்களால் ஒன்றும் செய்வதற்கில்லை. அவ்வளவு வலிமையற்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள். ஆண்டவன் வஞ்சம் தீர்ப்பான் என்ற உண்மையில் மனிதன் நம்பிக்கை வைக்காமல் இருக்கலாம். ஆனால், சரித்திரத்தில் மீண்டும், மீண்டும், காட்சியளிக்கிற வஞ்சத்தை இவனால் மறுக்க இயலுமா? ஆங்கிலேயருக்கும் இந்நிலை வரத்தான் போகிறது. நம்முடைய சமூகத்தின் மீது குதிக்காலை வைத்து நம்மை நசுக்குகிறார்கள். தங்களுடைய

இன்ப நுகர்ச்சியின் பொருட்டுக் கடைசிக் குருதித் திவலை உள்ள வரையில் நம்மை அட்டையைப் போல் சுவைத்து உறிஞ்சினார்கள்.

''கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டுவிட்டனர். ஊர்ஊராக, மாவட்டம் மாவட்ட மாக, எங்கள் மக்கள் பசிப்பிணியால் வாடி வருந்த இவர்கள் தகாத தீச்செயல்களைப் புரியலாமோ?''

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்கு முறை களைக் குறிப்பிட்டு சுவாமி விவேகானந்தர் தமது மனக் குமுறலை, மேரி ஹேல் என்னும் அமெரிக்கப் பெண் மணிக்கு 30-10-1899-இல் எழுதியக் கடிதத்தில், பின் வருமாறு வெளியிட்டுள்ளார்.

''குற்றமற்ற முறையிலே குறைகளைச் சுட்டிக் காட்டி சில வார்த்தைகளை எழுதியதற்காக மக்கள் ஆயுள் தீவாந்திர சிட்சைக்கு வேகமாகக் கடத்தப்பட்டு வருகிறார் கள். மற்றவர் விசாரணை ஏதுமில்லாமலே சிறையிலிடப் படுகின்றனர்; தன் தலை எப்பொழுது கொய்யப் படுமோ என்பதை எவனும் அறியமாட்டான்.''

தமது காலத்தில் அனைத்திந்திய அளவில் தேசிய அரசியல் இயக்கமாகவிருந்த இந்திய தேசிய காங்கிர ஸிற்கு பகிரங்கமாக அறிவுரை கூறியுள்ளார், சுவாமி விவேகானந்தர். ''பல இனத்தாரிடையே ஒரு நாட்டை உருவாக்குகின்றது'' என காங்கிரசைப் பாராட்டிவிட்டு, முதலில் நாம் அனைவரும் இந்தியர்கள் எனும் உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்றும் உணர்த்தினார். சுவாமிஜியின் இந்தக் கருத்தின் விளக்கத்தை அவர் 1896-இல் லண்டனில் இருந்து வெளிவந்த ''இந்தியா-லண்டன்'' எனும் இதழிற்கு அளித்த நேர்முகப் பேட்டி யில் காண்கின்றோம்.

அத்வைத வேதாந்தத்தை வெறும் ''திண்ணை வேதாந்த''மாக ஆக்காமல் ''செயல்முறை வேதாந்தம்'' எனும் புதிய விளக்கத்தை வழங்கி சுவாமி விவேகானந்தர்,

அதைக் கொண்டு இந்தியாவிற்கு மட்டுமன்றி மானுடம் முழுவதற்குமே விமோசனம் காணமுடியும் என்பதை மிகத் தெளிவாக வலியுறுத்தினார்.

1897-இல் சென்னை நகரில் ''வேதாந்தமும் இந்திய வாழ்க்கையும்'' எனும் தலைப்பில் சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவாற்றிய பொழுது, ''தேசிய வாழ்க்கையில் ஆண்மை, வலிமை, அச்சமின்மை, தன்னம்பிக்கை ஆகிய இவையனைத்தும் மேவ வேண்டும். இதற்கு வேதாந்தம் வழிகாட்டுகிறது'' என்று சுட்டிக்காட்டினார்.

மகாகவி பாரதியார், சுவாமி விவேகானந்தரின் வேதாந்தப் பிரசாரத்தை, ''தேசபக்தியின் தாய் முயற்சி'' என்று வருணித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.

வஹாபி இயக்கம்

இஸ்லாம் சமயம் தோன்றிய மக்கா நகரில் அப்தல் வஹாப் (1703-1787) என்பவரால், தோற்றுவிக்கப் பட்டது வஹாபி இயக்கம். அரேபிய சமூக அமைப்பில் மதகுரு வர்க்கம் உருவாகும் போக்கையும், சடங்குகளையும், மூடுமந்திரமான நடைமுறைகளையும் எதிர்த்து அவ்வப்பொழுது தோன்றிய எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் இறுதியாக அப்துல் வஹாப் உருவாக்கிய கிளர்ச்சி அவர் பெயரால் ஓர் இயக்கமாக பெயர்பெற்றது. இஸ்லாம் சமயத்தின் தூய்மையைக் காப்பாற்ற, ''திருக்குரான் காலத்திற்குத் திரும்புங்கள்'' எனும் முழக்கம் வஹாபி இயக்கத்தால் எழுப்பப்பட்டது. இந்த இயக்கத்தின் தாக்கம் இந்தியாவிலும் பரவியது.

இன்றைய உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள ரெய் பெரேலி என்னும் ஊரில் வாழ்ந்த சையத் அகமது (1786-1831) என்பவரால் இந்தியாவில் வஹாபி இயக்கம் தொடங்கப் பெற்றது. பஞ்சாபில் சீக்கியர் ஆட்சியையும், வங்காளத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியையும் எதிர்த்து, முஸ்லீம் ஆட்சியை, ஏற்படுத்த இந்த இயக்கம் போராடியது. 1857-இல்

நிகழ்ந்த இந்திய சிப்பாய் புரட்சியில் இந்த இயக்கம் தீவிரமாக பங்கேற்றது. மிகக் கடுமையான அடக்குமுறை களால் ஒடுக்கப்பெற்றது. இந்தக்களும், இஸ்லாமியர் களும் இருவேறு தேசிய இனங்களாவர் என்பதைத் தெளிவாக முதன் முதலில் எடுத்துரைத்தவர் சையத் அகமது. இவ்வகையில் இவர் பதினெட்டாம் நூற் றாண்டின் இஸ்லாமிய சமயத் தலைவர்களுள் ஒருவரான ஷாவாலியுல்லாவின் கொள்கைகளைப் பின்பற்றினார். பாகிஸ்தான் நாட்டின் வரலாற்றில் ஷாவாலியுல்லா சிறப்பிடம் பெற்றுள்ளார்.

1804-இல் வங்காளத்தில் மௌல்வி ஷரியத்துல்லா என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட ஃபராய்தியா இயக்கம் சமய சீர்திருத்தச் சிந்தனையுடன் விவசாயத் தொழி லாளர் உரிமைகளுக்காகவும் போராடியது. இவருடைய மகன் தாதுமியான், இந்து-மூஸ்லீம் நிலபிரபுக்களை மத வித்தியாசமில்லாமல் எதிர்த்தார். 1834, 1841, 1846-ஆம் ஆண்டுகளில் விவசாயிகள் புரட்சிகளை நடத்தி னார். பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளையும் எதிர்த் தார். 1857-இல் சிறைபிடிக்கப்பட்டார். இதனால் ஃபராய்தியா இயக்கம் ஒடுக்கப்பட்டது.

அஹமதியா இயக்கம்

முஸ்லீம் சமுதாயத்தில் தோன்றிய சமய இயக்கங் களில் தீவிரவாதத்தை தவிர்த்து, மிதவாதத்தை கொண்டு இயங்கும் இயக்கமாக அஹமதியா இயக்கம் விளங்கு கின்றது. முஸ்லீம்களின் மூடப்பழக்க வழக்கங்களையும், மத ஊழல்களையும் எதிர்த்து நிற்பதிலும் கிறிஸ்துவ சமய எதிர்ப்பிலும் இந்த இயக்கம் ஈடுபட்டது. இஸ்லாத்தில் எழுப்பப்படும் 'ஜெஹாத்' எனும் புனிதப் போர் முழக்கத்தை, அஹமதியா இயக்கம் அங்கீகரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

1899-இல் இந்த இயக்கத்தை உருவாக்கியவர் மீர்ஜா குலாம் அகமது (1839-1908) என்பவராவார். இஸ்லாம்

சமயத்திற்கு இந்த இயக்கம் எதிரானது எனும் பெருங் கிளர்ச்சி பாகிஸ்தானில் 1953-இல் தோன்றியது. 1974-இல் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அஹமதியா இயக்கத்தினர், இஸ்லாமியர்கள் அல்லர் எனும் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இந்த இயக்கம் இந்தியாவில் தொடர்ந்து சமய-சமூக-கல்விப் பணிகள் ஆற்றிக் கொண்டு வருகின்றது.

அலிகார் இயக்கம்

1857-ஆம் ஆண்டு புரட்சி காரணமாக ஆங்கிலேய ஆட்சிக்கும், இஸ்லாமிய சமூகத்திற்கும் இடையே தோன்றிய கசப்புணர்வை நீக்கவும், இஸ்லாமிய சமய-சமூக-கல்வித் துறைகளில் புத்தெழுச்சி காணவும் அலிகார் நகரத்தை மையமாகக் கொண்டு சையது அகமது கான் (1817-1898) பல வழிகளில் தொண் டாற்றியது 'அலிகார் இயக்கம்' என்று பெயர் பெற்றது.

உருது மொழியில் இவர் எழுதிய "அஸ்பாப்—இ—பகஹாவத்—ஹிந்த் (இந்தியக் கலகத்தின் காரணங் கள் — 1858)", "விசுவாசமுள்ள இந்திய முகமதியர் கள் — 1860", என்னும் இரு நூல்கள் ஆங்கிலேயர் சிந்தனை மாற்றத்திற்குத் தூண்டுதல் அளித்தன.

"தஹ்ஜிப்-உல்—அக்லாக்" (சமூக சீர்திருத்தவாதி) எனும் உருதுமொழி மாதப் பத்திரிகையின் வாயிலாக திருக்குரானின் போதனைகளுக்கு புதிய விளக்கங்கள் கொடுத்து தமது கொள்கைகளுக்கு ஆதரவு கோரி பிரசாரம் செய்தார். முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணிக்காமல், நவீன கல்வித் துறையில் ஆங்கிலத் தின் வழியே முன்னேறத் தூண்டி கல்வி இயக்கத்தையே நடத்தினார் சையது அகமதுகான்.

1864-இல் காஸிபூரில் நவீன பள்ளிக் கூடத்தைத் திறந்து வைத்தார். 1868-இல் கல்விக் குழுக்களை வட இந்தியாவில், பல மாவட்டங்களில் அமைத்தார். 1869-1870-களில் இங்கிலாந்திற்கு சென்ற சமயம், கேம்பிரிட்ஜ

பல்கலைக்கழகத்தின் மாதிரியில் இந்தியாவில் முஸ்லீம் களுக்காக உயர்தர கல்விக்கு ஏற்பாடு செய்யத் திட்டம் தயாரித்தார். இந்த நோக்கில் 1875-இல் ஆங்கிலோ-முகமதிய ஓரியண்டல் கல்லூரி அதன் இறுதி வடிவத் தைப் பெற்றது. பள்ளிக்கூட வகுப்புகள் 1875-லும், கல்லூரி வகுப்புகள் 1878-லும் நடைபெறத் தொடங் கின. மத்தியகால பின்தங்கிய தேக்கநிலையில் இருந்து நவீன யுகத்தின் தலைவாயிலில் இளைய முஸ்லீம் அறி வாளிகளைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

இஸ்லாமின் இருபெரும் பிரிவுகளான ஷியா, ஸன்னி என்பனவற்றின் போதனைகளை கல்வித் திட்டத் தில் இடம் பெற வைத்தார். பெண்கள் முன்னேற்றத் திற்கு பாடுபட்டார். 'பர்தா' அணியும் வழக்கத்தை முஸ்லீம் பெண்கள் கைவிட வற்புறுத்தினார்.

அரசியலில் இந்திய தேசிய காங்கிரசை எதிர்த்தார். காங்கிரசை இந்துக்கள் கட்சி என்று குற்றம் சாட்டினார். காங்கிரசுடன் முஸ்லீம்கள் ஒத்துழைக்கக் கூடாது எனப் பிரசாரம் செய்தார். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்காமல் ஆதரவளித்தார்.

டியோபாண்ட் தார்-உல்-உலூம்

'தார்-உல்-உலூம்' எனும் சொல்லிற்கு 'கல்வி கற்கும் கூடம்' என்பது பொருளாகும். உத்திரபிரதேசத்தில் உள்ள டியோபாண்ட் எனும் ஊரில் தொடங்கப்பெற்ற இஸ்லாமிய சமயக் கல்வி கூடத்திற்கு ''டியோபாண்ட் தார்-உல்-உலூம்' எனும் பெயர் அமைந்தது. 1867 மே 30-இல் இந்த இஸ்லாமியத் தத்துவப் பள்ளியை, மௌலானா முகமது காசிம் நாநாண்டவியும், மௌலானா ரஷீத் அகமது கங்கோனியும் இணைந்து அமைத்தனர். நூற்றாண்டு விழாவையும் கொண்டாடி, இந்தத் தத்துவப் பள்ளி உலகப் புகழ் பெற்றுள்ளது.

1857-ஆம் ஆண்டு புரட்சியில் மௌலானா ரஷீத் அகமது கங்கோனி பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி

ஆட்சிக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்ற வர். தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தார். அலிகார் இயக்கத் தலைவர் சையது அகமதுகானின் போதனைகளை இந்தத் தத்துவப் பள்ளி எதிர்த்தது. இஸ்லாமிய சமயத் தத்துவ போதனையில் உலேமாக்கள் எனும் மதகுருமார்களின் செல்வாக்கு பழமைவாதத்தில் வேர்கொண்டிருந்தாலும், தேசிய அரசியலில் முற் போக்கு நிலையை மேற்கொண்டது. ''ஜெஹாத்'' எனும் புனிதப் போரை ஆதரிக்காதது. உலகியல் நடவடிக்கை களில் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரண் இல்லாமல் இந்துக்களுடன் ஒத்துழைப்பு வேண்டி 'பட்வா' எனும் சமய ஆணைகளை இந்தத் தத்துவப் பள்ளி அவ்வப் பொழுது வெளியிட்டது. முஸ்லீம் பிரிவினைவாதத்தைக் கண்டனம் செய்தது.

இந்து, இஸ்லாமிய அமைப்புகளிடையே முரண்பாடு களைக் கண்டெடுத்து அதை பெரிதுபடுத்தி பிரித்தாளும் சூழ்ச்சியை பிரிட்டிஷ் ஆட்சி வெற்றிகரமாக நடத்தியது.

மாநில அரசியல் அமைப்புகள்

1885-இல் ஓர் அனைத்திந்திய அரசியல் அமைப் பாக இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப் பெற்றதற்கு முன்பாகவே சில மாநில அரசியல் அமைப்புகள் அரசி யல் கருத்துகளையும், இலட்சியங்களையும் வளர்த்து வந்தன. இந்த மாநில அரசியல் அமைப்புகளை 'காங்கிர சிற்கு முந்தைய தேசிய இயக்கங்கள்'' என்றும் குறிப் பிடலாம். இந்த அமைப்புகள் உருவாக்கித் தந்த அடித் தளத்தின் மீதுதான் இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப் பட்டது.

இந்தியாவில் முதன் முதலாக மாநில அரசியல் அமைப்புகள் வங்காளத்தில் தோன்றின. இதற்குக் காரணம் அந்த மாநிலத்தில் அரசியல், சமூக முரண் பாடுகள் பிற மாநிலங்களைக் காட்டிலும், மிக ஆழ மாகவும், மேற்பரப்பிலும் வெளிப்பட்டன. ஆங்கில

மொழி அதன் வழிப்பட்ட பண்பாட்டுத்தாக்கம், சிந்தனையோட்டங்கள், நவீனக்கல்வி படித்தவர்களிடையே ஏற்பட்ட புதிய பழக்க-வழக்கங்கள் முதலானவை முரண்பாடுகளை சமன் செய்ய சிறு—சிறு முயற்சிகளைத் தோற்றுவித்தன. இந்த முயற்சிகள் சமுதாயத்தின் மேல் தட்டில் மேற்கொள்ளப்பட்டன என்பது இயற்கையேயாகும்.

கல்கத்தாவில் 1837-இல் ''நில உடைமையாளர் சங்கம்'', வங்காளத்தில் தோன்றிய முதல் அரசியல் அமைப்பாகும். இதையடுத்து 1839-இல் ''பிரிட்டிஷ் இந்தியா சொஸைடி''யும் 1857-இல் பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷனும், 1875-இல் இந்தியன் லீக்கும், 1876-இல் ''இந்தியன் அசோசியேஷ''னும் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின.

இந்த அரசியல் அமைப்புகளில் துவாரகநாத் தாகூர் தேவேந்திரநாத் தாகூர், கிரீஷ்சந்திர கோஷ், உமேஷ் சந்திர பானர்ஜி, சம்புசந்திர முகர்ஜி, ரொமேஷ் சந்திர தத், பங்கிம் சந்திர சாட்டர்ஜி, ஈசுவரசந்திர வித்யா சாகர், சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் பல அறிஞர்கள் தீவிர பங்கேற்று அரசியல் சிந்தனையை வளர்த்தனர்.

ஹிந்து பேட்ரியட்'', ''இந்தியன் மிர்ரர்'', ''வங்காளி'', முதலான பத்திரிகைகள் இந்த அரசியல் அமைப்புகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தன.

மக்களின் விருபபங்களையும், நலன்களையும், விண்ணப்பங்கள் மூலம் பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் முறையிடுவதே அரசியலாகக் கருதப்பட்டது. இந்த நடவடிக்கைகள் தேசிய மனோபாவத்தின் இயக்கத்திலும், சிந்தனைப் போக்கிலும் அசைவுகளை உண்டாக்கின.

வங்க மாநிலத்தின் அரசியல் சிந்தனைக் களம் விரிவும் வலிமையும் பெறப்பாடுபட்டத் தலைவர்களில் சுரேந்திரநாத் பானர்ஜி (1848-1927) மிகுந்த செல்வாக்கு செலுத்தினார். தேசியமும், தேசபக்தியுணர்வும் பரவிட போராடியவர், இவர்.

1877-இல் தில்லியில் பிரிட்டிஷ் பேரரசின் மேலாதிக்க நிகழ்ச்சியாக பிரிட்டிஷ் ஆட்சியாளரால் கூட்டப்பெற்ற ''டெல்லி தர்பார்'' எனும் பேரவையில் இந்தியா முழுவதிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்து பங்கேற்றனர். இவர்களுள் ஒருவராக வந்த சுரேந்திரநாத் பானர்ஜியின் சிந்தனையிலே ''தேசிய மாநாடு'' ஒன்றைக் கூட்ட வேண்டும் எனும் கருத்து கால்கொண்டது. அவருடைய வழிகாட்டுதலைக் கொண்டிருந்த 'இந்தியன் அசோசியேஷன்' அனைத்திந்திய அளவில் தேசிய மாநாட்டை 1882-இல் கல்கத்தாவில் கூட்ட ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதன் தொடர்பாக 1883 டிசம்பர் 28 முதல் 30 வரையில் மூன்று நாட்கள் கல்கத்தாவில் முதன் முறையாக தேசிய மாநாடு நடைபெற்றது. இதன் இரண்டாவது மாநாட்டை 1885-இல் கல்கத்தாவில் டிசம்பர் 28-இல் கூட்டப்போவதாகவும் அறிவிக்கப் பட்டது. இதே ஆண்டில், இதே நாளில் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் எனும் ஆங்கிலேயர் பல மாநில அரசியல் தலைவர்கள் ஒத்துழைப்புடன் ஒரு தேசிய மாநாட்டை பம்பாயில் கூட்ட ஏற்பாடு செய்துவிட்டார். சுரேந்திரநாத் பானர்ஜியின் தேசிய மாநாட்டு முயற்சியை புறக்கணிக்கும் வகையில் பம்பாய் மாநாடு கூட்டப்பட்டது என்றும் ஒரு கருத்து கூறப்பட்டுள்ளது. ஆயினும், கல்கத்தா தேசிய மாநாட்டில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமானப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பம்பாய் மாநாட்டிற்கு, கல்கத்தாவில் இருந்து மூன்று பிரதிநிதிகளே சென்றனர்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் நல்லெண்ணத்தை சுரேந்திரநாத் பானர்ஜி அப்பொழுது பெற்றிருக்கவில்லை என்பதும் அவரைப் புறக்கணித்ததற்கு ஒரு காரணமாகும் என்று காரணம் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் தேசிய நலன் கருதி 1886-இல் கல்கத்தாவில் நிகழ்ந்த இரண்டாவது இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி கலந்து கொண்டார். அனைத்திந்திய அளவில் தேசிய அரசியல் மாநாட்டைக்

கூட்ட வேண்டும் என முற்பட்டவர்களுள் சுரேந்திரநாத் பானர்ஜிக்கு முக்கியப் பங்குண்டு என்பதும் வரலாற்று உண்மையாகும்.

பம்பாய் அசோசியேஷன்

ஆகஸ்ட் 26, 1852-இல் பம்பாய் நகரத்தில் தோன்றிய 'பம்பாய் அசோசியேஷன்', அன்றைய பம்பாய் மாநிலத்தின் முதல் மாநில அரசியல் அமைப்பாகும். இந்த அசோசியேஷன் பார்சிகளின் செல்வாக்கை அடித்தளமாகக் கொண்டது. தொடக்கத்தில் தொழில் முதலாளித்துவ நலன்களில் ஆர்வம் காட்டிய போதிலும், 1867 முதல் அரசியலிலும் சுறுசுறுப்புடன் இயங்கியது. இதற்குக் காரணகர்த்தாக்கள் நவ்ரோஜி பருதீன்ஜியும், தாதாபாய் நவ்ரோஜியும் ஆவார்கள்.

மகா கோவிந்த ரானடே, பிரோஸ்ஷா மேத்தா, காசிநாத் திரியம்பக் திலங் போன்ற பட்டதாரி இளைஞர்கள் பம்பாய் அசோசியேஷனுக்கு முற்போக்கு பார்வை அளித்தனர். 1885-இல் பம்பாயில் முதன் முறையாக கூட்டப்பெற்ற இந்திய தேசிய காங்கிரசிற்கு வரவேற்பு அமைப்பாக பம்பாய் அசோசியேஷன் பொறுப்பேற்றது. பின்பு காலப்போக்கில் இந்திய தேசிய காங்கிரசில் கலந்தது.

பூனா சர்வ ஜனிக் சபை

1852-இல் தோன்றிய ''பூனா டெக்கான் அசோசியேஷன்'', 1867-இல் தோன்றிய ''பூனா அசோசியேஷன்'' எனும் இரு அமைப்புகள் அமைத்துக் கொடுத்த அடித்தளத்தின் மீது ''பூனா சர்வ ஜனிக்சபை'' 1870-இல் உருவாகியது. அரசியல் விழிப்புணர்வை வளர்த்த இந்தச் சபை 1871-இல் இருந்து இருபத்தொன்பது ஆண்டுகள் மகாகோவிந்த ரானடேவின் திறமைமிக்க வழிகாட்டுதலின் பேரில் வெற்றிகரமாக இயங்கி வந்தது.

இந்தச் சபையின் காலாண்டு இதழாக ஆங்கிலத்தில் வெளிவந்த ''ஜெர்னல் ஆப் பூனா சர்வ ஜனிக் சபா''வில்

அரசியல், சமூக, இலக்கியக் கட்டுரைகளை மகா கோவிந்த ரானடே எழுதி வந்தார். மிதவாத காங்கிரசின் தலைவர்களுள் ஒருவரான கோபாலகிருஷ்ண கோகலே இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றினார். மாபெரும் மராட்டிய எழுத்தாளரான விஷ்ணு கிருஷ்ண சிப்லங்கர் (1850-1882) இந்தச் சபையின் செயலாளராக சில ஆண்டுகள் தொண்டாற்றி யுள்ளார்.

1877-இல் தில்லியில் நடைபெற்ற ''டெல்லி தர்பார்'' நிகழ்ச்சியில் இந்தியாவின் பல்வேறு இனத்த வர் ஒரே இடத்தில் கூடப் போவதை தேசிய முக்கியத்து வம் வாய்ந்தது என்றும், ''இந்திய அரசியலின் முதல் காங்கிரஸ்'' என்றும் பூனா சர்வ ஜனிக் சபை டிசம்பர் 5, 1876-ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில் பாராட்டியுள்ளது. 1885-இல் காங்கிரஸ் உருவாக ஹ்யூம் இந்தச் சபையின் ஒத்துழைப்பையும் பெற்றார். இதற்காக ஹ்யூம் 16.11.1884-இல் பூனா சர்வ ஜனிக் சபையின் செயலாளர் விஷ்ணு கிருஷ்ண சிப்லங்கருக்குக் கடிதம் எழுதினார். 1885-இல் காங்கிரஸ் மகாசபையை பூனாவிலேயே நடத்த பூனா சர்வ ஜனிக் சபை பொறுப் பேற்றிருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் பூனாவில் 'ப்ளேக்' நோய் பரவியிருந்ததால், அந்த வரலாற்று வாய்ப்பு பம்பாய்க்குக் கிடைத்தது.

சென்னையில் தோன்றிய அரசியல் அமைப்புகள்

சென்னையில் முதன் முதலில் ஓர் அரசியல் அமைப் புத் தோன்ற, கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசி யேஷன் தூண்டியது. சென்னை நகரத்தில் கிறித்துவ மிஷனரிகளின் மதமாற்ற முயற்சிகளை எதிர்த்து இந்துக் களிடையே முதன் முறையாக மேலைநாட்டு வழிமுறை யில் ''பொதுமக்கள் கருத்து'' என்பதை 1845 ஏப்ரல் 9-இல் சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்

உருவாக்கியவர் காஜுலு லட்சுமி நரசு செட்டி (1806-1868) என்பவராவார். இவர்தம் பொதுநலத் தொண்டைக் கேள்வியுற்று கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷனைச் சார்ந்த தேவேந்திரநாத் தாகூர் டிசம்பர் 11, 1851-இல் காஜுலு லட்சுமி நரசு செட்டிக்கு எழுதிய கடிதத்தில் சென்னையில் ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க ஆலோசனை கூறினார். தேவேந்திரநாத் தாகூரின் கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு: ''பிரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வொரு பாகத்தின் சுதேசிகள் அல்லது சங்கங்கள் மூலமாக ஒரே சமயத்தில் இணைந்து விண்ணப்பங்களை தயார் செய்து சமர்ப்பித்தால், அது பயன்மிக்கதாக இருக்கும். பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷனைத் தொடர்ந்து பிற மூன்று மாநிலங்களைச் சார்ந்தச் சுதேசக் கனவான்கள் தங்கள் முறையீடுகளை ஆட்சியாளர்களிடம் விண்ணப்பங்களாகக் கொடுத்தால், அந்த முயற்சியைப் புறக்கணிக்க முடியாது.''

இந்தக் கடிதத்தின் விளைவாக பிப்ரவரி 26, 1852-இல் சென்னை நகரத்தில் பி.அப்பாசாமி பிள்ளை என்பவர் தலைமையில் கூடியக் கூட்டத்தில் ''பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷனின் சென்னைக் கிளை'' எனும் பெயரில் ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. சி. ஏகாம்பரம் முதலியார், தலைவராகவும், வி. ராமானுஜாசாரியார் செயலாளராகவும், காஜுலு லட்சுமி நரசு செட்டி புரவலராகவும் இந்தப் புதிய அரசியல் அமைப்பை வழி நடத்தினர். 1844-இல் காஜுலு லட்சுமி நரசு செட்டி தொடங்கிய ''கிரசெண்ட்'' எனும் ஆங்கில இதழ் இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு உதவியது. கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷனுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக, இந்தப் புதிய அமைப்பு பெயர் மாற்றம் பெற்றது. ''மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்'' எனும் பெயர் சூட்டப்பட்டது.

சர். டி. மாதவராவ், ரகுநாதராவ், டி. முத்துசுவாமி ஐயர், எம். வீரராகவாசாரியார், பி. அனந்தாசார்லு,

ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் ராமசாமி முதலியார், பி. ரங்கய்ய நாயுடு ''மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷ'' னின் வளர்ச்சிக் கட்டத்தில் முக்கியப் பங்காற்றியுள் ளனர்.

பிற்காலத்தில் சென்னை மகாஜன சபை, இந்திய தேசிய காங்கிரஸ் ஆகிய அமைப்புகளில் பணியாற்றிய பலர் மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷனில் பயிற்சி பெற்றவர்கள்.

சென்னை மகாஜன சபை

சென்னை மகாஜன சபையின் தோற்றத்திற்குரியக் காரணத்தை தேசபக்தரும், தமிழறிஞருமான குருமலை சுந்தரம்பிள்ளை தமது ''ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித் திரம்'' (1907) எனும் நூலில் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்:

''ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரின் தலைமையின் கீழ் நடைபெற்று வந்த நேடிவ் அசோசியேஷன் என்னும் சபையில் பெரும்பாலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர் களாகயிருந்தமையாலும், பின்னால் ஸர்க்கார் உத்தியோ கஸ்தர்கள் பொதுசபைகளில் கலக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டார் கட்டுப்பாடு செய்தமையாலும் அச்சபை நெடுநாள் வாழ்வதற்கியலாமல் மங்கி விட்டது. ஆத லால் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரும், அக்காலத்தில் பிரமுகராயிருந்த காலஞ்சென்ற பி. ரங்கய்ய நாயுடு அவர்களுடைய நண்பர்களாகிய வேறு தேசாபிமானி களும் சேர்ந்து ''சென்னை மகாஜன சபை''யை ஸ்தாபித் தார்கள்.

சென்னை மகாஜன சபை மே 16, 1884-இல், இந்து பத்திரிகை அலுவலகத்தில் நடைபெற்ற முக்கியப் பிர முகர்கள் கூட்டத்தில் தொடங்கப் பெற்றது. ஜி. சுப்பிர மணிய ஐயர், எம். வீரராகவாசாரியார், பி. அனந்தா சாருலு, பி. ரங்கய்ய நாயுடு, பாலாஜிராவ், சேலம்

ராமசாமி முதலியார் முதலானோர் அந்தக் கூட்டத்தில் கூடிய முக்கியப் பிரமுகர்களாவர்.

இந்தக் கூட்டத்தில் பி. ரங்கய்ய நாயுடு தலைவராக வும், எம். வீரராகவாசாரியாரும், பி. அனந்தாசாருலுவும் செயலாளர்களாகவும், பி. பாலாஜி ராவ் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அக்காலத்தில் மிகவும் போற்றப்பட்ட பொதுவாழ்க்கைப் பிரமுகர் பி. ரங்கய்ய நாயுடு, மகாஜன சபையின் தலைவராகத் தொடர்ந்து பதினெட்டு ஆண்டுகள் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

அப்பொழுது, வாரம் மும்முறையாக வெளிவந்த 'இந்து'வும், வாரப் பத்திரிகையாக வெளிவந்த ''சுதேச மித்திர''னும் மகாஜன சபையின் வளர்ச்சிக்கு ஊக்க மளித்தன.

பிற மாநில அரசியல் அமைப்புகளின் வேலைத் திட்டங்களில் இருந்து சற்று முன்னேறிய நிலையில் சென்னை மகாஜன சபை பணியாற்றியது. தூது கோஷ்டி கள், விண்ணப்ப முறையீடுகள், சிறப்புச் சொற்பொழிவு கள், பொதுக் கூட்டங்கள் ஆகிய வேலைத் திட்டங்கள் அனைத்து மாநில அரசியல் அமைப்புகளுக்கும் பொது வானவை. ஆனால், சென்னை மகாஜன சபையின் அரசியல் நடவடிக்கைகள் விரிவான பரவலான பிரதி நிதித்துவம் பெற்றது; பொதுமக்கட் தொடர்பில் ஆழ்ந்த கவனம் செலுத்தியது.

பம்பாயில் 1885-இல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அமைக்கப்பட்ட பொழுது, சென்னை மகா ஜன சபையின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டது. காங்கிரஸ் அமைப்பு சம்பந்தமான முன்னறிவிப்பும், வேண்டு கோளும் முன்னதாக மகாஜன சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சபையின் முக்கியத் தலைவர் களான ஜி. சுப்பிரமணிய ஐயர், நீதிபதி எஸ். சுப்பிர மணிய ஐயர், பி. அனந்தாசாருலு, எம். வீரராகவா சாரியார், பி. ரங்கய்யநாயுடு ஆகியோர் காங்கிரஸ்

மகாசபையின் தொடக்கக் கூட்டத்தில் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். காங்கிரசின் முதல் தீர்மானத்தை முன் மொழிந்து பேசும் பெரும் கௌரவமும் ஜி. சுப்பிர மணிய ஐயருக்கு அளிக்கப்பட்டது.

காங்கிரஸ் மகாசபைக்கும், சென்னை மகாஜன சபைக்கும் இடையே இருந்த நெருக்கத்தை அறிய சுதேச மித்திரனில், 2-6-1893-இல், வெளிவந்த பின்வரும் விளம்பர வரி உதவுகின்றது.

''இந்தச் சபையே சென்னைப் பட்டணத்திற்கு ஸ்டாண்டிங் காங்கிரஸ் கமிட்டியாகவும் இருக்கிறது.''

மகாகவி பாரதியார், 'இந்தியா' எனும் தீவிரவாத தேசிய அரசியல் தமிழ்வார இதழில் 23-3-1906-இல் ''சென்னை மாகாணம் முழுவதற்கும் முக்கிய ஜனசங்க மாயிருக்கும் மகாஜனசபை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மகாஜனசபை தனது நூற்றாண்டு விழாவை அப்பொழுது துணை ஜனாதிபதியாகவிருந்த ஆர். வெங்கட் ராமன் தலைமையில் கொண்டாடியது. இன்னும் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் பற்றி பல கருத்துக்கள் வரலாற்றாசிரியர்களால் கூறப்பெற்று வரு கின்றன. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப் பெற்ற ''பாரதஜன சபை—காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்'' எனும் நூலின் முதற்பதிப்பு நவம்பர் 1918-இல் சென்னை ''சுதேசமித்திரன்'' பத்திரிகையின் வெளி யீடாக வந்தது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பகுதி கவனிக்கத்தக்கது.

''காங்கிரஸ் சபையின் உத்தியோகஸ்தருடைய அறிக் கையில் இந்த சபையின் உற்பத்தி தெளிவாகக் கூறப் படவில்லை. '1885-ம் வருடம் மார்ச்சு மாதத்திலே, அவ்வருடத்துக் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது

பாரத தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் பிரதிநிதிகள் ஒன்று கூடி சபை கூட்டவேண்டுமென்று நிச்சயிக்கப் பட்டது' என்று மாத்திரம் 'உத்தியோக அறிக்கை'யில் உற்பத்தி கூறப்படுகின்றது. எவராலே நிச்சயிக்கப் பட்டது? எந்த ஊரிலே? என்ற விஷயங்களைப் பற்றி 'உத்தியோக அறிக்கை', அதாவது மேற்படி சபையின் காரியஸ்தர்களாலே பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கை யில் யாதொரு தகவலும் கிடைக்கவில்லை.''

காங்கிரஸ் இயக்க வரலாற்றை எழுதிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவும், ''அகில இந்திய காங்கிரஸ் அமைப்புக் குறித்த எண்ணம் யாரிட மிருந்து தோன்றியது என்பது புதிரில் மறைந்துள்ளது'' என்று கருதியுள்ளார்.

இவ்வாறு, காங்கிரசின் தோற்றம் பற்றி திட்டவட்ட மாகக் கூற முடியவில்லையென்றாலும், சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு காங்கிரஸ் தோன்றுவதற்கு உரிய காரணங்களை வரலாற்று ஆய்வாளர்கள் விளக்கி யுள்ளனர்.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் இந்திய சமய, சமூக, அரசியல் வரலாற்றில் மாபெரும் திருப்பங்களை ஏற்படுத்தின. இந்த நூற்றாண்டுகளில் தோன்றிய சமய-கலாசார இயக்கங்களும், மாநில அரசியல் அமைப்புகளும் காங்கிரஸ் உருவாகுவதற் குரியச் சூழலைப் படைத்தளித்தன. இவையேயல்லாமல் தொகுத்துப் பார்க்கும் பொழுது, பின்வரும் நான்கு முக்கிய வரலாற்று நிகழ்வுகள் 'காங்கிரஸ்' எனும் பெயரில் ஓர் அனைத்திந்திய தேசிய அமைப்பின் இன்றியமையாத் தேவையை உணர்த்தியுள்ளன.

1. 1877-இல் தில்லியில் பிரிட்டிஷ் அரசு சார்பில் நிகழ்த்தப் பெற்ற ''டெல்லி தர்பார்'' எனப்படும் பிரிட்டிஷ் பேரரசி விக்டோரியா மகாராணி, இந்தியா வின் பேரரசியாக முடிசூட்டிக் கொண்ட விழா.

2. 1883-இல் கல்கத்தாவில் நடைபெற்ற அகில உலகப் பொருட் கண்காட்சியை ஒட்டிக்கூடிய 'இந்தியன் நேஷனல் கான்பரன்ஸ்'.

3. இந்திய ராஜப் பிரதிநிதியாக இருந்து ஓய்வு பெற்று, பிரிட்டன் திரும்பிய ரிப்பன் பிரபுவிற்கு 1884-இல் பம்பாயில் வழியனுப்பி வைக்கக் கூடிய பல இனங்களின் பிரமுகர்கள் கூட்டம்.

4. 1884-இல் டிசம்பர் இறுதியில் சென்னையில் கூடிய தியோசாபிகல் சொஸைட்டியின் ஆண்டு மாநாடு.

இந்த நான்கு நிகழ்வுகளில் கலந்துக் கொண்டவர்களிடையே நிகழ்ந்த கலந்துரையாடல்களில் இந்தியா முழுவதற்குமான ஒரு தேசிய அமைப்பின் தேவை பற்றிய கருத்தும் ஒன்றாகும். இவர்களில் பலரை ஒருங்கிணைத்து காங்கிரஸ் மகாசபையை நிறுவினார் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் (1829-1912) என்று வரலாற்றில் பதிவாகியுள்ளது. பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தைச் சார்ந்த ஆங்கிலேயரான ஹ்யூம் இந்தியர்களின் அரசியல் முன்னேற்றம் குறித்து பேசியும் எழுதியும் உள்ளார். இவர் இந்தியப் பத்திரிகையாளர்கள், பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், இந்திய ராஜப் பிரதிநிதிகளான ரிப்பன் பிரபு, டப்ரின் பிரபு ஆகியோர்களிடையே நல்லுறவு பேணி வந்தவர். இளம் வயதில் இங்கிலாந்தில் முற்போக்கான அரசியலில் ஈடுபட்டிருந்தவர். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் "சந்தேகப் பார்வை"க்கு இடம் தராமலும், அதே சமயத்தில் இந்தியப் பொது வாழ்க்கைப் பிரமுகர்களை ஒருங்கிணைத்து அரசியல் செயல்பாட்டிற்கு ஊக்கமளித்து பாடுபட்டு வந்தது முற்றிக் கனிந்து காங்கிரசாக விளைந்தது. "காங்கிரசின் தந்தை" என்றும் பாராட்டப்பட்டார். காங்கிரசிற்கு இவர் வித்திட்டதை சென்னை சுதேசமித்திரன் 11-8-1893-ஆம் இதழில் "மிஸ்டர் ஹ்யூம் வருதல்" எனும் தலையங்கத்தில் பின்வரும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

''மிஸ்டர் ஹ்யூம் என்ற மகாபுருஷரின் நாமதேயம் எவர்களும் இத்தேசத்தில் கேட்டிருக்க வேண்டும். அம் மகான் இத்தேசத்தாருக்காகப் பல வருஷம் படாத பாட்டைப் பட்டுக் கடைசியில் இங்கு காங்கிரஸ் சபை என்ற ஓர் பெரிய வித்தை நாட்டி, அச் சபையைக் கொண்டு இத்தேசத்தார் பல சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளும்படி ஏற்பாடு செய்தது அவரேயாம்''.

'காங்கிரசின் தந்தை' என்று ஹ்யூமைப் பாராட்டி காங்கிரஸ் மகாசபையிலே 1912-இல் தலைமையுரையில், இரங்கல் உரையில், பின்வருமாறு புகழப்பட்டுள்ளார்.

''இராப்பகலாக, கோடையிலும், குளிரிலும் காங்கிரசின் தந்தையும், அமைப்பாளருமான அவர் இந்த ஸ்தாபனத்தை ஒரு குழந்தையைக் காப்பாற்றி வளர்ப்பதுபோல் அன்புடன் வளர்த்தார். நெருக்கடியான, கஷ்டமான காலங்களில் மற்றெவரையும் விட ஸ்தாபனத்தின் வாழ்விற்கு பாடுபட்டார். தந்தையைப் பறிகொடுத்த நிலையில் நாம் இன்று துக்கம் அடைகிறோம்.''

தொடர்ந்தாற் போல இருபது ஆண்டுகள், காங்கிரசின் செயலாளராகப் பணியாற்றி ஹ்யூம் தமது 84-வது வயதில் 1912-இல் காலமானார்.

காங்கிரஸ் அமைப்பை நிறுவ ஹ்யூம் இரு ராஜப் பிரதிநிதிகளின் (வைஸ்ராய்) நட்புறவைப் பயன்படுத்திக் கொண்டார். ரிப்பன் பிரபுவின் பதவிக் காலமும் (1880-1884), டப்ரின் பிரபுவின் பதவிக் காலமும் (1884-1888) ஹ்யூமின் முயற்சிக்கு துணைபுரிந்தன.

ஹ்யூமின் முயற்சி 1883-லேயே தொடங்கியது. இந்தியர்கள் தாங்களாகவே முன்வந்து, ஒரு தேசிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தை உள்ளடக்கி கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு மார்ச் 1, 1883-இல் ஒரு சுற்றுக் கடிதம் எழுதினார்.

புதிய விழிப்பின் ஆதிகர்தாக்களுள் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஒருவர் என மகாகவி பாரதியார் குறிப்பிட்டுள்ளார். ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராகவிருந்த 'இந்து' பத்திரிகையை மிகவும் போற்றியவர் ஹ்யூம். ரிப்பன் பிரபுவிற்கு 1884-இல் பம்பாயில் வழியனுப்பு நிகழ்ச்சி பற்றிய செய்தி இந்தியாவின் பிரபல பத்திரிகைகள் அனைத்திலும் வெளிவந்தன. அப்பொழுது 'இந்து' பத்திரிகை டிசம்பர் 26, 1884-இல் ஓர் அனைத்திந்திய அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பின்வருமாறு எழுதியது:

''நாடெங்கும் சிதறியுள்ள மிகுதியான பல உள்ளூர் அமைப்புகளையெல்லாம் பொதுவான ஒரு தாய் அமைப்பின் கீழ் கொண்டு வருவதின் மூலம் ஓர் அனைத்திந்திய அமைப்பு பற்றிய எண்ணம் மிக எளிதாக வெளிப்படும். இதன் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படும் பலர் கருத்து கூற வாய்ப் பேற்படும்.''

இதைத் தொடர்ந்து ஏ. ஓ. ஹ்யூம் இந்து பத்திரிகையின் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரைச் சந்தித்து உரையாடினார். இதற்குப் பிறகு லண்டனில் இருந்த ரிப்பன் பிரபுவிற்கு ஹ்யூம் பிரபு, இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து பிரதிநிதிகளைத் திரட்டி ஒரு மகா சபையைக் கூட்டப் போவதாக ஒரு தனிப்பட்டக் கடிதத்தை எழுதினார்.

பூனாவில் கூடவிருந்த காங்கிரஸ் மகாசபையைப் பற்றிய விவரங்கள் இந்து பத்திரிகையில் முன்கூட்டியே டிசம்பர் 5, 1885-இல் வெளியிடப்பட்டன. ஆனால், பூனாவிற்குப் பதிலாக பம்பாயில் காங்கிரஸ் மகாசபை கூடியது. பூனாவில் ப்ளேக் நோய் பரவியிருந்ததால் இந்த மாற்றம் என்பதும் நினைவிற்குரியதாகும்.

முதல் காங்கிரசின் மகாசபை எழுபத்திரண்டு பட்டதாரிகளைக் கொண்டு கூட்டப்பெற்று, ஆங்கில மொழி

அறிந்தவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். ஆங்கிலம் படித்தோரின் பேரவையாக காங்கிரஸ் தோன்றியது எனக் கூறலாம். இவ்வாறு தோன்றிய காங்கிரசை மகாகவிபாரதியார் பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளது, கவனிக்கத்தக்கது.

''டிஸம்பர் 28-ந் தேதியன்று முதற் கூட்டம் கூடிற்று. வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. அப்பேச்சின் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப்பட்டன. விதியின் ரகஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ!''

''உலக சரித்திரக் காட்சிகள்'' எனும் நூலில் நேருஜியும், ''முக்கியமாக ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் கருவியாகவே அது இருந்தது'' என காங்கிரசின் தோற்றக்கால நிலையை விமர்சனம் செய்துள்ளார்.

ஆங்கிலம் படித்த வகுப்பார்தான் 'புதிய விழி'ப் பிற்கு தலைமையேற்க வேண்டியிருந்தது. இந்தப் புதிய வகுப்பாரின் கொள்கைகளைக் கவனிக்க வேண்டும் என பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் முன்வந்தது. 1883-இல் ரிப்பன் பிரபு, கிம்பர்லி பிரபுவிற்கு எழுதியக் கடிதத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் புதிய யதார்த்தத்தையும் புரிந்துக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். ரிப்பன் பிரபு, இந்தியர்களிடம் காட்டிய பரிவு காரணமாக ''ரிப்பனிஸம்'' எனும் சொல்லாட்சியே தோன்றி, தேசிய உணர்விற்கு நல்ல தூண்டுதலைத் தந்தது. அவர் கூறிய ஒரு கருத்து, பின்வருவது :

''பிரிட்டிஷ் இந்தியாவின் சமூக அமைப்பில் புதிய வகுப்பு தோன்றியதை ஓர் அரசியல் யதார்த்தம் என ஒப்புக்கொள்ளுவது நல்லதாகும். அவர்களுடைய குறைகளை நாம் உறுதிபட கண்டறிய வேண்டும்; அவர்களின் தலைவர்களை நம்ப வேண்டும்; தொலைநோக்குடன்

சரியான சமயத்தில் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்; அவர்கள் தங்கள் விருப்பங்கள், ஆர்வங்களை வெளியிட நியாயமான வழிவகைகளைத் தர அதிகார வரம்பிற்கு இயைந்தவாறு முயற்சியெடுக்க வேண்டும்.''

காங்கிரசின் முக்கிய மூன்று இலட்சியங்களை ஹ்யூம் பின்வருமாறு வகுத்தார்:

1. முரண்பாடுகள், வேற்றுமைகள் நிறைந்த இந்திய மக்கட் தொகுதியை முழுமையான ஒரு தேசிய இனமாக உருவாக்க வேண்டும்.

2. மனவுணர்வு, நீதிநெறி, சமூகம், அரசியல் முதலான பல வழிகள் வாயிலாக படிப்படியான மறுமலர்ச்சிக்கு பாடுபடுதல்.

3. இவ்வாறு உருவாகும் நாட்டிற்கு எதிராகத் தோன்றும் அநியாயங்களை, தீமைகளைத் திருத்தியமைத்து இங்கிலாந்து இந்தியாவிற்கிடையே கூட்டுறவை வலிமை பெறச் செய்தல்.

காங்கிரசின் முன்னே தொடக்க காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முதற்பணி இந்திய தேசிய உணர்வை அரசியல் நோக்கில் உருவாக்கி உறுதிபடச் செய்வதாகவே அமைந்தது. இவ்வுண்மையை ராஜாஜி அவர்கள், ''இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது'' எனச் சூத்திரமாகச் சித்தரித்துள்ளார்.

மிதவாத தேசியம், தீவிரவாத தேசியம்

''மிதவாத தேசியம்'' என்பதோ, ''தீவிரவாத தேசியம்'' என்பதோ காங்கிரஸ் இயக்கம் பிரகடனப்படுத்திய அரசியல் இலட்சியங்கள் அல்ல. அந்நிய ஆதிக்க எதிர்ப்புகளில் மேற்கொள்ளப்பெற்ற அணுகுமுறைகளில், ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இவ்வித இரு தேசியவாதங்கள் வரலாற்று ஆய்வாளர்களால் பெயரிடப்பட்டனவாகும். ஒரு சமயத்தில் தீவிரவாதமாக் இருப்பது மறுசமயம் மிதவாதமாகலாம். ஆகவே,

மிதவாதிகள், தீவிரவாதிகள் எனும் பெயர்கள், இந்திய தேசிய விடுதலை இயக்க ஆய்வாளர்கள் ஆங்கிலத்தில் குறிப்பிட்ட "Moderates", "Extremists" என்னும் சொற்களின் தமிழாக்கங்களாகும்.

1907 சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் ஏற்பட்ட பிளவு காரணமாகத் தோன்றிய இரு வேறு அணிகளைச் சார்ந்தவர்கள், வரலாற்று ஆய்விற்குரியப் பயன்பாட்டைக் கருதி மிதவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் பகுத்தறியப்பட்டனர். 'தீவிரவாதிகள்' என மற்றவர்களால் அழைக்கப்பட்டவர்கள், தங்களை 'நேஷனலிஸ்ட்ஸ்'' — தேசியவாதிகள் — என்றே கூறிக் கொண்டு வந்தனர்; தங்கள் புதிய அணியை ''புதிய கட்சி'' என்றே குறிப்பிட்டனர். ஒரே செடியில் எதிரும் புதிருமாகத் தோன்றிய இரு இலைகளாகவே விமர்சனம் செய்யப்பட்டாலும், மிதவாத தேசியமும், தீவிர வாத தேசியமும் தமக்குள் கடுமையாக மோதிக் கொண்டன.

மகாகோவிந்த ரானடே, பிரேஸ்ஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய் நவ்ரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் மிதவாத தேசியத்தை வளர்தெடுத்தார்கள். 1896-இல் மகாகோவிந்த ரானடே வெளியிட்ட ஓர் அறிக்கையில் 'மிதவாதம்' பற்றிய பின்வரும் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

''சட்டத்தின் வழியே நிருவாகம் செலுத்த வேண்டிய ஆட்சியாளருக்குரிய விசுவாசத்தைச் செலுத்தியும், அதே நேரத்தில் சட்டம் வழங்கும் உரிமையின் அடிப்படையில் மக்களுக்குரிய சமத்துவத்தைப் பெறுவதாகும். மிதவாதம் என்பது முடியாத வெற்றிக்கோ அல்லது தொலைதூர இலட்சியங்களுக்கோ ஆசைப்படுவதைக் கட்டுப்படுத்துவதாகும். ஆனால், சமரச வேட்கையுடனும், நட்புணர்ச்சியுடனும் கைக்கெட்டியதைப் பெற்றுக்கொண்டு தேசிய விடுதலைப் பயணத்தில் ஒவ்வொரு நாளும் அடி பெயர்த்து வைப்பதாகும்.''

ராஜா ராம்மோகன் ராய் காலத்தில் இருந்தே அரசியலில் மிதவாத அணுகுமுறை வளர்ச்சி பெற்று வந்தது எனலாம்.

அரசியலில் மிதவாதிகளாய் இருந்தவர்கள், சமூக சீர்திருத்தத்தில் தீவிரவாதிகளாய் இருந்ததையும், அரசியலில் தீவிரவாதிகளாய் இருந்தவர்கள், சமூக சீர்திருத்தத்தில் மிதவாதிகளாய் இருந்ததையும் வரலாறு எடுத்துக் காட்டியுள்ளது.

மிதவாத தேசியம் அளித்த பங்களிப்புகளில் ''பொருளாதார தேசியம்'' பற்றிய ஆய்வு நூல்கள் குறிப்பிடத்தக்கன.

பிரிட்டனில் நிகழ்ந்த தொழிற்புரட்சிக்கு, இந்தியாவில் சுரண்டப் பெற்ற செல்வ வளம் மூலாதாரம் எனும் கருத்து வரலாற்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியைப் பற்றி அறிந்துக்கொள்ள, காலனியாதிக்கத்தின் ''வற்றடிக்கும் கொள்கை'' (Drain theory)-யைப் பற்றி புரிந்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி இந்திய தேசிய இயக்கத் தலைவர்களில் பலரும், இந்தியர்கள் மீது பரிவுகொண்ட பிரிட்டிஷ் அறிஞர்களும் பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர்.

''மாரென்ஸ் என்ற பார்லிமெண்ட் மெம்பர் எழுதியிருக்கும் 'ஆசியாவில் நமது ராஜ்யம்' (Empire in Asia) என்ற புத்தகத்தையும், காட்டன் எழுதியிருக்கும் 'நவீன பாரதம்' (நியூ இந்தியா), டிக்பி எழுதியிருக்கும் 'இந்தியாவின் செழிப்பு' (Prosperous India), ஹைண்ட்மான் எழுதிய ''இந்தியாவின் வறுமை'' (Bankruptcy of India) என்ற புத்தகத்தையும் படித்துப் பார்த்தால் ஒவ்வொரு இந்திய தேசாபிமானியின் மனமும் அனலில் இட்ட புழுப் போலத் துடிக்கும்படியாக இருக்கும்.'' இவ்வாறு மகாகவி பாரதியார் தமது 'இந்தியா' எனும் தமிழ் வார இதழில் (அக்டோபர் 17, 1908) ஆங்கிலேய அறிஞர்கள்

எழுதிய நூல்களைப் புகழ்ந்துள்ளார். இவர்களுள் ஹென்ரி காட்டன் (1845-1915), பம்பாயில் 1904-இல் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையின் தலைவராக விருந்தார். வில்லியம் டிக்பி (1849-1904), காங்கிரஸ் இயக்கத்துடன் நெருக்கமான உறவு பூண்டவர். ஹைண்ட்மான், இந்திய தேசிய விடுதலை வீரர்களுடன் நட்புறவு கொண்டவர். இவர், தமது சுய சரிதையிலும், இந்தியச் செல்வத்தை பிரிட்டிஷ் ஆட்சி வற்றடித்ததைப் பற்றி எழுதியுள்ளார்.

இந்திய தேசியவாதிகளில் தாதாபாய் நவ்ரோஜியின் வழிகாட்டுதலின் பேரில் மகாகோவிந்த ரானடே, ஜி. வி. ஜோஷி, கோபாலகிருஷ்ண கோகலே, ஜி. சுப்பிர மணிய ஐயர், ரமேஷ் சந்திரதத், டி. இ. வாச்சா முத லானோர் பொருளாதார தேசியச் சிந்தனையை வளர்க் கும் ஆய்வு நூல்களை, கருத்துகளை வழங்கியுள்ளனர்.

தாதாபாய் நவ்ரோஜியின் ''வறுமையும் இந்தியாவில் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்'' (Poverty and un-British rule in India — 1901) எனும் நூல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ''வற்றடிக்கும் கொள்கை''யை மிக விரிவாக ஆய்வு செய்துள்ளது. தேசிய பொருளா தாரத்தை கற்கத் தூண்டிய முதல் நூல், இது. 1867-லேயே ''வற்றடிக்கும் கொள்கை''யை தாதாபாய் நவ்ரோஜி ஓர் ஆய்வுக் கட்டுரையில் விளக்கியுள்ளார். இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றி மகாகோவிந்த ரானடே பூனா சர்வ ஜனிக் சபையின் பத்திரிகையில் எழுதி வந்தார். இந்தத் தலைப்பில் 1872, 1873-களில் இரு ஆய்வுரை நிகழ்த்தியுள்ளார், ரானடே.

1901-இல் வெளிவந்த ரமேஷ் சந்திரதத்தின் ''தொடக்க கால பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியப் பொரு ளாதார வரலாறு'' எனும் நூலும், 1903-இல் வெளி வந்த அவருடைய ''விக்டோரியா யுகத்தில் இந்திய பொருளாதாரத்தின் வரலாறு'' எனும் நூலும் பொரு ளாதார தேசியச் சிந்தனையை வளர்த்த நூல்களாகும்.

பம்பாய் மாநிலத்தில் மகாகோவிந்த ரானடே, ஜி. வி. ஜோஷி, கோகலே; பஞ்சாப்பில் லாலா லஜ்பத் ராய், வங்கத்தில் தாதாபாய் நவ்ரோஜி, ரமேஷ் சந்திரதத் ஆகியோர் பொருளாதார நூல்களைப் படைத்தது போல சென்னை மாநிலத்திற்கு ஒரே பிரதிநிதியாக ஜி. சுப்பிர மணிய ஐயர், 1903-இல் ''பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் சில பொருளாதார அம்சங்கள்'' (Some Economic aspects of British rule in India) எனும் நூலைப் படைத்தார்.

தீவிரவாத தேசியத்தை பிரசாரம் செய்தவர்கள் பிரிட்டிஷாரின் மனமாற்றத்திற்குப் பாடுபடுவதில் ஒரு பொழுதும், நம்பிக்கையற்றவர்களாக, மக்கள் இயக்கங் களில் நம்பிக்கை கொண்டார்கள்.

மிதவாதிகளின் வழிமுறையான அரசியல் சாசனத் துக்குட்பட்ட கிளர்ச்சியை விமர்சனம் செய்து லோக மான்ய பாலகங்காதர திலகர், அவருடைய 'கேசரி' எனும் மராட்டிய மொழி இதழில் (12-3-1907) எழுதிய தாவது:

''இந்திய அரசியல் இயக்கத்தைப் பொறுத்தவரை 'அரசியல் அமைப்பிற்கு இசைவான' என்ற சொற் றொடரை நாங்கள் தவறு என்று நிரூபித்து, நிலை நிறுத்தியுள்ளோம். ஆங்கிலேயர்கள் தங்கள் இயக்கத்தை நடத்த இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார்கள் என்பதற்காக நாமும், பயன்படுத்துகிறோம். பக்கத்து வீட்டுப் பெண்மணி கழுத்தில் தங்கநகை போட்டிருப் பதைப் பார்த்து, நாம் நமது கழுத்தைச் சுற்றிக் கயிற் றைக் கட்டுவது போலிருக்கிறது. அது நமக்கு ஆபரணமு மன்று, சொத்துமில்லை. அதனால் நமது குரல்வளை தான் நெரிக்கப்படும்... பொதுமக்கள் கருத்தைத் தட்டி யெழுப்பிப் பெரும்பான்மையோரை இணங்க வைப்பது. அரசியல் சாசனவழி இயக்கம் என்று கூறப்படும். இந்தியாவில் அவ்வாறு ஓர் அரசியல் சாசனம் இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்...

கடந்த காலத்தில் அனுமதித்தது போல இந்தியாவில் இத்தகைய அரசியல், செல்வாக்குப் பெறுவதை விலக்கு வதில் விழிப்புடன் இருக்க வேண்டும்.''

இந்திய தேசிய அரசியலில் மிதவாத தேசியம் பின் னுக்குத் தள்ளப் பெற்று, தீவிரவாத தேசியம் முன்னுக்கு வந்ததற்கு, 1905-இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திணித்த வங்கப் பிரிவினைச் சட்டம் ஒரு காரணமாகும்.

வங்கப் பிரிவினைக்கு எதிர்ப்பு தெரிவிக்க 'பகிஷ் காரம்', 'சுதேசி' இயக்கங்கள் 'வந்தேமாதரம்' எனும் புதிய முழக்கத்துடன் சீறிப் பாய்ந்து பரவின. சுய ராஜ்யம், சுதேசி, பகிஷ்காரம், தேசிய கல்வி எனும் புதிய போராட்ட முறைகள் புதிய தலைமுறையைப் படைத்தன.

2-1-1907-இல் திலகர் ''புதிய கட்சியின் கொள்கை கள்'' என்னும் வரலாற்றுப் புகழ் கொண்ட பேருரையை கல்கத்தாவில் நிகழ்த்தினார். இதை மகாகவி பாரதியார் தமிழாக்கம் செய்தார்; இது தனி வெளியீடாக வந்தது.

பஞ்சாப்பில் லாலா லஜ்பத்ராய், வங்கத்தில் அரவிந்த கோஷ், பிபின் சந்திரபால், மகாராஷ்டிரத்தில் பால கங்காதர திலகர், தமிழகத்தில் வ. உ. சிதம்பரம்பிள்ளை, மகாகவி சி. சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் தீவிரவாத தேசியத்தின் ஒளியைப் பரப்பி னார்கள்.

வ. உ. சி., பாரதியார், சுப்பிரமணிய சிவா தீவிரவாத தேசியம் எனும் திரிசூலத்தின் கூர்மைமிக்க மும்முனை களாகத் திகழ்ந்தனர். விடுதலைப் போராட்டக் களத்தின் புரட்சிக்கவியாக பாரதியாரும், நாவீறு படைத்த வீர முரசாக சுப்பிரமணிய சிவாவும், சுதேசிக் கப்பல் ஓட்டி தேசிய தன்மானத்தையும், நாட்டுப் பற்றின் மாபெரும் வீச்சையும் மக்கள் உள்ளங்களில் பதியச் செய்த வ. உ. சி.யும், தமிழகத்தைத் தீவிரவாத தேசிய இயக்கத் தின் புத்தெழுச்சியில் இணைத்தனர்.

இந்த மூவர்களில் தேசிய அரசியலில் முதலில் பிரவேசித்தவர் வ. உ. சி. இவருடைய அரசியல் பங்கேற்பின் பொழுது, தீவிரவாத தேசியம் முழுவேகத்தில் இல்லை. மிதவாத தேசியத்தின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

கலாசார, ஆன்மிக மாநில அரசியல் இயக்கங்களின் பின்னணியில் தோன்றிய விடுதலை இயக்கம், கால ஓட்டத்தில் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று வலிமை மிக்க மக்கள் இயக்கமாக உயிர்த்தெழுந்தது.

2

மாவீரனின் தோற்றம்

தேசிய மாவீரராக வரலாறு படைத்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, தாம் பிறந்த மண்ணும் வீரம் விளைவித்த மண்ணிற்கு மிக அருகிலேயே இருப்பது என்பதில் பெருமிதம் கொண்டவர். அவர் பிறந்த ஊர் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஒட்டப்பிடாரமாகும். மாவீரரை பெற்றெடுத்த இந்த ஊர், தமிழகத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து முதல் முழக்கமிட்டவர் என்று வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள வீரபாண்டியக் கட்டபொம்மனை ஈன்றெடுத்த பாஞ்சாலங்குறிச்சிக்கு மிக அணித்ததாகும்.

கவிதையில் வடித்த தமது சுய சரிதையில் சிதம்பரம் பிள்ளை பிறந்த ஊரைப்பற்றி பெருமிதவுணர்வுடன் கூறியதாவது:

> ''அருந் திறன் நாட்டி ஆங்கில ரோடமர்
> பொருந்திய கட்ட பொம்மு நாயகன்
> பாஞ்சால மன்னன், பண்புடன் அமர்ந்த
> பாஞ்சால நகர்மதில் பக்கத்துள்ளதும்''

புறநானூற்றுப் பாணனாக அவதரித்த சுப்பிரமணிய பாரதி பிறந்த ஊரான எட்டயபுரமும், பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது என்பதும் நினைவிற்குரியது.

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அமைச்சரான தானாதிபதி சிவசுப்பிரமணியம் பிள்ளை, வ. உ. சி. யின் தந்தைக்கு உறவினர் என்பதும் அறியத்தக்கது.

உலகநாதப் பிள்ளைக்கும், பரமாயி அம்மையாருக்கும் தவப்புதல்வராக 1872 செப்டம்பர்

5-வியாழக்கிழமையில் பிறந்தார். வ. உ. சி. அவருக்குப் பின் நான்கு சகோதரர்களும், இரு சகோதரிகளும் பிறந்தனர்.

படிப்பு

பழங்கால வழக்கப்படி வ. உ. சி.யின் ஆரம்பக்கல்வி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தொடங்கியது. வீரப் பெருமாள் அண்ணாவி என்பவர் ஆசிரியர். அரிச்சுவடி, ஆத்திசூடி, எண்ணின் சுவடி, உலகநீதி, கொன்றை வேந்தன், குழியின் பெருக்கம் (கணிதநூல்) வெற்றி வேற்கை, வெண்பாமூதுரை என்னும் சிறுவர்களுக்கான இலக்கிய நூல்களைக் கற்றார் வ. உ. சி. இந்த நூல்கள் அறநெறி ஒழுக்கங்களை இளமையிலே சிறுவர்கள் மனதில் பதிய பயன்பட்டன.

தமிழ்ப்படிப்புடன் ஆங்கிலம் படிப்பின் தேவையை யும் மத்தியதர வருக்கம் உணர்ந்திருந்தது. இதனால் வ. உ. சி.க்கு ஆங்கிலக் கல்வியை அளிக்க விரும்பினார், அவருடைய தந்தை. இரவுநேரங்களில் தனியாக கிருஷ்ணன் என்பவர் வாயிலாக சிதம்பரம் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். இந்த ஆங்கில போதனையாசிரியர் வேற்றூர் சென்றுவிட்ட நிலையில், ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான பள்ளிக்கூடம் இல்லாதக் குறையை நீக்க செல்வந்தரான உலகநாதம் பிள்ளை தமது செலவிலேயே, வ. உ. சி.யின் ஆங்கிலக் கல்விக் காக புதிய பள்ளிக்கூடத்தைக் கட்டுவித்தார். வ. உ. சி. ஒருவருக்காகக் கட்டப்பட்ட அப்பள்ளிக்கூடம் ஊரில் உள்ள பலருக்கும் ஆங்கிலம் கற்பிக்கப் பயன்பட்டது.

தமது பதினான்காம் வயதில் தூத்துக்குடியில் ரோமன் கத்தோலிக்க புனித ஜேவியர் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார் சிதம்பரம். பின்னர் கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத்துரை ஐயர் ஆகியோரிடம் ஆங்கிலத்தையும், தமிழறிஞர் சவரிராய

பிள்ளையிடம் தமிழையும் சிறப்பாகக் கற்றறிந்தார், சிதம் பரம். அவருடைய கல்வி மெட்ரிகுலேஷனோடு முடிவுற்றது.

வழக்கறிஞர் தொழில்

வக்கீல் படிப்பு பெறுவதற்கு முன்பு ஒட்டப்பிடாரம் தாலூகா அலுவலகத்தில் ஓரிரு மாதங்கள் குமாஸ்தா வாக வேலை பார்த்தார். வக்கீல் படிப்பில் நாட்டம் கொண்டு திருச்சியில் கணபதி ஐயர், ஹரிஹர ஐயர் என்ற சட்டநிபுணர்களிடம் சட்டம் பயின்றார். 'இரண் டாவது கிரேடு வக்கீல்' எனும் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்றார்.

வ. உ. சி. யின் குடும்பமே, வக்கீல் குடும்பம். அவ ருடைய பாட்டனார், பெரிய தந்தையார், தந்தையார் அனைவரும் வக்கீல்கள். தமது வழக்கறிஞர் தொழிலை முதன்முறையாக பிறந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் தொடங்கினர். அங்கு ஒரு 'சப் மேஜிஸ்ட்ரேட் கச்சேரி' இருந்தது. 'சிவில்', 'கிரிமினல்' என்றும் இரு துறை களிலும் வ. உ. சி. ஈடுபட்டிருந்தபோதிலும், 'கிரிமினல்' துறையில் புகழ்பெற்று மிக்க வருமானமும் பெற்றார்.

வக்கீல் தொழிலில் ஒழுக்கம், வாய்மை, பிறர் நலம்பேணல் முதலானவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டார், வ. உ. சி. காவல்துறையினர் எவர் மீதாவது தவறான வழக்கு தொடுத்தால், அதை அறிந்தவுடன் பாதிக்கப்பட்டவருக்கு உதவிபுரிந்து வந்தார், வழக் கறிஞர் சிதம்பரம். இதனால் காவல்துறை அதிகாரி களின் கோபத்திற்கு ஆளாக வேண்டியிருக்குமே என்று அஞ்சமாட்டார்.

வ. உ. சி. யை சூழ்ச்சியால் அடக்க முயன்றனர் காவல் துறை அதிகாரிகள். தலைமைக் காவலர் (ஹெட் கான்ஸ் டேபிள்) சுப்பிரமணியம் என்பவரைக் கொலை செய்த தாக வந்த வழக்கில் வ. உ. சி. யை ஒரு குற்றவாளியாகச் சேர்த்தனர், காவல்துறையினர். குற்றவாளிக்களுக்காக

வ. உ. சி. வாதாடாமல் தடுக்க இந்தச் சூழ்ச்சி உருவாகியது. சூழ்ச்சியை, சூழ்ச்சியால் வென்றிடத் திட்டமிட்டார், வ. உ. சி. எதிரிகளுக்காக வழக்காடப்போவதில்லை என்று வாக்குறுதியளித்து வழக்கில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். பின்னர் விசாரணையின் பொழுது எதிரிகளுக்காக வாதாடி வழக்கில் வெற்றியும் பெற்றார். ஆத்திரம் கொண்ட அதிகாரிகள் அவர் மீது வழக்கு தொடர்ந்தனர். அவ்வழக்கை விசாரித்த மாஜிஸ்ட்ரேட் பொய் வழக்கு என அதைத் தள்ளுபடி செய்தார். சிதம்பரனாருக்கு நஷ்ட ஈடு தரும்படியும் உத்தரவிட்டார். தொல்லைகொடுத்த போலீஸ் கான்ஸ்டேபிளும் வேலையிழந்தார். ஏகாம்பரம் என்ற சப்-மாஜிஸ்ட்ரேட் லஞ்சம் வாங்கியதைக் கண்டு அவர் மீது வழக்கு தொடுத்து அவருக்குத் தண்டனை கிடைக்கச் செய்தப் பிறகு, மற்ற இரு அதிகாரிகள் மீது வந்த லஞ்சவழக்கில் அவர்களுக்கு எதிராக வாதாடி குற்றச்சாட்டை நிரூபித்தார். அந்த இரு அதிகாரிகளுக்கும் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. அதிகாரிகளைப் பகைத்துக் கொண்டு உள்ளூரில் வ. உ. சி. தொழில் நடத்துவதை, அவர் தந்தை விரும்பவில்லை. தந்தையின் கட்டளைக்குக் கீழ் படிந்து 1900-ஆம் ஆண்டு தூத்துக்குடி சென்றார், வ. உ. சி. இந்த நிகழ்வு அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட காரணமாயிற்று.

திருமணம்

1895-இல் தமது இருபத்துமூன்றாம் வயதில் திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளை அவர்களின் மகள் வள்ளியம்மையைத் திருமணம் செய்துக் கொண்டார், வ. உ. சி.

கணவருடைய தமிழ்ப்புலமைக்கு ஈடுகொடுக்கும் கல்வியாற்றலை வள்ளியம்மை பெற்றிருந்தார். தமது மனைவியின் பண்புநலன்களை வ. உ. சி., சுயசரிதையில் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

''என்னைப் பெற்றோர் என்னோடு பிறந்தோர்
என்னை நட்டோர் யாவருந் தன்னுடை
உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிரிலா மனத்தள்; தெய்வமே யனையள்
வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்
அறிவே வடிவமா அமைந்திவண் நின்று
செறிவுறும் இன்பம் சிறக்க அளிக்கும்
வள்ளிநா யகமொடும் மற்றும் மறைகளைத்
தெள்ளிய வுணர்ந்த திறத்தின ரொடும்யான்
பிரம நிலையினைப் பேசி விசாரணை
புரியுங் காலையில் புறத்தினில் நின்று
சொன்னவை யெல்லாந் துரிசறக் கேட்டுப்
பின்னவை யென்றொடு பெட்புறச் சொல்லுவள்.''

தமிழ்ப்பற்று, ஆன்மிகப் பற்று இரண்டிலும் வ.உ.சி.க்குத் தக்க வாழ்க்கைத் துணைநலமாக வள்ளியம்மை விளங்கினார். இவையேயல்லாமல், கணவருடைய சமூக சீர்திருத்தச் செயல்களுக்கும் பக்க பலமாகத் திகழ்ந்தார், வள்ளியம்மை. ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த விருதுநகர் ராமையா தேசிகர் என்பவரைத் தம் இல்லத்தில் தங்கவைத்து ஆதர்வளித்து வந்தார், வ.உ.சி. ரா்மையா தேசிகர், ஊனக் கண்களை இழந்திருந்தாலும், ஞானக் கண்களைப் பெற்றிருந்தார். இவருக்கு சாலப் பரிந்து உணவளித்து ஆதரவுகாட்டிவந்தார் வள்ளியம்மை. உற்றார், உறவினர் சாதியாசாரம் பேசி பழித்த பொழுது, வ.உ.சி.க்கு மனத்துன்பம் ஏற்படாதவாறு அமைதி கூறியவர், வள்ளியம்மை.

''துறவிக்குக் குலம் ஏது? உயிர்கள் தோறும் இறைவன் வீற்றிருக்கிறான் என்று கூறியது நீங்கள்தானே! பழிப்பவர் பழிக்கட்டும்; நாம் நம் மனவழி நடப்போம்'' எனச் சாற்றி ''காதலன் காரியம் யாவினுக்கும் கை கொடுத்து'' வந்தார் வள்ளியம்மை.

வக்கீல் தொழிலில், வ.உ.சி. கட்டிக்காத்துவந்த ஒழுக்க நெறிக்கு வள்ளியம்மையும் துணைநின்றார். ஒரு

சமயம் வ. உ. சி.யின் உறவினர் ஒருவர், ஒரு வழக்கை நடத்துவதற்காக கட்சிக்காரரர் ஒருவரைக் கொண்டுவந் தார். இதற்காக அந்த உறவினர், வ. உ. சி. யிடம் 'கமி ஷன்', கேட்டார். இதை அறிந்த வள்ளியம்மை, ''காசு கொடுத்து வழக்கிற்காக கட்சிக்காரரைத் தேடவேண் டாம்'' எனக் கூறி பணத்தைத் திருப்பித் தந்திடத் தூண்டி னார். குறுக்கு வழியில் பணம் சேர்க்க விரும்பவில்லை, வள்ளியம்மை.

இவ்வாறு ம்ாதர் அறங்களை மாட்சி பெறச் செய்து வாழ்ந்துவந்த வள்ளியம்மை 1901-இல் இறைவனடி சேர்ந்தார். ஆறாண்டு கால இனிய இல்லறம், திடீ ரென்று நழுவிப்போனதைக் கண்டு அதிர்ச்சி அடைந் தார், வ. உ. சி.

அன்பு மனைவியின் பிரிவு அவரை ஆற்றாமையின் விளிம்பிலே கொண்டுச் சென்று நிறுத்தியது. அந்த அவலச்சூழலில் அவருடைய கவித்வ உள்ளம் கசிந்துருகி வள்ளியம்மையின் நினைவுகளை வெண்பாக்களாக யாத்தது. இந்த வகையில் இயற்றப்பட்ட 215 வெண் பாக்களை, ''வள்ளியம்மை சரித்திரம்'' எனும் நூலாக 1915-இல் வெளியிட்டார், வ. உ. சி. தம்முடைய பெய ரைப் போட்டுக் கொள்ளாமல், தமது மைத்துனர் முத்து சாமிப் பிள்ளையை நூலாசிரியராகக் குறிப்பிட்டார், வ. உ. சி.

வள்ளியம்மையின் குடும்பத்தைச் சார்ந்த மீனாட்சி அம்மையாரை வ. உ. சி. வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு, வள்ளியம்மையின் குடும்பத்திற்கு ஆறுதல் அளித்தார்.

முதல் மனைவி வள்ளியம்மையைப் போலவே, இரண்டாவது மனைவியான மீனாட்சியம்மையும் வ. உ. சி. யின் இலட்சிய வாழ்க்கைக்கு உறுதுணையாக நின்றார்.

சமூக சீர்திருத்தம் பற்றி வெளியுலகத்தில் வாய்வீச்சு களை அள்ளி வீசலாம். ஆனால் குடும்ப வாழ்க்கையில

சமூக சீர்திருத்தம் செம்மை நலம் காண, மனைவியின் உள்ளார்ந்த ஒத்துழைப்புத் தேவை. இந்த ஒத்துழைப்பை மீனாட்சியம்மை மனமுவந்து அளித்தார். அரிசன வகுப்பைச் சார்ந்த சகஜானந்தா சாமி எனனும் துறவியைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார், வ. உ. சி. அங்கு, மீனாட்சியம்மையார் சகஜானந்தா சாமியை அகம்—முகம் மலர வரவேற்று விருந்தோம்பி மகிழ்ந்தார்.

வ. உ. சி., சென்னையில் இருந்து ஒட்டப்பிடாரம் சென்ற பொழுது தம்முடன் சகஜானந்தா சாமியையும் அழைத்துச் சென்றார். தமது குடும்பத்தில் நிகழ்ந்த விழாக்களில் சகஜானந்தா சாமியைக் கலந்துக்கொள்ளச் செய்தார். யாராவது சகஜானந்தாசாமியின் குலத்தைப்பற்றிக் கேட்டால், ''துறவிகளிடம் சாதி பற்றி விசாரிக்கக் கூடாது'' என்று பதிலளித்தார், வ. உ. சி.

சகஜானந்தாசாமி, அரிசன மக்கள் முன்னேற்றம் காண கல்விக் கூடங்களை நிறுவினார். வ. உ. சி.யைப் போலவே வேதாந்தப் பயிற்சி கொண்டவர், அவர். வ. உ. சி.யின் அன்பையும், ஆதரவையும் உளம் நெகிழ்ந்து, ''தமது பிள்ளை போன்று என்னை வளர்த்தார், அப்பெருந்தகை வள்ளல்'' எனப் போற்றியுள்ளார், சகஜானந்தா சாமி.

இளமையில் தமிழ்ப் புலமை

தமிழையும், சைவத்தையும் இருகண்களாகக் கொண்ட வேளாளர் மரபில் வந்த வ. உ. சி.க்கு தமிழ் மொழிப் புலமை இயல்பாகவே அமைந்தது. இவருடைய பாட்டனார் சிதம்பரக் கவிராயர் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கியவர். ''இவருக்கு தமிழிடமிருந்து அபிமானம் கூட இவர் கேஸில் ஒரு பெருங்குற்றமாகப் பாவிக்கப் பட்டது'' என்னும் ஒரு குறிப்பு இவருடைய வாழ்க்கை வரலாற்று நூலில் (1908) கூறப்பட்டுள்ளது. இதே நூலில், ''தமிழபிமானமே இவருக்கும் சிவாவுக்கும் அத்யந்த சினேகிதத்தை விளைவித்தது'' எனும் மற்றொரு

குறிப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இணைந்து நடத்திய விடுதலை இயக்கப் பிரசாரம், இவர்களது கடுஞ்சிறை வாசத்திற்கு. மூலகாரணமாயிற்று. இதே காலகட்டத்தில் மகாகவி பாரதியாரும் தமிழ்க் கவிதையையும், தமிழ் உரைநடையையும் விடுதலைப் போராட்டக் கருவிகளாகப் பயன்படுத்தினார். இந்த மூவர் தமிழ், தேசிய விடுதலைப் போராட்டத்தில் நிகழ்த்திய சாதனைகள் அளப்பரிது; தன்னேரில்லாதது.

1905-லேயே மதுரைத் தமிழ்ச் சங்கம் வ. உ. சி.யைத் தனது உறுப்பினராக வரவேற்று கௌரவித்துள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர், 12.5.1905-இல் வ. உ. சி.க்கு எழுதியக் கடிதத்தில் கூறியதாவது:

''தாங்கள் இச் சங்கத்தில் கல்வியங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ் பாஷாபிவிர்த்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்து சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்று பெருமகிழ்வெய்தினேன். இவ்வாறு அன்புகூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அனேக வந்தனம் அளிக்கின்றோம்.''

''மதுரைத் தமிழ்ச் சங்கம் மருவி நின்று
மதுரத் தமிழினை மனங்கொடு வளர்த்தேன்''

என்று தமது சுயசரிதையில் வ. உ. சி.யும் குறிப்பிட்டுள்ளார். தமிழில் சிறந்தச் சொற்பொழிவாளராகப் பெயர்பெற்றதையும் சுயசரிதையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''சைவசித் தாந்த சபையினுட் புகுந்து
கைவரக் கொண்டேன் கருத்தினி துரைத்தலை
....
....
வாலிபர் சங்கம் மாண் பிரம சங்கம்
நாலைந்து மற்றவை நயத்தோடு சேர்ந்தேன்
பிரசங்கங் கேட்டேன்; பேசினேன் யானும்;
பிரசங்கி என்றொரு பெயரும் கொண்டேன்''

இந்திய தேசிய விடுதலைப் போரின் ஒரு போராட்ட முனையாகத் திகழ்ந்த சுதேசி இயக்கம் நாடெங்கும் தாய் மொழிப் பற்றைத் தூண்டி நடத்தியது. இந்த இயக்கத்தின் ஈட்டிமுனைகளுள் ஒன்றாக விளங்கிய வ. உ. சி., நாட்டுப் பற்றையும், தாய்மொழிப்பற்றையும் இரண்டறக் கொண்டார்.

சிறைவாழ்க்கையில் நான்காண்டு காலத்திலும், விடுதலைக்குப் பிறகு பிரச்னைகள் மலிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு 1920 முதல் 1936 வரையிலான காலத்திலும் அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள், ''வ. உ. சி.யின் தமிழ்த் தொண்டு'' எனும் மேல்வரும் அத்தியாயத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

சமயவுணர்வும்—சாத்திரங்களில் ஈடுபாடும்

வ. உ. சி., இளைஞராக இருந்தகாலத்தில், தந்தையின் கண்டிப்பு மிக்க மனோபாவத்தை பொறுத்துக் கொள்ளமுடியாமல் துறவறக் கோலம் மேற்கொள்ளத் துணிந்த வியப்பிற்குரியச் செய்தியும் உள்ளது. மழித்தத் தலையுடன், கௌபீனம் தரித்து, காசி மாநகரம் சென்று காசி விசுவநாதப் பெருமானைத் தரிசிக்கவும் திட்டமிட்டார். ஆனால், இவர் தந்தையார் இவரை மதுரையில் கண்டு அமைதி கூறி வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்.

இந்துமதப் பெருமிதவுணர்வுடன் சிறந்த சைவராக விளங்கிய வ. உ. சி., வேதாந்தத்தில் மிக்க ஈடுபாடும், பயிற்சியும் பெற்றார். வேதாந்தத்தை விளக்கும்'' கைவல்யம்'', ''விசார சாகரம்'' எனும் இரு பெரும் தத்துவ நூல்களை கசடறக் கற்றுத் தேர்ந்தவர் வ. உ. சி.

'கைவல்யம்' என்று சுருக்கமாக அழைக்கப்படும் 'கைவல்ய நவநீதம்', தாண்டவராய சுவாமிகள் அவர்களால் தமிழில் செய்யுள் வடிவத்தில் இயற்றப்பட்டது. 'விசாரசாகரம்' என்னும் நூல் இந்தி மொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும். மூல நூலாசிரியர் பெயர் நிச்சலதாஸ் (1849-1919). 1873-இல்

முதல் தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்துள்ளது. வ. உ. சி.யின் நண்பர் சுவாமி வள்ளிநாயகம் வ. உ. சி. யின் வேதாந்தக் கல்விக்கு உற்றத் துணைபுரிந்தார். 'ஞானவாசிட்டம்' எனும் வேதாந்தத் தத்துவ நூலை மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளிடம் கற்றார்.

தூத்துக்குடியில் தெய்வப் பேரவையில் இளம் வயதில் சேர்ந்து சமயப் பிரசாரம் செய்தார். தூத்துக்குடி மேலூர் பகுதியில் திருஞான சம்பந்தர் மடாலயத்தில் சைவ சித்தாந்த சபையொன்றை சிவகுருநாதபிள்ளை மற்றும் சிலருடைய துணைகொண்டு நிறுவினார், வ. உ. சி. இங்கு கைவல்யம் கற்பிக்க வகுப்புகளை வ. உ. சி. நடத்தியுள்ளார்.

'கைவல்ய நவநீதம்' பெற்றிருந்தச் செல்வாக்கை பல் கலைச் செல்வர் அமரர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 'தமிழில் அத்வைதம்' எனும் ஆங்கில நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''தெற்கு மாவட்டங்களில் கைவல்ய நவநீத சங்கங்கள் நிறைய இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தச் சங்கங்கள் மாபெரும் சக்தியாக விளங்கின. விதவைகள் இந்தச் சங்கங்களின் தலைவர்களாக அவ்வப் பொழுது பணியாற்றியுள்ளனர். கைவல்யநவநீதம் போதித்த அத்வைதம் பெற்றிருந்த செல்வாக்கால், அத்வைத வேதாந்தம் கற்ற விதவைகள், குடும்பங்களில் தங்கள் தகுதிப்பட்டால் ஜீவசக்தி பெற்றவர்களாகத் திகழ்ந்தார் கள் ... இவ்வகையில் கைவல்ய நவநீதம் மாபெரும் சமூக சக்தியாக இருந்தது.''

சுவாமி விவேகானந்தர் அத்வைத வேதாந்தத்தை ''செயல்முறை வேதாந்தம்'' என விளக்கமளித்து போதித்தது, இளைஞர்களிடையே புத்தெழுச்சியை ஏற்படுத்தியது. வ. உ. சி.யின் முதல் வாழ்க்கை வர லாற்று நூல் (1908), வ. உ. சி.யை ''விவேகானந்தர்

கூட்டத்தைச் சேர்ந்தவரென்னலாம்'' என்று வருணித்துள்ளது. வ. உ. சி.யைப் போலவே, அவருடைய யாத்தத் தோழர்கள் மகாகவி பாரதியும், சுப்பிரமணிய சிவாவும் வேதாந்தச் சமயத்தைப் போற்றியவர்கள் என்பது இங்கு நினைவுகூர்வதற்குரியதாகும்.

வேதாந்தத்தில் மட்டுமல்லாமல், சைவசித்தாந்தத்திலும் தேர்ச்சி பெற்றவர் வ. உ. சி. இளம் வயதிலேயே தூத்துக்குடி சைவசித்தாந்த சபையில் சிவஞான போதத்தை விளக்கி சொற்பொழிவாற்றியுள்ளார் வ. உ. சி.

பன்னிரண்டு சூத்திரங்களைக்கொண்ட ஸ்ரீமெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. சைவ சமயத்தின் முதல் சநந்தானாச்சாரியார், ஸ்ரீமெய்கண்டதேவர்.

சிவஞான போதத்திற்கு பல உரைகள் பாரம்பர்யமாக வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. வ. உ. சி. அவர்களும் தமது சமகாலத் தேவைக்கு ஏற்ப சிவஞான போதத்திற்கு புத்துரை கண்டார். தமது முயற்சியைப் பற்றி ''உரைப்பாயிர''த்தில் உரையாசிரியர் வ. உ. சி. கூறியுள்ளதாவது:

''நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மதவேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களேயென்றும் யான் கருதுகிறேன். அதனாலும் இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.''

பாரம்பர்யமாக சிவஞான போத உரையாசிரியர்கள் தங்கள் சமயக் கருத்துகளை நிலைநிறுத்தியும், பிற சமயக் கருத்துகளை கண்டனம் செய்தும் எழுதுவார்கள். இந்த அணுகுமுறையை காலத்தின் தேவை கருதி ஏற்க

விரும்பவில்லை. விடுதலைப் போராட்டத்தில் மக்களை ஒன்று திரட்டும் பொழுது சமயவாதப் போட்டிகளுக்கு இடம் தராமல் தேசபக்தியுணர்வுடன், சமயவுணர்வைப் பேண வேண்டும் எனும் விழுமிய நோக்கு காரணமாக உரைப்பாயிரத்தில் முற்கூறியவாறு விளக்கமளித்தார் வ. உ. சி.

''சித்தாந்தமும், வேதாந்தமும் ஒன்றேயென்ற எனது கொள்கை உறுதியானது ''என்று தமது சிவஞானபோத ஆய்வில் தெளிவுபடுத்தியுள்ளார், வ. உ. சி. இந்த நூல், வேதாந்தச் சார்புடைய மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடாலயத்தின் தலைவராகிய ஸ்ரீ சோம சுந்தர சுவாமிகளுடைய தலைமையில் அரங்கேற்றப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வ. உ. சி.யின் ஆன்மிகத் தேடலில், அவர் சென்னை இராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் சுவாமி இராம கிருஷ்ணானந்தாவைச் சந்தித்ததும் ஒரு திருப்பத்தைத் தந்தது. தமது இந்தச் சந்திப்பை விளக்கமுற சுயசரிதை யில் கூறியுள்ளார் வ. உ. சி. ஆன்மிக வேட்கையுடன் வ. உ. சி. எழுப்பிய வினாவிற்கு, அதற்குரிய விடை கிடைக்காமல் அப்பொழுது நாட்டில் மூண்டெழுந்த சுதேசி இயக்கம் பற்றிய விடை கிடைத்தது, ஒரு மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. உண்மை சில சமயங்களில் வியப்புக் கோலம் பூண்டு வழிநடத்துவதும் உண்டு என் பதற்கு இந்தச் சந்திப்பு ஒரு சான்றாகும்.

உலகனைத்திற்கும் உரிய இராமகிருஷ்ண மடத்தின் தலைவர், தம்மை நாடிவந்த வ. உ. சி. க்கு ஆன்மிக வுணர்வை அள்ளி வழங்காமல் அரசியல்வுணர்விற்கு ஆக்கம் அளித்தது வியப்பிற்குரியதாகும்.

தமது நாற்பது ஆண்டு கால வாழ்க்கை வரலாற்றை வ. உ. சி. அவர்கள் சுயசரிதையாக, கவிதை வடிவத்தில் அமைத்துத்தந்தது பெரும் பயன் தருகிறது. அவருடைய சுயசரிதையின் ஒரு பாகம் அவருடைய சிறைவாழ்க்கை யிலும், மற்றொரு பாகம் விடுதலை பெற்ற பின்பும்

இயற்றப்பட்டது. ஆனால், அவருடைய மறைவிற்குப் பிறகு 1946-இல்தான் அச்சேறி நூலாக வெளியிடப் பட்டது.

அவருடைய தொடக்க கால அரசியல் வாழ்க்கையி லேயே, அவருடைய வாழ்க்கை வரலாறு 1908-லேயே ஒரு சிறு நூலாக வெளிவந்தது. நாற்பத்தெட்டு பக்கங்கள் கொண்ட இந்நூலின் பெயர், "ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஜீவிய சரித்திரச் சுருக்கம்" என்பதாகும். சென்னையில் பதிப்பிக்கப்பெற்ற இந் நூலை வெளியிட்டவர் எம். கிருஷ்ணசாமி ஐயர். நூலா சிரியர் பெயர் குறிப்பிடப்படாமல், "தொகுத்தவர்" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பெயர் எஸ். வேதமூர்த்தி முதலியார்; இவர் வ. உ. சி.யின் நெருங்கிய நண்பரும், 'சர்வஜன மித்திரன்' என்னும் தமிழ் இதழின் ஆசிரியரும் ஆவார். இந்த நூலில் வ. உ. சி. யின் வாழ்க்கை வரலாறு பின்வருமாறு தொடங்கப்பெற்று எழுதப்பட்டுள்ளது:

"எந்த நாட்டிலும், எந்தஜாதியாரிலும் தத்தம் வீரர் களைப் போற்றித்தொழுவது வழக்கத்தில் பண்டைக்கால முதல் இருந்து வருகிறது. வீரர்களைத் தொழுவதற்காக, வீரர்கள் யார்? வீரர்களை கண்டுபிடிப்பதெப்படி? இவ் விஷயங்கள் சிதம்பரம் பிள்ளையை வீரரர்கப் பாவித்துக் கூறப் புகும் சரித்திரத்தில் கூறப்படும். நம் நாட்டின் அபிவிருத்திக்கு மிக்க பாடுபட்டுழைத்த வெகுசிலரில் இவர் ஒருவரென்பதை யாரும் மறுக்க முடியாது."

1908-லேயே "வீரராகப் பாவித்து" சரித்திரம் எழுதப்பட்டாலும், மக்கள் மறதியும், அரசியல் நிகழ்ச்சி களின் காலவோட்டமும், வ. உ. சி.யை சற்றே மறக்கச் செய்தாலும் அவருடைய இணையற்ற தியாகமும், நாட்டுப் பற்றும் மேகமூட்டத்தை கிழித்தெறிந்து வெளிப் படும் சூரிய ஒளியைப் போல் நிலைபேறு கொண்டு விட்டது.

3

அரசியல் வானில் எழு ஞாயிறு

சுவாமி இராமகிருஷ்ணானந்தரின் சுதேசிய அருளுரை, வ. உ. சி.யின் உள்ளத்தில் வித்தென விழுந்தது என்று கூறப்பட்டிருந்தாலும், அதற்கு முன்பாகவே வ. உ. சி.யின் அரசியல் உள்ளம் பண்படுத்தப்பட்டிருந்தது.

தேசிய அரசியலை 1893 முதற்கொண்டே லோக மான்ய பாலகங்காதர திலகர் வழியே அறிந்துக் கொண்டதை வ. உ. சி.யே எழுதியுள்ளார். திலகர் பற்றிய நினைவுக்குறிப்புகள் அடங்கிய ஓர் ஆங்கில நூலில் வ. உ. சி.யின் ஆங்கிலக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. அதில் உள்ள பின்வரும் பகுதி அவருடைய தேசிய அரசியல் அறிமுகத்தை உணர்த்தவல்லது.

''லோகமான்ய பாலகங்காதர திலகர் என்னுடைய அரசியல் குரு. 1893-இல் இருந்து அதாவது என்னுடைய இருபத்தொன்றாம் வயது முதற்கொண்டே அவருடைய அரசியல் பேச்சுகளையும், எழுத்துகளையும், நெருக்கமாகக் கவனித்து வந்தேன். இவை, இந்தியா என்னுடைய நாடு என்பதையும், பிரிட்டிஷார் நாட்டை அடிமைப்படுத்தி விட்டனர் என்பதையும், நாடு அவர்களிடமிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதையும் எனக்கு உணர்த்தின.''

இக்காலத்தில் தேசிய அரசியலில் மித வாதம், தீவிரவாதம் எனும் இரு போக்குகள் தோன்றவில்லை. அப்பொழுது இந்திய தேசியக் காங்கிரசில் ஆர்வம் காட்டத் தொடங்கினார் வ. உ. சி.

காங்கிரசில் வ. உ. சி.

1898-இல் வ. உ. சி., காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்திருந்ததை மிகத் தெளிவாக பத்திரிகை செய்தி ஒன்றின் வாயிலாக அறிய முடிகின்றது. தமிழகத்தில் தேசிய இயக்கத்திற்கு மூல பலமாக இருந்த சுதேசமித்திரனில் 1898 ஆகஸ்ட் 15-இல் வெளிவந்த பின்வரும் செய்தி, வ. உ. சி. காங்கிரசில் இணைந்திருந்ததை எடுத்துக்காட்டியது.

''மகத்துவம் பொருந்திய இப்பெரிய சபை வருகிற டிசம்பர் மாதத்தில் நமது இராஜதானியாகிய சென்னை புரியில் பதினான்கு ஆவர்த்தியாகக் கூடுகிற விஷயமாய் நாம் செய்ய வேண்டிய முயற்சிகளைப் பற்றி யோசிக்க வேண்டுவதற்காக ஒட்டப்பிடாரத்தில், நாளது ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஒரு சபைகூடியது. அதற்கு வக்கீல் சிதம்பரம் பிள்ளையவர்கள் முதலான அனேக பாரி குடித்தனக்காரர்களும் வந்திருந்தார்கள் ... ஸ்ரீ பழனியாண்டி முதலியாரவர்கள், பாண்டுரங்க ராயரவர்கள், ராஜகோபால் அய்யரவர்கள், திருமலை சாஸ்திரிகள், சிதம்பரம் பிள்ளையவர்கள், நமது காங்கிரஸ் மகாசபை ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தைப்பற்றியும், அதனால் இந்து தேசத்தவர்களாகிய நாம் நாளது-வரை பெற்றிருக்கிற பெறுதற்கரிய அரும்பேறான நன்மைகளைப் பற்றியும், இனிமேலாக நாம் பெறக் கூடியதாயிருக்கின்ற அளவற்ற பிரயோஜனங்களைப் பற்றியும் விஸ்தாரமாய் தெளிவாகவும், அலங்காரமாகவும் பிரசங்கித்தனர். இந்தத் தாலுக்கா கிராமங்களிலிருந்து நம் 14-வது சபை இவ்வருஷம் சென்னை மாநகரில் கூடுவதற்கு பொருள் உதவி செய்ய முயற்சி செய்யவேண்டியதற்காக இவ்விடத்தில் ஒரு சப் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ வக்கீல் சிதம்பரம் பிள்ளையவர்கள் பிரரேபித்தார்கள். அதனை ஸ்ரீ சுவாமிநாத பிள்ளை அவர்கள் ஆமோதித்தனர். அப்பால் அடியிற் கண்ட மெம்பர்களடங்கிய சப் கமிட்டி

ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டிக்கு இன்னும் புதிய மெம்பர்களைச் சேர்க்கும் அதிகாரத்துடன் பிரெசிடெண்டாக ஸ்ரீ பாண்டுரங்கராயரவர்களையும், செகிரிடேரி டிரஷரராக ஸ்ரீ வக்கீல் சிதம்பரம் பிள்ளையவர்களையும் நியமித்திருக்கிறது.''

இந்தச் செய்தியில் இருந்து வ. உ. சி., தேசிய காங்கிரஸ் வாயிலாக அரசியலில் ஊக்கமுடன் பங்கேற்றதை அறியமுடிகின்றது. இந்தச் செய்தியில் குறிப்பிடப்பெற்ற காங்கிரஸ் மகாசபை சென்னையில் 1898 டிசம்பர் 29, 30, 31-ஆம் தேதிகளில் சென்னை நகரில் நடைபெற்றது. மகாசபையின் தலைவர், ஆனந்த மோகன்போஸ், வரவேற்புக்குழுத் தலைவர் நியாயாதிபதி என். சுப்பராவ் பந்துலு; வந்திருந்த 614 பிரதிநிதிகளில் 519 பிரதிநிதிகள் சென்னை மாநிலத்தைச் சார்ந்தவர்கள்; சென்னையில் நான்காம் முறையாகக் கூடிய காங்கிரஸ் மகாசபை, இந்த சபை. முதன்முதலாக 1887-இல் அதாவது காங்கிரஸ் தோன்றிய மூன்றாவது ஆண்டில், சென்னையில் காங்கிரஸ் மகாசபை கூடியது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

1885-இல் பம்பாயில் தோன்றிய காங்கிரஸ் தென் கோடிப்பகுதியில் ஒட்டப்பிடாரம் கிராமத்தில் கிளை பரப்பியதும், அதில் வ. உ. சி. பங்கேற்றதும் தேசிய அரசியல் சிந்தனை வளர்ச்சியைக் காட்டியது.

வ. உ. சி.யின் முதல் அரசியல் கட்டுரை

1898-இல் வெளிவந்த சுதேசமித்திரன் செய்திக்குப் பிறகு வ. உ. சி.யின் அரசியல் சிந்தனையோட்டத்தை மேலும் தெளிவாக அறிய, அவருடைய 'சுதேசாபிமானம்' எனும் முதல் அரசியல் கட்டுரை உதவுகின்றது. இந்தக் கட்டுரை மதுரையில் இருந்து வெளிவந்த தேசிய, இலக்கிய மாத இதழான ''விவேக பாநு''வில் 1906 பிப்ரவரி, இதழில் வெளியிடப்பட்டது.

'விவேக பாநு', தேசியத்தைத் தீவிரமாக ஆதரித்த தமிழறிஞர்களால் நடத்தப்பெற்ற ஓர் உயர்தர இலக்கியப் பத்திரிகையாகும். 1902 செப்டம்பர் 1-இல் விவேக பாநுவின் முதல் இதழ் வெளிவந்தது. செப்டம்பர் முதல் மார்ச் மாதம் வரையில் ஸ்ரீ கணபதியானந்த சுவாமிகள், இந்தப் பத்திரிகையை நடத்தி வந்தார். 1902 ஏப்ரல் முதல் வ. உ. சி.யின் நெருங்கிய நண்பர் சுவாமி வள்ளி நாயகம் 'விவேகபாநு'வின் ஆசிரியரானார். 'விவேக பாநு'வை வ. உ. சி., வெளிவரச் செய்தார் என்பதற் குரியக் குறிப்பு அவருடைய சுயசரிதையில் உள்ளது. சுவாமி வள்ளிநாயகத்திற்குப் பிறகு, 'விவேக பாநு'வின் உரிமையாளரானார், பெரும் புலவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர். இவர் தேசியத்தையும் தமிழையும் இணைத்து அரசியல், இலக்கியத்தொண்டாற்றியவர். வ. உ. சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சிக்கு நிதிதிரட்டச் சுற்றுப்பயணம் செய்தவர். 'விவேக பாநு' வளர்ச்சிக் காக மாதந்தோறும் பன்னிரண்டு ரூபாய் நன்கொடை யாக அளித்து வந்தார், வ. உ. சி.

முதல் இதழில் இருந்தே வ. உ. சி.யின் ஆன்மிக இலக்கியக் கட்டுரைகள் வெளி வந்தன. 'சுதேசாபி மானம்' என்னும் கட்டுரை ஏழு பக்கங்களில் மிக நீண்ட கட்டுரையாக வெளிவந்தது. சுதேசம், அபிமானம், இயற் கைக்குணம், வெளிப்படுத்தும் சமயம், வெளிப்படுத்தும் மார்க்கம், அடையும் பயன் எனும் துணைத்தலைப்பு களில் கட்டுரை நிறைவு பெற்றது. இந்த முதல் அரசியல் கட்டுரை, வாசகர்களுக்கு எளிமையான, ஆரம்ப அரசி யல் அறிவைப் புகட்டுவதற்காக எழுதப்பட்டது.

இந்தக் கட்டுரையில் வ. உ. சி. எழுதியுள்ள முக்கியக் கருத்துகளில் சில, பின்வருவன:

1. ''சுதேசாபிமானத்தை உபயோகப்படுத்த வேண்டு வது சுதேசத்தாருக்கு அன்னமின்மை, ஆடையின்மை, நோய் முதலிய இடுக்கண்கள் நேர்ந்தபோதும் சுதேசத் தாருக்கு சுயார்ச்சிதம் இழக்கவும், அடிமைத்தனம் பெற வும் நேர்ந்தபோதுமேயாம்.''

2. ''ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால், அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த சுதேசம் அவரைப் பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடையென்ன?''

3. ''சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும் ஒற்றுமையாக இருப்பதற்கும் முக்கிய தடைகள் ஜாதியபிமானம், மதாபிமானங்களே.''

4. ''அவரவர் ஜாதி மதாபிமானங்களை அவரவர் சொந்த விஷயங்களில் மாத்திரம் கவனித்துக் கொண்டு, சுதேசம், பொது விஷயங்களின் பாராட்டாது பலரும் ஒன்று கூடி ஒரே மனத்துடன் சுதேச அடிமைத்தனத்தை நீக்கி சுயார்ச்சிதம் பெற உழைக்க வேண்டும். சுதேச நன்மைக்காக ஒவ்வொருவரும் சமயம் வாய்ந்துழி அவரவர் உடல் பொருள் ஆவிகளை சித்தம் பண்ணவும் தயாராயிருக்க வேண்டும்.''

''சுதேசிய வித்து விழுந்தது''

இராமகிருஷ்ணர் இயக்கம் முற்றிலும் அரசியல் சார்பற்றது என்றாலும், இந்திய தேசிய விடுதலை இயக்கத்தலைவர்கள் பலர், இராமகிருஷ்ணர் இயக்கத் தலைவர்கள் பலரை தேசிய நோக்கிலும் போற்றி வழிகாட்டிகளாகக் கொண்டுள்ளனர்.

வ. உ. சி.யின் அரசியல் குருவான திலகரும், இராமகிருஷ்ணர் இயக்கத்தை உருவாக்கிய சுவாமி விவேகானந்தரை சந்தித்து உரையாடி புதிய எண்ணவெழுச்சியைப் பெற்றார். 1893-இல் சுவாமி விவேகானந்தர், சாதாரண சந்நியாசியாக பெயர் தெரியாமல், பரிவிராஜகராக இந்தியாவை வலம் வந்த பொழுது, திலகர் அவரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பைப்பற்றி அவர், சுவாமி விவேகானந்தரின் அருமைச் சீடர் அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதியக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இந்தச் சந்திப்பில் தேசிய அரசியல் முக்கியத்துவம் இல்லை.

1901-இல் கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள வந்த திலகர், பேலூர் மடத்தில் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில், விடுதலை இயக்கத்தில் ஏழைகளையும், ஒடுக்கப்பெற்றவர்களையும் திரட்டவேண்டிய அவசியத்தை சுவாமி விவேகானந்தர் திலகரிடம் சுட்டிக்காட்டினார். இராமகிருஷ்ணர் இயக்கப் பத்திரிகையான ''பிரபுத்த பாரதா''வில் இந்தச் சந்திப்பைப்பற்றி பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது:

''மடத்தின் தென்பகுதியில் உள்ள வெளியில் சுவாமிஜி, திலகருடன் உரையாடிக் கொண்டிருந்தார். சற்று தொலைவில் இருந்த நாங்கள் கவனித்துக் கொண்டிருந்தோம். தலையையும், கரங்களையும் அடிக்கடி அசைத்துக் கொண்டே உணர்ச்சிகரமாக சுவாமிஜி பேசிக் கொண்டிருந்தார்; திலகர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.... நாட்டின் ஒரு பகுதியினரை மட்டும் உயர்த்தினால் நாடு உயர்வடையாது என்பதை சுவாமிஜி விளக்கினார். ஏழைகளையும், ஒடுக்கப்பெற்ற மக்களையும் உயர்த்தினால்தான் நாடு முன்னேறும் என்றார். சுவாமிஜியுடன் ஏற்பட்ட தொடர்பால் திலகர் பார்வையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இந்த மாறுதலினால் சமுதாயத்தில் அடித்தளப் பகுதியினருக்காக பல வழிகளிலும் திலகர் தொண்டாற்றத் தொடங்கினார்.''

'நேதாஜி' என்று அன்புடன் அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ், இளம்வயதில் இருந்தே இராமகிருஷ்ண-விவேகானந்தர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் இளம் வயதிலேயே இராமகிருஷ்ண மடத்தில் சேருவதற்கு விரும்பினார். அப்பொழுது இராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் சுவாமி பிரம்மானந்தாவைச் சந்தித்தார். இளைஞன் சுபாஷ் சந்திரபோஸிற்கு விதிக்கப்பெற்ற எதிர் காலப்பணியை முன்னுணர்ந்த சுவாமி பிரம்மானந்தர், ''உனக்கு வேறொரு திசையில் பணி காத்துக் கொண்டிருக்கிறது'' என்பதை உணர்த்தினார். இந்த அறிவுரையால் சுபாஷ் சந்திரபோஸ் துறவு நெறியில்

நாலெடுத்து வைக்காமல், விடுதலை இயக்கப்படையை நடத்த முடிந்து, நேதாஜியாக மலர முடிந்தது.

ஆன்மிகத்திற்கே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட இராமகிருஷ்ணர் இயக்கத்தலைவர்கள், தேசிய உணர்வு கொள்ளவும் தூண்டியுள்ளனர் என்பதற்கு நேதாஜியும் ஒரு சான்றாவார். வ. உ. சி.யும், இராமகிருஷ்ணர் இயக்கத்தலைவர்களுள் ஒருவரான சுவாமி இராம கிருஷ்ணானந்தர் காரணமாகவும் தேசியவுணர்வில் எழுச்சியுற்றார் என்பதற்கு சான்று உள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர்சீடர்களான பதினாறு துறவிகளுள் ஒருவரான சுவாமி இராம கிருஷ்ணானந்தரை, சுவாமி விவேகானந்தர் தமது சென்னைச் சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னையில் இராம கிருஷ்ண மடத்தை நிறுவ, 1897-இல் அனுப்பிவைத்தார். இதே ஆண்டில் திருவல்லிக்கேணியில் அப்பொழுது 'ஐஸ் ஹவுஸ்' என்று பெயர்பெற்ற 'கேஸில் கெர்னான்' எனும் மாளிகையின் ஓர் அறையில் சுவாமி இராம கிருஷ்ணானந்தர் தற்காலிகமாக, இராமகிருஷ்ண மடத்தை அமைத்துக் கொண்டார். 1897 முதல் 1906 வரையில் இங்குதான் திருமடம் இருந்தது. இந்த ஐஸ்ஹவுசில்தான் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ வீரராக சென்னை திரும்பியபொழுது சில நாட்கள் தங்கியிருந்தார். விவேகானந்தர் பிறந்த நூற்றாண்டு விழா நினைவாக இந்த 'ஐஸ் ஹவுஸ்', 'விவேகானந்தர் இல்லம்' என்று பெயர் மாற்றம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'ஐஸ் ஹவுஸ்' மாளிகையின் அன்றைய உரிமையாளர் பிரபல வழக்கறிஞரான பிலிகிரி ஐயங்கார் ஆவார். இவர் சுவாமி விவேகானந்தரின் சென்னைச் சீடர்களில் ஒருவர். இங்கிருந்த திருமடம் நவம்பர் 17, 1907 முதல் மயிலாப்பூரில் இன்று உள்ள இடத்திற்கு மாறியது.

சுவாமி இராமகிருஷ்ணானந்தரை, வ. உ. சி. எந்த ஆண்டில் சென்னையில் சந்தித்தார் என்பதைத் தமது

சுயசரிதையில் கூறவில்லை. 1905-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தூத்துக்குடிக்கு அருகேயுள்ள திருநெல்வேலியில் சுவாமி இராமகிருஷ்ணானந்தர் பேசியுள்ளார். இந்தப் பேச்சை அப்பொழுது தூத்துக்குடியில் வழக்கறிஞராக வாழ்ந்துக் கொண்டிருந்து வ. உ. சி. கேட்டிருப்பாரா என்பதைப்பற்றியும் அறிய முடியவில்லை. 1906-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த இருவர் சந்திப்பு நிகழ்ந்திருக்கக் கூடும். ஆனால் சுவாமி ராமகிருஷ்ணானந்தரைச் சென்னையில் சந்தித்ததைப் பற்றியும், அதன் விளைவாக தமது அரசியல் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்றதையும் விவரமாகவும், தெளிவாகவும் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார், வ. உ. சி.

இந்தச் சந்திப்பில்தான் தமது உள்ளத்தில் 'சுதேசியம் வித்தென விழுந்த்'தை பின்வருமாறு விளக்கியுள்ளார், வ. உ. சி.

என்பெரிய அத்தையோ டேகினேன் சென்னை,
இராம கிருட்டிணா னந்தனைக் கண்டேன்.
''தராதலம் பரவிச் சாரும் சுதேசியக்
கைத்தொழில் வளர்க்கவும், கைத்தொழில் கொள்ளவும்
எத்தகை முயற்சி இயற்றினை'' என்றான்.
''கனவினை நிகர்த்துக் காணுமிவ் வுலகின்
நினைவினைக் கொண்டென்? நீள்வினை யாற்றியென்?
கீழ்கோ டுயர்ந்தென்? மேல்கோ டுயர்ந்தென்?
வாழ்வோ தாழ்வோ மாய்கையே'' என்றேன்.
''சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்
இதேஎன் கடைப்பிடி'' என்றனன். அவனுரை
வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்;
சித்தம் அதனைச் சிதையாது வைத்தது:

அத்வைத வேதாந்தத்தில் ஈடுபாடு கொண்ட வ. உ. சி., சுவாமி இராமகிருஷ்ணானந்தரிடம், பெற்ற உபதேசம்,

''சுதேசியம்''தான். சுவாமி இராமகிருஷ்ணானந்தர் கேட்ட கேள்விக்கு வ. உ. சி., மாயாவாதக் கண்ணோட்டத்தில் பதிலளித்தார், வ. உ. சி. ஆனால், சுவாமி இராமகிருஷ்ணானந்தரோ, வ. உ. சி.யின் எதிர்கால அரசியல் பணி எத்திசையில் செல்லவேண்டும் என்பதை மிகத் தெளிவாக உணர்த்த ''சுதேசியம் ஒன்றே சுகம் பல அளிக்கும்'' என்று சுட்டிக்காட்டினார்.

வ. உ. சி.யைப் போலவே, அவருடைய அரசியல் தோழரான மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் இராம கிருஷ்ணர் இயக்கத்தைச் சார்ந்த சகோதரி நிவேதிதா விடம் ''ஸ்வதேசபக்தியுபதேசத்தை''ப் பெற்றார். தாம் பெற்ற உபதேசத்தை தமது முதல் நூலான 'ஸ்வதேச கீதங்கள்' (1908) என்னும் நூலில் 'ஸமர்ப்பணம்' எனும் தலைப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், பாரதியார்:

''ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கியதொப்ப, எனக்கும் பாரததேவி யின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுப தேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.''

சகோதரி நிவேதிதாவின் இயற் பெயர் 'மார்க்ரெட் எலிசபெத் நோபிள் (1867-1911). 'நிவேதிதா' என் னும் பெயர் சுவாமி விவேகானந்தரால் சூட்டப்பட்டது. பாரதியார், இவரை 1906-இல் கல்கத்தா காங்கிரசிற்கு சென்று திரும்பியபொழுது, கல்கத்தா அருகில் உள்ள டம்டம் என்னுமிடத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பிற்கு முன்பாகவே தமது 'இந்தியா' எனும் வார இதழில் (24.11.1906) சகோதரி நிவேதிதாவின் தேசிய உணர் வையும், சுவாமி விவேகானந்தரும் அவருடைய சீடர் களும் தூண்டிய தேசபக்தியுணர்வையும் பின்வருமாறு விளக்கி யுள்ளார்:

''இந்தியாவில் தோன்றியிருக்கும் புது எழுச்சிக்கு எத்தனையோ பேர் எத்தனையோ விதமான காரணங்க ளாக விளங்குகின்றார்கள். சுவாமி விவேகானந்தர்

மதாச்சாரியராகவே நாட்கழித்த போதிலும் தேசப்பக்தி எழுச்சிக்கு அவர் பெரியதோர் மூலாதாரமாக நின்றார். இவர் காலஞ் சென்றதற்கப்பாலும் இவருடைய சிஷ்யர் களில் பலர் மேற்படி தொழிலுக்குப் பேருதவி செய்து வந் திருக்கிறார்கள். இங்ஙனம் விளங்கும் சிஷ்ய ரத்னங்களி லேயே சிறப்பு வாய்ந்தவர் சகோதரி நிவேதிதையாவார்.''

அரசியலையும், ஆன்மிகத்தையும் இணைக்க வல்லோ ரின் பங்களிப்பு, தேசியவிடுதலை இயக்கத்தில் கணிச மாக இருந்தது. சுதேசியத்தை, கடவுளின் அருட் சக்தி யாக அரவிந்தர் விளக்கமளித்தார். பாரதியாரும் தீவிர வாததேசியத்தின் முதல் இதழாக, ஒரே இதழாக, சென்னையில் வெளிவந்த 'இந்தியா' இதழில் (மார்ச் 30, 1907) சுதேசி இயக்கத்தை கடவுளின் பத்தாவது அவதாரமாகக் குறிப்பிட்டு எழுதியதாவது:

''அநீதிகளை நாசம் செய்யும் வெளியீட்டாக நமக் கிடையே கடவுள் பத்தாவது அவதாரம் செய்திருக்கிறார். இப்போது மனித ரூபமாக அவதாரம் செய்யவில்லை. அவருடைய அவதாரத்தின் பெயர் சுதேசியம்; அவ ருடைய ஆயுதம் Boycott; அதாவது அன்னிய சம்பந்த விலக்கு அல்லது பகிஷ்காரம். அவருடைய மந்திரம் வந்தே மாதரம்.''

இவ்வாறு வரலாறு படைத்த சுதேசிய இயக்கத்தில் சுவாமி இராமகிருஷ்ணானந்தரிடம் பெற்ற உபதேசத்திற் குப் பிறகு வ. உ. சி. எவ்வாறு மேலும் தம்மை இணைத் துக் கொண்டார் என்பதை தமது சுயசரிதையில் தொடர்ந்து விளக்கியுள்ளார்.

சுவாமி இராமகிருஷ்ணானந்தரைத் தொடர்ந்து ஜப்பான் நாட்டிற்கு பயணம் மேற்கொண்ட இரு இராமகிருஷ்ணர் இயக்கச் சான்றோர்களை தூத்துக்குடி யில் விருந்தோம்பி உரையாடி பயன் அடைந்ததையும் பின்வருமாறு கவிதையாக்கியுள்ளார்:

அடுத்தகார்த் திகையில் அருணம் செல்வழி
அடுத்தனர் இருவர் **அருணிறை வங்கர்**
மேகமும் மின்னலும் விழைதர வந்தபோல்

பாக அவியினைப் பண்பொடு நல்கினேன்;
சுதேசியம் வங்கம் தோன்றி வ்ளர்வதன்
இதோப தேச இன்மழை பொழிந்தனர்.

'அருணிறை வங்கர்' என்று இராமகிருஷ்ண இயக்கத் துறவிகளைக் குறிப்பிட்டார் வ. உ. சி.; இவர்களுடைய ''இதோபதேச இன்மழை''யால் சுதேசியம் எனும் வித்து முளையிட்டுச் செடியாக வளர்ந்ததாகக் குறிப்பிட்டுள் ளார், வ. உ. சி. இந்தச் செடியின் இரு இலைகளாக, ''தூத்துக்குடி தொழில்வளர் சங்க''மும், ''தரும சங்க'' மும் தோன்றின.

இந்த இரட்டையிலைச் செடியைப் பாதுகாத்து வளர்க்க, ''வந்தே மாதரம், வாழ்க சுதேசியம், சொந்தத் தேசம் சுகம்பெற'' என்னும், வீடுதோறும் விளக்கப் பெற்ற இலட்சிய முழக்கங்களை, வேலிக்கம்புகளாகப் பயன்படுத்தி வேலி கட்டியதாகவும் வ. உ. சி. வருணித் துள்ளார். வேலி கட்டியதோடு, ''போலிச் சுதேசியாம் என்னும் பொய்யுரை மிருகம் நெருங்கிவிடாது நினை வொடு காத்து'' வந்ததாகவும் விரித்துரைத்துள்ளார். இந்தச் சூழலில் மேலும் இரு இராமகிருஷ்ணர் இயக்க ஞானிகளான சுவாமி அபேதானந்தரும், சுவாமி பிரம் மானந்தரும், சீரிள வேனிலாகவும், தென்றலாகவும் வந்தனர் என்றும் வ. உ. சி, குறிப்பிட்டுள்ளார். சுவாமி பிரம்மானந்தர் (1863-1922), இராமகிருஷ்ணா மடத் தின் முதல் தலைவர். சுவாமி அபேதானந்தர் (1866-1939) அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்து இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு வலிவும்-பொலிவும் ஊட்டியவர்.

இவ்வாறாக சுவாமி இராமகிருஷ்ணானந்தர், அருள் நிறைவங்கர் இருவர், சுவாமி அபேதானந்தர், சுவாமி பிரம்மானந்தர் ஆகியோரை நேரில் சந்தித்து தேசிய உணர்விற்கு சக்தி வாய்ந்த ஆக்கத்தை தேடிக்கொண் டார் வ. உ. சி. இவர்களுள் சுவாமி அபேதானந்தருக்கு தூததுக்குடியில் மகத்தான தேசிய வரவேற்பை

அளித்துள்ளார், வ. உ. சி. என்பது மிகமுக்கியமான வரலாற்றுச் செய்தியாகும்.

சுவாமி அபேதானந்தருக்கு வ. உ. சி. அளித்த வரவேற்பு

சுவாமி அபேதானந்தர் அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளில் 1896 முதல் பத்தாண்டுகள் காலமாக இராமகிருஷ்ணர் இயக்க வளர்ச்சிக்காக வேதாந்த சொஸைடிகள் முதலான பல அமைப்புகளை நிறுவியும், ஆன்மிகச் சொற்பொழிவுகளாற்றியும் முதற்கட்டப் பணியை முடித்துக் கொண்டு 1906-இல் இந்தியா விற்குத் திரும்பினார்.

இலங்கை வழியாக இந்தியா திரும்பிய பொழுது, தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்தார் சுவாமி அபேதானந் தர். 1906, ஜுன் 29-இல் தூத்துக்குடிக்குச் சற்று தொலைவில் சுவாமி அபேதானந்தர் தம் குழுவினருடன் பயணம் செய்த 'சுதேசி ஸ்டீமர்' வந்தது. இந்தக் குழு வில் சுவாமி அபேதானந்தரை இலங்கை சென்று எதிர் கொண்டு அழைக்கச் சென்ற சுவாமி பிரம்மானந்தரும் இருந்தார்.

சுவாமி அபேதானந்தர் வந்தபொழுது, இந்தியாவில் நிலவிய காலச் சூழல் கருத்தில் கொள்ள வேண்டிய தாகும். இவர் இந்தியாவில் கால்வைத்ததற்கு முன் பாகவே, இவருடைய நூல் ஒன்று பம்பாய் மாநிலத்தில் தடை செய்யப்பட்டு விட்டது. 1905-இல் அமெரிக்கா வில், இந்தியாவின் பல்வேறு சிறப்புகளை விரித் துரைத்து செய்யப்பெற்றச் சொற்பொழிவுகளின் தொகுப் பாக "இந்தியாவும் அதன் மக்களும்" எனும் நூல், நியூயார்க் வேதாந்த சொஸைடியின் வெளியீடாக வந்தது. இந்த நூலின் மற்றொரு சிறப்பு, இதன் சமர்ப் பண உரையாகும். "தேசியவிடுதலையை மீண்டும் பெற் றுக்கொள்ளப் பாடுபடும் இந்திய மக்களுக்கு அர்ப் பணிக்கப்பட்டது" என்பது சமர்ப்பண உரையாகும்:

இந்த நூலிற்கு விதிக்கப்பட்ட தடையுத்திரவு பெரும் பரபரப்பை தேசபக்தர்களிடையே தோற்றுவித்திருந்தது. இத்துடன் வந்தே மாதர இயக்கம் பாய்ந்து பரவிக் கொண்டிருந்தது. தூத்துக்குடியை இந்திய தேசியப் போர்க்களத்தின் பேராற்றல் மிக்க ஒரு பகுதியாக வ. உ. சி. உருவாக்கிக் கொண்டிருந்த காலச் சூழல் உதய மாகிக் கொண்டிருந்தது.

இவ்வாறான வரலாற்றுச் சூழலில் வ. உ. சி., சுவாமி அபேதானந்தரை அவர் வந்த சுதேசி நீராவிப்படகில் இருந்து கடற்கரைக்கு அழைத்து வரச் சென்றார்.

வரலாற்றில் பதிவுபெறாமல் போன பல செய்தி களுள் ஒன்றாக அல்லாமல், வ. உ. சி. அளித்த வர வேற்பு, சுவாமி அபேதானந்தரின் இந்தியச் சுற்றுப் பயணத்தின் பேருரைகளைக் கொண்ட ஆங்கில மொழி நூலில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

“1906-இல் சுவாமி அபேதானந்தர் பாரதத்திற்குத் திரும்புகையில் தமிழகத்தில் பல்வேறு நகரங்களில் ஆர்வப்பெருக்குடன் வரவேற்கப்பட்டார். 1906 ஜூன் 29-ஆம் தேதியன்று இலங்கையில் இருந்து தூத்துக்குடி யில் வந்திறங்கினார். சிதம்பரனாரும், மற்றும் பல தூத்துக்குடி பிரமுகர்களும் நீராவிப் படகில் ஏறி அபேதானந்தரையும், அவருடைய குழுவினரையும் சந்தித்து நீராவிப்படகில் உடனழைத்துக் கொண்டு கரை சேர்ந்தனர்.... ஊர்வலத்தில் கவர்ச்சி மிக்க காட்சி யொன்று அமைந்தது. விசேஷமான சீருடை அணிந்த சுதேசி கட்சியினர், வீரநடையின் ஒவ்வொரு அடிப் பெயர்ச்சியுடன் ‘வந்தேமாதரம்’ என்று முழங்கினர். தேசியக் கொடி அசைய உள்ளூர் மங்கல இசை தவழ்ந்தது.”

சுவாமி அபேதானந்தருடன், சுவாமி இராம கிருஷ்ணானந்தரும், சுவாமி பரமானந்தரும் வரவேற்கப் பட்டனர். இந்த நிகழ்ச்சிக்கு பதினெட்டு மாதங்களுக்கு

முன்பாக சுவாமி இராமகிருஷ்ணானந்தர் தூத்துக்குடியில் வேதாந்த மெய்ஞானத்தை விளக்கி ஆற்றியச் சொற்பொழிவு வரவேற்புரையில் நினைவு கூரப்பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமி அபேதானந்தர் ஜூன் 29, 1906 முதல் ஜூலை 30, 1906 வரையில் தமிழகத்தில் தூத்துக்குடியில் தொடங்கி, திருநெல்வேலி தென்காசி, மதுரை, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், கடலூர், சென்னை, வாணியம்பாடி, தருமபுரி ஆகிய நகரங்களில் சீரும் சிறப்புமாக வரவேற்கப்பட்டார்.

வ. உ. சி.யின் தேசிய வாழ்க்கையில் சுவாமி இராமகிருஷ்ணானந்தர் முதல் சுவாமி அபேதானந்தர் வரையில் மிக முக்கியமான காலகட்டமாகும்.

பாரதியார்—வ. உ. சி. சந்திப்பு

வ. உ. சி., பாரதியாரை முதன்முதலில் சென்னை 'இந்தியா' அலுவலகத்தில் சந்தித்தார். 1906 மே 9 முதல் 'இந்தியா' வெளிவரத்தொடங்கியது. வ. உ. சி. சென்னை வந்த ஒரு சமயத்தில் பாரதியாரைச் சந்தித்தார். இதைப்பற்றிய விவரம் 'வி. ஓ. சி. கண்ட பாரதி' எனும் நூலில் எழுதப்பெற்றுள்ளது.

''இந்த முதல் சந்திப்பும் பேச்சுமே என்னைச் சோழனாகவும், அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படி செய்தது. பாரதியார் என்னைக் கடற்கரைக்கு அழைத்தார். நாங்கள் திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்று வெகுநேரம் அரசியல் விஷயங்களைப்பற்றியும் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம்.

''என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்கு போல ஒளி விட்டும் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம்

சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் பளிச்சென ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன. பாரதி "பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்பொழுது மின்னொளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை பராசக்தியே! வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி; எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுபசகுனம் இதுதான்; வாழி அன்னை! வாழி அம்மை! சக்திவாழி!" என ஆவேசம் வந்தவர்போலப் பேசினார்."

''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை', அதை அடைந்தே தீருவேன்'' என முழங்கி தீவிரவாத தேசியத்தை வளர்த்த திலகர் தலைமையை வ.உ.சி.யும், பாரதியாரும் ஏற்று இணைந்ததின் எதிரொலியை இந்த முதல் சந்திப்பில் கேட்கின்றோம்.

வ.உ.சி.யின் சமயச்சார்பற்ற அரசியல் நோக்கு

தமது நெருங்கிய அரசியல் தோழர்களான பாரதி, சுப்பிரமணிய சிவாவைப்போன்று சமயவுணர்வை, குறிப்பாக சக்தி வழிபாட்டுணர்வை அரசியல் பிரசாரத்தில் வ.உ.சி பயன்படுத்தவில்லை. வ.உ.சி.யின் இந்த அரசியல் நோக்கு மிக முக்கியமான கவனிப்பிற்குரியது. இறையுணர்வு, சமய-தத்துவ உணர்வுக்ளில் தோய்ந்து உறைந்தவர் வ.உ.சி. என்பது உண்மையேயானாலும், அந்த உணர்வுகளை பாரதி, சுப்பிரமணிய சிவா போன்று தமது பேச்சிலும், எழுத்திலும் மேலாதிக்கம் பெற்றிட வாய்ப்பளிக்கவில்லை.

சமய வண்ணம் படியாத அரசியல் நோக்கை வ.உ.சி. வரிந்துக் கொண்டது அவருடைய அரசியல் ஆளுமையின் தனித்தன்மைக்ளில் ஒன்றாகும்.

பேச்சுத்திறன்

சமயத்துறையில் சிறந்த பேச்சாளராகப் பயிற்சி பெற்ற வ.உ.சி., அரசியல் துறையிலும் தமது பேச்சுத்

திறன் காரணமாகவும் புகழ்பெற்றார். சுப்பிரமணிய சிவாவும், வ. உ. சி.யும் இணைந்து மேடைப் பேச்சுகளை நிகழ்த்தியபொழுது சூறைக்காற்றும், நெருப்பும் இணைந்தது போன்று இருக்குமாம் என்று கூறப்படுகின்றது. இவர்கள் இருவரும் முதன் முறையாக சிறைத் தண்டனைக்குள்ளாக, அவர்களுடைய மேடைப் பேச்சுகளே காரணமாயிற்று என்பதும் கவனத்திற்குரியது. வ. உ. சி.யின் அரசியல் மேடைப்பேச்சுகளை நேரில் கேட்டு மகிழ்ந்த இருவருடைய கருத்துகளை இங்கு நினைவு கூர வேண்டும். ஒருவர் புகழ் பூத்தகத் தமிழறிஞர் அமரர் பி. ஸ்ரீ. ஆசார்யா; மற்றொருவர் விடுதலைப்போராட்ட வீரர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். என். சோமயாஜுலு.

வ. உ. சி.யின் அரசியல் பேச்சுகளை, ''சொற்பொழிவுகள்'' என்பதைக்காட்டிலும், ''சொற்போர்கள்'' என்று குறிப்பிட வேண்டும் என பி. ஸ்ரீ. ஆசார்யா கருத்து தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த மேடைப் பேச்சாளராகப் புகழ்பெற்ற அமரர் எஸ். என். சோமயாஜுலு அவர்கள் நேர்முகமாகக் கூறியதாவது:

''அவருடைய அரசியல் உரைகளில் இலக்கியச் செய்திகள் பொருத்தமாக அமையும். எழுதுவது போலவே பேசுவார். கொச்சைத் தமிழ் மிக அருகியே காணப்படும்; உரக்கப் பேசுவார். வழக்கறிஞராதலால் காரண, காரியத் தருக்க நெறியோடு பேசுவார். பேச்சின் ஆரம்பத்திலே அமைதி தவழும், போகப்போக ஆவேசம் பொங்கிப் பாயும்; பண்டிதரையும், பாமரரையும் கவரும்வண்ணம் பேசுவதில் வல்லவர்.''

தமது சுயசரிதையில் தொடக்கக்கால அரசியல் நண்பர்களின் முதல் பட்டியலைத் தந்துள்ளார், வ. உ. சி.

அரசியல் குருவான திலகரைக் குறிப்பிட்டு விட்டு, அரவிந்தர், திலகரின் வலக்கரமாகத்திகழ்ந்த காபர்தே, மராட்டிய தேசபக்தரான மூஞ்சே, பாரதியார், மண்டயம்

எஸ். சீனுவாசசாரியார் முதலானோர் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககால தமிழக அரசியல் வானில் எழு ஞாயிறாகத் தோன்றிய வ. உ. சி., பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அரசியல் போர்க்களத்தில் மட்டுமல்லாமல், பொருளாதார தேசியப் போர்க்களத்திலும் எதிர்த்துப் போராடினார். 1906 அக்டோபரில் அவர் அரும்பாடு பட்டுத் தொடங்கிய "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" முதன்முறையாக பொருளாதார தேசியப் போர்க்களத்தில் புகிய போர்முனையைத் தோற்றுவித்தது. சுதேசி நாவாய்ச் சங்கத்துடன் தொழிலாளர் இயக்கத்தையும், வந்தேமாதர—சுதேசி இயக்கங்களையும் ஒருங்கிணைத்து புதிய எதிர்ப்பு சூழலை உருவாக்கினார் வ. உ. சி.

4

சுதேசி இயக்கமும் கப்பலோட்டிய சாதனையும்

கடல் கடந்து கப்பல் ஓட்டும் தொழிலில் பண்டைத் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வல்லவர்களாகச் சிறப்பெய்திருந்தனர். இதற்குரிய அகச் சான்றுகளும், புறச்சான்றுகளும் உள. பண்டைய சங்க இலக்கியங்களிலும், அயல்நாட்டு கப்பற் பயண வர லாற்றாசிரியர்கள் குறிப்புகளிலும் தமிழகம், அயல்நாடு களுடன் கொண்டிருந்த கப்பற் பயணத் தொடர்புகள் பற்றியச் செய்திகள் விளக்கமுறுகின்றன.

இந்தப் பண்டையப் பெருமையை நினைவு கூர்ந்து, தம் காலத்தில் அந்தப் பெருமையை மீண்டும் நிலை நாட்ட வ.உ.சி. விரும்பியதை அவர் வாய்மொழி யாகவே, பின்வருமாறு, அறிகின்றோம்.

''ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்திராவிற்கும் அப்பாலும் தமிழ்க் கப்பல் போய்வந்தது. தமிழர் வாணிபம் சிறப்பாக விளங்கி வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்த னர். எனவே, தமிழர்கள் மீண்டும் கடல்மீது செல்வது எவ்வாறு என்பதாகத் திட்டமிட்டேன். இத்திட்டத்தின் விளைவுதான் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'.

சுதேசி நாவாய்ச் சங்கம், பண்டையப் பெருமையை நிலைநாட்டுவதை குறிக்கோளாகக் கொண்டதோடு, அந்நிய நாட்டு கப்பல் கம்பெனிகள் இந்தியச் செல்வத் தைச் சுரண்டியதைத் தடுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூல பலங் களில் ஒன்றாகிய கப்பல் வாணிபத்தின் ஆதிக்கத்தை

வீழ்த்த வேண்டியது, பொருளாதாரத் தேசியத்தின் ஒரு போர் முனையாகவும், சுதேசி நாவாய்ச் சங்கத்தை அமைத்தார். தமது குறிக்கோளைப் பற்றி வ. உ. சி.யே பின்வருமாறு கூறியுள்ளார்:

''நான் ஆரம்பித்த இக்கம்பெனி வியாபாரக் கம்பெனி மட்டுமல்ல. மூட்டை முடிச்சுகளுடன் வெள்ளையர்களை இந்நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கே இக்கப்பல்கள்.''

இவ்வாறு வ. உ. சி. தமது பேச்சில் குறிப்பிட்ட பொழுது, அருகில் அமர்ந்திருந்த சுப்பிரமணிய சிவா குறுக்கிட்டு கூறியதாவது:

''மூட்டை முடிச்சுகளுடன் போவானேன்; மூட்டை முடிச்சுகளை இங்கேயே போட்டுவிட்டுப் போகட்டும்; இந்த நாட்டில் சுரண்டி சேர்த்த மூட்டைகள் தானே!''

மகாகவி பாரதியாரும் தமது கவிதையொன்றில், ''ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல் ஓட்டினாய்'' என்பதை ''வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்றாக'' அமைத்துள்ளார்.

இவையாவும் வ. உ. சி.யின் கப்பல் கம்பெனியின் தோற்றம் விடுதலை இயக்கத்துடனும், சுதேசி இயக்கத்துடனும் இறுக்கமாக இணைந்ததை உணர்த்த வல்லன.

சுதேசி இயக்கம்

1905 அக்டோபர் 16-இல் வங்கப் பிரிவினை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டவுடனேயே அரசியல் களத்தில் எரிமலை வெடித்தெழுந்தது. வங்க மொழியின் மீதான தேசிய ஒற்றுமையை உடைத்தெறிய, இந்துக்கள்-முஸ்லீம்கள் எனும் மத வேற்றுமையை முன்னிறுத்தி பிரித்தாளும் சூழ்ச்சியை ஏவியது பிரிட்டிஷ் நிர்வாகம். உள்ளத்தில் இந்தச் சூழ்ச்சியை வைத்துக் கொண்டு நிர்வாக வசதிக்காகவே பிரிவினை என்று புறத்தளவில் பிரிட்டிஷ் ஆட்சி போலித்தனமாகப் பேசியது. ஆனால், இதை எவரும் ஏற்கவில்லை.

பிரிவினை எதிர்ப்பு இயக்கம் சீறிக் கறுவி வெகுண்டெழுந்தது. திடீரென்று, 'வந்தேமாதரம்' எனும் இடி முழக்கம் பேரொலியாய் எதிரொலித்தது. ஆம், பங்கிம் சந்திரரின் 'ஆனந்தமடம்' எனும் நூலில் 1882-இல் இடம்பெற்ற 'வந்தே மாதரம்' பாடல் 1905-இல் திடீரென்று வங்கத்தில் மட்டுமன்று, அனைத்திந்திய தேசிய அளவில் வீரயுகப் பண்ணாக ஒலிக்கத் தொடங்கி விட்டது. 'வந்தே மாதரம்', மந்திரச் சொல்லாகிவிட்டது.

''நொந்தே போயினும் வெந்தே போயினும் நந்தே சத்தர்உ வந்தே சொல்வது'' என வந்தேமாதரத்தை மகாகவி இசைத்துள்ளார்.

இந்திய தேசிய காங்கிரசின் மிதவாதிகளும், தீவிர வாதிகளும் ஒற்றுமையுடன் 1906-இல் கல்கத்தா காங்கிரசில் கூடினர். தாதாபாய் நவ்ரோஜி தலைமையில், ''ஸ்வராஜ், சுதேசியம், பகிஷ்காரம், தேசியகல்வி'' எனும் சுதேசி இயக்கக் கோட்பாடுகள், தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. ஆனால் சுதேசி இயக்கத்தைப் பற்றி, அதன் நடைமுறையைப் பற்றி விளக்கமளிப்பதிலே மிதவாதிகள் மாறுபட்டனர்.

வங்கப் பிரிவினையை விலக்கிக் கொள்ளக் கோரி தொடங்கப் பெற்றத் தற்காலிக இயக்கமே சுதேசி இயக்கம் என்றும், அது நிரந்தரத் தன்மைக்கு உரியது அன்று என மிதவாதிகள் விளக்கமளித்தனர். சுதேசி இயக்கத்தில் பொருளாதாரத் தேசியத் தத்துவத்தை மட்டும் மிதவாதிகள் ஏற்றுக்கொண்டு, அதே சமயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியும், பிரிட்டிஷ் மக்களும் சுதேசி இயக்கத்தைத் தவறாகப் புரிந்துக் கொள்ள செயற்படக்கூடாது என்பதில் ஆர்வம் காட்டினர்.

இந்த மிதவாத அணுகுமுறையை ஏற்க மறுத்து, தீவிரவாதத் தலைவர்களான திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜ்பத்ராய், அரவிந்தர் ஆகியோர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

திலகர் கூறியதாவது: ''பகிஷ்காரம் என்பது யுத்தத்திற்கு ஒரு மாற்றாகும். தென்னாப்பிரிக்காவில் போயர்கள் யுத்தம் தொடுத்தது போல் நாங்கள் யுத்தம் தொடுக்க இயலாது. எங்களுக்கு அடுத்து வாய்த்த சிறந்தவழி, பிரிட்டிஷ் சாமான்களை வாங்க மறுப்பதேயாகும். இதுவே, சுதேசி, பகிஷ்கார இயக்கத்தின் பின்னேயுள்ள உணர்வோட்டமாகும்.''

சுதேசி இயக்கத்தின் தத்துவிகளில் ஒருவரான அரவிந்த கோஷ், 'வந்தே மாதரம்' இதழில் (ஜூன் 21, 1907) எழுதியதாவது: ''சாத்விக எதிர்ப்பு இயக்கம், சில சமயங்களில் வாளிற்கும், துப்பாக்கி முனைக்கும் சமமானது.''

சுதேசி இயக்கத்தின் கவர்ச்சிகரமான, உணர்ச்சி மயமான முழக்கங்கள், இந்தியாவின் பல்வேறு பகுதி மக்களைக் கவர்ந்தன. தேசிய அளவில் மட்டுமல்லாமல் மாநில அளவிலும் புதிய தலைவர்கள் உருவாக்கப் பட்டனர். இதன் மூலம் விடுதலைப் போராட்டக்களம் விரிவடைந்தது. 'வக்கீல்கள் வட்டம்' மட்டுமே தலைமை தாங்கியவிடத்தில் மக்கட் சார்புடைய புதிய தலைமை தோன்றியது.

சுதேசி இயக்கப் பிரசாரத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயர்

சுதேசி இயக்கத்தைத் தமிழகத்தில் பரப்பியதில் 'இந்து', 'சுதேசமித்திரன்' ஆகிய இதழ்களின் ஆசிரியரும், காங்கிரஸ் இயக்க முன்னோடியுமான ஜி. சுப்பிரமணிய ஐயரின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது. தமது பத்திரிகைகள் வாயிலாகவும், சுற்றுப் பயணங்களாலும், துண்டுப் பிரசுரங்களாலும் தமிழகமெங்கும் சுதேசி இயக்கப் பிரசாரத்தை நடத்தியவர் ஜி. சுப்பிரமணிய ஐயர்.

1906-இல் ''சுதேசமித்திரன்'' அலுவலக வெளியீடாக ''பாரிசால் கொடுமைகள்'' எனும் துண்டுப்

பிரசுரத்தை குறைந்த விலையில் — நான்கணா விலையில் — கொண்டு வந்தார், ஜி. சுப்பிரமணிய ஐயர். வங்கத்தில் பாரிசால் எனும் ஊரில் நடைபெற்ற 'மாகாண கான்பரன்ஸ்' மீது போலீசார் நடத்திய தாக்குதல்களை இந்தப் பிரசுரம் எளிய தமிழில் விளக்கியது.

1921-இல் ஒத்துழையாமை இயக்கக் கொள்கைகளில் ஒன்றாக, பிரிட்டிஷ் அரசு வழங்கிய கௌரவங்களை, பட்டங்களைத் துறக்க வேண்டும் என காந்தியடிகள் கூறியதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, ஜி. சுப்பிரமணிய ஐயர், சுதேசி இயக்கப் பிரசாரத்தின் கொள்கைகளுள் ஒன்றாக பட்டம் பதவிகளைத் துறப்பது என்பதையும் விதித்தார்.

"'இந்து'வின் நூறு ஆண்டுகள் — இந்திய தேசியத்தின் வீரவரலாறு" எனும் ஆங்கில நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செய்தியும் கவனத்திற்குரியது.

"பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பட்டங்களையும், கௌரவ ஊழியங்களையும் விட்டுவிட வேண்டும் எனக் கூறியதன் மூலம் ஜி. சுப்பிரமணிய ஐயரிடம் ஏற்பட்ட தீவிரமான, விரைவான மாற்றம் காரணமாக அவர் இந்து பத்திரிகையின் தொடர்பையும் விட்டுவிட நேர்ந்தது. அவர் இந்தப் பரிந்துரையை வடார்க்காடு மாவட்ட அரசியல் மாநாட்டில் வெளியிட்டார்."

சுதேசி இயக்கப் பிரசாரத்தில், பாரதியாரின் 'இந்தியா' இதழ் போன்று, சுதேசமித்திரன் அவ்வளவு தீவிரம் காட்டவில்லையென்றாலும், கிராமப்புற மக்களிடம் சுதேசமித்திரனுக்கு இருந்த செல்வாக்கு பெரும் பங்காற்றியது. வ. உ. சி. யின் தூத்துக்குடி சுதேசி இயக்கச் செய்திகளை விரிவாக வெளியிட்டுச் சிறப்புச் செய்தது, சுதேசமித்திரன். இதன் காரணமாக ஜி. சுப்பிரமணிய ஐயர் மீது ராஜ நிந்தனை வழக்கு போடப்பட்டது. அப்பொழுது உடல் நலக்குறைவால் குற்றாலத்தில் ஓய்வு பெற்றிருந்த சுதேசமித்திரன் ஆசிரியர் ஆகஸ்ட் 21, 1908-ல் கைது செய்யப்பட்டார். சுதேசமித்திரன்

அலுவலகமும், ஜி. சுப்பிரமணிய ஐயர் வீடும் காவல் துறையினரால் சோதனையிடப்பட்டன. சென்னை நகர முக்கியப் பிரமுகர்கள் தலையீட்டின் காரணமாக சுப்பிரமணிய ஐயர் சில நிபந்தனைகளின் பேரில் விடுதலை செய்யப்பட்டார். சொந்தப் பொறுப்பில் பிணைப்புத் தொகையாக ஐம்பதாயிரம் ரூபாயும், ஓராண்டு கால நன்னடத்தைக்கு உத்தரவாதம் அளிக்க இருவர் தலைக்கு 2500 ரூபாயும் கட்டவேண்டும் என்பது அவருக்கு விதிக்கப் பெற்ற நிபந்தனைகளாகும்.

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கிடையே அவர் சுதேசி இயக்கத்திற்கு ஆற்றியத் தொண்டு அளப்பரிது. வெறும் பிரசாரத்தோடு அமையாமல் ஆக்கபூர்வமாகவும் தொண்டாற்றினார். இதற்காக, ''சென்னை சுதேசிய நிதியும் தொழிற்சங்கமும்'' எனும் சுதேசி இயக்க அமைப்பை நிறுவினார், ஜி. சுப்பிரமணிய ஐயர். இவரும், டி. வி. ஹனுமந்தராவ் என்பவரும் இந்த அமைப்பின் செயலாளர்கள். இதற்கு ஆண்டு சந்தா மூன்று ரூபாய்; 21 வயதானவர் உறுப்பினராகலாம்; தமிழில் வெளியிடப்பெற்ற அறிக்கையில் பின்வரும் நோக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

1. நமது தேசத்தின் ஆதிகாலம் முதல் நடந்து வந்த கைத்தொழில்கள் அழிந்து மறைந்து போகாமல் நிலை நிறுத்தி விருத்திக்குக் கொண்டு வருவது.

2. பிரஸங்கங்கள் செய்தல், துண்டுப் பத்திரிகைகள் பிரசுரம் செய்தல் முதலிய பல வழிகளாலும் ஜனங்களுக்கு தொழிற்படிப்பு சம்பந்தமான அறிவைப் பரப்பச் செய்வது.

3. இந்தியாவிலும் இதர தேசங்களிலும், வாலியர்கள் சென்று தொழிற்படிப்புப் பெறப் பணி உதவி செய்வது.

4. அப்படி அவர்கள் கற்று வந்தவுடன், கற்று வந்தத் தொழில்களை நடத்தும்படி மூலதனம் கொடுத்து தொழில் நடத்தச் செய்வதில் உதவிபுரிவது.

5. இந்திய தேசத்துக் கைத்தொழில் வியாபாரம் இவைகளைப் பற்றித் தெரிந்துக்கொள்ள வேண்டிய விபரங்களைச் சேகரித்துத் தெரிவித்தல்.

6, தேசத்தின் வியாபாரம், கைத்தொழில் இவைகள் விருத்தியாகும் விஷயமாய் இன்னும் என்னென்ன வழிகள் அப்போதைக்கப்போது தோன்றுகின்றனவோ அவைகளை அனுஷ்டித்தல்.

இந்த அமைப்பின் சார்பில் மாதம் 600 ரூ. ஸ்காலர்ஷிப்பில் பி.ஏ. பட்டப் படிப்பில் தேறிய ஒருவர் ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர், சோப்பு, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, பென்சில், சிமென்ட் முதலானவைகளைச் செய்யும் விதத்தைத் தெரிந்து கொண்டு, திரும்பிவந்து, தாய்நாட்டில் . மேற்படி வேலைகளைச் செய்ய வேண்டும்.

காஞ்சிபுரத்திலும், திருநெல்வேலியிலும் நடந்த பொருட்காட்சியில் விசை நாடாத் தறியில் நெசவு செய்வதில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு 275 ரூபாய் வரையில் பரிசளிக்கப்பட்டது.

தேசியச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயரின் சுதேசியத் தொண்டுகளைப் பாராட்டி, அவரால் பத்திரிகைத் துறையில் பயிற்றுவிக்கப் பெற்ற பாரதியார், தமது 'இந்தியா' இதழில் (11-8-1906), ''சுதேசிய சம்பந்தமாக ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் எடுத்து வரும் முயற்சிக்கு நாம் அனைவரும் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்'' எனப் பாராட்டியுள்ளார்.

பாரதியாரும், வ. உ. சி.'யும், ஜி. சுப்பிரமணிய ஐயரும் 'சுதேசிய நிதி'க்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்து பேசியுள்ளார்கள்.

'வந்தே மாதரம்' இதழில் (23-4-1907) அரவிந்த கோஷ் எழுதிய பாராட்டுரை பின்வருவது:

''அந்நியப் பொருட்களை பகிஷ்காரம் செய்யுங்கள், அந்நியப் பொருட்களைப் பயன்படுத்துவோரை பகிஷ்காரம்

செய்யுங்கள் என்று ஜி. சுப்பிரமணிய ஐயர் தன்னுடைய நாட்டு மக்களுக்கு சென்னையில் வழங்கும் அறிவுரையை ஆர்வமுள்ளோர் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

சுதேசி வஸ்து பிரசாரிணி சபை

சென்னை நகரத்தில் பாரதியார் முற்போக்குக் கொள்கையுடைய தமது இளந் தோழர்களைக் கொண்டு, சுதேசிய பிரசாரத்திற்காக ''சுதேசி வஸ்து பிரசாரிணி சபை'' எனும் அமைப்பை நிறுவினார். பாரதியாரின் நெருங்கிய நண்பரும், அக்காலத்தில் சட்டக்கல்லூரி மாணவருமான வி. சக்கரை செட்டியார் இந்த அமைப் பின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். சென்னையில் ஒவ்வொரு வாரத்திலும் முக்கியமான இடங்களில் சுதேசியச் சொற்பொழிவுகள் இந்தச் சபையின் சார்பில் நிகழ்த்தப்பட்டன. ''இச்சபை இம்மட்டு ஊக்கத்தோடும் உழைப்பது எமது மனத்தை மிகவும் பூரிக்கச் செய்கின் றது'' என்று பாரதியார் 'இந்தியா'வில் (8-6-1907) எழுதியுள்ளார்.

பால பாரத சங்கம்

சென்னையில் சுதேசிய பிரசாரத்திற்காக தோன்றிய மற்றொரு சங்கம், ''பால பாரத சங்கம்''. இதையும் பாரதியாரே அமைத்தார். 1906-இல் சென்னை நகரத் தில் ''பால இந்தியா சபை'' எனும் ஓர் அமைப்பு இருந்துள்ளது. இதைப் பற்றி விவரம் கிடைக்கவில்லை. ஆனால், பால பாரத சங்கத்தைப் பற்றி பாரதியார் 1907 பிப்ரவரி 16-ந் தேதி 'இந்தியா' இதழில், ''ஆரம்பத்திலே சென்னை நகரத்தில் நாம் 'பால பாரத சங்கம்' ஒன்றேற்பாடு செய்து அதன் உதவியின் பொருட்டு 'பாலபாரதம்' என்னும் பத்திரிகையையும் பிரசுரித்து வரத் தொடங்குகிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் செயற்பாடுகள் பற்றியச் செய்திகளும் 'இந்தியா' இதழ்களில் வெளிவந்துள்ளன. இந்த சங்கத்திற்கு

சென்னை நகரத்தைத் தவிர பிறவிடங்களிலும் கிளைகள் இருந்துள்ளன.

பால பாரத சங்கத்தின் சார்பில் வெளிவந்த முதல் தமிழ் வெளியீடு, சுதேசியத்தைப் பற்றிய விளக்கமாகும். ''பால பாரத சங்கம் முதலாவது பிரகடனம்—பத்தாம் அவதாரம்'' எனும் தமிழ்த் தலைப்பிலும், இதே பொருளில் ஆங்கிலத் தலைப்பிலும், வெளிவந்த துண்டுப் பிரசுரத்தில், ''தர்மத்தை நன்கு ஸ்தாபனம் செய்யும் பொருட்டாகவும் நான் யுகந்தோறும் வந்து பிறக்கின்றேன்' என்னும் பகவத் கீதையின் அருளுரையை எடுத்துக்காட்டி சுதேசியம் பத்தாவது அவதாரமாக வருணிக்கப் பட்டுள்ளது.

மேலே எடுத்துக் காட்டியவாறு ஜி. சுப்பிரமணிய ஐயர் முதல் பால பாரத சங்கம் வரையில் சுதேசிய முயற்சிகள் பல நிகழ்ந்த போதிலும், அவற்றின் தாக்கம் எதிர்பார்த்த அளவிற்கு ஏற்படவில்லை.

விபின் சந்திர பாலரின் சென்னைச் சொற்பொழிவுகள்

சென்னை பால பாரத சங்கத்தின் பிரதிநிதியாக பாரதியார், ஆந்திரப் பிரதேசத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த, வங்கம் தந்த நாவரசர் விபின் சந்திர பாலரைச் சந்தித்து அவரைச் சென்னைக்கு அழைத்து வந்தார்.

''தூக்கத்திலே விருப்பம் கொண்ட சென்னை மாகாணத்தின் முகத்திலே தேசாபிமான ஜலத்தை வாரிக் கொட்டி எழுப்பி விடும் பொருட்டாக பாபு விபின் சந்திர பாலர் வந்து விட்டார்'' என்று பாரதியார் 1907 ஏப்ரல் 20-ஆம் தேதி 'இந்தியா' இதழில் மகிழ்ச்சிப் பெருக்குடன் எழுதினார்.

திருவல்லிக்கேணி கடற்கரையில் 1907 மே மாதத்தில் தொடர்ந்தாற் போல் ஆறு நாட்களில் ஆறு

தலைப்புகளில் எழுச்சி மிக்க சொற்பொழிவுகளை நிகழ்த்தினார், விபின் சந்திரபாலர். முதல் நாள் கூட்டத்திற்கு ஜி. சுப்பிரமண்ய ஐயர் தலைமையேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சொற்பொழிவுகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

நாள்	தலைப்பு
3-5-1907	புதிய இயக்கம்
4-5-1907	சுயராஜ்யத் தத்துவம்
5-5-1907	சுயராஜ்யம்: அதன் வழிகளும், முறைகளும்
6-5-1907	பகிஷ்காரம்
7-5-1907	இந்திய தேசியத்திற்கு இஸ்லாத்தின் பங்களிப்பு
8-5-1907	தேசியக்கல்வி

விபின் சந்திர பாலரின் ஆங்கில மொழியாற்றலுடன், எடுத்துக்கொண்ட பொருள்களில் பெற்றிருந்த செறிவார்ந்த புலமையும், தேசிய உணர்ச்சியும் பெரும் பரபரப்பை சென்னை நகரத்திலே கற்றோர் மத்தியிலே ஏற்படுத்தியது. இவருடைய சொற்பொழிவுகள் ஏற்படுத்தியத் தாக்கத்தைப் பற்றி பாரதியார் மே 11-ந் தேதி இதழிலேயே பின்வருமாறு வருணித்துள்ளார்:

"சென்னையிலே எங்கு பார்த்தாலும் விபின் சந்திர பாபுவைப் பற்றியே பேசுகிறார்கள். எங்கே கேட்டாலும் அவருடைய புகழ்ச்சிதான். தெருக்களிலே 'வந்தே மாதரம்' வெகு சாமானியமான வசனமாகிவிட்டது."

'தமிழ்த் தென்றல் திரு. வி. க.' என்று புகழ் பெற்ற திரு. வி. கலியாணசுந்தரனார் தமது வாழ்க்கைக் குறிப்புகளில், "அச்சமயம் விபின் சந்திர பாலர் சென்னை

அடைந்து கடற்கரையில் கர்சித்தார். அக்கர்ச்சனை மாகாணத்தையே தட்டி எழுப்பியது; என்னை விழிக்கச் செய்தது'' என்று நினைவு கூர்ந்துள்ளார்.

விபின் சந்திர பாலரின் கடற்கரைச் சொற்பொழிவு கள் தமிழாக்கம் செய்யப் பெற்று, ''விபின் சந்திர பாலர் சென்னையில் செய்த உபன்னியாஸங்கள்'' எனும் தலைப்பில் 232 பக்கங்களில், 'இந்தியா' பத்திரிகை அலுவலக வெளியீடாக 1908-இல் வந்தது.

வ. உ. சி. யும், சுப்பிரமணிய சிவாவும் 9-3-1908-இல் விபின் சந்திர பாலர் விடுதலை பெற்ற நாளைக் கொண்டாடியதும், இதைத் தொடர்ந்து அவர்கள் இரு வரும் சந்தித்த அரசியல் போராட்டங்களும், சிறை வாசங்களும் விபின் சந்திர பாலரின் ஆற்றல் மிக்க செல்வாக்கை விளக்கவல்லன.

சுதேசி இயக்கத்தில் வ. உ. சி.

'சுதேசி நாவாய்ச் சங்கம்' எனும் போர்முரசை வ. உ. சி. உருவாக்கியதற்கு முன்பு, சுதேசிப் பண்டகச் சாலை, தரும நெசவு சங்க சாலை, ஜனசங்கம் எனும் மூன்று அமைப்புகள் வாயிலாக சுதேசி இயக்கத்தை நடத்தியுள்ளார், வ. உ. சி.

சுதேசிப் பண்டகச்சாலை என்ற பெயரில் சுதேசியப் பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் நிறுவனத்தை அமைத்தார். தரும நெசவு சங்க சாலைக்காக ஒரு நூற்பாலையைக் கட்டி வேலையைத் தொடங்கினார். நெசவு சாலைக்கு முன் பணம் கொடுப்பதாக வாக்களித்த வர்களில் பலர் அவ்வாறு தராததினால் இந்த முயற்சி முற்றுப் பெறவில்லை.

சென்னை ஜனசங்கமும் தூத்துக்குடி ஜனசங்கமும்

சென்னை ஜன சங்கத்தின் கிளையாக தூத்துக்குடி ஜனசங்கத்தை அமைத்ததாக தமது சுயசரிதையில் வ. உ. சி. குறிப்பிட்டுள்ளார்.

சென்னை ஜனசங்கம் ஜனவரி 11, 1908-இல் திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில், அமைக்கப்பட்டது. தேசபக்தர் எஸ். ஸ்ரீநிவாஸசாரியார் பி. ஏ. பி. எல்., தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், கீழ்க்கண்டவர்கள் அடங்கிய ''மானேஜிங் கமிட்டி'' நியமிக்கப்பட்டது.

1. வ. உ. சிதம்பரம் பிள்ளை
2. வி. சக்கரை செட்டியார்
3. சி. சுப்பிரமணிய பாரதி.
4. யதிராஜ் சுரேந்திரநாத் ஆர்யா
5. கே. வெங்கடரமணராவ்
6. எஸ். ஸ்ரீநிவாஸசாரியார் பி.ஏ. பி.எல்.
7. வரதராஜ சர்மா

இந்த 'மானேஜிங் கமிட்டி'க்கு சங்கத்தின் நிர்வாகக் குழுவினரின் பெயர்களை அறிவிக்க அதிகாரமும் அளிக்கப்பட்டது. சென்னை ஜன சங்கத்தின் அலுவலகம், திருவல்லிக்கேணியில், 87, துளசிங்கம் பெருமாள் கோயில் தெருவில் இருந்தது.

சென்னை ஜன சங்கத்தைப் பற்றிய ஒரு குறிப்பு பாரதியார் மே 29, 1905-இல் திலகருக்கு எழுதியக் கடிதத்தில் உள்ளது. இந்த ஆங்கில மொழிக் கடிதத்தின் ஒரு பகுதியின் தமிழாக்கம் வருமாறு:

''அன்பிற்குரிய குருஜி,

சென்னையில் இந்தி வகுப்பைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளும் கணேஷ்கிருஷ்ணவர்மாவின் கடிதம் கிடைத்தது. சென்னை ஜனசங்கத்தின் சார்பில் ஏற்கனவே சிறிய அளவில் ஒரு வகுப்பைத் தொடங்கி விட்டோம். இந்த வகுப்பில் சுமாராக மாணவர்கள் வருகின்றனர் என நம்புகிறேன். இதன் முன்னேற்றத்தைப் பற்றி போகப் போகத் தெரிவிக்கின்றேன். கல்கத்தா காங்கிரசைப் போன்று, சென்னையில் தேசிய

மாநில மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்திருக்கின்றோம். அடுத்த காங்கிரஸ் எப்பொழுது? நமது தேசிய கட்சிக் குழு என்னவாயிற்று? நமது செயலாளர் மிஸ்டர் சிதம்பரம் தற்சமயம் இங்கு உள்ளார். இது விஷயமாக எங்கள் சங்கத்திற்கு எழுதுமாறு மிஸ்டர் கேங்கரிடம் தயவு செய்து கூறுங்கள்.''

மேற்கண்ட கடிதத்தில் இருந்து, சென்னை ஜன சங்கம் திலகர் முதலான தேசியத் தலைவர்களால் தொடங்கப்பெற்ற 'நேஷனலிஸ்ட்ஸ் பார்ட்டி' எனும் தேசியவாதிகள் கட்சியுடன் அரசியல் தொடர்பு கொண்டிருந்தது புலனாகின்றது. இந்தச் சங்கம் நடத்திய ஓர் அரசியல் கூட்டத்தில் பேசியதற்காக, பாரதியாரின் நெருங்கிய நண்பர் யதிராஜ சுரேந்திரநாத் ஆர்யாவிற்கு ஐந்தாண்டு சிறைவாசம் கிடைத்தது. இந்த அடக்கு முறைக்குப் பிறகு சென்னை ஜனசங்கம் சோர்ந்து விட்டது.

சுதேசிகளுக்குள் ஏற்படும் சில வழக்குகளை பிரிட்டிஷ் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமல், தங்களுக்குள்ளேயே பஞ்சாயத்து மூலம் முடிவு காணவும், கைத்தொழில்களைக் கற்பிக்க பள்ளிக்கூடங்களை அமைக்கவும், சுதேசிய வங்கிகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஜனசங்கம் அமைக்கப் பெற்றதாக வ. உ. சி., தமது சுயசரிதையில் விளக்கியுள்ளார். உறுப்பினர்களின் உறுதிமொழிகளில் சுதேசியக் கொள்கைகள் சேர்க்கப்பட்டிருந்தன.

தூத்துக்குடி ஜனசங்கத்தின் உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தின் ஆங்கில மொழியாக்கம் கிடைத்துள்ளது. இதன் தமிழாக்கம் வருமாறு:

''அடியில் கையொப்பமிட்ட நான் அந்நிய ஆடைகளை, சர்க்கரையை, எனாமல் பூச்சுள்ள பாத்திரங்கள் மற்றும் அந்நியப் பொருட்களை முடிந்த அளவு முற்றிலுமாக பகிஷ்கரிப்பேன் என்று பற்றுறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் உறுப்பினர் கட்டணமாக

ரூ.....யை சங்கத்திற்கு மாதந்தோறும் செலுத்தி, அதன் உறுப்பினராவேன்''

தூத்துக்குடியில் சுதேசிய பிரசாரத்தின் தொடக்கம்

தூத்துக்குடியில் சுதேசியப் பிரசாரம் 1905-லேயே அதாவது வ.உ.சி.யின் சுதேசிய முயற்சிகளுக்கு முன்னதாகவே, நிகழ்ந்துள்ளது. இதற்கான சான்று, வ.உ.சி.யின் மீதான ராஜ நிந்தனை வழக்குத் தொடர்பான அன்றைய அரசு ஆணை எண். 1542, 3-10-1911 தேதியிட்டதில் உள்ளது. இந்த அரசு ஆணையின் தமிழாக்கப் பகுதியொன்று வருமாறு:

''தூத்துக்குடியில் 1905 செப்டம்பர் மாதத்தில் இரு வக்கீல்கள் சுதேசியின் பகிஷ்கார இயக்கத்தைத் தொடங்கினார்கள். அந்தச் சமயத்தில் சுதேசி இயக்கத்தின் தீவிரப் பேச்சாளராக ராமகிருஷ்ணய்யர் விளங்கினார். இவர் தூத்துக்குடியை விட்டு பத்தாண்டுகள் சென்னையில் தங்கிய பிறகு இப்பொழுது தூத்துக்குடி திரும்பியிருக்கிறார். ராமகிருஷ்ணய்யர் பொதுக் கூட்டங்களுக்காக நோட்டீசுகள் அச்சடித்து வழங்கினார். இந்த நோட்டீசுகளின் தலைப்பில் ''துரோகியாக இருக்காதீர்கள்'' என்றும், இறுதியில் ''எழுமின், விழிமின், இல்லையெனில் எப்பொழுதும் வீழ்ச்சியுறுவீர்'' என்றும் அச்சிடப்பட்டிருந்தன. ஆனால், அவர் ஒரு மாத காலத்திற்குப் பிறகு ஒதுங்கிவிட்டார். பூனாவில் தேசிய இந்தியக் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினரான பிராமணர் ஒருவர் இந்த மாவட்டத்தில் தோன்றி சுதேசி இயக்கச் சொற்பொழிவுகளாற்றி வந்தார்.''

1906 ஜூனில் வ.உ.சி., தமது சுதேசி நாவாய்ச் சங்கத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காகச் சுற்றுப்பயணம் செய்தார்.

தூத்துக்குடியில் 1906 ஆகஸ்ட் 8-இல் சுதேசிய இயக்கத்தின் முதலாண்டு நிறைவு விழாக் கூட்டத்திற்கு

வ. உ. சி., ஏற்பாடு செய்தார். இந்தக் கூட்டத்திற்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைமை ஏற்றார்.

1906 செப்டம்பர் 28-இல் மதுரையில் சுதேசியம் பற்றி வ.உ.சி. இரு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இந்தக் கூட்டத்திற்கு புகழ்மிக்க சேதுபதி மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பாண்டித்துரைத் தேவர் தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் 'வந்தே மாதர்ம்', 'சுதேசியம்' பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்தார், வ. உ. சி. இந்தக் கூட்டத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயரின் தேசிய நிதிக்கு உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

1907 மார்ச் 17-இல் சென்னை தெற்கு கடற்கரையில் வ. ஊ. சி. பேசுவதற்காக ஒரு பொதுக்கூட்டத்தை ஜி. சுப்பிரமணிய ஐயர் ஏற்பாடு செய்தார். இந்திய ராஜப்பிரதிநிதி கர்ஸான் பிரபு வெளியிட்ட வங்கப் பிரிவினை உத்திரவு, எவ்வாறு தேச ஒற்றுமையை உருவாக்கியது என்பதை வ. உ. சி. விளக்கினார். மேற்கொண்டு கூட்டத்தைப் பற்றிய செய்தி வருமாறு:

''சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருவல்லிக்கேணியில் 'லேடீஸ் பார்க்கு' என்ற மாதர் உத்தியானத்துக்கு எதிரே கடற்கரையில் ஒரு பெருங் கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் சுமார் 5000 பேரெனக் கணக்கிடலாம். ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்களின் பேச்சு:

''சகோதரர்களே! மனிதன் ஒன்று நினைத்தால் தெய்வம் மற்றொன்று நினைக்கும். கெட்டதிலிருந்தும் நன்மையுண்டாகும் என்பதற்கு நிதர்சனமாக லார்டு கர்சன் நம் ஒற்றுமையுணர்ச்சியைக் குறைப்பதற்காக வங்காளத்தை இரு கூறாகப் பிரிவினை செய்ய, அதனால் நம் ஐக்கியம் குறைந்து போமென்றும் அவர் எண்ணிய எண்ணத்துக்கு நேர்மாறாக முன்னிருந்ததிலும் அதிக ஒற்றுமையும் அதன் பயனாக சுதேசியக் கிளர்ச்சியும் நமக்குள் தோன்றி அற்புதமான காரியங்களைச் செய்து வருகிறது.''

"சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிகள்" — சில ஆரம்ப முயற்சிகள்

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுக்கு எதிராக இந்தியச் சுதேசிகள் கப்பல் ஓட்டுவதற்கு முயற்சிகள் முதன் முறையாக வங்காளத்தில் எடுக்கப்பட்டன. வங்காளத்தின் கலாசார, சமூக விழிப்பிற்கு தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்ட தாகூர் குடும்பத்தைச் சார்ந்த ஜியோதிந்தரநாத் தாகூர் 1884-இல் "Inland River Steam Navigation Service" எனும் "உள்நாட்டு நதிவழி நீராவிக் கப்பல் போக்குவரத்துப் பணி"யைத் தொடங்கினார். இதற்காக மிகுந்த பொருட்செலவில் ஐந்து கப்பல்களை வாங்கினார். இந்தக் கப்பல்களுக்கு "சரோஜினி, வங்க லட்சுமி, சுதேசி, பாரத், ரிப்பன்பிரபு" எனத் தேசிய மணங்கமழும் பெயர்களை வைத்தார். இந்தக் கப்பல்கள் பயணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் சென்றன. குல்னா என்னும் ஊரில் இருந்து பாரிசால் எனும் ஊர் வரையில் பயணிகளும், கல்கத்தா வரையில் சரக்குகளும் ஏற்றிச் செல்லப்பட்டன.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியான "ஃப்ளாடில்லா கம்பெனி" சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சியை வீழ்த்த கடுமையானப் போட்டியில் இறங்கியது. தேசபக்திமிக்க பாரிசால் மாணவர்கள் சுதேசி கப்பல் கம்பெனிக்கு ஆதரவாகப் பயணிகளைத் திரட்டியும், சுதேசி கப்பல் கம்பெனியைப் பெருமைப்படுத்தும் பாடல்களைப் பாடியும் ஊக்கமளித்தனர்.

பிரிட்டிஷ் கம்பெனி, கட்டணமின்றியே பயணிகளை ஏற்றிச் சென்றதோடு, இலவச உணவிற்கும் ஏற்பாடு செய்தது. இத்துடன் ஹாவ்ராபாலத்தில், கல்கத்தா அருகில் சுதேசிக் கப்பல்களுக்கு ஏற்பட்ட விபத்தும் சேர்ந்தது. இதன் விளைவாக, சுதேசி கப்பல் கம்பெனியை, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியே உரிமையாக்கிக் கொண்டது. இதே மாதிரியான பரிதாபத்திற்குரிய அவலநிலை பிற்காலத்தில் வ. உ. சி. தொடங்கிய சுதேசி நாவாய்ச்

சங்கத்திற்கும் ஏற்பட்டதை இங்கு இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

வங்காளத்தில் 1884-க்குப் பிறகு 1905-இல் சுதேசி இயக்கத்துடன் தோன்றிய கப்பல் கம்பெனி ''பெங்கால் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'' என்பதாகும். இந்தக் கம்பெனியை, வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனியுடன் தொடர்புப்படுத்தி அரவிந்த கோஷ் எழுதியுள்ளார்.

1905 ஜூலையில் சிட்டகாங் நகரைச் சார்ந்த சில ஜமீன்தாரர்களும், முஸ்லீம் வர்த்தகர்களும் இணைந்து ''பெங்கால் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யைத் தொடங்கினார்கள். இதன் மூலதனம் ஒரு லட்ச ரூபாய். இந்த நிறுவனத்தின் கப்பல்கள், சிட்டகாங், அக்யூாப், ரங்கூன் நகரங்களிடையே பயணிகளை ஏற்றிச் சென்றன. இந்த முயற்சிக்கு அந்நியக் கப்பல் கம்பெனிகளிடையே தீவிரமான போட்டிகள் ஏற்பட்ட பொழுதிலும், 1909-இல் பங்குதாரருக்கு ஏழரை விழுக்காடு பங்குத்தொகை தரப்பட்ட அளவிற்கு வெற்றிகரமாகச் செயல்பட்டது.

1905 முதல் 1930 வரையில் இந்தியாவின் பலவிடங்களில் இருபதுக்கும் குறையாமல் இந்தியக் கப்பல் கம்பெனிகள் தோன்றின. சுமாராக பத்து கோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்ட இந்தக் கம்பெனிகள் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளின் ஈவிரக்கமற்ற கடுமையானப் போட்டிகள் காரணமாக தோல்வியுற்றன. இவ்வாறு தோல்வியுற்ற கம்பெனிகளுள் வ. உ. சி. உருவாக்கிய கம்பெனியும் ஒன்றாகும்.

'சுதேசமித்திரன்' பார்வையில்

சுதேசி இயக்கத்தின் விளைவாகத் தோன்றிய சுதேசிக் கப்பல் கம்பெனிகளைப் பற்றி 'சுதேசமித்திரன்', வ. உ. சி. 'யின் முயற்சியுடன் இணைத்து ஒரு தலையங்கத்தை எழுதியது. இந்தத் தலையங்கம் 1906 நவம்பர் 14-இல் பக்கம் 2-இல் வெளிவந்துள்ளது. இதன் சுருக்கம் பின் வருமாறு :

''இப்போது இந்தியாவில் எங்கு பார்த்தாலும் பரவி வரும் சுதேசிய உணர்ச்சியும் ஊக்கமும் பல துறைகளில் பயன்பட்டு வந்தாலும், இந்தத் துறைகளுள் முக்கியமான தொன்று நமது துறைமுகங்களில் ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் போக்குவரவு செய்யக் கப்பல்கள் வைத்து நடத்துவது. நமது மாகாணத்தில் தூத்துக்குடியில் மிஸ்டர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் முயற்சியால் அங்குள்ள வியாபாரிகள் ஒன்று சேர்ந்து அதற்கும் ஸிலோனிலுள்ள கொழும்புக்கும் கப்பல் போக்குவரவு ஏற்படுத்தியிருப்பது நேயர்களறிந்த விஷயம்....

''இந்தக் கப்பல் போக்குவரத்து விஷயமாய் நமக்கு இன்னும் தைரியத்தைக் கொடுக்கக் கூடியதென்னவென்றால், தூத்துக்குடியில் முயற்சிக்கப்படுவது போலப் பம்பாயிலும் பெங்காளத்திலும் செய்யப்பட்டு வருகின்றது. பம்பாயில் 30 லட்சம் ரூபாய் முதல் வைத்துச் சில இந்திய முதலாளிகள், பம்பாய்க்கும் வடக்கே கராச்சிக்கும் தெற்கே கள்ளிக்கோட்டை, தலைச்சேரி இவைகளுக்கும், மேற்கே ஏடன் முதலான துறைமுகங்களுக்கும் 10 ஸ்டீமர்கள் வைத்து வியாபாரம் செய்வதாக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அப்படியே பெங்காளத்தில் சிலர் சேர்ந்து சிட்டகாங் என்ற துறைமுகத்துக்கும், ரங்கூனுக்கும் கப்பல் போக்குவரவு ஸ்தாபிக்க ஒரு வருஷத்துக்கு முன்னால் முயற்சி செய்தார்கள்: அந்த முயற்சி நிறைவேறி வருகிறதென்று கேட்க சந்தோஷப் படுகிறோம். ஆதியில் ஒரே ஸ்டீமர் வைத்து நடத்தினார்கள். இப்போது அது போதாமல் வேறு இரண்டு புது ஸ்டீமர்கள் வாங்கியிருக்கிறார்களாம். வியாபாரம் பலமாய்ச் செய்யப்பட்டு வருகிறதென்று சொல்லப்படுகிறது....

''நமது முயற்சிகள் நிறைவேறாதபடி சாத்தியமான உபாயங்களையெல்லாம் இந்த ஆங்கிலேயர் செய்வார்கள் ... போட்டி செய்வார்கள்; தங்கள் லாபத்தைக் குறைத்து செலவுகளை ஒன்றுக்குக் காலாக்கி நமது முயற்சிகளைத் தலையெடுக்க வொட்டாமல் செய்வார்கள்;

பயமுறுத்துவார்கள்; லஞ்சம் கொடுப்பார்கள்; ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை வசப்படுத்திக் கொண்டு நமக்கு இடைஞ்சல்களைச் செய்வார்கள்... இன்னும் பல சதிகள் செய்வார்கள். இவைகளுக்கெல்லாம் நம்மவர் பயப்படாமலும் மனந்தளராமலும் ஒரே பிடிவாதமாக ஆரம்பித்ததை முடிக்க வேண்டும்.''

சுதேசமித்திரன் பார்வையில் தெரிவிக்கப் பெற்ற மேற்காணும் கருத்துகள், வ.உ.சி.யின் கப்பல் கம்பெனி முயற்சிகளைப் புரிந்துக் கொள்வதற்கு உதவுவனவாகும்.

தூத்துக்குடியில் கப்பல் போக்குவரத்து முயற்சி

தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையே கடல் வழி வாணிபம் வளர்ந்தோங்கி நடைபெற்று வந்தது. இதற்கான கப்பல் போக்குவரத்தை பி. ஐ. எஸ். என். கம்பெனி என்னும் பிரிட்டிஷ் கம்பெனி ஏகபோகமாக நடத்தி வந்தது. தூத்துக்குடி வர்த்தகப் பிரமுகர்களில் சிலர் சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சியில் ஈடுபட்டனர். இந்த முயற்சியைப் பற்றி வ. உ. சி. ராஜ நிந்தனை வழக்கின் அரசு ஆணை எண். 1542, (3-10-1911 தேதியிட்டது, குறிப்பிட்டுள்ளதாவது: ''1906 ஏப்ரலில் இந்த வர்த்தகர்கள் தூத்துக்குடி—கொழும்பிற்கு இடையே சுதேசிக் கப்பல் விட முயற்சி செய்தனர்.'' இந்தக் குறிப்புடன், சுவாமி அபேதானந்தரை வரவேற்க ஒரு 'சுதேசி ஸ்டீமர்', 1906 ஜுன் 29-இல், தூத்துக்குடி துறைமுகத்தில் சென்ற செய்தியையும் இணைத்துச் சிந்திக்கும் பொழுது, தூத்துக்குடி வர்த்தக முயற்சி நடைமுறைப் படுத்தப்பட்டதை அறிய முடிகின்றது. இந்தக் கம்பெனி ''சி.வ.கம்பெனி'' என்று பெயர் பெற்றிருந்தது. 'சி. வ.' என்பது வ. உ. சி.யின் நண்பர் சிவபுரம் மிட்டாதார் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையைக் குறிப்பதாகும்.

'சி. வ. கம்பெனி'யைப் பற்றிய ஒரு செய்தி பாரதியாரின் 'இந்தியா' இதழில் (ஜுன் 21, 1906), பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

''பி. ஐ. எஸ்.என். வெள்ளை கம்பெனியாருக்குப் போட்டியாக மேற்பட்டிருக்கும் சி.வ.கம்பெனியாரை பலவாறாக இம்சிக்க நிச்சயம் புரிந்துவிட்டாரென்று தெரிகிறது.''

ஆங்கிலேய அதிகார வர்க்கம், வெள்ளையர் கம்பெனிக்கு ஆதரவாக, சுதேசியக் கம்பெனியை ஒழித்துக் கட்டச் சூழ்ச்சி செய்ததைப் பற்றியும் 'இந்தியா'வில் ஆகஸ்ட் 25, 1906-இல், ''தூத்துக்குடியிலே சுதேசியம்'' எனும் தலைப்பில் வெளிவந்த பின்வரும் செய்தி விளக்குகின்றது.

''ஷாலைன் ஸ்டீமர்களின் முதலாளியான எஸ்ஸாஜி டாஜ்பாயி என்ற பம்பாய் வர்த்தகர் சி. வ. (சுதேசிய) கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மேற்படி சுதேசியக் கம்பெனியாருக்கு சில கப்பல்கள் கொடுத்திருக்கிறார்களென்பதை நேயர்கள் அறிவார்கள். அந்தக் கப்பல்கள் லாபம் பெறுவதைத் தடுக்க வேண்டுமென்ற விஷயத்தில் பி. ஐ. எஸ். என். (வெள்ளை) கம்பெனியாரும், மிஸ்டர் வாலர் என்ற தூத்துக்குடி மாஜிஸ்ட்ரேட்டும், வேறுபல ஜனத்துரோகிகளும் எத்தனை முறை பாடுபட்டார்களென்பதையும் பலமுறை பேசியிருக்கிறோம். இப்போது மேற்படி எஸ்ஸாஜி டாஜ்பாய் என்ற பம்பாய் வர்த்தகரே நம்மவர்களுக்கு விரோதமாகத் திரும்பி விட்டாரென்று கேள்விபட்டு மிகுந்த ஆச்சர்யமடைகிறோம். இந்த பம்பாய் வர்த்தகருக்கு மேற்படி ஒப்பந்தத்திலிருந்து விசேஷமான லாபம் கிடைத்திருக்கிறது. மேலும் இவர் ஒப்பந்தப்படி செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதி வரை கப்பல் விட்டு வைக்க கடமைப்பட்டிருக்கிறார். பி. ஐ. எஸ். என். கம்பெனியார் பக்கம் சேர்ந்து கொண்டு அவர்களுடைய தூண்டுதலின் பெயரில் மேற்படி எஸ்ஸாஜி டாஜ்பாய் இங்ஙனம் செய்திருக்கலாமென்று தோன்றுகின்றது.''

பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து சதி செய்த பிரிட்டிஷ் கம்பெனியின் நோக்கம் வெற்றி

பெற்று விட்டது. ஆனால், புதிய சுதேசிக் கப்பல் ஓட்டும் மற்றொரு முயற்சி தோன்றியது. இந்த முயற்சியை முன் நின்று நடத்தியவர் வ. உ. சி.

வ. உ. சி.யின் வீறார்ந்த துணிகர முயற்சி

குத்தகைக்கு கப்பல் எடுத்து ஓட்டுவதைக் காட்டிலும் சொந்தமாகவே கப்பல் வாங்கி ஓட்டுவதே சுதேசிக் கப்பல் கம்பெனி வளர்ச்சிக்கு உத்தரவாதமானது என்ற முடிவிலே வ. உ. சி.யின் துணிகர முயற்சி வீறுபெற்றது.

1882-ஆம் ஆண்டின் இந்தியன் கம்பெனி சட்டப் படி 1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ந் தேதியில் ''சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்'' எனும் பெயரில் புதிய சுதேசிக் கம்பெனி அமைக்கப்பட்டது.

தமது அருமைச் சீடர் சிதம்பரம் பிள்ளையின் புதிய சுதேசிய முயற்சியை அறிந்து திலகர் பாராட்டியது, சென்னை சுதேசமித்திரன் இதழில் (24-10-1906) பின்வரும் செய்தியாக வெளியிடப்பட்டது.

''திருநெல்வேலியில் உத்தம தேசாபிமானியாகிய சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடிக்கும் சிலோனுக்கும் சுதேசிக் கப்பல் போக்குவரத்து ஸ்தாபித்திருப்பது சுதேசியத்திற்கு அவர் செய்திருக்கும் பெரும் பணிவிடையாகும்.''

புதிய சுதேசிக் கம்பெனியின் அறிக்கையில் உள்ள சில செய்திகள் வருமாறு:

கம்பெனியின் மூலதனம் ரூபாய் 10,00,000. இது பங்கு ஒன்றுக்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகளாக இந்தியர், இலங்கையர் முதலிய ஆசியா கண்டத்தாரிடமிருந்து சேர்க்கப்படும்.

பாலவநத்தம் ஜமீன்தாரவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தவருமான ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர், புதிய

சுதேசிக் கப்பல் கம்பெனியின் தலைவர். 15 டைரக்டர்களுள் பிரபல வர்த்தகக் குழுவான மெஸர்ஸ் யச். ஏ. ஆர். ஆஜிபக்கீர் முகமது சேட் அன் சன்ஸ், மிஸ்டர் முகமது ஹாகீம்சேட், சி. வ. கப்பல் கம்பெனியின் சி. வ. நல்லபெருமாள் பிள்ளை ஆகியோரும் அடங்குவர். மெஸர்ஸ் யச். ஏ. ஆர். ஹாஜி பக்கீர் முகமது சேட் அன் ஸன்ஸ், கௌரவ காரியதரிசிகள். வ. உ. சி., அவர்கள் துணைக் காரியதரிசி. பிரபல தேசபக்தரும் வழக்கறிஞருமான சேலம் சி. விஜயராகவாச்சாரியார், திருநெல்வேலி வழக்கறிஞர் கே. ஆர். குருசாமி அய்யர், கோழிக்கோடு வழக்கறிஞர் எம். கிருஷ்ணன் நாயர், தூத்துக்குடி வக்கீல் டி. எல். வெங்கு அய்யர் ஆகியோர் சட்ட ஆலோசகர்கள். கம்பெனியின் அலுவலக முகவரி: 85, பெரிய காட்டன் ரோடு, தூத்துக்குடி.

1906 நவம்பரில் வந்த முதல் அறிக்கையில் சில மாற்றங்கள் செய்யப் பெற்று டிசம்பரில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இதில் ஹாஜி முகமது சேட் அன் ஸன்ஸ் பெயர் இடம்பெறவில்லை. திருத்தப்பட்ட அறிக்கையில் உள்ள நோக்கங்கள் வருமாறு:

"1. தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் கம்பெனியார் தீர்மானிக்கும் மற்ற இடங்களுக்கும் ஸ்திரமாகவும், சௌகரியமாகவும் ஸ்டீமர்கள் நடைபெறச் செய்து பிரயாணத்தையும், வியாபாரத்தையும் சவுகரியப்படுத்துதல்.

2. இந்தியர்களையும், இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடத்தும் தொழிலில் பழக்குவித்து அதன் மூலம் வரும் லாபத்தையடையும்படி செய்தல்.

3. இந்தியர்களுக்கும், இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடத்தும் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலை செய்து காட்டிக் கற்பித்தல்.

4. இந்தியா, இலங்கை மாணவர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து மாணவர்களுக்கும் கப்பலோட்டுந் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல்.

5. கப்பல் நடத்துந் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள். இலங்கையர்கள் முதலிய ஆசியா கண்ட வாசிகளுக்குள் ஐக்கிய பாவனையை உண்டு பண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல்.

6. பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியாபாரங் கட்கடுத்த கொள்வன, கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக 'இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத் தேசத்தார்களை ஏஜண்டுகளாக நியமித்தல்.

7. ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படகுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும், அவைகளைச் செப்பனிடுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும் துறைகள்' ஏற்படுத்துதல்.

8. கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் செய்தல்.

மேற்காணும் எட்டு நோக்கங்களில் உள்ள அனைத்துமே புரட்சிகரமானவை. இந்தியா விடுதலை பெற்ற பிறகே கப்பற் போக்குவரவு தொழில் பற்றியத் திட்டங்கள் உருவாக்கப் பெற்றன. ஆனால் இதன்' முன்னோடியாக 1906-லேயே பல்வேறுத் திட்டங்கள் பற்றியச் சிந்தனைகள் முன் கூறப்பெற்ற நோக்கங்களில் வெளிபட்டுள்ளது, புரட்சிகரமானவையாகும்.

20-10-1906-இல் 'இந்தியா'வில், வ.உ.சி.யின் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் நோக்கங்களை வரவேற்று பாரதியார் எழுதியபோது, ''பங்காளிகள் அனைவரும் ஆசிய கண்டத்தவர்களாகவே இருக்க வேண்டுமல்லாது, ஐரோப்பியர்களிடமிருந்து பங்குகள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டா'' என்பதைச் சுட்டிக்

காட்டியுள்ளார். ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கு எதிரான ஆசியா கண்டத்தின் விழிப்புணர்வை, தேசிய வுணர்வை வலியுறுத்தும் வகையில் மேற்படி நோக்கம் அமைந்துள்ளதை பாரதியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்காலத்தில், 1904-1905-களில் வல்லரசான ரஷ்ய ஜார் அரசாட்சி ஜப்பான் நாட்டின் மீது படையெடுத்ததை, ஜப்பான் தோற்கடித்தது. இதை ஜப்பானின் வெற்றியாக மட்டும் கருதாமல் மேலைநாட்டு ஆதிக்கச் சக்திக்கு எதிரான ஆசிய தேசியத்தின் வெற்றியாக இந்திய தேசபக்தர்கள் கொண்டாடினர். இந்திய தேசிய எழுச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பிரசாரம் செய்யப்பட்டது. வங்கப் புரட்சி வீரர்களின் ஏடான 'யுகாந்தர்' ஏட்டில், 1906 அக்டோபரில், ஜப்பான், ''போர்க்களத் தெய்வத்திற்குரிய புண்ணிய பயணத் தலமாக'' வருணிக்கப்பட்டுள்ளது. பாரதியார் 1906 செப்டம்பர் 8-ம் தேதி 'இந்தியா'வில், ''ஏஷியாவின் விழிப்பும் இந்தியாவின் கடமையும்'' எனும் தலைப்பில் எழுதியதாவது:

''இப்போது மறுபடியும் நாகரீகமும், கீர்தியும், வீரத் தன்மையும், பெருமையும் ஆசியாவிலே பிறந்து விட்டன. முழு உதயமாய் விட்டது. ஜப்பான் முதலிலே கண் விழித்து எழுந்து நின்று கொண்டு 'ஹ ... ஹ ... ஹ' என்று வீரச் சிரிப்பு சிரிக்கத் தொடங்கிற்று.''

கப்பலோட்டிய தமிழர்

வ. உ. சி. காலத்தில் மற்ற சுதேசிய கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வ. உ. சி.யின் ''சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'' யின் தனிப்பெருஞ் சிறப்பை இனங்காண முடிகின்றது. அதாவது இதுவரை எடுக்கப் பெற்ற சுதேசிய கப்பல் முயற்சிகளில் வர்த்தக நோக்கு மேலோங்கியிருந்தது. ஆனால் வ. உ. சி. யின் வீறார்ந்த துணிகர முயற்சியில் பொருளாதாரத் தேசியத்துடன், அந்நிய அரசாங்கத்தின்

ஏகபோகத்தை, எதிர்த்த ஏகாதிபத்திய எதிர்ப்பும் மேலோங்கி நிலவியிருந்தன. வ. உ. சி.க்கு 'கப்பலோட்டிய தமிழர்' எனும் சிறப்புப் பெயரும் பிரிட்டிஷ் ஏகாதி பத்திய எதிர்ப்புணர்வில் சூட்டப்பட்டதாகும். 'பாரத மணி' (ஆசிரியர், கா.சி.வேங்கடரமணி) எனும் பத்திரிகை யில் ஜனவரி 7, 1943-ஆம் இதழில் வரகவி அ. சுப்பிர மணிய பாரதி எழுதிய கட்டுரையில் வ. உ. சி., 'கப்ப லோட்டிய தமிழன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். பிறகு தமிழரசுக் கழகத் தலைவர் 'கப்பலோட்டிய தமிழர்' எனும் பெயரில் ஒரு நூலை எழுதி ஆண்டுதோறும் நினைவு நாள் கொண்டாடி 'கப்பலோட்டிய தமிழர்' எனும் பெயரைப் பட்டி தொட்டிகள் எங்கும் பரப்பினார்.

ஏட்டளவில் அமைந்தத் திட்டத்தை, செயலளவில் நிறைவேற்ற வேண்டி மூலதனத்தைத் திரட்ட பெரும் பாடுபட்டார் வ.உ.சி. பம்பாய், கல்கத்தா முதலிய பலவிடங்களுக்குச் சென்றார். வட இந்தியாவை நோக்கி பயணத்தைத் தொடங்கிய பொழுது, ''மீண்டும் தமிழ் நாட்டிற்கு கப்பலுடன் திரும்புவேன். இல்லாவிட்டால் அங்கேயே கடலில் வீழ்ந்து மாய்வேன்'' என வீர சபதமிட்டு புறப்பட்டார்.

அவர் பம்பாய் சென்றிருந்தபொழுது அவருடைய மகன் உலகநாதன் நோய்வாய்ப்பட்டு இறந்தார்; மனைவியோ நிறைமாத கர்ப்பவதி. இந்தச் சூழலில் வ.உ.சி.யை ஊருக்குத் திரும்புமாறு உறவினர்கள் வ. உ. சி.யை வற்றுபுறுத்தி தகவல் அனுப்பினர். ஆனால், அவர், ''இறைவன் துணைநிற்பார்'' என்று ஆறுதல் அளித்து எழுதினார். அப்பொழுது தேசத்தின் அழைப்பே அவர்முன் நின்றது.

பம்பாயில் இருந்து, சுதேசமித்திரனுக்கு அனுப்பிய செய்தியில் இரு ஸ்டீமர்கள், இரு ஸ்டீமர் லாஞ்சுகள் ஐரோப்பாவில் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகக் குறிப்பிட்டார், வ. உ. சி. இதன் தொடர்பாக வ. உ. சி.யின் நண்பர் எஸ். வேதமூர்த்தி முதலியார் பாரீஸ் சென்று கப்பல்கள் வாங்க அனுப்பபப்பட்டார்.

இலங்கையில் வ. உ. சி.*

சுதேசி நாவாய்ச் சங்கத்தின் வர்த்தக நோக்கிற்கு, தூத்துக்குடி-கொழும்பு கடல்வழி வர்த்தகம் இன்றியமையாதது என்பதை உணர்ந்த வ. உ. சி. அவர்கள் 1906 ஏப்ரலில் கொழும்பு சென்றார். அக்காலத்தில் கொழும்பு ''பெட்டா என்னும் பகுதியில் தமிழ்வர்த்தகர்கள் செல்வாக்கு பெற்றிருந்தனர். இவர்கள் ஆதரவைப் பெற வ. உ. சி. அங்கு சென்றார். தமது கொழும்பு வருகையைப்பற்றி 'சிலோன் அப்சர்வர்' என்னும் கொழும்பு நகர பிரபல ஆங்கில இதழிற்கு அளித்தப் பேட்டியில் விளக்கியுள்ளார். இந்தப் பேட்டியின் செய்திச் சுருக்கம் ஏப்ரல் 6, 1906-ஆம் இதழில் வெளிவந்துள்ளது. (இதன் விவரம் பின்னிணைப்பு 5-இல் உள்ளது)

இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்துக் கொண்டிருக்கும் 'உதயதாரகை' எனும் இருமொழி இதழும் (தமிழ்-ஆங்கிலம்) வ. உ. சி.யின் வருகையைக் குறித்து தலையங்கம் எழுதியது. 'உதயதாரகை' 1841-இல் யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் சார்பில் தொடங்கப் பெற்றது. மிக நீண்ட காலம் தொடர்ந்து வரும் பெருமை இந்த இதழிற்கு உண்டு. மாதமிரு முறை இதழாக வெளிவந்த 'உதயதாரகை', 1930-இல் வார இதழாக வெளி வந்தது.

'சிலோன் அப்சர்வர்', 'உதயதாரகை' இதழ்களில் வெளிவந்த செய்திகளைக் கண்டெடுத்து மட்டக்களப்பு இலங்கை பத்திரிகையாளர் திரு. டி. சிவராம், ''சரிநிகர்'' என்னும் கொழும்பு வார இதழில்** (ஜன. 12-ஜன. 25, 1995) பின்வருமாறு எழுதியுள்ளார்.

---

* இந்தத் துணைத் தலைப்பும், செய்திகளும் மொழி பெயர்ப்பாசிரியரால் சேர்க்கப்பட்டுள்ளது.

** இந்த இதழை உதவியவர் திரு. க. சண்முகலிங்கம், (பணிப்பாளர், இந்து சமய மற்றும் கலாசார அமைச்சு திணைக்களம், கொழும்பு, ஸ்ரீலங்கா)

''1905 உடனே தமிழகத்தில் உக்கிரம் பெற்ற சுதேசி இயக்கமும் யாழ்ப்பாணக் கற்றார் ஒரு சாராரிடையே கடும் தாக்கமொன்றை நேரிடையாக ஏற்படுத்திற்று என்பதும் தெரிகிறது. 'கப்பல் ஓட்டிய தமிழன்' வ. உ. சி. 1906 ஏப்ரல் மாதம் தம் கொள்கையைப் பரப்ப கொழும்பு வந்தார். கொழும்பிலிருந்து வெளிவந்த 'ஒப்சேவர்' பத்திரிகை அவரைப் பேட்டி கண்டு எழுதிற்று. அவருடைய வருகையை மையமாக வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்த 'உதயதாரகை' ஆசிரியர் தலையங்கம் வரைந்தது. (12.4.1906). கப்பல் கம்பெனி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றியும், சுதேசக் கைத்தொழில்களை உதாரணமாக, உள்ளூர் 'நெசவு இயந்திரங்களை பெருக்க வேண்டுமெனவும் வ. உ. சி. கூறிய கருத்துகளை வரவேற்று 'உதய தாரகை' மேற்கண்ட ஆசிரியர் தலைப்பை வரைந்தது.''

ஆய்வாளர் சிவராம் 'உதயதாரகை'யில் 'சுதேசி இயக்கம்' தொடர்பாக சில மாதங்களில் ஏற்பட்ட கருத்து மாற்றத்தையும் குறிப்பிட்டு பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஆனால், ஒரு வருடம் கழிந்து சுதேசி இயக்கம் உக்கிரமான முறையில் ஒரு ஆயுதப் போரையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முன்னெடுக்க முயற்சிக்கிறது. அது சுதந்திரத்தை நாடுகிறது என்பதை உணர்ந்த நிலையில் ஏகாதிபத்திய சார்புக் கிறிஸ்தவப் பத்திரிகையான, 'உதயதாரகை' இந்தியச் சுதந்திரப் போரை எதிர்த்து ஓர் ஆசிரியர் தலையங்கத்தை 14.2.1907 இதழில் எழுதிற்று.''

இத்தகைய முயற்சிகளின் விளைவாக 'எஸ். எஸ். காலியோ', 'எஸ். எஸ். லாவோ' என்னும் பெயர்கள் கொண்ட இரு ஸ்டீமர்கள் வெவ்வேறு தேதிகளில் 1907 மே மாதத்தில் தூத்துக்குடிக்கு வந்தன.

வ. உ. சி.யின் வீரசபதம் நிறைவேறியது. எல்லாத் தேசியப் பத்திரிகைகளும் வ. உ. சி.யை மனப்பூர்வமாகப்

பாராட்டின. இவற்றுள் பாரதியாரின் பின்வரும் பாராட்டுரை பொருட் செறிவுடைய பெருஞ் சிறப்பிற் குரியது.

''வெகு காலமாய்ப் புத்திரப் பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால், எத்தனை அளவற்ற ஆனந்த மடைவாளோ அத்தனை ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரத தேவியும் இவ்விரண்டு கப்பல்களை யும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே. ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையும் அவருடனின்றுதவிய மற்ற நண்பர்களும் தாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டிற்குச் செய்ய வேண்டியக் கடமைகளைச் செய்து விட்டார்கள்.''

மேற்படி பாராட்டுரையைத் தொடர்ந்து கப்பலின் அமைப்புப் பற்றிய விவரமும் எழுதப் பெற்றுள்ளது. ''42 முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கும், 24 இரண் டாம் வகுப்புப் பிரயாணிகளுக்கும் போதுமான வசதி களிருந்தன. இது தவிர 4000 மூட்டை சரக்குகளு மேற்றலாமாம்.''

வ. உ. சி.க்கிருந்த தனிப் பெரும் செல்வாக்குக் காரணமாக தூத்துக்குடி—கொழும்புவிற்கு இடையே சுதேசிக் கப்பல் போக்குவரத்து வெற்றிகரமாக நடந்தது. 'பி. ஐ. எஸ். என்.' என்னும் பிரிட்டிஷ் கம்பெனி, கட்டணமே இல்லாமல் பிரயாணிகளை ஏற்றிக் கொள்ள முன்வந்தபோதும், பயனில்லாமல் போய்விட்டது. அதி காரவர்க்கத்தின் பக்க பலத்தைக் கொண்டு சூழ்ச்சிகள் பல செய்யத் தொடங்கியது, பிரிட்டிஷ் நிறுவனம். அவற் றையெல்லாம் பொதுக்கூட்டங்களில் வ. உ. சி. எடுத் துரைத்து மக்கள் சக்தியைத் திரட்டினார்.

வ. உ. சி.யிடம் பொங்கித் ததும்பிய தேசியவுணர்வு, துரதிர்ஷ்டவசமாக கப்பல் கம்பெனி பங்குதாரர்களிடம் ஒளிப்படவில்லை. அவர்கள் குறிக்கோள் எல்லாம் பணம் சம்பாதிப்பதே, தேசியம் அன்று, இதனால்,

அவர்கள் வ. உ. சி.யிடம், அரசியல் நெருக்கடிகள் காரணமாக கப்பல் வாணிபம் பாதிக்கப்பட அனுமதிக்கக் கூடாதென்றும், இதற்கு ஒருவழியாக வ. உ. சி., அரசிய லோடு கொண்டிருந்த தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்கள்.

துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகி, சம்பளம் பெறும் ஏஜண்டாக வ. உ. சி.யை பணியாற்று மாறும் கேட்டுக்கொண்டார்கள், பங்குதாரர்கள். அவர் களின் நிர்ப்பந்தத்திற்கு வ. உ. சி., கப்பல் கம்பெனியின் வளர்ச்சியைக் கருதி, விட்டுக் கொடுக்க வேண்டியதா யிற்று. ஆனாலும், சுதேசிக் கப்பலுக்கான எதிரானச் சூழ்ச்சிகள் தொடர்ந்தன. இந்தச் சூழலில் 'ஏஜெண்ட்' எனும் பொறுப்பையும் விட்டுவிட்டார் வ. உ. சி.

வ. உ. சி. முற்றிலுமாக விலகியதும், சுதேசி கப்பல் கம்பெனியின் நிலைமை மோசமடைந்தது. சில மாதங் களுக்குப் பிறகு நண்பர்கள் வற்புறுத்தலை ஏற்று, மீண் டும் 'ஏஜெண்டா'கப் பணியாற்ற ஒப்புக் கொண்டார், வ. உ. சி. பங்குதாரர்களும் தங்கள் நிபந்தனைகளை வற்புறுத்தவில்லை. வ. உ. சி., தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, தாம் விலகியிருந்தக் காலத்தில் பிரிட்டிஷ் கம்பெனியின் கப்பல்களில் சரக்குகளை ஏற்றிய பல வர்த்தகர்களை மறுபடியும் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆதரிக்குமாறு செய்தார்.

வ. உ. சி.யின் தற்காலிக விலகலைக் கண்டு, மகிழ்ச்சி யுற்ற, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி, மீண்டும் அவர் பொறுப்பேற்றதைப் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. தூத்துக்குடி கலெக்டர் விஞ்சுதுரை, உதவிக் கலெக்டர் ஆஷ் ஆகியோரின் உதவியைக் கொண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியைக் கைப்பற்றியது. எந்த பிரிட் டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராக சுதேசிக் கப்பல் கம்பெனி இயங்கியதோ, அதே கம்பெனி பிரிட்டிஷ் கம் பெனியிடம் தனது கப்பல்களில் ஒன்றை விற்கவேண்டிய

பரிதாப நிலை ஏற்பட்டது. இந்த நிலைமை வ. உ. சி.யின் சிறைவாழ்க்கையைத் தொடர்ந்த காலத்தில் ஏற்பட்டது.* அவர் மறைவிற்குப் பிறகு, தூத்துக்குடியில் இருந்து கொழும்பிற்கு சுதந்திர இந்திய அரசின் சார்பில் ஒரு கப்பல் விடப்பட்டது. இதற்கு "எஸ். எஸ். வி. ஓ. சிதம்பரம்" என்று பெயரிடப் பெற்று, அதை அன்றைய கவர்னர்-ஜெனரல் ராஜாஜி வெள்ளோட்டம் விடச் செய்ததும் நன்றி யறிதலுக்கான வரலாற்றுத் திருப்பங்களில் ஒன்றாகும். இந்தப் புதிய முயற்சியில் கப்பலோட்டிய தமிழரின் அரும் பெரும் தியாகமும், தேசபக்திக் கனலும் இணைந்தன.

---

* பிரிட்டிஷ் அரசியல் ஏகாதிபத்தியத்தின் துணைகொண்டு, பிரிட்டிஷ் வணிக முதலாளித்துவம், சுதேசி கப்பல் கம்பெனியை வீழ்த்தி விட்டதைக் குறித்து மகாகவி பாரதியார் உள்ளங்குமுறி அவருக்கேயுரிய சீற்றமுடன் கூறியதாவது :

> "சிதம்பரம், மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரி யிடமே அக்கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காள விரிகுடாக் கடலில் மிதக்கவிட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய் விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!" (வ. உ. சி. கண்ட பாரதி — பக். 57)

'கப்பலோட்டிய தமிழர்', சுதேசி கப்பல் கம்பெனியின் வீழ்ச்சிக்குப் பிறகு மிக்க வேதனையுற்றார். அந்த வேதனை பல ஆண்டுகளுக்குப் பிறகு 1919-இல் ஒரு வகையாக பின்வருமாறு அமைதி கண்டது.

"அந்தக் கப்பல் கம்பெனி முறிந்து போனாலும், அதனால் தேசத்துக்கு எவ்வித நஷ்டமுமில்லை. குறைந்த சார்ஜை வசூலித்ததினாலும் கம்பெனிக்கு 15 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆயினும், அந்தப் பணம் நம்முடைய தேசத்தை விட்டுப் போய்விடவில்லை. நாங்கள் குறைந்த சார்ஜுக்கு விடு வதை உத்தேசித்து வெள்ளைக்கார கம்பெனியார்களும் குறைந்த சார்ஜைவிட ஆரம்பித்ததில் அவர்களுக்கு 95 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்தப் பணமும் நமது தேசத்தில்தான் இருந்திருக்கிறது. ஆகவே, அந்தக் கம்பெனி முறிந்து போனாலும் அதனால் இந்தியாவுக்கு லாபமே தவிர நஷ்டமில்லை." (சுதேசமித்திரன், 23-4-1919-பக்.5) — மொழிபெயர்ப்பாசிரியர்

5

விடுதலைப் போராட்டக் களத்தில்

தூத்துக்குடிக்கு, திருமந்திர நகர் என்னும் பழைய பெயரும் உண்டு; புனித மந்திரச் சொற்களின் இன்னிசை சூழ்ந்த நகரம் போலும். பழங்காலப் பெயர்ப் பொருத்தம் எப்படி இருந்தபோதிலும், வ. உ. சி. காலத்தில் அவர் தூத்துக்குடியை புதிய திருமந்திரநகரமாக விளங்கச் செய்து விட்டார் என்று கூறுவது, மிகையாகாது. 'வந்தேமாதரம்' எனும் புதிய மந்திரச் சொல்லை, உயர்ந்தோர்—தாழ்ந்தோர், ஆண்—பெண் வேறுபாடின்றி தூத்துக்குடியிலும், அதனைச் சார்ந்தப் பகுதிகளிலும், எதிரொலிக்கச் செய்தார். தேசிய உணர்வை இந்தப் புதிய மந்திரச் சொல் மூலம் வளர்த்தெடுத்தார். 'வந்தேமாதரம் பிள்ளை' என்றும் புகழ் பூத்தார்.

தூத்துக்குடியை, புதிய பாரதப்போரின் குருக்ஷேத்திரமாகவும் உலகறியச் செய்தவர், வ. உ. சி. பண்டைய மகாபாரதப் போரின் குருக்ஷேத்திரத்தில், அதர்மத்தை வீழ்த்திட தருமயுத்தம் நிகழ்ந்தது போன்று, நவீனக் குருக்ஷேத்திரமான தூத்துக்குடியில் சுதந்திரப் போர் மூலம் தருமத்தை நிலைநாட்ட முயன்றார், வ. உ. சி. இதற்காக தமது போர்க்களத்தில் மும்முனைகளை வகுத்துக் கொண்டார், வ. உ. சி. சுதேசி நாவாய்ச் சங்கம், விபின் சந்திரபாலரின் விடுதலை நாள் விழா, தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆகியவை அந்த மும்முனைகள்.

1908, மார்ச் 12-ம் தேதியில் வெளிவந்த 'வந்தே மாதரம்' இதழில் அரவிந்தர், வ. உ. சி.யின் தூத்துக்குடிப்

போராட்டத்தை வியந்து பாராட்டி பின்வருமாறு வருணித்துள்ளார்.

''தூத்துக்குடிப் போராட்டத்தை நேரில் கண்டுகளிக்க மகாபாரத இதிகாசத்தின் தெய்வங்கள் தங்கள் வானுலகத் தேர்களில் வந்தனர்.''

இந்தப் போர்க் களத்தில் அவருடைய் மேடைப் பேச்சு, சக்திமிக்க படைக்கலனாய் ஆற்றல் பெற்றது. அவையோரை மெய்சிலிர்க்க வைத்தது; செய் அல்லது செத்துமடி எனத்தூண்டியது; அவரது நாவன்மை தவறா தது! அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இவருடன் இணைந்த, சுப்பிரமணிய சிவாவும் வீரமுரசாக ஒலித்த வர். இவர்கள் இருவரும் இரட்டைக் குழல் துப்பாக்கி போல் இயங்கினர்; கனல் கக்கும் சொற்கள் விசைமாரி யாகப் பொழிந்தன. அவர்களுடைய சொல்லாயுதம் கூர்மைமிக்கது; கிளர்ச்சியுறச் செய்வது; இந்தச் சொற் கலன்களே அவர்களைச் சிறையில் தள்ளப் போதுமான தாக அமைந்தது; நினைத்துப் பார்க்க முடியாத சொல்ல முடியாதத் துன்பங்களை விளைவித்தது, அவர்களது மேடைப் பேச்சாற்றல்.

இந்த நிலையில் காங்கிரஸ் இயக்கத்தின் வரலாற்றுச் சுவடுகளை கண்டறிய வேண்டியுள்ளது. இலட்சிய அடிப் படையில் மிதவாதிகள், தீவிரவாதிகள் எனும் இரு பிரிவுகளைக் கொண்ட காங்கிரஸ் இயக்கத்தில் மிதவாதி களின் செல்வாக்கு ஓங்கியிருக்கின்ற வரையில் பிரிட்டிஷ் அரசாங்கம் கவலைப்படவில்லை. ஆனால், தீவிரவாதி கள் காங்கிரஸ் இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வெற்றிகரமாக ம்ற்பட்டபொழுது, பிரிட்டிஷ் ஆட்சி அச்ச முற்றது. கடுமையான அடக்குமுறைகளை ஏவியது; தீவிர வாதிகள் வளர்ச்சியை, அவர்களுக்குக் கிடைத்த பொது மக்கள் ஆதரவை ஒடுக்கியது. மிதவாதிகள் தங்கள் முக விலாசங்களை வெளிப்படுத்தியதன் மூலம், தீவிரவாதி களை ஆட்சியாளர் அடையாளங் காண உதவினர். ஆட்சி யாளரின் இந்த அணுகுமுறை, அவர்கள் விருப்பத்திற்கு

மாறான விளைவை ஏற்படுத்தியது. தீவிரவாதிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு பெருமளவில் பெருகியது.

இருபிரிவுகள் பற்றி பாரதியார் கருத்து

''சென்னை மாநிலத்தில் அரசியல் பரிணாம வளர்ச்சி'' எனும் ஆங்கிலக் கட்டுரையில், மிதவாதி கள்—தீவிரவாதிகள் எனும் இரு பிரிவுகளைப் பற்றித் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். இந்தக் கட்டுரை கையெழுத்துப் பிரதியாக, முற்றுப் பெறாத நிலையில் பாரதியார் அமரராகி விட்டார். அவர் மறைவிற்குப் பிறகு அச்சேறியது. இதன் ஒரு பகுதியின் தமிழாக்கம் வருமாறு :

''இந்திய தேசியத்தின் முக்கிய வலிமைமிக்க மாநில மாக தற்காலத்தில் (190-21) சென்னை மாநிலம் விளங்குகின்றது. ஆனால் எப்பொழுதும் இவ்வாறில்லை. பத்தாண்டுகளுக்கு முன்பு சில சென்னை தேசியவாதி கள், 'இருளடைந்த' எனும் அடைமொழிக்கு அழுத்தம் தந்தனர். கிருஷ்ணஸ்வாமி ஐயர் மிதவாதத்தில் நம்பிக் கைக் கொண்டவர். அவர் சமரசப் பண்பில் நம்பிக்கைக் கொண்டு பிரிட்டிஷ் ஆதரவுடன் படிப்படியாக முன் னேற்றம் காண வேண்டும் என நேர்மையுடன் நம்பிய வர். இதற்கு மாற்றாக எந்த அரசியல் வழியும், ஆபத் தானது என்பது அவர் கருத்து. வங்காளம், மகாராஷ்டிர பிரதேசங்களில் ''தீவிரவாதிகள்'' என்றழைக்கப்படும் புதிய தேசியவாதிகள் இயக்கம் வெற்றிகரமாக முன் னேறிக் கொண்டிருந்தபொழுது, சென்னையிலும் மற்றும் மாகாணத்தின் முக்கிய நகரங்களிலும் தீவிரவாதிகள், மிதவாத சக்திகளால் தணிக்கை செய்யப்படுகின்றனர். தமிழறிந்த மத்தியதர வகுப்பினர், வணிகர்கள், நிலப் பிரபுக்கள், ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், சிறு வியாபாரிகள், வழக்கறிஞர்கள், குமாஸ்தாக்கள், தமிழ் படிக்கத் தெரிந்த பெண்களில் பெரும்பகுதியினர் ஆகி யோரிடையே புதிய அரசியல் இயக்கத்திற்கு பலத்த

ஆதரவிருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம், சுதேச மித்திரன், இந்தியா ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளின் உழைப்பாகும். முதலில் குறிப்பிடப்பட்ட பத்திரிகை (1920 வரையில், இப்பொழுது தடைபட்டுள்ளது). மாகாணத்தின் முதன்மையான தமிழ் நாளேடாகும். அப்பொழுது இதன் ஆசிரியர் பிரபல பத்திரிகையாள ரான ஜி. சுப்பிரமணிய ஐயர்.

''அது புதிய கட்சியின் கொள்கையைப் போதித்தது. அதனாலேயே அரசாங்கத்தாரால் குற்றம் சாட்டப்பட் டுள்ளது. ஆனால், அதே சமயத்தில் தன்னுடைய பழைய மிதவாதப் பிணைப்புகளில் இருந்து தன்னை விடுவித் துக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக இந்தியா வின் எதிர்பார்ப்புகளையும், அரசியல் மதி நுட்பங்களை யும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இளைய தலைமுறை யினரால் கருதப்படுவதில்லை. இதற்கான பொறுப்பை வார இதழான 'இந்தியா' எடுத்துக்கொண்டது. 'இந்தியா' பகிரங்கமாக பூரண விடுதலையை எடுத் துரைக்கின்றது ... அரசியல் சாசன வழிமுறையில் என்றா லும், காங்கிரஸ் போன்று! கையேந்தும் வழிமுறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது.''

1906-இல் கல்கத்தா காங்கிரசில் பிரதிநிதியாக பாரதியார், தம்முடன் ஒத்தக் கருத்துடையவர்களுடன், கலந்துக் கொள்ள வேண்டும் என திலகரின் வலக்கரமான கணேஷ் கிருஷ்ண கார்படேவினால் கேட்டுக் கொள்ளப் பட்டார். சென்னை 'பால இந்தியா சபை'யின் சார்பில் கல்கத்தா காங்கிரசிற்கும் பிரதிநிதியாக பாரதியார் தேர்ந் தெடுக்கப்பட்டார். இவருடன் எம். நரசிம்மம், வி. நரசிம்மம், ஆர். சபாபதி ஆகியோரும் பிரதிநிதிகளாகச் சென்றனர். பாரதியாரைத் தொடர்ந்து வ. உ. சி. யும், சுப்பிரமணிய சிவாவும் 'நேஷனலிஸ்ட் பார்ட்டி' எனப்படும் தேசிய வாதிகள் கட்சிக்காகப் பாடுபட்டனர்.

சூரத் காங்கிரசில் வ. உ. சி.

1907-இல் அகில இந்தியக் காங்கிரசின் இருபத்து மூன்றாவது மகாசபை சூரத்தில் கூடியது. சூரத்தில் தபதி

நதிக் கரையில் மிகவும் மனோரம்யமான இடத்தில், அழகிய கூடாரங்களும், மத்தியில் பெரிய அளவில் பந்தலும் அமைக்கப்பட்டன. 1400 பிரதிநிதிகள் கூடினர். மிதவாதிகள் — தீவிரவாதிகளிடையே கடுமையான மோதல் நிகழ்ந்தது. காங்கிரஸ் கூடுவதற்கு முன்பாக இருவேறு அணியினரும் தனித்தனியாகக் கூடிப் பேசி பலப்பரீட்சைக்குத் திட்டமிட்டனர்.

சென்னையில் இருந்தும் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் சென்றனர். சென்னை திருவல்லிக்கேணி, கடற்கரையில் 6-12-1907-இல் வ. உ. சி. தலைமையில் சூரத் காங்கிரசில் கலந்து கொள்ளப் போகும் சென்னைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு கூட்டம் நடைபெற்றது. ஜி. சுப்பிரமணிய ஐயர், கே. வெங்கடரமண ராவ், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சி. சுப்பிரமணிய பாரதி, எஸ். டி. திருமலாச்சாரியார், பி. எஸ். ராமமூர்த்தி, யதிராஜ சுரேந்திரநாத் ஆர்யா, சி. செல்வராஜ முதலியார், எஸ். திருமலாச்சாரி, டி. ஜி. சங்கரநாரர்யணய்யா, டி. வி. ஹனுமந்தராவ், சி. கே. வியாசராவ், வி. சக்கரை செட்டியார், ஜி. அண்ணாஜி ராவ், டி. நாராயண மூர்த்தி, எஸ். ராமாராவ் மற்றும் முப்பது பேர்கள் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

சூரத் காங்கிரசில் திருவல்லிக்கேணி கடற்கரை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வலியுறுத்திப் பேச ஒரு குழு அமைக்கப்பட்டது. கே. வெங்கடரமண ராவ், சி. சுப்பிரமணிய பாரதி, வ. உ. சிதம்பரம் பிள்ளை, சி. செல்வராஜ முதலியார், வி. சக்கரை செட்டியார் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

சென்னையில் இருந்து சூரத் காங்கிரசுக்கு பிரதிநிதிகள் சென்றதைப் பற்றி வ. உ. சி. அவர்களின் ''வி. ஓ. சி. கண்ட பாரதி'' எனும் நூலில் பின்வருமாறு அறிகின்றோம்.

''அப்போது நடைமுறையில் இருந்த காங்கிரஸ் மகாசபையின் விதிப்படி காங்கிரஸ் மூலமாகத்தான்

காங்கிரசுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறே பல சங்கங்கள் மூலமாகவும் பல பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறே பல சங்கங்களின் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சென்னைக்கு அனுப்பும்படியாகத் தமிழ்நாட்டிலுள்ள பல நண்பர்களுக்குத் தகவல் கொடுத்தோம். அவர்களும் அவ்வாறே பல ஊர்களிலிருந்து பல சங்கங்களின் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பினர். அவர்களில் அநேகர் சாதாரண ரயில் வழியாக சூரத் சென்றனர். எங்கள் சென்னைத் தலைவர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னையில் இருந்து சூரத்துக்கு சென்றார்கள். சென்னை ஜன சங்கத்தின் அங்கத்தினர்களாகிய இந்த தேசாபிமானிகள், எல்லோரும் ஒரு பெரிய ரயில் வண்டியை பிரத்தியேகமாகப் பதிவு செய்து (Special Reserve) சென்னையில் இருந்து சூரத் சென்றோம்.''

சூரத் காங்கிரஸ் (1907) நடவடிக்கைகள் தம்முள் கொண்ட முரண்பாடுகளால் நகைச்சுவையுணர்வும், நாடகப் பாங்கும் கொண்ட ஒரு நாடகமாகவும் அரவிந்த கோஷ் அவர்களால் சித்தரிக்கப்பட்டுள்ளது. 'வந்தே மாதரம்' இதழில், 1908 ஜனவரியில், நையாண்டி நாடகப் பாணியில், "The slaying of congress — A Tragedy in three acts" எனும் தலைப்பில் — காங்கிரசை கொலை செய்தல் — இந்தக் காட்சிகளின் ஓர் அவல நிகழ்ச்சி எனும் தலைப்பில் — எழுதினார். இதில் சில காங்கிரஸ் தலைவர்களை நாடக மாந்தர்களாகப் படைத்துள்ளார், அரவிந்த கோஷ். பின்வருவது திலகர் கூற்றாக அமைக்கப்பட்டுள்ளது.

''நமக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை பலம் இருக்கின்றதா என்பதைப் பார்ப்போம். நாக்பூர், அம்ரோதி, தக்கணம் யாவும் என் பக்கத்தில் ஆதரவாக நிற்கின்றன. சென்னை, வல்லமை மிக்க குழுவை அனுப்பியுள்ளது. வங்காளம், அதன் நான்கு தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளையும், மற்றும் வடபுலத்தில் இருந்தும் பிரதிநிதிகள்

வந்துள்ளனர். கட்டுறுதி வாய்ந்த 600 பிரதிநிதிகள் என்னை ஆதரிக்கின்றனர்.''

சென்னைப் பிரதிநிதிகள் குழு, ''வல்லமை மிக்க குழு'' என்று பாராட்டப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

மகாகவி சுப்பிரமண்ய பாரதியார், சூரத் காங்கிரஸ் பற்றி எழுதிய, ''எங்கள் காங்கிரஸ் யாத்திரை'' 1908-இல் வெளிவந்தது. காங்கிரசில் ஏற்பட்ட பிளவை, தீவிரவாதிகள் கண்ணோட்டத்தில் விமர்சனம் செய்துள் ளார், பாரதியார். இத்துடன் இவர், அரவிந்தரைப் போல, 'காங்கிரஸ் கீதை' எனும் தலைப்பில் ஒரு நையாண்டி நாடகத்தை எழுதியுள்ளதாகவும் கூறப்படு கின்றது. தமிழ், ஆங்கிலம், சம்சுகிருதம் கலந்த மொழி நடையில் 'காங்கிரஸ் கீதை' எழுதப்பட்டதாம். 'புதுவை யில் பாரதியார்' எனும் நூலின் ஆசிரியர் வி. எஸ். குஞ்சி பாதம் எழுதியுள்ளவாறு, 'காங்கிரஸ் கீதை'யின் தொடக்க வரிகள், பின்வருமாறு:

''தர்ம க்ஷேத்ரே சூரத்க்ஷேத்ரே ஸமவேதா யுயுத் ஸ்வஹ
மாம காஹ எக்ஸ்ட்ரிமிஸ்ட் மாடரேஸ்ச்சைவ கிம குர்வத ஸஞ்சயா''

சென்னையில் திலகர் கட்சிக்கு பேருதவி புரிந்து வந்த மண்டயம் குடும்பத்தைச் சார்ந்த எஸ். சீனுவாச சாரியாரும், வ. உ. சி.யும் சூரத் காங்கிரசின் சென்னைப் பிரதிநிதிகள் நாற்பது பேருக்கு பண உதவியளித்தனர்.

சூரத் காங்கிரஸில் திலகருக்கு பேராதரவைத் திரட்டித் தருவதில் வ. உ. சி. முன் நின்றார். லாலா லஜ்பத்ராய் அவர்களை சூரத் காங்கிரஸ் தலைவராகக் கொண்டுவர பாரதியார் மற்றும் பலருடன் வ. உ. சி. ஆலோசனைக் கலந்தார். இதன் தொடர்பாக அரவிந்தகோஷ், திலக ருடன் தந்திகள், கடிதங்கள் மூலமாகத் தொடர்பு கொண்டிருந்தார். வ. உ. சி. போதுமான அளவு பிரதி நிதிகளுடன் காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு சில

நாள்களுக்கு முன்பாகவே சூரத் நகரம் வந்து சேருமாறு வ. உ. சி.க்கு திலகரிடமிருந்து தந்தி வந்தது.

திலகர் மட்டுமன்று, அரவிந்த கோஷும் வ. உ. சி. யிடம் கொண்டிருந்த பெருமதிப்பிற்குரிய ஒரு சான்று சூரத் காங்கிரசிலும் வெளிப்பட்டது.

அரவிந்த கோஷ் சூரத்திற்கு வந்தபொழுது, புதிய கட்சியின் — 'நேஷனலிஸ்ட் பார்ட்டி'யின் — பிரதிநிதிகள் தங்கியிருந்த இடத்தில் சென்று, ''என்னுடைய பிள்ளை, எங்கே'' என்று கேட்டார். சற்று புரியாமல் திகைத்து நின்றவர்களிடம் அரவிந்தகோஷ் விளக்கமாக, ''அவர் தாம் புகழ்பெற்ற தேசபக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை'' என்று குறிப்பிட்டார். ''என்னுடைய பிள்ளை'' என்றும் ''புகழ்பெற்ற தேசபக்தர்'' என்றும் அரவிந்தர் நட்புறவுடன் பெருமை கொண்டு பாராட்டியதைக் கேட்டு அங்கிருந்தோர் வியப்புற்றார்கள். அந்தச் சமயத்தில் அங்கு வ. உ. சி. வந்ததும், அரவிந்தர் விரைந்து சென்று அவரை அன்புடன் தழுவிக் கொண்டார்.

1907 டிசம்பர் 24, 25 தேதிகளில் இரண்டு நாட்களுக்கு புதிய கட்சியின் கூட்டம் நடந்தது. அரவிந்தர் தலைமை வகித்தார்; திலகர் பேசினார்.

காங்கிரஸ் மகாசபையின் கூட்டத்தில் திலகரை இழித்தும், பழித்தும் ஒரு சிறு துண்டுப் பிரசுரம் குஜராத்தி மொழியில் அச்சிடப் பெற்று வழங்கப்பட்டது. இந்தப் பிரசுரத்தின் கடுமையான சில வரிகள், பின்வருவன.

''சிவாஜி சூரத்தின் மேல் இருமுறை படையெடுத்து வந்து கொள்ளையடித்துவிட்டும் போனான். போகும் போது இன்னுமொரு முறை கொள்ளையடிக்கத் திரும்புவேன் என்று சொல்லிப் போனதை யறிவீர்களா? ஆனால், அப்படி அவன் வரவில்லை. அதற்குப் பதிலாக திலகன் வந்திருக்கிறான். உங்களுடைய மூக்கையும், காதையும் வீசியெறிய வந்துள்ளான். இனிமேலாவது கிளம்புங்கள்.'' இவ்வாறு வெளிவந்தத் துண்டுப்

பிரசுரத்தை தமிழில் விளக்கியெழுதியவர் மதுரைத் தமிழ் அறிஞர் எம். கோபால கிருஷ்ணய்யர். மதுரையில் இருந்து வெளிவந்த 'விவேகபாநு' இதழில் எழுதியுள் ளார். இவர் சூரத் காங்கிரசில் தீவிரவாத தேசிய அணியின் சார்பில் சென்றவர்.

சூரத் காங்கிரசில் திலகர் அணியைத் தாக்கி வெளி வந்த முற்கூறப்பெற்ற வெளியீட்டில் மட்டுமன்று, தலைமை வகித்த ராஷ்பிகாரி கோஷின் தலைமையுரையி லும் சில கண்டன வாக்கியங்கள் காணப்பட்டதாக வ. உ. சி.யின் 'வி. ஓ. சி. கண்ட பாரதி' என்னும் நூலின் வழியேயும் பின்வருமாறு அறிகின்றோம்.

''தேசிய கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ராஷ்பி காரி இழிவான வாக்கியங்களை நீக்காவிட்டால், எதிர்க்கப் போவதாக அரவிந்தர், பாரதியார் முதலி யோர் கர்ஜித்தனர். சூரத் காங்கிரசிற்கு சென்று வந்த பாரதியாரும் தமது ''எங்கள் காங்கிரஸ் யாத்திரை'' எனும் சிறுவெளியீட்டில் தலைமையுரையில் மீதான பின்வரும் விமர்சனம் கூறப்பட்டுள்ளது.

''இவருடைய பிரசங்கம் காங்கிரஸ் சபையில் வாசிக்கப்படு முன்னதாகவே கல்கத்தா பத்திரிகைகளில் பிரசுரமாகி அதன் சாராம்சங்கள் தந்தி மூலமாக ஸூரத்துக்கு வந்து விட்டன. இரு கட்சியாருக்கும் பொது வாயிருந்து நியாய அநியாயங்களைத் தீர விசாரித்தறிந்து பக்ஷபாதமில்லாமல் நடத்துபவரே காங்கிரஸ் போன்ற மஹா சபைக்குத் தலைவராயிருக்கத் தகுதியுடையவ ராவர். அவ்வாறில்லாது, ஒரு கட்சி மனிதனாக இருந்துக் கொண்டு தமது தலைமையுபந்நியாஸத்திலே ஓர் முக்கிய மான கட்சியாரைப் பற்றி அவதூறுகள் எழுதி வந் திருக்கும் அவசர குணமுடையவரும், பொறுமையற்றவரு மாகிய ஒருவர் அந்த ஸ்தானத்திற்கு தகுதியுடையவராக மாட்டார்.''

இந்தச் சூழலில் காங்கிரஸ் மகாசபை 27-ந் தேதி கூடியபொழுது, தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாக

திலகர் ஒரு திருத்தம் பிரேரணை கொண்டுவர விரும்பு வதாக ஒரு சிறுகுறிப்பை பேரவைத் தலைவரிடம் அனுப்பி னார். ஆனால், திலகர் பேசுவதற்கு அனுமதி மறுக்கப் பட்டது. திலகர், திடீரென்று மேடையேறி பேசத் தொடங்கினார். குழப்பம் ஏற்பட்டது. மிதவாதிகளால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவாறு தாக்குதல் தொடங் கியது. திலகர் மீது குறிவைத்து நாற்காலிகள் வீசப் பட்டன. திலகரை சென்னைப் பிரதிநிதிகள் வியூகம் அமைத்துப் பாதுகாத்தனர். இவர்களுள் எம். பி. டி. ஆசார்யா, எதிர்த் தாக்குதலை நிகழ்த்தினார். மண் டயம் பிரதிவாதி பயங்கரம் திருமலாச்சாரியார் எனும் எம்.பி.டி.ஆசார்யா மண்டயம் குடும்பத்தைச் சார்ந்தவர். இந்தக் குடும்பத்தினர், சென்னையில் இராமகிருஷ்ணர் இயக்கம், தீவிரவாத தேசிய இயக்கம், வ.உ.சி. யின் கப்பல் கம்பெனி முன்னேற்றம் முதலான வற்றில் பெரும் பங்காற்றியவர்கள். வெளிநாடுகளில் இயங்கிய இந்திய தேசியப் புரட்சி வீரர்கள் குழுவில் எம். பி. டி. ஆசார்யா இங்கிலாந்து, ஐரோப்பா, அமெ ரிக்கா, ஆப்கானிஸ்தான், ரஷ்யா முதலான பிரதேசங் களில் இந்திய தேசியப் புரட்சிவாதியாகப் பணியாற்றிய தியாகி யாவார். இவரைப் பாராட்டி 'இந்தியா' இதழில் (25-9-1906-ல்) வ.வே.சு. ஐயர் எழுதியுள் ளார். 'இந்தியா' இதழின் உரிமையாளராகவும் எம். பி. டி. ஆசார்யா ஒரு சமயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்தக் குழப்பத்தில், சென்னைப் பிரதிநிதியான ஒரு மிதவாதி, சிதம்பரம் பிள்ளையையும், பாரதியாரை யும் போலீசாரிடம் அடையாளம் காட்டி, அவர்களை கைது செய்யுமாறு தூண்டினார். ஆனால், காவல் துறை யினரோ, மேடைமீது நிகழ்ந்துக் கொண்டிருந்தக் குழப் பத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர விரைந்ததால், சிதம்பரம் பிள்ளை, பாரதியார் கைது சம்பந்தமாக செவி சாய்க்கவில்லை.

இவ்வகையான குழப்பங்களால், சூரத் காங்கிரஸ் திடீரென்று காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. ''காங்கிரஸ் வீரமற்று அழிந்தது; வேறொன்றாகப் பிளவு பட்டது'' என சுய சரிதையில் வ. உ. சி. குறிப்பிட்டுள் ளார். பாரதியார் ஆசிரியராகவிருந்த 'பாலபாரதா' (பிப்ரவரி, 1908) எனும் ஆங்கில மாத இதழில், "Congress Split and After" தலைப்பில் வெளிவந்து ஒரு கட்டுரையில் வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டிய கருத்து பின்வருமாறு கூறப்பட்டது.

''தேசியம் எனும் இளைய, மெல்லிய முளை, மிக வுயர்ந்த விண்ணை நோக்கி, முழு அமைதியுடன் மூச்சு விடும் ஆர்வத்துடன் மேலே தற்பொழுது தோன்றி விட்டது. முதல் இரு இலைகள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாய் பார்ப்பதற்குத் தோன்றினாலும், ஒரே விதை யில் இணைந்தவை என்பது நினைவிற்குரியது. இதனால் விலைமதிப்பற்ற அந்தச் செடியின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களின் இதயங்கள் மகிழ்ச்சியுறுகின்றன.''

சூரத் காங்கிரசைத் தொடர்ந்து வ. உ. சி.யின் கௌரவம் ஏற்றம் கொண்டது. அனைத்திந்திய அளவில் அவ ருடைய புகழ் பாலகங்காதர திலகர், அரவிந்த கோஷ் போன்று மேன்மையுற ஓங்கியது. இதற்கு முன் இத்தகைய புகழைப் பெற்ற தென்னிந்திய தலைவர் ஜி. சுப்பிரமணிய ஐயர் என்பதும் இங்கு நினைவு கூர் தற்குரியது. வ. உ. சி. பெற்றப் புதிய தலைமைத் தகுதியை 'நேஷனலிஸ்ட் பார்ட்டி'யின் செயலாளர்கள் பற்றிய அறிவிப்பில் இருந்து புரிந்துக் கொள்ள முடிகிறது. பம்பாய் மாநிலத்திற்கு திலகர், வங்காள மாநிலத்திற்கு அரவிந்த கோஷ், சென்னை மாநிலத்திற்கு சிதம்பரம் பிள்ளை ஆகியோர் 'தேசியவாதிகளின் கட்சி'யின் செய லாளர்கள் எனும் அறிவிப்பு வ. உ. சி.யின் புதியத் தலை மைத் தகுதியின் ஏற்றத்தை எடுத்துக்காட்டியது.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் பிரதேசங் களும் அடங்கிய சென்னை மாநிலம் முழுவதற்கும்

செயலாளராக சிதம்பரம் பிள்ளை நியமிக்கப் பெற்றார் என்பதில் அவருடைய அரசியல் முக்கியத்துவம் புலனாகின்றது. ஆனால் காங்கிரஸ் வரலாற்றில் இந்த அரசியல் முக்கியத்துவம் குறிப்பிடப்படாமற் போனது வருந்தத்தக்கது.

வ. உ. சி. பற்றிய அரசு ஆணை எண். 1542, 3-10-1911-இல், காங்கிரஸ் மகாசபையின் அறிக்கைகளில் அவர் பெயர் கூறப்படவில்லை என்பதோடு அவர் சென்னை திரும்பியதும் கவனிக்கப்படாமல் போனது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சூரத் காங்கிரசில் கலந்துக்கொண்டு சென்னை திரும்பியதும், திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில், ஜனவரி 11, 1908-இல், வ. உ. சி., உரையாற்றிய பொழுது, 'சூரத் காங்கிரஸ் குழப்ப'த்திற்குப் பிறகு பிரிட்டிஷ் நிருவாகம், மிதவாதிகளை, தீவிரவாதிகளிடமிருந்து முற்றிலுமாக ஒதுங்கிக் கொள்ள ஊக்கமளித்துத் தூண்டியது. அரசாங்க சட்டமன்றங்களில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்றும் உறுதிமொழி அளிக்கப்படும் என்றும் சூழ்ச்சி வலையை மிதவாதிகள் மீது வீசியது, பிரிட்டிஷ் நிருவாகம். இதே சமயத்தில் "தீவிரவாதிகள்" மீது புதிய அடக்குமுறைச் சட்டங்களை ஏவியது, பிரிட்டிஷ் நிருவாகம். "The prevention of seditious meetings Act", "News papers (incitement to offenses) Act" எனும் இரு அடக்கு முறைச் சட்டங்களைக் கொண்டு வ. உ. சி., சுப்பிரமணிய சிவா, பாரதியார், ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலானத் தமிழர்த் தலைவர்களின் பேச்சுரிமை, எழுத்துரிமைகளை ஒடுக்கத் திட்டமிட்டது, பிரிட்டிஷ் நிருவாகம்.

சூரத் காங்கிரசிற்குப் பிறகு

அடக்கு முறைக்கு அஞ்சா நெஞ்சினர், வ. உ. சி. 1908-இல் திருநெல்வேலியில் அரசியல் பிரசாரத்திற்காக, 'தேசாபிமான சங்கம்' எனும் புதியதொரு அரசியல்

அமைப்பைத் தொடங்கினார், வ. உ. சி. திருநெல்வேலி தூத்துக்குடிச் சுற்றுப்புறங்களில் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதில் தீவிரம் காட்டினார். சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து அரசியல் சொற் பொழிவுகளை நிகழ்த்தினார் வ. உ. சி. 'வீர இரட்டையர்கள்' எனப் புகழ் பெற்றனர், இருவரும்.

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில், தொழிலாளர் கள், விவசாயிகள் முதலானவர்கள் தீவிரமாகப் பங்கேற் காத காலகட்டத்தில், சூரத்தில் தோன்றிய புதிய 'தேசிய வாதிகளின் கட்சி'யைச் சார்ந்த சிலர் தொழலாளர்— விவசாயிகள் இயக்கத்தில் முதன்முறையாகக் கவனம் செலுத்தினர். அந்தக் கட்சியின் சென்னை மாநிலச் செயலாளரான வ. உ. சி., தொழிலாளர் இயக்கத்திற் கான முயற்சிகளில் ஈடுபட்டார். முறையான தொழிற் சங்கங்களை அமைத்துக்கொள்ள முடியாதச் சூழலில், தன்னிச்சையாகத் தொழிலாளர்கள் த்ங்கள் எதிர்ப்பு களை, வேலைநிறுத்தங்கள் வாயிலாக வெளிப்படுத்தி யுள்ளனர். இந்த வேலை நிறுத்தங்கள், பொருளாதார உள்ளடக்கத்தை மட்டுமே பெற்றிருந்தது. அரசியல் உள்ளடக்கம் இந்தியத் தொழிலாளர்களின் தொடக்கக் கால வேலைநிறுத்தங்களில் அமையவில்லை. ஆனால் இந்த நிலைமை மாற்றம் கண்டது. திலகர், லாலா லஜ்பத் ராய், அஜீத்சிங், விபின் சந்திரபால், ஏ. ஸி. பானர்ஜி, வ. உ. சி., சுப்பிரமணிய சிவா முதலான தேசியவாதி களின் கட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலின் காரண மாக தொழிலாளர் வேலைநிறுத்தங்கள், ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'', ''காலனியாதிக்க எதிர்ப்பு'' எனும் முற் போக்கு அரசியல் உள்ளடக்கங்களைப் பெற்றன.

தமிழகத்தில் வ. உ. சி., சுப்பிரமணிய சிவாவின் சொற்பொழிவுகள் தொழிலாளர் இயக்க வளர்ச்சிக்கு வித்திட்டன.

தொழிலாளர் எழுச்சியும், சுதேசியமும்

'தூத்துக்குடி கோரல் காட்டன் மில்ஸ்' என்னும் நிறுவனம் ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்தது.

இதன் முதலாளிகள், தொழிலாளர்களைச் சுரண்டி கொள்ளை லாபம் பெற்று வந்தனர். அக்காலத்தில் தொழிலாளர் நாள் முழுவதும் வேலை செய்ய வேண்டி யிருந்தது. 1911-ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் கூட பஞ்சாலைத் தொழிலாளர்கள் நாள்தோறும் பன்னி ரண்டு மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என விதித்தது. பஞ்சாலைத் தொழிலாளர்களை, நிருவாகம் கூலிகள் என்றே பெயரிட்டது. நாள் முழுவதும் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். வார விடுமுறை கிடையாது; சிறு தவறுகளுக்குக் கூட பிரம்படித் தண்டனை வழங்கப்பட்டது. நிறத்திமிருடன், தொழிலாளர்களை அவமானப் படுத்தினார், ஆங்கிலேயர்கள்.

இவற்றையெல்லாம் அறிந்த வ. உ. சி., சுப்பிரமணிய சிவா, தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வும், எழுச்சியும் .தோன்றிட அவர்களை ஒன்றுதிரட்டி சொற்பொழிவுகளாற்றினர். இந்த முயற்சி யில் தேசபக்தரும், வ. உ. சி.யின் நண்பருமான பத்மநாப ஐயங்காரும் பங்கேற்றார்.

1908 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தூத்துக்குடியில் நடைபெற்றப் பொதுக்கூட்டங்களில் வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கர்ர் ஆகியோர் நாள்தோறும் பேசி வந்தனர்.

1905-1907-களில் ரஷ்யாவில் ஜார் சக்கரவர்த்தியை எதிர்த்து நிகழ்ந்த ரஷ்யத் தொழிலாளர்களின் புரட்சி, இந்தியத் தேசியத் தலைவர்களின் சிந்தனை வளர்ச்சிக் குத் தூண்டுதல் அளித்தது.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் ஆட்சியில் இந்தியர்களுக்கு எதிரான இன ஒதுக்கலை எதிர்த்து அறப்போர் நடத்தி வந்த காலத்தில் முதல் ரஷ்ய புரட்சியின் வழிமுறைகளை வரவேற்று தமது 'இந்தியன் ஒபினியன்' எனும் இதழில் எழுதினார். ''ரஷ்ய வழிமுறைகள்'' (Russian Methods) என்பது

அரசியல் களத்தில் விவாதிக்கப்பட்டன. திலகர், விபின் சந்திரபால் ஆகியோரும் இந்த வழிமுறைகளைப் பற்றி விளக்கமளித்தனர். பொதுமக்களை ஓர் இயக்கமாகத் திரட்டுதல், பொதுவேலை நிறுத்தங்கள் என்பன 'ரஷ்ய வழிமுறை'களாக விளக்கமளிக்கப்பட்டன. பாரதியாரும் 'இந்தியா'வில் முதல் ரஷ்யப் புரட்சியை வரவேற்று எழுதியது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களிடையே, வ.உ.சி. தலைமையில் 23-2-1908-இல் நடைபெற்றக் கூட்டத்தில் சுப்பிரமணிய சிவா முதல் ரஷ்யப்புரட்சியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

''ரஷ்யப் புரட்சி, மக்களுக்கு நன்மையை விளைவித்தது; புரட்சிகள் எப்பொழுதும் உலகிற்கு நல்லதையே கொண்டு வரும். இந்தியக் கூலிகள் பதினைந்து நாட்களுக்கு வேலைநிறுத்தம் செய்தால் இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் மில் மூடப்படும்... நமது கூலிகள் கடும் உழைப்பால் மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு ரூபாய் பெறுகின்றார்கள். ஆனால் ஐரோப்பியர்கள் வெறும் கையெழுத்திட்டு மாதம் தோறும் நானூறு அல்லது ஐநூறு ரூபாய் பெறுகின்றார்கள். வங்காளத்தில் சணல் ஆலைக் கூலிகள் வேலைநிறுத்தம் செய்ததால் அங்கு அவர்கள் சம்பளம் உயர்த்தப்பட்டது. இதே மாதிரியாக வடமேற்கு வங்காள ரயில் தொழிலாளர்களும் ஊதிய உயர்வு பெற்றனர்... நமது பஞ்சாலைத் தொழிலாளர்கள் நான் சொல்வதைப் புரிந்துக் கொண்டு மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் செய்தால் ஐரோப்பிய முதலாளிகள் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள்.''

மீண்டும் பிப்ரவரி 26, 1908-இல் நடைபெற்ற தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் வ. உ. சி. யும், சுப்பிரமணிய சிவாவும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட ஊக்கமளித்து பேசினர். ஆலை முதலாளிகளை முடக்குவதற்கு இருவழிகள் உள்ளனவென்றும், அவற்றில் ஒன்று, இயந்திரங்களைச் சேதப்படுத்துவது;

மற்றொன்று வேலைநிறுத்தம் என்றும் சுப்பிரமணிய சிவா குறிப்பிட்டு இரண்டாவது வழிமுறையைப் பின் பற்றுமாறு கூறினார். ஆனால் வ. உ. சி. தமது ஆவேசப் பேச்சில் இரண்டு வழிமுறைகளையும் பின்பற்றுமாறுத் தூண்டியதாக அக்கால காவல் துறையின் ரகசிய அறிக்கை கூறியுள்ளது.

27-2-1908-இல் வ. உ. சி., சிவா தலைமையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினார்கள். காவல் துறையின் புலனாய்வு அறிக்கையில் இந்த வேலை நிறுத்தம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''27-ந் தேதி வ.உ. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் தூண்டியதின் விளைவாக சுமார் இருநூறு கூலிகள் அன்று காலையில் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினார்கள். இதனால், ஆலைகள் மூடப்பட்டன.''

இந்தத் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆதரித்து ''சுதேசமித்திரன்'' எழுதியது. ''தூத்துக்குடி பவளத் தொழிற்சாலை வேலைநிறுத்தம்'', ''தூத்துக்குடியும் சுதேசியமும்'', ''தூத்துக்குடி வேலைநிறுத்தம்'', ''நம் தொழிலாளர்கள்'', ''தூத்துக்குடி சமரசம்'' எனப் பல்வேறு தலைப்புகளில் தொழிலாளர் போராட்டச் செய்திகள் சுதேசமித்திரனில் வெளிவந்தன.

வேலை நிறுத்தம் தொடங்கப் பெற்ற மறுநாளிலேயே 28-2-1908-இல், சுதேசமித்திரனில், ''தூத்துக்குடி பவளத் தொழிற்சாலை வேலைநிறுத்தம்'' எனும் தலைப்பில் பின்வருமாறு செய்தி வெளிவந்தது.

''தூத்துக்குடியிலிருந்து இன்றும் ஒரு தந்தி கிடைத்திருக்கிறது. புதுக் கக்ஷி தூத்துக்குடியில் பலமாய் வேரூன்றி விட்டதெனவே தோன்றுகிறது. இன்று தினம் காலையில் 500 பேர் வேலையை நிறுத்திவிட்டார்கள். இன்னும் அநேகர் நிறுத்துவார்கள் போலத் தோன்றுகிறது. இந்த பவளத் தொழிற்சாலையில் கம்பெனியார்

இந்தியக் கூலியாட்களை மிகவும் கொடுமையாய் நடத்தியதுமன்றி கஷ்டப்படுத்தி வேலைவாங்குவதற்குப் போதிய சம்பளம் தராமையே இந்த வேலைநிறுத்தத்திற்குக் காரணமாகும். இனியாவது கம்பெனியார் கண்ணைத் திறப்பார்களா?''

28-2-1908-இல் தூத்துக்குடி கடற்கரையில் பத்மநாப ஐயங்கார் பி.ஏ. பேசப் போவதாகவும், தர்மசங்கம் என்னும் கட்டிடத்திற்குள் வ. உ. சி.யும், சுப்பிரமணிய சிவாவும் பேசப்போவதாகவும் துண்டு நோட்டீசுகள் வழங்கப்பெற்றன. கூட்டம், தனியார் கட்டிடத்திற்குள் நடைபெறப் போவதால், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கூட்டத்திற்கு வரக்கூடாது எனும் குறிப்பும் துண்டு நோட்டீசுகளில் இடம் பெற்றிருந்தது. இந்தக் குறிப்பின் மீதான விளக்கத்தைக் கேட்க அரசு அதிகாரிகள் வ. உ. சி.யை அழைத்தனர். 'தர்ம சங்கம்' எனும் சுதேசிய அமைப்பு வ. உ. சி.யால் முன்னமேயே நிறுவப் பட்டதாகும். அரசாங்கத் தொல்லைகளைத் தவிர்ப்பதற் காக வ. உ. சி. தர்மசங்கத்தில் தொழிலாளர்கள் கூட் டத்தை நடத்தினார்.

இந்தக் கூட்டத்திற்கு சுப்பிரமணிய சிவா தலைமை வகித்தார். வ. உ. சி. உரையாற்றினார். கூட்டத்தைப் பற்றிய புலனாய்வுத் துறையின் அறிக்கை, பின்வருவது.

''தர்மசங்கத்தில் நானூறு பேர்களே கூட முடியும் என மிஸ்டர் பிள்ளை சொல்லியிருந்தாலும், ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடினார்கள். அரசாங்க உத்தியோ கஸ்தர்கள் உள்ளே வருவதைத் தடுக்க வாயிலில் கண் காணிப்பாளர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். காவல் துறையினர் கட்டிடத்திற்கு வெளியே இருந்து நடவடிக்கைகளைக் கவனித்து, அமைதி காத்தனர்... ஐரோப்பியர்கள் தூண்டுதலினால் வி. ஓ. சி. பிள்ளை யையும், என்னையும் பேசவிடாமல் தடையுத்திரவு பிறப் பிக்கும் அளவிற்கு நியாயம் கற்பிக்க சுதேசி கட்சி எதை யும் செய்யவில்லை என சிவா எழுந்து நின்று பேசினார்.

ஐரோப்பியர்கள் பொறுமையற்றும் சுயநலம் கொண்டும் இருந்ததால் அவர்கள் எங்கள் பேச்சுகளைத் தவறாகப் புரிந்துக் கொண்டனர் என்றும் சிவா பேசினார்.

''ஐரோப்பிய மில்லில் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, அரசாங்கம் சிறப்புக் காவல் துறையினரை அனுப்பியது. வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களைச் சுட்டுத் தள்ளவும் உத்திர விட்டு சுதேசி இயக்கத்தினரை வெறுப்பேற்ற மிகவும் கஷ்டப்பட்டது. இதே மில் இந்தியருடையதாக இருந்தால், அரசாங்கம் கவலைப்பட்டிருக்காது. இவ்வாறு சிவா தொடர்ந்து பேசி முடித்ததும் வி. ஓ. சிதம்பரம் பேச எழுந்தார். டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிடமும், மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டிடமும் தாம் பேசியதாக வி. ஓ. சிதம்பரம் பிள்ளை குறிப்பிட்டார். ''அவர்கள் தம்மிடம் கூட்டத்தில் பேச வேண்டாம் என்றும் குழப்பம் ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்கள். இதற்கு வ. உ. சி. பதிலளிக்கையில் தாம் ஒரு வழக்கறிஞர் என்றும், எது ராஜத்துரோகமானது, எது ராஜவிசுவாசமானது என்பதைப் பற்றித் தமக்குத் தெரியும் என்று கூறினார். அவர் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டிடம், கோரல்மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் தன்னுடைய தலையீடு இல்லையென்றும், மில் உரிமையாளர்கள் தொழிலாளர்களை பட்டினி போடுகிறார்கள் என்றும் பதிலளித்தார். தொழிலாளர்கள், இந்த நாட்டின் குழந்தைகள், அவர்களுடைய நலன்களைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமையாகும் என்றும் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை குறிப்பிட்டார். அவர் பிறகு தொழிலாளர்களிடம் ஒன்றைத் தெளிவுபடுத்தினார். அதாவது இந்தியாவெங்கும் தமக்கு செல்வாக்கும், நண்பர்களும் இருப்பதால், அவர்களிடம் பண உதவிக்கு வேண்டுகோள் விடுத்து ஆறு மாதங்களுக்குள் சுதேசி மில்லை தொடங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்தினார். இதற்கிடையில் தொழிலாளர்களுக்கு வேலையையும், உணவையும் தம்மால் தரமுடியும் என்றார். வக்கீல்கள் அனைவரும் தலைக்கு

ஐந்து ரூபாய் நன்கொடை தருவதாகவும், சில பணக்கார வக்கீல்கள் நாளொன்றுக்கு 75 ரூ. வீதம் ஒவ்வொருவ ராக உதவி தொழிலாளர்களுக்கு உணவளிக்க உறுதி மொழி கூறியுள்ளார்கள் என்றும் வி.ஓ.சி. எடுத்துரைத் தார்.''

மேற்காணும் அறிக்கையில் இருந்து, வ. உ. சி. யும், சிவாவும் வேலைநிறுத்த ஏற்பாடுகளில் வெளிப்படுத்திய திட்டமிடுதலையும், தொழிலாளர்கள் நலன்களில் அவர் கள் கொண்டிருந்த அக்கறையும் தெளிவாகின்றது. பிற் காலத் தொழிலாளர் இயக்கத்தினரும் கற்றுக்கொள்ள முன்னுதாரணமாகத் திகழ்ந்தனர். தொழிலாளர்கள் தலைநிமிர்ந்து நடக்கவும், அவர்கள் தங்கள் முக்கியத்து வத்தை நயமாக உணர்ந்துக் கொள்ளவும் தூத்துக்குடி யின் அந்த இரு தலைவர்களும் வழிவகை கண்டனர். இவர்களுடைய செயல்திறனை அன்றையச் செய்தித் தாள்கள் பாராட்டியுள்ளன. 7.3.1908-இல் ''**நம் தொழிலாளர்கள்**'' எனும் தலைப்பிட்டு சுதேசமித்திரன் பாராட்டியதின் ஒரு பகுதி பின்வ்ருமாறு:

''புழுவுங்கூட மிதிபட்டால் தலையைத் தூக்கிக் கடிக்கப் பார்க்குமல்லவா? அப்படியே புழுக்கள் போல் பிறர் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருந்த நமது ஏழைத் தொழிலாளிகள் இப்போது தன்னினைவு வந்து தங்களை மிதிக்கிறவர்களைத் திருப்பிக் கடிக்கக் கற்றுக் கொள்வதைப் பார்த்து யார்தான் சந்தோஷப்பட மாட்டார்கள்.''

தங்கள் வேலைநிறுத்தத்தை முறியடிக்க மில் முத லாளிகள் ஏவிய வன்முறைகளையும், சூழ்ச்சிகளையும், கோரல் மில் தொழிலாளர்கள் எதிர்த்து நின்றதை விளக்கி சென்னை 'இந்து', தனது 5-3-1908-ஆம் இதழில் பின்வரும் செய்தியை வெளியிட்டது:

''மில்களில் நடைபெறும் வேலை நிறுத்தம் முடிவுறும் என்பதற்கான அறிகுறியில்லை. நேற்று காலையில் மில் லின் ஏஜெண்டு, மற்றவர்களுடன் ஓரிடத்தில் பலரைச்

சந்தித்து, தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு தூண்டுமாறு வேண்டிக் கொண்டனர். ஆனால் அவர்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள் ... ஏஜெண்ட் தனது தம்பியை தொழிலாளர்களிடம் பேச்சுவார்த்த்தை நடத்தி வழிக்குக் கொண்டுவர அனுப்பினார். வேலைநிறுத்தம் செய்தவர்கள் மறுத்துவிட்டனர். வக்கீல் வெங்கட்ராமய்யர் ஏற்பாடு செய்த நிவாரண நிதியில் இருந்து தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவைப்படும் பொருட்கள் வழங்கப் பெற்றன.''

அரவிந்தகோஷ் பாராட்டினார்

தென்கோடியில் தூத்துக்குடியில் நிகழ்ந்த தொழிலாளர் இயக்க வேலைநிறுத்தப் போராட்டத்தை, வடகோடியில் உள்ள கல்கத்தா நகரத்தின் வீறார்ந்த 'வந்தே மாதரம்' எனும் ஆங்கில இதழில் மிகச்சிறந்த அரசியல் தத்துவிகளில் ஒருவரான அரவிந்த கோஷ் ஆதரித்து எழுதியது குறிப்பிடத்தக்கதாகும். ஆற்றல் மிக்க ஆங்கில மொழிநடையில் மார்ச் 4, 1908-ஆம் இதழில் அரவிந்த கோஷ் எழுதியதின் முழுமையும் இங்கு தமிழாக்கமாகத் தரப்பட்டுள்ளது.

''தற்சமயம் தூத்துக்குடியில் முன்னேற்றம் கண்டு வரும் போராட்டம் ஆர்வம் மிக்க மனக் கவர்ச்சியாகும். ஊக்கமும், வலிமையும் வாய்ந்த தேசியவுணர்வை எவ்வளவு ஆழமாக சென்னை மனதில் பதிய வைத்துள்ளது என்பதற்கு இது முதல் எடுத்துக்காட்டு அன்று. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் ஒன்றுபட்ட, தீவிரமான, வலிமையான, உறுதிவாய்ந்த மனோநிலையின் குறிப்பைக் காண்கின்றோம். இதற்கு முந்திய தேசிய உணர்வின் வெளிப்பாடுகளில் இருந்து காணப்படும் மகத்தான முன்னேற்றம் ஆகும். தூத்துக்குடியில் சிறிய அளவிலான ஒரு புரட்சியை அடையாளங்காண அதிகார வர்க்கம் முன்வந்ததேன் என்பதை அவர்கள் மட்டுமே அறிவார்கள். மக்கள் உறுதிப்பாடும் கௌரவமும் அற்புதமாக

இணைந்திட நடந்துக் கொண்டார்கள். உள்ளூர் அதிகாரிகளின் கோபமூட்டுதலுக்கு முற்றிலும் இடம் கொடுக்காமல் அமைதியான சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொண்டார்கள். இந்தியத் தொழிலாளி தன்னுரிமையை நிலைநாட்டிக் கொண்டது, மக்களிடையே ஆரவாரம் மிக்க ஆதரவை எழுப்பியது என்பதாகவே நாம் கருதலாம். தொழிற் சந்தை மீதான கொடிய அடக்குமுறையைக் கொண்ட பிரிட்டிஷ் மூலதனத்தின் அச்சுறுத்தலை அதிகார வர்க்கம் எடுத்துக்கொண்டது, பிரிட்டிஷ் ஆட்சியின் மீது குறிவைத்தத் தாக்குதலாகும்.

''நிருவாகத்திற்கும், சுரண்டலுக்கும் இடையே ஒத்திசைவான உறவு கொண்டவை என்பதின் தீர்க்கதரிசி கர்சன் பிரபு. சந்தேகத்திற்கிடமில்லாமல், இதுதான் தூத்துக்குடியில் கோரல் மில்லுக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் இடையே ஏற்பட்ட தகாத ஒப்பந்தத்தின் மூலவித்தாகும். திருவாளர்கள் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோரிடத்தில் மக்கள் தகுதிவாய்ந்த தலைமையைக் கண்டனர்; போராட்டத்தில் அவர்களுடன் ஒன்றிணைந்தவர்களாகவே கருதினர். போராட்டத்தின் வளர்ச்சியை நாம் ஆர்வமுடன் கவனித்து வருகின்றோம். அவர்களுடைய துணிவு, விவேகத்தில் எமக்கு நம்பிக்கையுண்டு.''

வெகு தொலைவில் இருந்து தூத்துக்குடிப் போராட்டச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து வந்த அரவிந்த கோஷ் மீண்டும் 'வந்தே மாதரம்' இதழில், மார்ச் 12-இல் ''தியாகிகளின் குரல்'' எனும் தலைப்பில் பின் வருமாறு காவிய நயமுடன் வருணனை செய்து எழுதினார்.

''நம்மிடமிருந்து சென்னை முதன்மையிடத்தை எடுத்துக் கொண்டு விட்டது. இன்று தூத்துக்குடியின் மீது மகாபாரதத் தெய்வங்கள், தங்களுடைய வானுலகத் தேர்களில், பழங்காலப் புகழார்ந்த காட்சிகளை மீண்டும் பார்ப்பது போல், தூத்துக்குடி போர்க்களக் காட்சிகளைக்

காண வானில் வலம் வந்தனர்.... தீவிரமான வீரப் பண்பும், உயிர்த் தியாகமும் தெற்கு நோக்கி பயணம் செய்தன.''

கோரல் மில் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை சம்பள உயர்விற்கும், மேம்பாட்டு நிலைகளுக்குமான போராட்டமாக மட்டும் அமைத்திடாமல் தேசிய முனையின் ஓர் அரசியல் போராட்டமாகவும் தமது கூர்த்த மதிநுட்பத்தால் அமைத்தார், வ. உ. சி. படித்தோர், பாமரர், பெரும் வணிகர்கள், சிறுவியாபாரிகள், ஜட்கா வண்டிக்காரர்கள், சின்னஞ்சிறு விடுதி நடத்துபவர்கள், சிகை அலங்காரத் தொழிலாளர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள், ஐரோப்பியர் அலுவலகங்களில் பணி யாற்றுபவர்கள் எனப் பல்வேறு மக்கட்பிரிவினர் வ. உ. சி.யின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நின்றக்காட்சி, மிக அற்புதமான காட்சி. இந்தக் ,காட்சியின் மாட்சியைக் கண்டு மருண்டுபோன ஐரோப்பியர்கள், இரவில் நகரில் தங்குவதற்குப் பதிலாக பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் கப்பல்களில் தங்கினர். பொதுமக்களால் சூழப்பெற்று வலுக்கட்டாயமாக 'வந்தே மாதரம்' என சொல்ல வேண்டியதாயிற்று. உணவுப் பொருட்களை இலங்கையில் இருந்து ஐரோப்பியர்கள் இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.

தூத்துக்குடியில் சமூகவாழ்க்கை வ. உ. சி.யின் கட்டுப்பாட்டில் அடங்கியிருந்தது. ஐரோப்பியர்கள் மட்டும் சமூக பகிஷ்காரத்திற்கு ஆளாகவில்லை; ஐரோப்பியர்களைப் பின்பற்றியவர்களும் தேசவிரோதிகள் என ஒதுக்கப்பட்டனர். இவ்வுண்மையை விளக்கவல்ல ஒரு நிகழ்ச்சியும் நடந்தது.

தூத்துக்குடியில் அப்பொழுது ரங்கசாமி ஐயங்கார் எனும் ஒரு வக்கீல் இருந்தார். இவர் · தூத்துக்குடி நகராட்சி நீதிமன்றத்தின் நியமன உறுப்பினர். அவர் ஒரு நாள் முக சவரம் செய்து கொள்ள விரும்பினார். வந்திருந்த சவரத் தொழிலாளி ஐயங்கார் முகவாய்க்

கட்டையில் சோப்புத் தடவிக் கொண்டு பேச்சு கொடுத்த பொழுது, ஐயங்கார் மாவட்ட கலெக்டரை ஆதரித்துப் பேசிவிட்டார். அவ்வளவுதான், அந்த சவரத் தொழிலாளி அவரிடம், ''நீங்கள் தேசியவாதிகளை எதிர்ப்பவரா?'' என்று கேட்க, அவரும் ''ஆம்'' என்று பதில் கூற, அவரை அப்படியே விட்டுவிட்டு எழுந்து நடையைக் கட்டிவிட்டார், தேசபக்திமிக்க சவரத் தொழிலாளி. ஐயங்காரின் முகசவரமும் பாதியிலேயே நின்று போய் விட்டது.

தேச விரோதிகளை அனைத்துத் தொழிலாளர்களும் பகிஷ்காரம் செய்ய வேண்டும் எனும் தேசிய உணர்வு மேலோங்கியிருந்தது. தூத்துக்குடிச் செய்திக்கு ஒத்திசைவான செய்தியொன்று வங்க மாநிலத்தில் சுதேசியப் போராட்டக் களமாக பாரிசால் எனும் ஊரில் நிகழ்ந்தது. பாரிசாலில் உள்ள சவரத் தொழிலாளிகள் எல்லாம் பிறதேசச் சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு சவரம் செய்வதில்லையென்று உறுதியெடுத்துக் கொண்டனர். இந்தச் செய்தியை 'இந்தியா' பத்திரிகையில் (2-2-1907) வெளியிட்ட பாரதியார், ''இதை இதர மாகாண சுதேசிகள் தயவு செய்து கவனிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தூத்துக்குடியின் இணை மாஜிஸ்ட்ரேட்டாக அக்காலத்தில் பணியாற்றிய ஆஷ் துரை என்பவன் வ.உ.சி.யின் செல்வாக்கையும், அதன் காரணமாக மூண்டெழுந்த எழுச்சியையும் ஒடுக்கத் தனிப்பட்ட முறையிலும் ஆர்வம் கொண்டான். 'சட்டம், ஒழுங்கு' என்ற போர்வையில் தன்னை மறைத்துக்கொண்டு வ. உ. சி.யை அச்சுறுத்தத் தொடங்கினான். ஆனால், ஆஷைச் சந்திக்க வ. உ. சி. அஞ்சவில்லை. மார்ச் 3, 1908-இல் டி. ஆர். மகாதேவய்யர் என்னும் வழக்கறிஞருடன் சென்று ஆஷைச் சந்தித்தார், வ. உ. சி. இந்தச் சந்திப்பைப் பற்றி, வ. உ. சி. யின் சுயசரிதையில் இருந்து பின்வருமாறு அறிகின்றோம்.

ஆசுவைக் கண்டதும், "அழகிய மில்லினை
மேலும் செய்ததென் மொழிகுவா" என்றான்
"கொடியபல செய்து கூலி யாட்களை
மடியும் விதத்தினால் வருத்திவந் ததனால்
வேலையை நிறுத்தினர்; வேண்டுவ கேட்டுளேன்;
நாலு தினத்தினில் நன்மையாம்" என்றேன்
படையின் செருக்கைப் பகர்ந்தான். எழுந்தேன்
"படையிலா ரிடத்ததைப் பகர்தல்நன் றன்" றென்றே!

ஆஷ், அடக்குமுறையை ஏவுவேன் என்று மிரட்டும் போக்கில் பேசியதை வ. உ. சி. துச்சமெனத் தள்ளிப் பேசியதை மேற்காணும் சுயசரிதைச் செய்தியின் இறுதி இருவரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆஷைச் சந்தித்த அதே நாளன்று மாலையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் வ. உ. சி. முழங்கியதாவது:

"இனி என் பேரில் கலகக் குற்றம் சாட்டப்படும். அவர்கள் எச்சரிக்கின்றபடி விலகாவிட்டால் என்னையும் சுட்டுத் தள்ளிவிட இருக்கிறார்கள். யாரோ ஒரு பெரிய போலீஸ் அதிகாரி தம் படையோடு வந்து சுட்டுத் தள்ளும் பட்சத்தில் என்ன செய்யக்கூடும் என்று என்னையே கேட்டால் 35,00,00,000 ஜனத்திலே 3000, 4000 பேர் சுடப்பட்டால்தான் என்ன! அப்படிப்பட்ட சாவு எங்களுக்கு விதிக்கப்பட்டதானால் நானும் சிவாவும் சுடப்படத் தயார்தான். மனிதன் இறக்கவே பிறக்கிறான்; இன்னவிதமாய் இறக்கிறோம் என்பதைக் கவனிக்கவில்லை. இந்தியன் இறப்பதற்கு அஞ்சமாட்டான்!"

இவ்வாறு போராட்டச் சூழல் கொதிநிலையின் உச்சத்தை நோக்கிச் சென்ற பொழுது, இறுதியில் கோரல் மில்லின் இயக்குநர்களில் ஒருவரான சுப்பிரமணிய பிள்ளை, வ. உ. சி.யுடன் சமாதானம் பேச வந்தார். இதன் விளைவாக ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த வேலைநிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது. 7-3-1908-இல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள்.

தூத்துக்குடி வேலைநிறுத்தம் பற்றி இலண்டனில் இருந்து வெளிவந்த 'இந்தியா'* எனும் ஆங்கில இதழில், 24-4-1908-இல், வெளிவந்த பின்வரும் செய்தியும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

''வேலைநிறுத்தம் செய்வோர்களுடன் சமாதானம் செய்து கொள்வதற்கு சிதம்பரத்தை நாடுவதே ஒரே வழி. 7-ந் தேதியன்று வேலைநிறுத்தம் செய்வோர்களுக்காக கணிசமானச் சலுகைகளைப் பெற்றுத் தந்துள்ளார். தொழிலாளர்களின் எந்தெந்தக் கோரிக்கைகள் ஏற்கப் பட்டன என்பதை வ. உ. சி., தமது சுயசரிதையில் குறிப் பிட்டுள்ளார். இதன் விவரம் வருமாறு:

ஊதிய உயர்வு அரைப்பங்கு அதிகப்படுத்தபட்டது; ஞாயிற்றுக்கிழமை விடுமுறைநாள்; உணவு இடைவேளை நேரத்திற்கு அனுமதி; அவசரக் காலத்தில் கூலியின்றி விடுப்பு.

வேலைநிறுத்தம் முடிவுற்று தொழிலாளர்கள் வேலைக்கு சென்ற முன்தினம் (பிப்ரவரி 6-இல்) சுப்பிரமணிய சிவா தூத்துக்குடி கடற்கரையில் நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் பின்வரும் கருத்தை வெளியிட்டார்.

''எனது நோக்கம் ஆணவத்தைக் குறைப்பதேயாகும். கூலிகள் ஒருவாரம் சும்மாயிருந்தார்கள். இப்பொழுது நல்ல கூலி பெறப்போகிறார்கள். 50 சதவீத உயர்வு சுதேசியத்தினால் கிடைத்துள்ளது. நாம் வெள்ளையர் களை எதிர்த்து நின்று வெற்றி பெற்றுள்ளோம். இந் நாளானது எனக்கும் உங்களுக்கும் பெருமைக்குரிய நாளாகும்.''

சுதேச மித்திரன் நாளிதழில் (7.3.1908-இல்) தூத்துக்குடித் தொழிலாளர்கள் வ. உ. சி. தலைமையில் பெற்ற வெற்றியைப் பாராட்டி, பின்வரும் செய்தி வெளிவந்தது.

---

* 'இந்தியா', 1899-இல் இலண்டனில் காங்கிரஸ் மிதவாதிகளால், இந்திய நண்பர்களான சில பிரிட்டிஷ் அறிஞர்களைக் கொண்டு நிறுவப்பெற்ற பிரிட்டிஷ் கமிட்டியின் சார்பில் வெளிவந்துக் கொண்டிருந்தது.

"தூத்துக்குடி வேலைக்காரர்களைப் போல ஆங் காங்கே நம்மவர் வேலைநிறுத்தம் செய்து நியாயத்தைப் பெறுவது தேசாபிமானிகள் எல்லோருக்கும் மகாசந் தோஷத்தையும் திருப்தியையும் கொடுக்கத்தக்கது."

மீண்டும் அரவிந்தர் பாராட்டினார்

'வந்தே மாதரம்' இதழில் "தூத்துக்குடி வெற்றி" எனும் தலைப்பில் அரவிந்த கோஷ், தூத்துக்குடி வேலை நிறுத்தம் பெற்ற வெற்றியை ஏற்றிப் போற்றி பின்வரு மாறு எழுதினார்.

"தனித்தவொரு தொழிலாளர் புரட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு தூத்துக்குடி வேலைநிறுத்தம் முற்றிலும் சரியான முன்னுதாரணமாகும். இதற்கான அனைத்து நன்மதிப்பும் தூத்துக்குடி தலைவர்களுக்கு உரியது. ஏனெனில் அவர்கள் இணையற்ற திறமை யுடனும், அஞ்சாமையுடனும் போராட்டத்தை நடத்தி னார்கள். இதற்கு மேல், அவர்கள் தேசியவாதிகளின் நற்செய்தியின் உள்ளார்ந்த பொருளை முழுமையாக உணர்ந்து, அனைத்திந்திய தேசிய நலன்களை, தூத்துக் குடி கோரல் மில் தொழிலாளர்களின் துன்பத் துயரங் களில் அடையாளங் கண்டனர்."

வ. உ. சி.க்கு வாய்த்த தலைமைத் தகுதியை வாய்ப் பேற்பட்ட பொழுதெல்லாம் அரவிந்தர் மனந்திறந்து பாராட்டியுள்ளார் என்பதற்கு மேற்காணும் பாராட்டுரை ஒரு சான்றாகும்.

சுதேசி நாவாய்ச் சங்கம், கோரல் மில் தொழிலாளர் போராட்டம் ஆகிய இரண்டின் காரணமாக இந்தியா வில் மட்டுமன்று, வெளியில் இலண்டனிலும் அரசியல் பார்வையாளர்களின் கருத்தை ஈர்த்தது. சிலருடைய மனநிறைவையும், சிலருடைய முணுமுணுப்பையும் இந்தப் பார்வைகள் எதிரொலித்தன.

வட இந்தியாவில் வெளிவந்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் ஆதரவு இதழான 'பயனீர்' எனும் ஆங்கில

மொழி ஏடு, தூத்துக்குடி வேலைநிறுத்தத்தை எவ்வாறு கவனித்தது என்பதற்கு பின்வருவது, ஒரு சான்றாகும்.

''இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் உள்ள, நிதானமும் விவேகமும் நிறைந்த சென்னை மாநிலம், பூனா, வங்காளம் போன்று தீவிரமான அரசியல் வளர்ச்சிக்குரிய விளைநிலமாகி விட்டது.''

வங்கம், பூனா இரண்டுமே தீவிரவாத தேசிய அரசியலை முன்னெடுத்துச் சென்றன. இவற்றுடன் தமிழ் மக்களும் அரசியல் விழிப்புணர்வுடன் தேசிய நீரோட்டத்தில் இணைவதை பிரிட்டிஷ் நிர்வாகம், 'அபாயகரமான போக்காக நினைத்தது. இந்தப் போக்கை அடக்கி ஒடுக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் மூவரையும் சிறையில் தள்ள காரணத்தைத் தேடியது. இதற்கான வாய்ப்பை, 'விபின் சந்திரபால் விடுதலைநாள் கொண்டாட்டம்'' எனும் நிகழ்ச்சி ஏற்படுத்தி தந்தது.

இதே சமயத்தில் சுதேசிக் கப்பல் நிர்வாகிகள் வ. உ. சி. காரணமாக கம்பெனிக்கு எதிராக அதிகாரிகள் ஏவிய அடக்குமுறைகளைக் கண்டு அச்சமுற்றனர்; நிர்வாகக் குழு அவசரமாகக் கூடி, கம்பெனியின் நன்மையைக் கருதி வ. உ. சி., தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியது. இதைக் கண்டு வ. உ. சி. மனம் வருந்தினார். ஒரு பக்கம் தாமே தோற்றுவித்த சுதேசிக் கப்பல் கம்பெனியில் தமது தொண்டிற்கு ஏற்பட்ட நெருக்கடி, மற்றொரு பக்கம் தமது பேச்சு சுதந்திரத்திற்கு தடைவிதிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி ஆகிய இரு பக்கங்களிலும் தோன்றிய அறைகூவல்களைச் சந்திக்க தலை நிமிர்ந்தார் வ. உ. சி. கப்பல் கம்பெனியின் நிர்வாகக் குழுவின் தீர்மானப்படி நடக்க மறுத்து விட்டார்.

ஒருபக்க நெருக்கடிக்கு இவ்வாறு தீர்வு கண்ட அவர் மற்றொரு பக்க நெருக்கடியான பேச்சு சுதந்திரத்

தடைக்கும் தீர்வுகாண விபின்சந்திர பாலரின் விடுதலை நாள் விழாவை அரசாங்கத்தின் பலத்த எதிர்ப்புகளுக் கிடையே நடத்த முடிவெடுத்தார்.

இந்த முடிவும், அதன் நிறைவேற்றமும் வ. உ. சி.யின் அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட மாபெரும் திருப்பங் களில் ஒன்றாகும். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்த பிரிட்டிஷ் நிர்வாகம் வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் மூவரையும் கடுஞ்சிறைவாசம் ஏற்கத் திட்ட மிட்டது. இம்மூவரின் சிறைவாசம் தமிழக சுதேசி இயக்கத்தில் தியாக வரலாற்றைப் படைத்தது. இந்த வரலாறு, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றின் பொன்னேடுகளாகும்.

விரும்புவது அதுவே. அம்மையார் கிளர்ச்சியைப் போலி என்றும், காவல், வெறும் நடிப்பு என்றும் கருதுகிறீர்கள். போலியும், வெறும் நடிப்பும் நாட்டில் இவ்வளவு எழுச் சியை யுண்டு பண்ணின எனில் நீங்கள் உண்மையில் நின்று கிளர்ச்சி செய்தால் — சிறையில் புகுந்தால் அவை எவ்வளவு எழுச்சியை உண்டு பண்ணுவனவாகும்? ஏன் ஒதுங்கி நிற்கிறீர்கள்? உண்மையை உளங்கொண்டு வாருங்கள் ... பெசண்ட் அம்மையார் கிளர்ச்சியால் நலம் விளைகிறதா? தீமை விளைகிறதா! என்று பார்த் தேன். நலம் விளைதல் கண்டேன்; துணைபோகிறேன். நாளை தீமை விளைவதைக் கண்டால் அவர்தங் கிளர்ச் சிக்குத் துணை போகேன். அதை ஒரு நொடியில் சாய்க்க முயல்வேன் என்று முழங்கினார்.''

திலகரின் இந்த விளக்கம், வ. உ. சி.யிடம் மனமாற் றத்தை ஏற்படுத்தவில்லை. திலகர் சகாப்தத்தைத் தொடர்ந்து எழுந்த காந்தி சகாப்தத்திலும் வ. உ. சி.யின் அன்னிபெசண்ட் எதிர்ப்பு தொடர்ந்தது. காந்தி சகாப்தம் வ. உ. சி.யின் அரசியல் வாழ்க்கையில் புதிய மாறுதல் களைச் சந்திக்க வைத்தது.

6

அடக்கு முறைகளும் வரலாறு காணாத கடுந்தண்டனையும்

திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ.சி.க்கு இருந்த மகத்தான செல்வாக்கின் காரணமாக, அந்த மாவட்டம் முழுவதும் அவருக்கு ஒரு கோட்டையாக அமைந்தது. தாய்நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய வீரவுரையைக் கேட்ட எவரும் அவரைத் தலைவராக ஏற்றுப் பின்பற்றத் தொடங்கினர். இதைக் கண்டு அரசாங்கம் சீற்றமுற்று பலவகையான அடக்கு முறைகளை முயற்சி செய்தது. குறிப்பாக மாவட்ட கலெக்டர் விஞ்சும், தூத்துக்குடி இணைமாஜிஸ்ட்ரேட் ஆஷும் வ.உ.சி. மீது வளர்த்துக் கொண்ட வெறுப்பானது, சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி, அவரை அழிக்கக் காத்திருந்தது. வ.உ.சி. மீண்டும் வெளியே வந்து ஆட்சிக்கு எதிராக மக்களை எழுச்சி பெறச் செய்ய வழியில்லாமல் செய்துவிட வேண்டும் என்றும் சூழ்ச்சி செய்தனர்.

பஞ்சாப்பில் இராணுவத் தளபதியாக இருந்த டயர் என்பவன் 1918-இல் பிரிட்டிஷ் நாடாளுமன்ற ராஜாங்கச் செயலாளருக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் திருநெல்வேலி மாவட்ட சமூக அமைப்பில், பிராமணர்களும், பிள்ளைமார்களும் தேசிய அரசியலில் ஒன்றுபட்டிருந்தது கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்திக் குறிப்பு வ.உ.சி. சிறைவாசத்தின் பத்தாண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டிருந்தாலும் இங்கு இணைத்து சிந்திப்பதற்குரியது. இந்தச் செய்திக் குறிப்பின் ஒரு பகுதி வருமாறு.

''தென்னிந்திய பிராமணர்களை இனிமேல் நம்ப முடியாது; அவர்களைப் போலவே திருநெல்வேலிப்

பிள்ளைமார்களையும் நம்ப முடியாது. ஆகவே அவர்கள் நெருக்கமாக இருப்பதைத் தடுக்க ஏதாவது செய்யப்பட வேண்டும். நிதானமும், சாத்விகமும், அமைதியும் நிறைந்த சென்னை மாநிலம், அரசாங்கத்திற்கு எவ்விதத் தீங்கும் நினைக்காத மிதவாதிகளிடமிருந்து பறிபோகக் கூடாது."

இந்தச் செய்திக் குறிப்பில் ஒன்று தெளிவாகியுள்ளது. அதாவது திருநெல்வேலி மாவட்ட எழுச்சிகளுக்கு சிதம்பரம் பிள்ளை பொறுப்பு என்பதுடன், இந்த வியப்பிற்குரிய அற்புதத்தை அவர் சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஒத்துழைப்புடன் நிகழ்த்தினார்.

விபின் சந்திரபால் விடுதலை நாள் விழாவை கொண்டாட, வ. உ. சி. விரிவான ஏற்பாடுகளைச் செய்தார். பொதுக் கூட்டங்களில் பேசினார். இந்தச் சந்தர்ப்பத்தைத் தான் அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டது. அவருடைய மேடைப் பேச்சுகளைக் காரணங்காட்டி அவர்மீது வழக்கு தொடுத்தது; விசாரணை நடத்தியது; கடுமையானத் தண்டனையை விதித்தது. இந்தக் கடுமையானத் தண்டனையை திருநெல்வேலி மாவட்ட மக்கள் மட்டுமன்று, தமிழக மக்களும் பத்திரிகைகளும், இந்தியா முழுவதும் வேதனையுற்று ஒரே குரலில் கண்டித்தனர்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நீதித்துறை வரலாற்றின் ஏடுகளில் சாதாரண ஒரு குற்றத்திற்காக இவ்வளவு பெரிய கடுமையான தண்டனை விதிக்கப் பட்டதாகச் செய்தியில்லை. அதுவும் முப்பது வயதான இளைஞருக்கு எவ்வளவு பெரிய கடுந்தண்டனை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வ. உ. சி.யை மிகக் குரூரமாக பழிவாங்கியது. சொல்லொணாத கொடுமைகளையும் துன்பங்களையும் விளைவித்தது. மற்ற விடுதலை வீரர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் வ. உ. சி.க்கு கொடிய தண்டனையை விதித்தது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம். இந்தியாவின் விடுதலைக்காகத் தியாகச் செம்மலாக

வ. உ. சி. ஏற்ற சிறைவாசத்தில் முன்னும் — பின்னுமான நிகழ்ச்சிகளின் விரிவான ஆய்வு அவருடைய தன்னேரில்லா அரும்பெரும் தியாகத்தை விண்டுரைக்க வல்லது. அவர் தண்டனையடைந்த காலத்திலேயே பால காங்காதர திலகருக்கும், அரவிந்த கோஷுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் சிறைத் தண்டனையைத் தந்தது. ஆனால் அவர்கள், வ. உ. சி. போன்று கடுமையாக ஈவிரக்கமில்லாமல் தண்டிக்கப்படவில்லை.

1907 — மே மாதத்தில் விபின் சந்திர பால் சென்னை வந்து சென்ற பிறகு அவருடைய புகழும், பெருமதிப்பும் தமிழகத்தில் வேகமாகப் பரவியது. ஜி. சுப்பிரமணிய ஐயர், பாரதியார், வ. உ. சி., சுப்பிரமணிய சிவா முதலானத் தலைவர்கள் விபின் சந்திர பாலர் புகழைப் பரப்புவதில் முன் நின்றனர். இந்தச் சூழலில் விபின் சந்திரபாலின் சிறைவாசமும், விடுதலை பெற்ற நாளும் தேசிய முக்கியத்துவம் பெற்றன, தமிழகத்தில். எனவே அவருடைய விடுதலை நாளை, தேசிய எழுச்சி நாளாகக் கொண்டாட பாரதியார், வ. உ. சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் ஊர்வலமுடன் விழாக்கள் எடுத்தனர்.

விபின் சந்திர பாலின் சிறைவாசத்திற்கு காரணம் கல்கத்தா 'வந்தே மாதரம்' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையாகும். 'வந்தே மாதரம்', புதிய தேசிய வாதிகளின் கட்சியின் போர்முரசாக ஒலித்தது. இதனால் எழுத்துச் சுதந்திரத்தை முடக்க பிரிட்டிஷ் ஆட்சி முடிவு செய்தது.

1907 செப்டம்பரில் 'வந்தே மாதரம்' மீது ராஜத் துரோகக் குற்றச்சாட்டை சுமத்தியது, பிரிட்டிஷ் அரசு. அப்பொழுது அரவிந்தர் அதன் ஆசிரியராகக் கருதப் பட்டார். அக்காலத்தில் பத்திரிகையில் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்பதற்கு சட்டரீதியாக விதிமுறையில்லை. விபின் சந்திரபால், அரவிந்தருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அரவிந்தர் பத்திரிகையின் ஆசிரியர் என்ற குறிப்பு காணப்பட்டது. இதைக்

கைப்பற்றிய பிரிட்டிஷ் அரசு, அரவிந்தர் மீதான வழக்கில் விபின் சந்திரபாலை ஒரு சாட்சியாக அழைத்தது. ஆனால் அவர் அரவிந்தருக்கு எதிராக சாட்சி கூற மறுத்து விட்டார். இதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அவர் மீது தொடரப்பட்டு, ஆறுமாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அரவிந்தர் தான் 'வந்தே மாதரம்' இதழின் ஆசிரியர் என்று விபின் சந்திரபால் மூலம் நிறுவ முயன்ற பிரிட்டிஷ் அரசு விதித்த சிறைவாசத் தண்டனையைக் கண்டனம் செய்து அரவிந்தர் 'வந்தே மாதரம்' செப்டம்பர் 12, 1907-ஆம் இதழில் ''விபின் சந்திராவின் தியாகம்'' எனும் தலைப்பில் எழுதினார்.

விபின் சந்திரபாலருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து கண்டனக்குரல் சென்னையில் எதிரொலித்தது. சென்னை 'சுதேசி வஸ்து பிரசாரிணி சபை'யின் சார்பில் 17-9-1907-இல் விபின் சந்திரபால் சிறைவாசத் தண்டனையைக் கண்டனம் செய்து ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. இந்தப் பொதுக் கூட்டத்தில் பாரதியாரும், யதிராஜ சுரேந்திரநாத் ஆர்யாவும் பேசினர். இதற்குப் பிறகு 28-9-1907-இல் பாரதியார் தலைமையில் ஒரு கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

விபின் சந்திர பாலுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து கண்டனத்தை வெளிப்படுத்தியது போலவே அவர் விடுதலை பெற்ற நாளையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாளாகக் கொண்டாட பாரதியார் ஏற்பாடு செய்தார். சென்னை ஜன சங்கத்தின் சார்பில் விபின் சந்திரபால் விடுதலையடைந்த நாளான மார்ச் 9, 1908-ஆம் நாளில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பாரதியாரும், ஜி. சுப்பிரமணிய ஐயரும் பேசினர்.

பாரதியாரைப் போலவே, வ.உ.சி.யும் விபின் சந்திரபால் விடுதலைப் பெற்ற நாளைக் கொண்டாட

தூத்துக்குடியில் ஏற்பாடு செய்தார். ஆனால், பாரதியார் எதிர்கொள்ளாத அடக்குமுறை, அச்சுறுத்தல், கடுந் தண்டனை முதலானவற்றை வ. உ. சி. எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதில் இருந்து தூத்துக்குடியில் விஞ்சும், ஆஷும் வ. உ. சி. மீது கொண்ட பயங்கர காழ்ப் புணர்ச்சியும், வ. உ. சி.-யின் போராட்டச் சக்தியின் ஆற்றலும் அறியப்படுகின்றன. சென்னையில் கொண் டாடப் பெற்றதற்கும், தூத்துக்குடியில் கொண்டாடப் பெற்றதற்கும் இடையே நிறைய வேறுபாட்டையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

சென்னையில் சுமார் 20,000 மக்கள் கலந்துக் கொண்டனர்; பல்வேறு இடங்களில் ஊர்வலங்கள் நடைபெற்றன. மக்களின் மகிழ்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் குறைவில்லை. இரவு 9 மணி வரையிலும் கூட்டம் நடந்தது. போலீசாரின் கடுமையான அச்சுறுத்தலோ, கலகமோ, குழப்பமோ எதுவும் நிகழவில்லை. அனைத் தும் அமைதியாக நடைபெற்றன.

ஆனால், தூத்துக்குடியில் வ. உ. சி.யை முன் கூட்டியே காவல்துறை கடுமையாக எச்சரிக்கத் தொடங்கி விட்டது. நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு முன் பாகவே காவல் துறையின் அச்சுறுத்தல் முந்திக் கொண்டு விட்டது. விசாரணை என்ற பெயரில் வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் அலைக்கழிக்கப்பட்டனர். எதற்கும் அஞ்சாமல் பொதுக்கூட்டங்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாக வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் மூவரும் சிறையில் தள்ளப்பட்டனர். இவ்வளவிற்கும் மூலகாரணம், தூத்துக்குடியை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கு எதிரான எழுச்சிமிக்க தேசியப் போர்க்களமாக வ. உ. சி. மாற்றியதுதான்.

விபின் சந்திர பாலின் விடுதலை நாளைக் கொண் டாட சில திட்டங்களை சுப்பிரமணிய சிவா பொதுக் கூட்டத்தில் எடுத்துரைத்ததை வ. உ. சி., தமது சுயசரிதை யில் குறிப்பிட்டுள்ளார். திட்டங்களில் சில பின் வருவன :

1. விபின் சந்திரபாலின் திருவுருவப்படத்துடன் ஓர் ஊர்வலம் நடத்துதல்.

2. தரும வைத்தியசாலை, தரும புத்தகசாலை, பேச்சுப் பயிற்சிப் பள்ளி முதலானவைகளை அமைத்தல்.

3. ''சுயராச்சியம்'' எனும் பெயரில் ஒரு பத்திரிகை யைத் தொடங்குதல்.

இந்தத் திட்டங்களில் ஊர்வலம் ஒன்றுமட்டும் தான் நடைபெற்றது. பிறயாவும் அரசாங்க அடக்கு முறைகள் காரணமாக நிறைவேறவில்லை. எப்படியும் வ. உ. சி. யின் முயற்சிகளை முற்றிலும் முறியடித்தே தீரவேண்டும் எனும் வெறியுடன் மாவட்ட கலெக்டர் விஞ்சு, தூத்துக் குடியில் 8-3-1908-இல் முகாமிட்டார். இதற்கு மேல் அன்று நிகழ்ந்தனவற்றை தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் கிடைக்கும் அரசு ஆணை எண். 842-43, நீதி—ஜுன் 18, 1908 வழியே பின்வருமாறு அறிய முடிகின்றது.

''குற்றவியல் சட்டம் 122-ன் கீழும், இந்தியச் சட்டப் பிரிவின் 144-ன் கீழும் சிதம்பரம் பிள்ளை, சுப்பிர மணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர்களுக்கு நேரில் வருமாறு உத்திரவிடப்பட்டது. அதிகார பலம் வாய்ந்த இந்த உத்திரவு அம்மூவரையும் பொதுக் கூட்டத் தில் பேசவிருந்ததைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மதூதி பேட்டையில் நான்காயிரம் பேர் கொண்ட பொதுக் கூட்டம் நடந்தது. தமது பேச்சில், நாளை நீதிமன்றத்தில் ஆஜராகப் போவதாக சிவா குறிப்பிட்டார். திரும்பி வருவோமா, மாட்டோமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார். கூட்டத்தினர் அனைவரும் உணர்ச்சி வயப்பட்டனர். சிலர் கூச்ச லிட்டனர், சிலர் அழுதனர்; ஒரே குழப்பம் நிலவியது. சிதம்பரம் பிள்ளை எழுந்து நின்று கூட்டத்தினரை அமைதிப்படுத்தாமல் இருந்திருந்தால், கலகம் நிகழ்ந் திருக்கும்.''

அரசாங்கக் குறிப்பில் உள்ள இந்தச் செய்திகள் வ. உ. சி.யின் சுயசரிதையிலும் கூறப்பட்டுள்ளன.

தூத்துக்குடியில் வ.உ.சி., திட்டமிட்டவாறு விபின் சந்திரபாலின் விடுதலை நாள் கொண்டாட்டத்தை நடத்த விடாமல் தடைசெய்ததோடல்லாமல், அதே நாளில் திருநெல்வேலியில் வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் மூவரும் விஞ்சு முன் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜராக வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டது. இந்த உத்திரவில் குற்றவியல் சட்டத்தின் 108-ம் பிரிவின் கீழ், அவர்கள் அமைதியைக் காக்காமல் இருப்பதற்கு காரணம் கூறவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

8-3-1908-இல் நடைபெற்றக் கூட்டத்தில், அடுத்த நாள் (9-3-1908) திருநெல்வேலி சென்று வந்து பத்தாம் தேதி தூத்துக்குடியில் திட்டமிட்டவாறு வேலைகளைத் தொடரலாம் என்று அறிவித்தார், வ. உ. சி. ஆனால் விஞ்சுவின் சதித் திட்டம், வ. உ. சி.யின் நம்பிக்கையை சிதற அடித்தது.

9-ந் தேதியன்று மூவரும் விஞ்சுவின் முன் ஆஜராயினர். திருநெல்வேலியில் பிரபல தேசபக்தரும், வழக்கறிஞருமான சாதுகணபதி பந்துலு வ. உ. சி.க்கு உற்றத் துணையாக நின்றார். இரு வக்கீல்களை அமர்த்திக் கொடுத்தார்.

விசாரணை நாடகத்தை, 'வாய்தா காட்சிகள்' மூலம் 9-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை நடத்த சூழ்ச்சி செய்தான் விஞ்சு. இதனால் நாள்தோறும் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வ. உ. சி. ஆஜராக வேண்டியிருந்தது.

முதல் நாளில் வழக்கை வேறிடத்தில் மாற்றுவதற்கு மனு கொடுத்தார், வ. உ. சி. ''தூத்துக்குடிக்குச் செல்ல மாட்டேன்'' என வாக்களித்தால் அவர் மனுவை ஏற்பதாக விஞ்சு கூறினான். இதற்கு வ. உ. சி.யின் பதில் அவரது சுயசரிதையில், ''நாவாய்ச் சங்கமும், மனைவி

மக்களும் மற்றும் பலவும், நினையா தொழியென நிகழ்த்திய தொக்கும்'' என பதிவாகியுள்ளது. விஞ்சு வின் வாய்தா நாடகக் காட்சி தொடர்ந்தது.

அன்று மாலையில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட், நீதி மன்றத்தின் எதிரில் தாமிரபரணி ஆற்றங்கரையில் நடந்தப் பொதுக் கூட்டத்தில் வ. உ. சி.யும், சிவாவும் பேசினர். விபின் சந்திரபாலின் விடுதலை நாள் விழா அன்று கொண்டாடப்பட்டு விட்டது. காவல் துறையினர் பாதுகாப்பிற்கு வருவதற்கு முன்னரே கூட்டம் முடி வுற்றது.

10-ந் தேதி காலையில் தூத்துக்குடி திரும்பினர் வ. உ. சி. குழுவினர். வ. உ. சி. வீட்டின் முன் மக்கள் திரண்டனர். வந்தவர்களிடம் ''சுதேசியத்தை வளரச் செய்யுங்கள். தொல்லுயிர் நீங்கினும் இதுவே என் பிரார்த்தனை'' என்று வ. உ. சி. கொள்கை வீரனாக உளம் திறந்து உரைத்தார். வந்தவர்கள், விபின் சந்திர பாலின் விடுதலை நாள் கொண்டாட்டத்தைத் தூத்துக் குடியில் நடத்துவது பற்றிக் கேட்டனர். பொதுக்கூட்ட மாக அல்லாமல், முற்பகலில் விபின் சந்திரபாலின் திருவுருவப்படத்துடன் ஊர்வலம் நடத்த முடிவாயிற்று. அவ்வாறே ஊர்வலம் மிகச் சிறப்பாக நடந்தது. ''கண்டேன் பாலரின் கருணை வடிவினை; வணங்கி னேன்; அன்பர்கள் வரிசைகள் செய்தனர்'' என்று வ. உ. சி. அன்றைய ஊர்வலச் சிறப்பை சுயசரிதையில் யாத்துள்ளார்.

10-ந் தேதி பிற்பகல் திருநெல்வேலி மாவட்ட மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு வழக்கப்படி சென்றனர், வ. உ. சி. குழுவினர். விசாரணை மீண்டும் அடுத்த நாள் ஒத்திவைக்கப்பட்டது. தூத்துக்குடிக்கு மீண்டும் திரும்பி னர் வ. உ. சி. குழுவினர்.

11-ந்தேதி மறுபடியும் விஞ்சுவின் முன் ஆஜரானார் வ. உ. சி. அன்று நீதிமன்றத்தில் நிகழ்ந்ததை அவருடைய

சுயசரிதைத் தமிழின் மூலமேயே பின்வருமாறு அறிவோம்.

‘‘எதிரே பார்த்தான்* எதிர்த்த சுவரினில்
கதிரே எனுமவன் கண்ணாற் கண்டான்
‘‘வந்தே மாதரம்’’ வார்த்தைகள் தம்மை
‘‘அந்தோ! அந்தோ! அழி! அழி! என்றான்.
விரைந்தின் ஸ்பெக்டரை வினாவினான். அவன்தன்
கரந்தனில் ஏதோ காயிதம் வைத்து
வாசித்தான் அதை மறுத்தேன்; பார்த்தேன்.
வாசித்தேன் சட்டம், மயங்கி விழுந்தான்.
மறுநாள் வரும்படி வாயுதாச் சொன்னான்:
தெறுவாள் போன்ற சினந்த முகத்தோடு
வாசல் கடந்தேன் ‘‘வந்தே மாதரம்’’
பூசல் எங்கும் பொங்கி எழுந்தது.’’

நீதிமன்றத்தில் இருந்து வெளியேறிய வ. உ. சி., தாமிரபரணி நதிக் கரைக்குச் சென்றார். நீதிமன்றத்திற்கு வந்தக் கூட்டம் அப்படியே அவரைப் பின்தொடர்ந்தது. தாமிரபரணி நதிக் கரையில் பொதுக்கூட்டம் நடை பெற்றது. வழக்கம் போல் சுதேசியப் பிரசாரக் கூட்டம் தான், அந்தக் கூட்டம்.

பகல் நேரங்களில் நீதிமன்றத்தில்; மாலை நேரங் களில் பொதுக் கூட்டங்களில்; இது வாடிக்கையாகி விட்டது.

‘‘வாசித்தான்; அதை மறுத்தேன்’’ என வ. உ. சி. குறிப்பிட்டதை பாரதியார் கற்பனையாற்றலுடன் கவித் துவ உரையாடலாக, சீரிய தேசிய கவிதையாக தமது ‘இந்தியா’ பத்திரிகையில் 4-4-1908-லேயே படைத்து விட்டார். வ. உ. சி.யின் தியாக வரலாற்றின் வைரமணி வரிகளாக பாரதியார் இசைத்த அந்தக் கவிதை இரு தலைப்புகளைக் கொண்டது. முதல் தலைப்பு, ‘‘கலெக்டர்

---

* விஞ்ச்.

வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல்'' என்பதாகும். இரண்டாவது தலைப்பு, ''கலெக்டர் வின்ச்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறு மொழி'' என்பதாகும்.

இந்தத் தேசியக் கனல் தெறிக்கும் வீரக் கவிதை வழிவழியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்பில் எழுச்சி பெறத் தூண்டிக் கொண்டே வந்தது. இதற்குரியச் சான்றை பிற்காலத்தில், ''திருநெல்வேலி சதி வழக்கு'' என்று அழைக்கப் பெற்ற வீரவாஞ்சிநாதன் தொடர் பான வழக்கு விசாரணையில் காண்கின்றோம்.

வ. உ. சி.யின் கொடுமைமிக்க சிறைத் தண்டனைக்கு மூலகர்த்தாவான தூத்துக்குடி 'சப்-கலெக்டர்' ஆஷை, 1911 ஜுன் 17-இல் சுட்டுக் கொன்றான் டி. ஆர். வாஞ்சி அய்யர் எனும் வீரவாஞ்சிநாதன். தன்னையும் மாய்த்துக் கொண்டு வீரமரணம் எய்தினான். இதன் தொடர்பான வழக்கில் அரசுத் தரப்பில் நீதிமன்றத்தில் சாட்சியங்க ளாக வ. உ. சி. பற்றிய பாரதியாரின் கவிதைகள் தாக்கல் செய்யப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான உணர்வைத் தூண்டும் கவிதையை குற்றவாளிகள் படித் தனர் என்பதற்கு ஆதாரமாக அவை தாக்கல் செய்யப் பட்டன.

பாரதியாரின் இந்தத் தமிழ் கவிதைகள் நீதிமன்ற விசாரணைக்காக அரசாங்கத் தரப்பிலேயே ஆங்கில மொழியாக்கம் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. பாரதியாரின் கவிதையை மொழி பெயர்த்ததில் அரசாங் கத்திற்கும் பங்கேற்பட்டது.

நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளில் நந்தனிடம் கோபங் கொண்ட நிலப்பிரபு பாடிய ஒரு கீர்த்தனையைத் தழுவி பாரதியார் தமது இந்தக் கவிதையைப் படைத்தார். ''அதன் குறிப்பைத் தழுவித் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராகிய வின்ச், ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குக் கூறியதாகப் பின்வரும் கண்ணிகள் எழுதப்பட்டுள்ளன''

என்று பாரதியார் குறிப்புரை எழுதியுள்ளார். பாடுவதற்கேற்ற ராக—தாளக் குறிப்புகளையும் தந்துள்ளார், பாரதியார். ராகம்—தண்டகம், தாளம்—ஆதி. 'ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது'' எனும் மற்றொரு தலைப்பும் இந்தக் கவிதைக்கு உண்டு.

'கப்பலோட்டிய தமிழர்' வ. உ. சி.யின் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பிரசாரக் கலை எவ்வாறெல்லாம் வெளிப்பட்டது என்பதை இந்தக் கவிதை சிறந்ததொரு வரலாற்று ஆவணமாக அமைத்துத் தந்துள்ளது. ஆகவே, கவிதை முழுவதையும் இங்கு தருவது, விரும்பத்தக்கதாகும்.

1. நாட்டி லெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்—கனல் மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன். (நாட்டி)

2. கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்டம் நாங்களெ டுக்கவென்றேகப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய். (நாட்டி)

3. கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்—சட்டம்—மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறத்த லிழிவென்றே
யேசினாய்—வீரம்—பேசினாய். (நாட்டி)

4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்—ஆசை—யூட்டினாய். (நாட்டி)

5. தொண்டொன் றேதொழி
லாக்கொண்டிருந்தோரைத்
தூண்டினாய்—புகழ்—வேண்டினாய்
கண்டகண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்—சோர்வை—யோட்டினாய்.
(நாட்டி)

6. எங்கு மிந்தஸ்வ ராஜ்ய விருப்பத்தை
ஏவினாய் — விதை — தூவினாய்
சிங்கம் செய்யுந் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ — நீங்கள் — உய்யவோ? (நாட்டி)

7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருந்திடச்
சொல்லுவேன் — குத்திக் — கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் — பழி — கொள்ளுவேன். (நாட்டி)

இவ்வாறு சீறிக் கறுவி சினமொழி செப்பிய ''கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி'', பின்வருவது:

1. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் — இனி — அஞ்சிடோம்;
எந்த நாட்டிலு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? — தெய்வம் — பார்க்குமோ?

2. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் — முடி — தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? — அவ — மானமோ?

3. பொழுதெல் லாமெங்கள் செல்வங்கொள்ளை கொண்டு
போகவோ — நாங்கள் — சாகவோ?
அழுதுகொண் டிருப்போமோ? ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ? — உயிர் — வெல்லமோ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ — பன்றிச் — சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்க ளோவிது
நீதமோ? — பிடி — வாதமோ?

5. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ? — மனஸ் — தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ — இதிற் — செற்றமோ?

6. ஒற்று மைவழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம் — நன்கு — தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள்செய் யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம் — சித்தம் — கலைவுறோம்.

7. சதையைத் துண்டுதுண் டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ? — ஜீவன் — ஓயுமோ?
இதயத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ? — நெஞ்சம் — வேகுமோ?

'விசாரணை நாடக'த்தின் இறுதிக் காட்சியாக, வ.உ.சி.-குழுவினரை சிறையில் அடைக்கும் காட்சியை யும் விஞ்சு காட்டிவிட்டார். ஆம்; ''வாட்டியுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே; மாட்டுவேன் — வலி காட்டு வேன்'' என பாரதியார் பாடியதற்கேற்ப தனது ஆணவ மிரட்டலை 12-ந் தேதி நீதிமன்றத்தில் செயற்படுத்தி விட்டான் கலெக்டர் விஞ்சு. வ. உ. சி. தந்த ஜாமீன் மனுவை ஏற்க மறுத்தான் விஞ்சு; குற்றவியல் சட்டத்தின் 107-வது பிரிவின் கீழ் வ. உ. சி.யை கைது செய்ய ஆணை பிறப்பித்தான். இந்த நடவடிக்கையின் சட்ட அம்சத்தைப் பற்றி இலண்டனில் இருந்து வெளிவந்த 'இந்தியா' இதழில் (24-4-1908-இல்), ''தூத்துக்குடி யில் குழப்பம்'' எனும் தலைப்பில் வெளிவந்த செய்தி, பின்வருவது :

''தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் நிகழ்ந்த சில அரசியல் கிளர்ச்சிகள் காரணமாக, கலெக்டர் விஞ்சு, சிதம்பரம் பிள்ளை மற்றும் இருவர் மீது குற்ற வியல் சட்டம் 107-வது பிரிவின் கீழ் எடுத்த நடவடிக்கை களைப் பற்றி முன்பே நமது பத்திரிகையில் விமர்சனம் செய்துள்ளோம். இந்தப் பிரிவில் மாஜிஸ்ட்ரேட் கவனிக்க வேண்டிய ஒரு செய்தியுள்ளது. ஒருவர் அமைதி, ஒழுங் கைக் குலைக்கக் கூடியவர் என்றால் அவரிடம் விளக்கம் கோர வேண்டும். ஓராண்டிற்கு மேல் செல்லாது, அவர் அமைதியைக் காக்க வேண்டும் என அவரிடம் உறுதி மொழி வாங்க வேண்டும். அதே பிரிவின் நான்காம்

துணைப் பிரிவின் கீழ் மாஜிஸ்ட்ரேட்டிற்கு, விசாரணை முடியும் வரை ஒருவரைக் காவலில் வைக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது சட்டப்படி திருநெல்வேலி மாஜிஸ்ட்ரேட், சிதம்பரம் பிள்ளையையும் அவருடைய தோழர்களையும் சிறைவைத்தாகத் தெரிகின்றது.''

விபின் சந்திரபால் விடுதலை நாள் கொண்டாட்டத்தைத் தொடர்ந்து வ. உ. சி. மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவரே 'இந்து' பத்திரிகைக்கு தந்திச் செய்தி மூலம் தெரிவித்துள்ளார். இதைப் பற்றிய ஒரு குறிப்பு, வருமாறு:

''வங்காள தேசபக்தர் பிபின் சந்திரபால் விடுதலை விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப் பெற்ற பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்களே தமக்கு எதிராக எடுக்கப் பெற்ற நடவடிக்கைகளைப் பற்றி 'இந்து'விற்கு தந்தி மூலம் ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். பிறகு தொடர்ந்து நடந்த விசாரணையில் இந்தத் தேசபக்தர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய போதிய கால அவகாசமும் தரப்படவில்லை. அவர்கள் சிறையிடப்பட்டனர்.''

விஞ்சுவின் உத்திரவு பற்றி திலகர் தமது 'மராட்டா' இதழில், 22-3-1908-இல், பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

''குற்றவியல் சட்டம் 107-வது பிரிவின் கீழ் மிஸ்டர் பிள்ளை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது, தவறாகும். ஆனால், மாஜிஸ்ட்ரேட்டின் முடிவு இறுதியானதாகும். இவ்வாறாக நடவடிக்கைக் எடுப்பதற்குமுன் அவரை ஜாமீனில் விடுவிக்க உத்திரவிட வேண்டும். ஜாமீன் எடுக்கப்பட வில்லையென்றால் அவரை சிறைப்படுத்தலாம். ஆனால், மாஜிஸ்ட்ரேட் தம் விருப்பப்படி செய்தாரென்றால், செய்யலாம். உயர்நீதி மன்றம் தலையீடு

வராதவரையிலும், எப்படி மாஜிஸ்ட்ரேட் செய்வதைத் தடுக்க முடியும்?''

விஞ்சுவின் இந்த உத்திரவு, உயர்நீதிமன்றத்தில் செல்லுபடியாகாது என்று தீர்ப்பு பெறுவதற்கு முன்பும், வ. உ. சி. பாளையம் கோட்டை சிறையில் சிவா, பத்மநாப ஐயங்காருடன் கைதியாக அடைக்கப்பட்டதற்கு பின்பும், தூத்துக்குடி—திருநெல்வேலியில் தன்னிச்சையாகத் தோன்றிய மக்கள் எழுச்சி ஒரு 'கலகமாகவே' கருதப் பட்டது. இதற்கு அரசாங்கக் குறிப்புகளில், ''திருநெல் வேலி கலகங்கள்'' என்று பெயரிடப்பட்டது. இது கலக மன்று; எரிமலைக் குமுறலாக வெளிப்பட்ட மக்களின் உண்மையுணர்ச்சியாகும்.

எரிமலை வெடித்தது

வ. உ. சி. யும், சிவாவும், பத்மநாப ஐயங்காரும் வஞ்சகமாகச் சிறையில் அடைக்கப்பட்டச் செய்தி பரவி யதும் திருநெல்வேலி—தூத்துக்குடி மக்கள் ஆவேசப் புயலெனக் கிளர்ந்தெழுந்தனர்; எரிமலைக் குமுறல். என கனன்றனர். திருநெல்வேலியில் காலையிலேயே தன் னிச்சையாகவே கடையடைப்புகள் நிகழ்ந்தன; போக்கு வரத்துகள் நின்றன; மக்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர் வலங்கள் திரண்டன; திருநெல்வேலி இந்துக் கல்லூரி மாணவர்கள், கல்லூரியை விட்டு வெளியேறி ஊர் வலங்களில் கலந்துக் கொண்டனர். சர்ச் மிஷன் சொஸைடி கல்லூரியை மூடும்படி ஊர்வலத்தின் வற் புறுத்தியபொழுது, நிர்வாகம் மறுத்தது. இதனால் அந்தக் கல்லூரி மீது தாக்குதல். நிகழ்ந்தது; ஆயிரக்கணக்கில் மக்கள் அணிஅணியாகத் திரண்டெழுந்தனர்; நகர மன்றம் சூறையாடப்பட்டது; அலுவலக ஆவணங்கள் எடுத்தெறியப்பட்டன; கொளுத்தப்பட்டன; அஞ்சலகங் கள் தீக்கிரையாயின; தந்திக் கம்பங்கள் சாய்க்கப்பட்டன; நகரமன்றத்திற்குச் சொந்தமான மண்ணெண்ணெய் கிடங்கு எரியுண்டது; இந்தத் தீ மூன்று நாட்கள் தொடர்ந்து எரிந்தது; காவல் நிலையம் தாக்கப்பட்டது,

அங்கிருந்த ஆயுதங்களும், ஆவணங்களும் அழிக்கப் பட்டன; சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்; மாவட்டத் துணை 'முன்சீப் கோர்ட்' தாக்கப்பட்டது; மக்களிடம் எரிமலைக் குமுறல் மாலைநேரமானதும் கூட அடங்க வில்லை; தெரு விளக்குகள் உடைக்கப்பட்டன.

மாவட்ட கலெக்டர் விஞ்சு காவல் படையுடன் கல வரப் பகுதிகளுக்கு விரைந்தார். துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களில் நால்வர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார்கள். இந்த நால்வரில் இருவர் இந்துக்கள், ஒருவர் இஸ்லாமியர், ஒருவர் ஆதிதிராவிடர். ''சொந்தச் சகோதரர்களைச் சுடாதீர்கள்; அந்நியர்களை வெள்ளையர்களைச் சுடுங்கள்'' என காவல் படையி னரை நோக்கி மக்கட் கூட்டம் கூவியது.

இந்தச் செய்திகள் எல்லாம் 1911-இல் அரசாங்க ஆவணத்தில் கூறப்பட்டுள்ளன. திருநெல்வேலிக்கு சற்றும் பின்தங்காமல் தூத்துக்குடியிலும் மக்கள் கிளர்ந் தெழுந்தனர். 12-ந்தேதியன்று தூத்துக்குடி மக்கள் அமைதியிழந்து தெருக்களில் திரண்டனர். 'வந்தே மாதரம் பிள்ளை'யின் ஊர் என்பதை எதிரொலிக்க, 'வந்தே மாதரம்' என்று முழங்கியவாறே ஆரவாரம் செய்தனர். 13-ந் தேதியன்று காலையில் கடையடைப்பு களும், ஆர்ப்பாட்டங்களும் தீவிரமடைந்தன. தூத்துக்குடி மக்கள் எழுச்சியை ஒடுக்குவதில் ஆஷ் செய்த கொடுமை களையும், மக்கள் எதிர்ப்புகளையும் வ. உ. சி. தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு :

ஆசு படையுடன் அணுகி அவரை
மோசம் செய்திட மூட்டிக் கலகம்
தடியில் அடிப்பித்தான் சார்ந்தநம் மவரை;
வெடியால் சுட்டான் வெளிவர விடாது.
ஆசுவின் குதிரையை அடித்தவர் தள்ளினார்,
நாசமென் றுயிர்க்கென நவின்றவன் ஓடினான்!
தடித்த கொழுத்த சப்பின்ஸ் பெக்டரை

அடித்தும் மிதித்தும் அளவில புரிந்தனர்.
சுட்ட வெடிகளைத் தூள்தூ ளாக்கி
எட்டிய இடங்களில் எறிந்து தொலைத்தனர்.
தெருவெல்லாம் நம்மவர் சிரித்துத் திரிகிறார்
மருவிலேம் என்றவர் மனத்தினில் உன்னியே.
வெள்ளையர் சகலரும் மிகமிக நடுங்கிக்
கள்ளரைப் போன்றவண் கரந்து மறைந்தனர்.

தூத்துக்குடியில் வெடித்தெழுந்த வெள்ளையர் எதிர்ப்புக் காரணமாக, ஊரில் இருந்த வெள்ளையர்கள் கடலில் இருந்த கப்பல்களில் இராப் பொழுதைக் கழித்தனர்.

காந்தியடிகள் சகாப்தத்தில் அகிம்சை நெறி வலியுறுத்தப்பட்டது. திலகர் சகாப்தத்தில் அரசாங்க வன்முறைக்கு எதிராக மக்கள் வன்முறை தோன்றியது, தவிர்க்க முடியாததாயிற்று.

தூத்துக்குடி மக்கள் எழுச்சியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம், கிளர்ச்சியில் தொழிலாளர்கள் கலந்துக் கொண்டது. கோரல் மில் தொழிலாளர்கள், பெஸ்டு அண்டு கம்பெனித் தொழிலாளர்கள், நகர மன்றத் தோட்டித் தொழிலாளர்கள், கசாப்புக் கடைக் காரர்கள், குதிரை வண்டிக்காரர்கள் ஆகிய அடித்தள மக்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இவற்றுள் கோரல் மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் மார்ச் 14 முதல் 19-ந்தேதி வரையில் நடைபெற்றது. இந்த வேலைநிறுத்தம் தொழிலாளர்களுடைய பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக அல்லாமல் ஓர் அரசியல் தலைவர் சிறைப்படுத்தப்பட்டதை எதிர்த்து, அரசியல் நோக்கத்துடன் செய்யப்பட்ட வேலைநிறுத்தம் என்பது தனி கவனத்திற்குரியது. பொதுமக்கள் கிளர்ச்சியில் தொழிலாளர்கள் பங்கேற்பும் இதன் மூலம் முதன்முதலாக நிகழ்ந்தது.

தொழிலாளர்களின் இந்த அரசியல் விழிப்புணர்வுடன் கூடிய வேலை நிறுத்தமானது, பம்பாய் ஜவுளி மில் தொழிலாளர்கள், திலகர் சிறைப்பட்டபொழுது,

செய்த வேலை நிறுத்தத்தை ஒத்தது. வ.உ.சி. சிறைப் பட்ட இரு மாதங்களுக்குப் பிறகு ஜூலையில் திலகருக்கு ஆறாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து பம்பாய் ஜவுளிமில் தொழிலாளர்கள் ஜூலை 23 முதல் 28-ந் தேதி வரையில் வேலை நிறுத்தம் செய்தனர். தூத்துக்குடியில் கோரல் மில்லின் 500 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். பம்பாயில் பல்லாயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

திலகருக்கு ஆதரவாக நிகழ்ந்த இந்த வேலைநிறுத் தத்தை, இந்தியாவின் உழைக்கும் தொழிலாளர்களின் முதல் அரசியல் நடவடிக்கையாகும் என்று ஒரு கருத்து கூறப்பட்டது. ஆனால் இந்தக் கருத்து, தவறானது, கோரல்மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், பம்பாய்த் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு இரு மாதங்கள் முந்தியதாகும். தொழிலாளர்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு மதிப்பிடக் கூடாது, மில்லில் பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக் கையை கணக்கில் கொள்ள வேண்டும். அத்துடன் அரசியல் நடவடிக்கையில் எது முற்பட்டது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, இந்தியாவில் முதன்முறையாக அரசியல் உணர்வுடன், ஓர் அரசியல் தலைவருக்கு ஆதரவாக நிகழ்ந்த முதல் அரசியல் வேலை நிறுத்தம் வ.உ.சி.யுடன் தொடர்புடையதாகும்.

பம்பாய் ஜவுளி மில் தொழிலாளர் வேலைநிறுத் தத்தை, ரஷ்யாவில் அக்காலத்தில் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருந்த தோழர் லெனின், ''புராலிடேரி'' எனும் போல்ஷ்விக் செய்தி இதழில், 23-7-1908-இல், பின் வருமாறு மதிப்பிட்டுள்ளார்.

''இந்தியாவில் எழுத்தாளர்களையும், அரசியல் தலைவர்களையும் எளிய மக்கள் ஏற்றிப் போற்றிட எழுந்து விட்டனர். பிரிட்டிஷ் குள்ள நரிகள் இந்திய ஜனநாயகவாதியான திலகருக்கு கேவலமான தண்டனையை

வழங்கி விட்டனர். நீண்டகால நாடு கடத்தப்பட்டத் தண்டனை வழங்கப்பட்டது. பண மூட்டைகளின் அடிமைகள் பழிவாங்கி விட்டனர். இது, பம்பாயில் தெருக்கிளர்ச்சிகளையும், வேலை நிறுத்தங்களையும் எழுப்பிவிட்டது.''

இங்கு திலகரைக் குறிப்பிட்டு தோழர் லெனின் சாற்றியது, வ. உ. சி.க்கும் பொருந்தும். தென்னிந்தியா வில் முன்னோடியாகத் திகழ்ந்த அரசியல் சார்புடைய ஒரு வேலை நிறுத்தம் பற்றியச் செய்தி தோழர் லெனின் பார்வைக்கு செல்லாமற் போனது, துரதிர்ஷ்டவச மாகும்; அவர் அறிந்திருந்தால், அரசியல் உணர்வும், தேசியமும் ஒவ்வொரு இந்தியரிடமும் ஆழமாக ஊடு ருவி உள்ளதென்றும், அதனுடைய எழுச்சி இந்திய தேசத்தின் தென்கோடியில் இருந்து எழுச்சிபெற்ற தென்றும் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

கோரல் மில் தொழிலாளர்கள் இரண்டாவது முறை யாக செய்த வேலை நிறுத்தம் அரசியல் சார்பு பெற்ற தால், முதல் வேலைநிறுத்தத்தில் வென்றெடுத்த ஊதிய உயர்வை இழக்க வேண்டியதாயிற்று.

திருநெல்வேலி, தூத்துக்குடியைத் தொடர்ந்து 14-ம் தேதியில் திருநெல்வேலி அருகே தச்ச நல்லூர் எனும் சிற்றூரில் மக்கள் வ. உ. சி.க்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தனர். தெருவிளக்குகள் உடைக்கப்பட்டன; குப்பை வண்டிகள், கழிவுநீர் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டன.

திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய ஊர்களில் 89 பேர்கள் கைது செய்யப் பெற்றனர். இதில் ஒருவர் மட்டும் விடுதலையானார்; பிறர் யாவரும் பல்வேறு தண்டனைகளைப் பெற்றனர்.

மேற்கூறப் பெற்ற மூன்று ஊர்களிலும், அமைதி யைக் காக்க நிறுத்தம் பெற்ற தண்டனை விதிக்கும் அதிகாரம் பெற்ற போலீஸ் படையின் நிர்வாகச் செல விற்கானத் தொகையை அந்தந்தப் பகுதி மக்களே ஏற்க

வேண்டும் என்ற தண்டனையும் விதிக்கப்பட்டது. இதில் யார் யாருக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்பதைப் பற்றி விஞ்சுவின் அதிகாரபூர்வமான குறிப்பில் சாதி, மதக் கண்ணோட்டம் செலுத்தப்பட்டது. ஐரோப்பியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு தண்டத் தீர்வையில் இருந்து விதிவிலக்கு அளிக்கலாம் என்றும், இந்து நாடார்கள், பரதவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதில் சிக்கல் உள்ளதென்றும் விஞ்சு குறிப்பிட்டார். வேளாளர்களும், பிராமணர்களும் வசமாகச் சிக்கிக் கொண்டதாக விஞ்சு குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

பத்திரிகைகள் கருத்துகள்

பாரதியாரின் 'இந்தியா' இதழில், மார்ச் 21, 1908-இல், ஒரு 'கார்ட்டூன்' வெளிவந்தது. இதில் மக்கள் உணர்ச்சி என்னும் வெடிமருந்துக்கு அருகே அநீதி என்ற சுருட்டை விஞ்சு புகைத்துக் கொண்டிருப்பதாகச் சித்தரிக்கப்பட்டது.

24-3-1908-இல் 'சுதேசமித்திர'னில் வெளிவந்த தலையங்கத்தின் ஒருபகுதி வருமாறு:

''தற்கால ஜனங்கள் பயந்தவர்கள் போல இருக்கக் கூடும். ஆனால் அவர்கள் மனதின் கொதிப்பை மிஸ்டர் விஞ்சு போன்ற ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் எப்படி அறிவார்கள்? பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் ஆத்திரப்படும் ஜனக்கும்பல்களைத் துப்பாக்கியால் சுட்டுப் பயப்படுத்தித் துரத்திவிடக் கூடும். நமது ஜனங்களுக்கோ ஆயுதங்களில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்தார், ஜனங்கள் ஆயுதம் தரிக்காமல் கோழைகளாய் உத்தியோகஸ்தர்கள் அவர்களை எப்படி மிதித்து உதைத்தாலும் பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்றே ஒரு வருஷத்துக்கு முன்னால் நம்மை ஆயுதங்கள் வைத்திருக்கக் கூடாதென்று சட்டஞ் செய்து தடுத்து விட்டார்கள். ஆயினும் கடவுள் தமது சிருஷ்யில் பலவீனங்களுக்குத் தங்களைக் காத்துக் கொள்ள உபாயங்களைக் கற்பிக்காமற் போகவில்லை.

''கையில் பலமில்லாவிட்டாலும் மனதில் புத்தி யிருக்கிறதல்லவா? இந்தப் புத்தியை உபயோகித்து நாம் ஒற்றுமையுடன் கூடியுழைப்போமானால் துப்பாக்கியால் ஆகக் கூடியது மிகவும் சொற்பம். திருநெல்வேலி தூத்துக்குடி ஜனங்கள் ஆத்திரப்பட்டு முரட்டுச் செய்கை களை செய்தது தப்பு. நாம் சட்டத்தை மீறாமலே அனுஷ் டிக்கக் கூடிய பலமான உபாயங்களுமுண்டு. தென்னாப் பிரிக்காவில் நம் சகோதரர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் கூட்டமாகக் கூடி கட்டிடங்களைக் கொளுத்து வதும் கல்லாலடிப்பதும் போன்ற துஷ்டச் செய்கை களைச் செய்து இமிசைப்பட்டார்களா? வேறுவிதமாக யல்லவோ இமிசையைக் கோரி வெற்றி பெற்றார்கள்?

''இமிசைக்குப் பயந்தால் நாம் எப்படி சுதந்திரம் பெறுவோம்? சிதம்பரம் பிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் நேரிட்ட துன்பங்கள் நம்மெல்லோர்க்கும் நேரிட்டதாக நினைத்துத் தோளோடு தோள் ஒன்றாக நிற்க வேண்டும்.''

இங்கு சுதேசமித்திரன் தலையங்கத்தில் பொது மக்கள் வன்முறை செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடாது எனும் கருத்தை வெளியிட்டு, அதற்கு மாற்றாக தென் னாப்பிரிக்காவில் அக்கால்த்தில் புதிய அறப்போர் வழிமுறைகளாக அகிம்சை, சத்யாக்ரக நெறிகளை கையாண்டதைச் சுட்டிக்காட்டியது. அரசாங்க வன் முறைச் செயல்களையும் சுதேசமித்திரன், மேற்படி தலையங்கத்திற்கு முன், 17-3-1908-இல் துப்பாக்கிச் சூட்டிற்கு நியாயமில்லை என்று எழுதியது. ''மிதமற்ற அதிகாரத்தை உபயோகித்து உயிர்ச் சேதம் செய்வது ராஜாங்க காரியமல்ல. ருஷியாவில் இப்படி நடக்கிறது; இப்போது பிரிட்டிஷ் இந்தியாவிலும் சுதந்திரத்துக்குப் போராடும் ஜனங்களைப் போலீசைக் கொண்டு கொல் வது ஒழுங்காகி வருகின்றது'' என்றும் சுதேசமித்திரன் சாடியது.

'இந்து' நாளிதழ் மக்கள் வன்முறையைக் குறை கூறினாலும், நிலைமையை சமாளிக்க அதிகாரிகள் தவறி யதையும் பின்வருமாறு எடுத்துக்காட்டியது:

''அங்கு நடைபெற்ற எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது, மக்களுக்கு சொல்ல வேண்டிய முறையில் சொல்லியிருந்தால் செவிசாய்த்திருப்பார்கள். சமாதானப் படுத்தியும், தன்வயப்படுத்தும் வகையில் தூண்டியும் செயற்பட ஐரோப்பிய அதிகாரிகள் அப்பொழுது முயற்சி செய்யவில்லை எனத் தெரிகின்றது.

தூத்துக்குடி அரசியல் நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்து விவரமறிந்து வந்த அரவிந்த கோஷ் ''வந்தே மாதரம்'' வார இதழ்களில், ''சென்னையில் இருந்து ஓர் எச்சரிக்கை'' என்று 22-3-1908-ஆம் இதழிலும், ''சென்னையில் சுதேசி எதிர்ப்பு'' என்று 29-3-1908-ஆம் இதழிலும் தமது கருத்துகளை எழுதினார்.

22-3-1908-இல் வெளிவந்த கருத்துகள், பின் வருவன :

''அரசாங்க அதிகாரிகளுக்கும், மக்கள் கட்சித் தலைவர்களுக்கும் திருநெல்வேலியில் தோன்றிய எழுச்சி முக்கியமான ஓர் எச்சரிக்கையாகும். அதிகார வர்க்கத் திற்கு காண்பதற்கு கண்கள் இருந்திருந்தால், கேட்பதற்கு செவிகள் இருந்திருந்தால், பொறுமை, துன்பம் எனும் மெல்லிய மேல் மட்டத்திற்குக் கீழே பயங்கரமான தீ எரிந்துக்கொண்டிருப்பதை அடையாளம் கண்டிருப்பார் கள். இது, எந்த நேரத்திலும் பொதுவான பெருங்கலகத் தில் கொண்டுவிடும் ... சில ஆண்டுகளுக்கு முன்பு கிளர்ச்சிக்காரர்கள் முரட்டுத்தனமாகப் பேசியிருக்கக் கூடும். அப்படியிருந்தும், நிர்வாகத்திற்கு எதிராக நகரம் முழுவதிலும் உள்ள மக்களிடையே பொறுப்பற்ற முறை யில் கலகம் எழுச்சி பெறவில்லை. மக்களை சிறைப் படுத்துவதோ அல்லது இராணுவத்தினரின் குண்டு வீச்சுகளோ மக்கள் எதிர்ப்புணர்வை நசுக்க முடியாது என்பது மற்றும் ஒரு முக்கியமான விஷயமாகும். இத்தகைய ஒடுக்குமுறை, பயங்கர கடுங்கோபத்தைச் சிலிர்த்தெழச் செய்யும். இந்தக் கடுமையான சீற்றம், வைக்கோலில் தோன்றும் அற்பத் தீ அன்று; எரிமலையின்

ஆழத்தில் இருந்து விர்ரென்று மிக விரைந்துத் தாவிப் பாயும் தீயாகும். இந்த எரிமலைத் தீயை அடக்கு முறை யால் வென்றதற்கு உலக வரலாற்றில் சான்று இல்லை...

''தூத்துக்குடியில் தலைவர்களுடைய உணர்ச்சி யூட்டும் குரல்கள், நம்பிக்கைத் தரும் மலர்ந்த முகங்கள், வலிமையும் அமைதியும் நிறைந்தப் பண்புகள் ஆகியன மக்களை கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய ஆர்வத்தையும், தீர்மானமான தைர்யத்தையும் அளித்து செயலாற்றத் தூண்டின. இத்தகைய உணர்ச்சியூட்டும், அதே சமயத் தில் அமைதிப்படுத்தும் முகங்களை அப்புறப்படுத்தியது, தவிர்க்க முடியாத வன்முறையில் கொண்டு செலுத்தி யது. இதனால் தேசம் முழுவதுமே, பாழ்படுத்திய பயங்கரத்தை அறிந்து திடுக்கிட்டது. இதே சந்தர்ப்பத்தில் வேறுவிதமாக ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. இதே போன்ற குழப்பத்தின் உச்சக் கட்டத்தில் ஐரோப் பிய மக்கட் கூட்டம் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.''

அரவிந்த கோஷின் நடையழகு மிக்க மற்றொரு கட்டுரையான ''சென்னையில் சுதேசி எதிர்ப்பு'' எனும் கட்டுரையின் ஒரு பகுதி, வருமாறு :

''திருநெல்வேலி குழப்பங்களுக்கான காரணங்களை ''மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்'' பத்திரிகை மிகச் சரியாகவே யூகித்துணர்ந்து எழுதியுள்ளது. சுதேசி நாவாய்ச் சங்கத் தின் அமைப்பும், அது வெற்றியடையாமல் போக தடை களை ஏற்படுத்திய முயற்சிகளும், குழப்பங்களுக்குக் காரணங்களாகும் என்று அந்தப் பத்திரிகை சரியாகவே குறிப்பிட்டுள்ளது. இரு தரப்புகளிலும் போராட்டம் தீவிரமான உணர்வுகளை விளைவித்தது. வர்த்தகம் தொடர்பான போராட்டம் விரிவடைந்தபொழுது மக்கள் பிரிட்டிஷ் மூலதனத்திற்கு எதிராக இந்தியத் தொழி லாளர்களை ஆதரித்தனர். கோரல் மில் தொழிலாளர் விவகாரங்களில் ஆங்கிலேய அதிகாரிகள் பொறுமை யிழந்து, தங்கள் வர்த்தக சாதி நண்பர்களுக்கு உதவ

விரைந்தனர். புனிதமான நீதியைத் தவறாகப் பயன் படுத்தியும், அரசாங்க அதிகார பலத்தைக் கொண்டும் தங்கள் வர்த்தக சாதி நண்பர்கள் மேலாதிக்கத்திற்கு துணை நின்றனர். ஆங்கிலேய அதிகாரிகளின், தேவை யற்ற, அநியாயமான இந்தச் செயல் குழப்பங்களுக்கு பொறுப்பாகும்; திருநெல்வேலி தெருக்களில் இரத்தக் காயங்களுடன் கேட்பாரற்றுக் கிடந்த பிணங்களுக்கு அவர்களே காரணம்; கவனிப்பாரற்றுப் பிணங்கள் கிடந் திருக்கலாம், ஆனால் தெய்வீக கணக்கு நூல்களில் மறக்கப்படவில்லை; கவனமாக பதிவாகியுள்ளது.

அரவிந்த கோஷ், வந்தே மாதரத்தில் எழுதியதைப் போலவே, திலகரும் அவருடைய 'மராட்டா' எனும் ஆங்கில இதழில், 22-3-1908-இல் ''திருநெல்வேலி குழப்பங்கள்'' எனும் தலைப்பில் எழுதியதாவது:

''13-ந் தேதி நிகழ்ந்த திருநெல்வேலி குழப்பங்கள் தெற்கு மாகாணத்தின் செயல் முறை அரசியல் வரலாற் றில் திட்டமிடப்பட்டு நிறுவப்பெற்ற முக்கியமானச் சம்பவமாகும். இவ்வாறு நாம் சிந்தித்து சொல்வதற்குக் காரணம் யாதெனில், இந்தக் குழப்பங்களின் மூல வூற்றை அரசியல் தன்மையற்ற தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் காண்கிறோம். இந்த நிகழ்ச்சியின் நினைவு பிற்காலத்தில் செயல்முறை அரசியலுக்குத் தேவையான சக்திமிக்க பொது மக்கள் அதிருப்தியை சந்தேகத்திற்கிட மில்லாமல் விழிப்படையச் செய்தது.... மிஸ்டர் பிள்ளை, திருநெல்வேலி — தூத்துக்குடி கடைகாரர்களுக்கு பேருதவி புரிந்துள்ளார். ஆகவே, அவர்கள் அவருக்கு இழைக்கப் பெற்ற அநீதிக்காக இயற்கையாகவே வருத்தமுற்று கடை யடைப்பு செய்தனர்.... தங்கள் நகரத்தைச் சார்ந்த மிஸ்டர் பிள்ளைக்கு கொடூரமான தவறு இழைக்கப் பட்டு விட்டதாக மக்கள் மனங்களில் ஆழப்பதிந்து விட்டது. இந்த நிலையில் அவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்னும் பிரக்ஞை இல்லாதவர்களாகி விட்டார்கள். புயல் உருவாகிவிட்டால், அது எந்தத் திசையில் செல்லும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

மக்கள் பயங்கரத் தவிப்பில் இருக்கும்பொழுது, அவர்கள் என்ன செய்வார்கள், எப்படி செய்வார்கள் என்று கூறமுடியாது. அங்கு ஒரு சம்பவத்திற்கும், மற்றொரு சம்பவத்திற்கும் இடையே தர்க்கரீதியானத் தொடர்பைப் பார்க்க முடியாது. அந்தச் சந்தர்ப்பத்தில் கிளர்ச்சியைத் தலைமைத்தாங்கி நடத்துபவர்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்தில் எவ்வாறு செயல்படுவார்கள் என்பதையும் கூற முடியாது. ஆகவே, இங்கும் (திருநெல்வேலி குழப்பங்கள்) அதே நிலைதான்.''

போராட்டக் காலங்களில் மக்கள் திரளின் மனோ தத்துவப் போக்குகளை மிகத் துல்லியமாக திலகர் மேலே சுட்டிக்காட்டியுள்ளது, கவனிக்கத்தக்கது.

திருநெல்வேலி மக்கள் எழுச்சியை, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் 'திருநெல்வேலி குழப்பங்கள்' எனப் பெயரிட்டதால் அதையே வைத்து விமர்சிக்க வேண்டியுள்ளது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 'திருநெல்வேலி குழப்பங்கள்' பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது. கேள்வியை எழுப்பிய ரீஸ் என்பவர் சென்னையில் பணியாற்றியவர்; இந்தியர் நலன்களின் எதிரியும் ஆவார். அவர் எழுப்பிய கேள்வியும், தரப்பட்ட பதிலும் வருமாறு.

ரீஸ்: ''திருநெல்வேலி குழப்பத்தைப் பற்றி இந்திய ராஜாங்கச் செயலாளர் இந்த அவையில் செய்தி ஏதாவது தெரிவிக்க இயலுமா?''

பதில்: ''கடந்த சனிக்கிழமையன்று திருநெல்வேலியில் கலகம் நிகழ்ந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர மன்ற, தபால் துறை, காவல் துறை அலுவலகங்கள் சூறையாடப் பெற்று எரிக்கப்பட்டதாக அந்தச் செய்தி கூறுகின்றது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, மாஜிஸ்ட்ரேட்டும், காவல் துறை கண்காணிப்பாளரும் போலீசார் சுடுவதற்கு உத்திரவிட்டனர். கலகம் நின்றது. நான்கு பேர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.''

சென்னை சட்டமன்றத்திலும் திருநெல்வேலி மக்கள் கிளர்ச்சி பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. பி. நரசிம் மேஸ்வர சர்மா என்னும் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் வருமாறு:

''கொல்லப்பட்டவர்கள் நால்வர்; ஆனால் காய முற்றவர்கள் எண்ணிக்கை தெரியவில்லை. முதலில் எச்சரிக்கை செய்ய சுடப்பட்டது. பிறகு, ''ரிசர்வ் போலீசார்' கிளர்ச்சிக்காரர்கள் மீது இருமுறை சுட்டனர். கோயிலுக்குப் போகிற வழியிலும், காவல் நிலையத்தின் அருகிலும் சுட்டனர். எவ்வளவு மக்கள் கூடியிருந்தனர் என்பதை உறுதியாகக் கூறவியலாது. ஆனால் பல்லா யிரக்கணக்கில் மக்கட் கூட்டம் இருந்தது என்று மதிப் பிடப்பட்டது.''

இந்தக் காலக்கட்டத்தில் அயல்நாடுகளில் இந்திய தேசியப் புரட்சி வீரர்கள் சிறு—சிறு குழுக்களாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உலகப் பொதுக் கருத்தை உருவாக்கியும், இந்தியாவில் விடுதலை இயக்கப் புரட்சியாளர்களுக்கு உதவியும் வந்தனர்.

இலண்டனில் 'இந்தியன் ஹோம்ரூல் சொஸைடி' எனும் பெயரில் இந்திய தேசியப் புரட்சி வீரர்களால் **1905**-இல் அமைக்கப்பட்டது. இதை நிறுவி புரவலராக விளங்கியவர் பண்டிட் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா எனும் அறிஞராவார். இவர் 'திலகர் வழி'யை ஆதரித்தவர். இலண்டனில் கல்வி கற்க வரும் இந்திய மாணவர் களுக்காக 'இந்தியா ஹவுஸ்' எனும் விடுதியை நிறு வியவர். இங்கு வீர சாவர்க்கார், வ. வே. சு. ஐயர், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், எம். பி. டி. ஆசார்யா, மதன்லால் திங்ரா முதலான விடுதலை வீரர்கள் செய்த சாதனைகள் பல. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, ''**இந்தியன் சோஷாஜாலிஸ்ட்**'' எனும் பத்திரிகையை நடத்தி வந் தார். இதில் 'திருநெல்வேலி கிளர்ச்சி' பற்றி ஏப்ரல், **1908**-ஆம் இதழில் பின்வருமாறு எழுதப்பட்டது.

''பிபின் சந்திரபால் விடுதலை பெற்றதை மகிழ்ச்சியாகக் கொண்டாடிய நிராயுதபாணிகளான, தீங்கற்ற இந்தியர்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளனர். ஓர் ஐரோப்பிய நண்பர் பரிந்துரைத்தது போன்று, ரகசியமான, தீர்மானமான, ஒருங்கிணைந்த அதிருப்தியை— பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியை—உருவாக்குவதே இந்தியர்களுக்கு பாதுகாப்பான திட்டமாகும்.''

கண்டனக் கூட்டங்கள்

வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோரை ஜாமீனில் விடவும் மறுத்து சிறை செய்தக் கொடுமையை எதிர்த்து கண்டனக் கூட்டங்கள் பல நடந்தன. இவற்றுள் கரூரில் நடைபெற்றக் கூட்டம் மிக முக்கியமானது.

காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா (1887-1925) எனும் இருபது வயது இளைஞர் மிகக் கடுமையாகத் தாக்கி பேசினார். இவர் அக்காலத்தில் புகழ்பெற்ற பேச்சாளராக, தேசபக்த வீரராக, அரசியல் வானில் முன்னேறிக்கொண்டு வந்தார். திலகர் · அணியைச் சார்ந்தவர். இவர் 17-3-1908-இல் பேசிய பேச்சு, ராஜநிந்தனை வழக்கிற்குரியப் பேச்சாகக் குற்றம் சாட்டப் பட்டது. வழக்கின் முடிவில் ஐந்தாண்டு கால தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்பு மேல் முறையீட்டில் மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அக்காலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த வழக்கு பற்றிய சில பத்திரிகைச் செய்திகள் வருமாறு:

'கிருஷ்ண பத்திரிகா' எனும் தெலுங்கு பத்திரிகையில், ஜூலை 5, 1908-இல் பின்வரும் செய்தி வெளியிடப்பட்டது.

''கரூரில் பொதுக்கூட்டமொன்றில் மார்ச் 17-இல் கிருஷ்ணசாமி சர்மா பேசினார். தனது பேச்சில் அவர் தூத்துக்குடி மக்கள் அந்நிய வழக்கு மன்றங்களை, கலெக்டர், முன்சீப், போலீஸ் அலுவலகங்களை இடித்துத்

தள்ளியதைப் பாராட்டினார். கரூர் மக்களும் இவ்வழியை ஏன் பின்பற்றலாகாது? இராணுவத்தில் குறைந்த சம் பளம் பெறுபவர்கள் இருக்கின்றார்கள். தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக அவர்கள் வெள்ளையர் முகங்களை ஏன் சுட்டுத் தள்ளக் கூடாது? சுதேசியத்தை ஏன் வளர்க் கக் கூடாது?''

'லாயர்' எனும் ஆங்கில மாத இதழில் 1908 செப்டம்பரில் வெளிவந்த செய்தி, பின்வருவது:

''இந்திய குற்றவியல் சட்டப் பிரிவுகள் 124 ஏ, 153 ஏ, 505-களின் கீழ் கிருஷ்ணசாமி சர்மா மீது ராஜத் துரோகத் தூண்டுதல் வழக்கு தொடுக்கப்பட்டது. செப்டம்பர் 14-இல் தீர்ப்பளிக்கப்பட்டவாறு 124-ஏ பிரிவின் கீழ் ஐந்தாண்டு கால தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டது. பிற பிரிவுகளின் கீழ் தண்டனை தரப்படவில்லை. தீர்ப்பை வழங்கிக் கொண்டிருக்கும் பொழுது நீதிபதி கூறியதாவது, 'சென்னையைக் காட்டி லும் வெளியூர்களில் நிகழ்த்தப்படும் கனல் பறக்கும் பேச்சுகள் மிகவும் ஆபத்தானவை. சென்னையில் உட னடியாக பிரிட்டிஷ் இராணுவத்தை அழைக்க முடியும்.''

பாரதியார் 29-3-1908-இல், சென்னை ஜனசங்கத் தின் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொண்டார். வ. உ. சி. வழக்கு நிதிக்கும், குடும்ப நிதிக்கும் கூட்டத்தில் நன்கொடை வசூல் செய்யப் பட்டது.

திருநெல்வேலியில் நிகழ்ந்த அடக்குமுறையை நேரில் கேட்டறிந்து தமது 'இந்தியா'வில் எழுதுவதற்காக பாரதி யார் ஏப்ரல் 26, 1908-இல் திருநெல்வேலி வந்தார். இதைக் குறிப்பிட்டு அவர் 'இந்தியா'வில் (2-5-1908) எழுதியதாவது:

''நான் ஞாயிற்றுக்கிழமை (26-ம் தேதி) மாலை திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தேன். வந்தவுடனேயே திருநெல்வேலியில் சுடப்பட்டு இறந்த சுதேசிகளின்

பெயர்களை விசாரித்தேன். இங்குள்ள வக்கீல்களும், மற்ற பெரிய மனிதர்களும் இதுவரை இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை செய்யாமலிருப்பது வெகு ஆச்சரிய மாயிருக்கின்றது. அது சாமானியமான விசாரணைக்குத் தகுதியற்ற விஷயமென்று நினைத்து விட்டார்கள் போலும்! அதை விசாரணை செய்யப் புகுந்த நேரத்தி லேயே தமக்கு ஏதேனும் ஆபத்து வரக்கூடுமென்று அஞ்சினார்கள் போலும்! நான் விசாரித்ததில் இதுவரை ஒரு மனிதனுடைய பெயர் மட்டிலுமே தெரிந்திருக் கின்றது ... மற்ற மூன்று பெயர்களையும் அவர்களுடைய விருத்தாந்தங்களையும் தீர விசாரணை புரிந்த பின் எழுதுகிறேன்.''

உள்ளூர் பிரமுகர்கள் எவ்வாறு அஞ்சியொடுங்கி யிருந்தனர் என்பதை பாரதியாரின் மேற்காணும் குறிப் பில் அறிய முடிகின்றது.

இவ்வாறு மக்கள் எழுச்சி ஒடுக்கப் பெற்றக் காலத் தில் விஞ்சு முன்னெச்சரிக்கையாக மேலும் ஒரு திட்டம் வகுத்தான். தனது தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பெற்று, அதன் தீர்ப்பு தனக்கு எதிராகப் போய்விட்டால் என்ன செய் வது என்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்கினான். பிற சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு களைச் சுமத்த சூழ்ச்சி செய்தான், விஞ்சு. இதைப் பற்றி வ. உ. சி., தமது சுய சரிதையில் கூறியதாவது:

''இந்த மத்தியில் எமனெனும் விஞ்சு
தந்தி மூலமாகச் சாற்றிப் பற்பல
மதராஸ் கவர்னரின் மனத்தைத் திருப்பிச்
சதுரமாக ஜனங்களைக் கூட்டி யாம்
தூற்றுக் குடியினும் சொல்லிய நெல்லையினும்
சாற்றிய பிரசங்கம் தம்மிற் பற்பல
இராஜ நிந்தனை இருப்பதாகப்
பிராது கொடுக்கப் பெற்றார் அநுமதி''

மார்ச் 17, 1908-இல் சென்னை அரசாங்கத்திற்கு, விஞ்சு எழுதிய கடிதத்தில், வ. உ. சி. குழுவினர் மீது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 124 ஏ, 153 ஏ பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர அனுமதி கேட்டார். இந்தக் கடிதத்தில் விஞ்சு மேலும் எழுதியதாவது:

''மூன்று கிளர்ச்சிகாரர்களில் சுப்பிரமணிய சிவா மிகவும் மோசமானவர். ஆனால் மற்ற இருவரும் சிவா பேசியக் குரலில் பேசினர்; குற்றம் புரிய உதவும் வகையில் பிரசாரத்தில் உதவினர் ... என்னுடைய நீதிமன்றத்தில் நியாயமான விசாரணையை எதிர்பார்க்க முடியாது எனக் குற்றம் சாட்டி அந்த மூவரும் உயர்நீதிமன்றத்திற்கு வழக்கை மாற்ற முயற்சி செய்வதாக அறிகின்றேன்.''

சென்னை உயர்நீதி மன்றம் வ. உ. சி., சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோரின் மேல் முறையீட்டை ஏற்று விசாரணைக்குப் பிறகு அவர்களை ஜாமீனில் விட உத்திரவிட்டது. இந்த மூவரில் வ. உ. சி.க்கு மட்டும், தூத்துக்குடி வியாபாரிகள் ஜாமீன் கொடுக்கத் திருநெல்வேலி சென்றனர். ஆனால் வ. உ. சி., தமது நண்பர்களுக்கு கிடைக்காத ஜாமீன் தனக்கு வேண்டாம் என மறுத்துவிட்டார். இந்த அரிய பெரிய தோழமையுணர்வைப் பாராட்டி சுதேசமித்திரன், 24-3-1908-ஆம் இதழில், ''**ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் பெருங்குணம்**'' என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதியது.

''ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை வெளியே வந்து மற்ற இருவரையும் மீட்டுக் கொள்வார் என்று வியாபாரிகள் நினைத்திருக்கலாம். ஆனால் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அதற்கு உடன்படவில்லை. 'என்னைப் போலவே தேச நன்மையின் பொருட்டு உழைத்தவர்களாகிய என்னுடைய சகோதர தேசபக்தர்களாகிய ஸ்ரீ சுப்பிரமணிய சிவமும், ஸ்ரீ பத்மநாபஐயங்காரும் சிறையிலிருக்கும் பொழுது அவர்களை விட்டு விட்டு நான் மட்டும் வெளியே வரமாட்டேன். அவர்களுக்கும் எனக்குமாய் ஜாமீன் கொடுத்து மூவரும் ஒன்றாய் வருவோமேயன்றி

நான் மட்டும் தனியே வாரேன்'' என்று மறுத்துச் சிறைச் சாலையில் இருந்து கொண்டார்... 'யான்', 'எனது' என்பது நீங்கித் தெய்வமும் தானும் ஒன்றென நினைந்து ஒழுகுதல் தெய்வபக்திக்கு அழகாதல் போல், தேசமும் தானும் ஒன்றென ஒழுகுதலே தேசபக்திக்கு அழகாகும். இம்முறைப்படி ஆலோசிக்குமிடத்து நமது சிதம்பரம் பிள்ளையும் ஒரு தேசபக்தராகின்றார் அல்லவா? தேச பக்தர்களின் உண்மை லக்ஷணம் இதுவே''.

சுதேசமித்திரன் இவ்வாறு பாராட்டியதற்கு ஒருபடி மேலே சென்று அரவிந்தகோஷ் ''வந்தே மாதரம்'' இதழில் (மார்ச் 27, 1908), ''**நன்று செய்தீர் சிதம் பரம்**'' எனும் தலைப்பில் பின்வருமாறு புகழாரம் சூட்டி யுள்ளார்.

''உண்மையான தோழமையுணர்வு, அரசியல் வாழ்க்கையின் சாரமாகும். இது மனிதர்களை ஒருவ ருடன் ஒருவர் சேர்த்து வைக்கின்றது. அனைத்து இணக்கமான செயல்களையும் ஒட்ட வைக்கும் கலவை யாகின்றது. ஓர் அரசியல் தலைவர், தமது தொண்டர் களுக்காக துன்பமேற்க முற்படும் பொழுது பொதுமக்க ளால் பெரிதும் மதிக்கப் பெற்று புகழ்பெற்ற ஒருவர், தன்னுடைய நண்பர்களையும், சக ஊழியர்களையும் விட்டுவிட்டு வெளியே வர விரும்பாமல் சிறையிலேயே இருக்க விரும்புவது இந்திய அரசியல் வாழ்க்கையின் சின்னமாகும். இது உண்மையாகுகின்றது.

''சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடி செயல்கள் முழு வதிலும் உன்னதமான குணப்பன்பை வெளிப்படுத்தி யுள்ளார். செயல்முறை சக்தியும், உயர்ந்த தார்மீக இலட்சியமும் இணைந்த உண்மையான தேசியவாதி, அவர். தனது சக தோழர்களை விட்டு விட்டு ஜாமீனில் வெளிவர அவர் மறுத்தது மேலும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு பண்பாகும். தேசியம் வேண் டுமா, வேண்டாமா என்பது வெறும் அரசியல் கோட் பாடு அன்று; சமயத்தின் மூச்சு; தார்மீக மனோநிலை.

அதனுடைய செயற்பாடு, வீரம்மிக்கத் தன்னலத் தியாகத்தையும், மகத்தான நோக்கங்களையும் வளர்த்தெடுக்கும் போதனையைத் தருவதாகும். இழந்துவிட்ட பழங்கால ஆர்யச் சான்றோர்களின் இலட்சியங்களை மீண்டும் கொண்டு வந்து சால்பின் சுருதியைக் கூட்ட வேண்டும். அஞ்சாமைப் பண்புகள், திறந்த உள்ளம், அன்பு, நீதி முதலான மூலப்பொருள்களினால் ஒரு தேசியவாதி உருவாக்கப்பட வேண்டும். இத்தகையப் பண்புகளின் முழுமையான முதல் உதாரணமாகத் திகழும் சிதம்பரம் பிள்ளைக்கு நமது அனைத்து மரியாதையும் உரியது; ஆம்; பண்டைய ஆர்யன் மீண்டும் பிறந்து விட்டான். இத்தகைய மானுடனைப் பெற்றுத் தந்த சென்னைக்கு நம் மரியாதை உரியது.''

வ. உ. சி.யை அவருடைய சமகாலத்தில் மனந்திறந்து சொற்சோர்வுபடாமல் வீரயுகப் பண்புகள் துலங்கப் பாராட்டியவர்களுள் அரவிந்த கோஷ் குறிப்பிடத்தக்கவர். பாரதியார், அரவிந்த கோஷின் பாராட்டுரைகளின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி தமது 'இந்தியா' இதழில் (ஏப்ரல் 25, 1908) பின்வருமாறு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்:

''கர்மவீரன்'' என்றும், 'பிரதம ஆரிய புருஷன்' என்றும், 'உயர்ந்த பரித்தியாகி' என்றும் அரவிந்த கோஷ் முதலிய பெரியோர்களால் பாராட்டப்பட்ட ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை''.

சென்னை உயர்நீதிமன்றம் வ. உ. சி. குழுவினரை ஜாமீனில் விடும்படி உத்திரவாகியதைத் தொடர்ந்து, அவர்கள் ஜாமீனில் வெளியே வந்தனர். உடனேயே வ. உ. சி.யும், சிவாவும் புதிய உத்திரவு ஒன்றின் கீழ் சிறை வாயிலிலேயே கைது செய்யப்பட்டனர். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அவர்கள் பேசிய பழைய பேச்சுகள் ராஜ நிந்தனைக் குற்றத்திற்குரியன என்று குற்றம் சாட்டப்பட்டது. பத்மநாபய்யங்கார் பேச்சில் ராஜநிந்தனைக்குரிய விஷயம் இல்லையென்று அட்வகேட் ஜெனரல் கருத்து தெரிவித்ததால் அவர் மட்டும் கைதாகவில்லை.

வ. உ. சி., சிவா மீது மீண்டும் வழக்குகள்

சிவா மீது 124-ஏ பிரிவின் கீழ் வழக்கு தொடரப் பட்டது. 'இந்தியன் பீனல் கோடி'ன் இந்த 124-ஏ பிரிவு, பேச்சு சுதந்திரத்திற்கு எதிரான 'ஆள் தூக்கிச் சட்டம்'' என தேசபக்தர்களால் வருணிக்கப்பட்டது. சிவா, தூத்துக்குடியில் பிப்ரவரி, 1908-இல் 23, 25, 26 தேதிகளிலும், மார்ச் மாதம், 1908-இல், 5-ம் தேதியிலும் பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுகளில் ராஜநிந்தனைக் குற்றத்திற்குரிய பகுதிகள் இருந்தன வாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

வ. உ. சி.மீது 124 ஏ, 109 பிரிவுகளின் கீழ் பிப்ர வரி 23, 25, 26, மார்ச் 5, 1908-இல் பேசிய பேச்சுகளுக்காகவும், 153-ஏ பிரிவின் கீழ் சிவாவிற்கு தங்க இடமும், உணவும் அளித்ததற்காகவும், 'ராஜ நிந்தனை வழக்கு' தொடுக்கப்பெற்றது.

திருநெல்வேலி மாவட்ட கூடுதல் நீதிபதி இ. எச். வாலஸ் முன்பு, மார்ச் 26-இல் விசாரணை தொடங்கியது. பூர்வாங்க விசாரணைக்குப் பிறகு வழக்கை, செஷன்ஸ் கோர்ட்டிற்கு அனுப்பி வைத்தார், இ. எச். வாலஸ்.

செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி ஏ. எப். பின்ஹே வழக்கை விசாரித்தார். சிவாவின் சார்பில் கவ்டெல், பீடல், சாதுகணபதி பந்துலு ஆகியோரும், வ. உ. சி. சார்பில் சடகோபாலாச்சாரியார், நரசிம்மாச்சாரியார், வெங்கடாச்சாரியார் ஆகியோரும் வாதாடினர்.

வ. உ. சி., தமது சுயசரிதையில் ஆதிக்க அரசுகளின் 'நீதி' விசாரணையில் நீதி கிடைக்காது என்பதைக் குறிப் பிட்டுள்ளார். இதன் தொடர்பாக வங்கத்தின் புகழ்பூத்த புரட்சிகர வங்கமொழி வார இதழான **'யுகாந்தர்'*** கூறிய கருத்தை பின்வருமாறு எடுத்தாண்டுள்ளார்.

---

* 'யுகாந்தர்', 1906-இல் கல்கத்தாவில் பரீந்திரகுமார் கோஷ், அபிநாத பட்டாசார்யா, பூபேந்திரநாத்தத்தா ஆகியோரால் தொடங்கப் பெற்றது. புரட்சி இயக்கக் குரலாக முழங்கிய இந்த இதழ் அன்றைய சென்னை மாநிலத்தில் தீவிரவாத தேசிய இயக்கத்தினரால் விரும்பிப் படிக்கப்பட்டு வந்தது. பாரதி, வ. உ. சி., சிவா ஆகியோர் யுகாந்தரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். வ. உ. சி. மீதான வழக்கை 'யுகாந்தர்' தனி அனுபந்தம் மூலம் வெளியிட்டது.

''முகாந்திரம் பற்பல மொழிவேன் இரண்டொன்று
'யுகாந்திரம்' முன்பே யுரைத்துளது காண்க.
வாதிகவர்ன் மெண்டார் வழக்கை விசாரித்தோர்
வாதியின் காலுதிர் மயிரினும் தாழ்ந்தோர்
நியாயமாகக் கேட்குதல், நியாயமா எழுதுதல்,
தயாளமாச் சிட்சித்தல், தர்மமாக் காத்தல்
எங்ஙனம் காணலாம் இக்கலி யுகத்தில்?

தம்மீது தொடரப்பட்ட விசாரணையை 'கேலிக் கூத்து' எனக் கருதினார், வ. உ. சி. இந்தச் செய்தியைக் குறிப்பிட்டு பாரதியார், 'இந்தியா'வில் (ஏப்ரல் 18, 1908) எழுதியதாவது:

''ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை மேற்படி விசாரணையைக் 'கேலிக் கூத்து' என்று சொல்லியது முழுவதும் சரி யாகும். கேஸ் நடவடிக்கைகளைப் படித்துப் பார்க்கும் போது வெகுஆச்சர்யமாக இருக்கிறது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை பேசியதில் ராஜதுரோகமொன்றும் இல்லா விட்டாலும், இவரது பிரசங்கத்தினால்தான் கலகம் உண்டாயிற்றதென்று ஸ்தாபிக்கப் பார்க்கிறார்கள். ஸ்ரீ பிள்ளையின் கதியையும் அவரது பெருந்தன்மையையும் கவனிக்கும் போது அளவற்ற மனக்குழப்பம் ஒரு புறத்தி லும், சந்தோஷம் ஒரு புறத்திலுமாக உதிக்கின்றன.''

பாரதியார் வேண்டுகோள்

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிப் பங்குதாரர் களிடம், வ. உ. சி. வழக்கு நிதிக்கு உதவுமாறு வேண்டு கோள் விடுத்து 'இந்தியா'வில் (ஏப்ரல் 25, 1908) பின்வருமாறு எழுதினார்.

''இம் மஹானது கேஸ் இன்னும் இழுத்துக் கொண்டே போகிறது. இவர் மேலுள்ள முதலாவது ராஜதுரோகக் கேஸில் பிராஸிக்யூஷன் தரப்பு விசாரணை முடிந்து போய் விட்டது. இரண்டாம் ராஜ துரோகக் கேஸ் (ஸ்ரீ சுப்பிரமணிய சிவன் ராஜ துரோகக் குற்றம் செய்த தாகவும் அதற்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை உடந்தையாக

இருந்ததாகவும் கற்பிக்கப்பட்டிருக்கும் கேஸ்) விசாரணை இந்த வாரத்திலே தொடங்கியிருக்கிறார்கள்.... தமிழ் நாட்டோர் அவர் விஷயத்தில் எம்மட்டு சிரத்தை பாராட்டா மலிருப்பது தவறென்பதாகவே நினைக்கிறோம்.

''ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை யார் பொருட்டு இரவு பகலாக உழைத்தாரோ அவர்கள் கூடப் பயத்தினாலோ அல்லது சோம்பலினாலோ மூச்சுக் காட்டாமல் பின் வாங்கி நிற்கிறார்கள். சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையே பிதாவென்று கூறுதல் தகும். மேற்படி கம்பெனியார் இப்போது இன்னும் பலமான அபிவிருத்திகள் செய்வதற்குரிய பிரயத்தனங்கள் நடத்தி வருகிறார்களென்று கேட்டுச் சந்தோஷிக்கிறோம். ஆனால், இவர்கள் சிதம்பரம் பிள்ளைக்குத் தக்கவாறு நன்றிக் கடமை செலுத்தா விட்டால், இவர்களுடைய முயற்சிகளின் மீது தரும தேவதைக்குச் சினம் பிறக்கும். ''என்பிலதனை வெயில் போலக் காயுமே, அன்பிலதனை அறம்!''

''மேற்படி கம்பெனிப் பங்காளிகளில் ஒவ்வொரு வரும் தலைக்கு 4 அணாவீதம் போட்டால் எவ்வளவோ பெரிய நிதி சேர்க்கலாம். இவ்விஷயம் அவசியம் நடத்தித் தீர்வதற்குரியது. கம்பெனியின் அனுகூலத்துக்கும், க்ஷேமத்துக்கும் இது இன்றியமையாததாயிருக்கும். இதில் கம்பெனியின் பெருத்த பங்காளி எவரேனும் இந்த விஷயத்தில் முற்பட்டு நின்று பாடுபடுவார்களென்று நம்புகிறோம்.''

வ. உ. சி.யின் கைதுக்குப் பிறகு சுதேசி கப்பல் கம்பெனி

உணர்ச்சிபூர்வமான இந்த வேண்டுகோளை, சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஏற்கும் அளவிற்கு அஞ்சாமைப் பண்பைப் பெற்றிருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியைப் பகைத்துக் கொண்டால் கம்பெனியின் வீழ்ச்சி உறுதிபட்டு விடும். ஆகவே பங்குதாரர்கள்

வேண்டுகோள் மீது உதவ முன்வரவில்லை. அப்படியிருந்தும் 'சப்கலெக்டர்' ஆஷ், சுதேசி ஸடீம் நாவிகேஷன் கம்பெனி மீது அடக்கு முறைக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வந்தான். இந்த ஒடுக்குமுறைப் போக்கைப் பற்றி இலண்டன் 'இந்தியா'வில் (24-4-1908) கூட விமர்சனக் கட்டுரை வந்தது. இந்தக் கட்டுரையின் சாராம்சம் வருமாறு:

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி, தனது அரையாண்டு வரவு செலவு விவர அறிக்கையை வெளியிடவில்லை என்று வெள்ளையர் கப்பல் கம்பெனி ஆஷின் கவனத்திற்கு கொண்டுவந்து நடவடிக்கை எடுக்குமாறு தூண்டியது. ஆஷும் தன் இனத்தார் நலன்களைக் காப்பாற்ற, சுதேசி கம்பெனியின் அலுவலகத்திற்கு வேலை நேரம் முடிந்த நிலையில் திடீரென்று சென்று, பங்குதாரர்கள் பட்டியலைக் கேட்டு மிரட்டினான். ஆனால் அங்கிருந்தோர் அலுவலக நேரத்திற்குப் பிறகு வந்ததாலும், பொறுப்புள்ள அலுவலர்கள் எவரும் இல்லாததினாலும் ஏதும் செய்வதற்கில்லை என்று கூறிவிட்டார்கள். இதனால் ஆஷ் திரும்பிவிட்டான். சுதேசி கம்பெனியின் முக்கியச் கப்பலான 'காலியோ' கடலில் செல்ல் தடுக்கப்பட்டது. இந்தக் கப்பலில் போதிய அலுவலர்கள் இல்லை எனும் காரணத்தைக் காட்டித் தடுக்கப்பட்டது.

வ. உ. சி. கைது செய்யப் பெற்றதால், சுதேசி கம்பெனிக்கு ஏற்பட்ட பாதிப்பை விளக்கி சுதேசமித்திரனில், 31-3-1908-இல் பின்வரும் செய்தி வெளிவந்தது.

''தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் சேலத்து டைரக்டர்களும், பங்குதாரர்களுமானவர்கள், தூத்துக்குடி உத்தியோகஸ்தர்களும், ஐரோப்பிய வர்த்தகர்களும் மேற்படி கம்பெனியின் மேல் நல்ல மனதுடையவர்களாயிருக்கவில்லை என்றறிந்து மிகத் திகில் கொள். கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய் வரையில் சேலத்தில் பங்குகள் எடுத்தாயிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு மேற்படி கம்பெனியில் அக்கறை அதிகம்; அனுதாபம்

மிகஅதிகம். சுதேச முயற்சிக்கு ஐரோப்பியர் விரோதமாயிருப்பதையும், உத்தியோகஸ்தர்களின் செய்கைகளையும் தெளிவாயும், வலுவாயும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டும். நம் அன்புக்குரியதும் யோக்யதையுள்ளதுமான சுதேசி முயற்சியை வியாபாரப் பொறாமையாலுண்டான தகாத அவநம்பிக்கையினின்றும் விரோதத்தினின்றும் காக்க வேண்டும். கவர்ன்மெண்ட்டின் கண்ணைத் திறந்து இப்போதைய ஆபத்தினின்று கம்பெனியைக் காக்க எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.''

இந்தச் செய்தி, திருநெல்வேலியில் விதிக்கப்பட்ட 'தண்டத் தீர்வை'யை விலக்க வேண்டுமென சென்னை கவர்னரிடம் முறையிடச் சென்ற தூதுக்குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது.

வ. உ. சி.யின் மீதான வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தக் காலத்திலேயே, சிறையிலிருந்த வ. உ. சி., சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாருக்கு விடுத்த உருக்கமான வேண்டுகோள், சுதேசமித்திரனில் (10-6-1908) பின்வருமாறு வெளிவந்தது:

''சகோதரர்களே! நான் இப்பொழுது சிறையில் உள்ளேன்; நாளை என் கதி என்ன ஆகுமோ தெரியாது. ஆகையினால் சகோதரர்களாகிய நீங்கள் எல்லோரும் என்மேல் காட்டும் அனுதாபத்தையும், அன்பையும் நமது கப்பல் கம்பெனி மீது காட்டுங்கள். இந்தக் கம்பெனியானது பங்காளிகளின் தனலாபத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரக் கம்பெனி என்றெண்ணாமல், நமக்கு ஆருயிரினும் இனிய பாரத மாதாவாகிய பரிசுத்த தெய்வத்தின் தேவஸ்தானமாகவும், ஆலயமாகவும், தருமமாகவும் கருதி, மாதுர் பக்தியுடனும், தேசாபிமானத்துடனும் உழைக்க வேண்டும். இந்த சுதேசிக் கப்பல் கம்பெனி அந்நிய விரோதிகளின் சூழ்ச்சிக்குத்தான் வெற்றி பெறுமானால் அது கேவலம் நாணயரூபமான லாபமன்று. ஆனால் நாம் இதுவரை பிறரிடம் விற்பனை செய்துகொண்டு வந்த ஸ்வதந்திர சுயேச்சை முதலிய அதிக்

தனங்களைக் கைப்பற்றியடைந்தாற் போன்ற ஜாதிய ஸ்வதந்திர லாபமாகும்.''

சுதேசி கப்பல் கம்பெனி பிரிட்டிஷ் ஆட்சியின் பகைமையை எந்த ரூபத்திலும், எந்த அளவிலும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அரசாங்க விரோதியாகி விட்ட வ. உ. சி.யின் வேண்டுகோளில் உள்ள நியாயத்தை அந்தரங்கத்தில் ஏற்றுக் கொண்டாலும், பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள இயலாமல் தத்தளித்தது.

வீரமூர்த்தியாக விளங்கிய விசாரணைக் கைதி

விசாரணைக் கைதியாக சிறையில் இருந்த வ. உ. சி.யைச் சந்தித்த பாரதியார், வ. உ. சி., ''வீரமூர்த்தியாக விளங்கிய அற்புதத்தை வருணிக்க முடியாது'' என வியப்பெய்தி போற்றியுள்ளார்.

பாரதியாரும், யதிராஜ சுரேந்திரநாத் ஆர்யாவும் வ. உ. சி. சார்பில் சாட்சியங்கூற அழைக்கப்பட்டனர். இருவரும் திருநெல்வேலியில் 10-6-1908 முதல் 24-6-1908 வரையில் தங்கியிருந்தனர். ஆனால், அவ்விருவரும் சாட்சிகளாக அழைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

பாரதியார், திருநெல்வேலி சென்று வந்ததைப் பற்றி 'இந்தியா' இதழில், 2-7-1908-இல், ''திருநெல்வேலிக்குச் சென்றிருக்கும் நமது பிரதிநிதியின் அறிக்கை'' எனும் தலைப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

''திங்கட்கிழமை காலை பாளையங்கோட்டை ஜெயிலுக்குப் போய் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின் பேரில் உள்ளே சென்று ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய சிவன் இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை முன்பு நான் தூத்துக்குடியிலே அவருடைய அரிய பிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சிக் கூறிக் கொண்டிருந்த காலத்தில் பார்த்தபோது அவருடைய

முகம் எவ்வளவு பிரசன்னமாகவும் தேஜஸுடனும் விளங்கியதோ அதே மாதிரியிலேயே இப்பொழுதும் இருக்கக் கண்டேன்...

''அதிகாரிகள் இவர் தலைமீது ஸெக்ஷன் கணக்கான கேஸ்களை கொண்டு சுமத்தியிருக்க ஜெயிலிலே அதி பாதகமான குற்றவாளிகளுடன் சேர்த்து அடையுண்டவ ராக இருக்கவும், இவருக்கு விரோதமாக இதுவரை சொல்லப்பட்டிருக்கும் சாக்ஷிகள் வெகுபலமாகவும் இவ ருக்கு பயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்க வும், இவர் சிறிதேனும் முகவாட்டமில்லாமலும் சோர் வில்லாமலும் வீரமூர்த்தியாக விளங்கிய அற்புதத்தை என்னால் வருணிக்க முடியாது.''

வரலாறு காணாத கடுந்தண்டனை

வ. உ. சி., சிவா மீதான வழக்கை விசாரித்த நீதிபதி பின்ஹே இந்தியாவில் அதுவரை எந்த அரசியல் தலை வருக்கும் விதிக்கப்படாத கடுந்தண்டனையை விதித்தார்.

வ. உ. சி.க்கு நாற்பது ஆண்டுகள் தீவாந்தரத் தண் டனை விதிக்கப்பட்டது. அரச நிந்தனைக்காக இருபது ஆண்டுகளும், சிவாவிற்கு உதவியதற்காக இருபது ஆண்டுகளும் ஆக நாற்பது ஆண்டுகால தீவாந்தரத் தண்டனை வ. உ. சி.க்கு விதிக்கப்பட்டது. வரலாறு காணாத கடுந்தண்டனை, இது. இருவேறு தண்டனை களையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. சிவாவிற்கு அரச நிந் தனைக் குற்றத்திற்காகப் பத்தாண்டு காலத் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது.

வாக்குரிமை பெறாத மக்களிடையே ஆட்சிக்கு எதி ராகத் தூண்டிப் பேசுவது அபாயகரமானதாகும் எனும் வாதத்தின் அடிப்படையில் பின்ஹே தனது தீர்ப்பில் கூறியதாவது :

''இந்தியாவில் ஒருவர் அரசியல் விஷயமாகப் பேசச் சட்டரீதியான சந்தர்ப்பமே இல்லை. ஏனெனில்

பிரிட்டிஷாருக்கு இருப்பது போல இந்தியருக்கு வாக்குரிமை இல்லை. அரசு ஒரு சட்டத்தை இயற்றினால் அதை மாற்றவோ, திருத்தவோ நேர்டியான நடவடிக்கைகளில் ஈடுபடச் சட்டம் அனுமதிக்கவில்லை ... இங்கிலாந்தில் அரசியல் விஷயமாகப் பேசுகிறவன் தன்னுடைய வாக்காளர்களைப் பார்த்துப் பேசுகிறான். இங்கிலாந்து மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. அந்த வாக்குகளை அடுத்த தேர்தல் வரும்பொழுது தனக்கு வாக்களிக்குமாறு தூண்டும் நோக்கத்தில் பேசுகிறான். இந்த நாட்டிலே அப்படிச் செய்ய சந்தர்ப்பம் இருப்பதாகக் கூற முடியாது ... இந்நாட்டில் அரசியல் விஷயத்தைப் பற்றிப் பேசும் ஒருவன், எவரைப் பார்த்துப் பேசுகிறானோ, அவர்கள் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி எதையும் உபயோகிப்பதற்கில்லை. பின் எந்த எண்ணத்தோடு பேசுகிறான்? மக்கள் கூட்டத்திற்குள்ளே ஒரே சக்தியைப் பயன்படுத்தத் தூண்டுவதற்காகத்தான் பேசுகிறான். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உடல் பலத்தை உபயோகிக்கும்படித் தூண்டித்தான் பேசவேண்டும். இது, மகா அபாயகரமானதாகும்.''

வ. உ. சி.யை ''மிகப் பெரிய ராஜத்துரோகி'' என்று கூறியதோடு, ''பிள்ளையினுடைய எலும்புக் கூடும் ராஜத் துரோகமானது'' என்றும் பின்ஹே குறிப்பிட்டார். சிவாவைப் பற்றிக் கூறும்பொழுது, அவர் வ. உ. சி. யின் கைக்கருவி எனக் கருத்து தெரிவித்தார்.

பின்ஹேயின் தீர்ப்பை எவ்வாறு வ. உ. சி. ஏற்றார் என்பதை அவருடைய சுயசரிதையில் பின்வருமாறு அறிகின்றோம்.

கற்றோர் மனமும் கலங்கிடச் சொன்னான்
இறையும் கலங்கா தென்னுளம் கவர்ந்துள
இறையின் கொடையென ஏற்றேன்; ஆயினும்
நீதியை நினைத்து நெஞ்சோடு நகைத்தேன்

முப்பத்தைந்து வயதான வ. உ. சி.க்கு, நாற்பது ஆண்டு கால தீவாந்தரத் தண்டனையைக் கேட்ட அவர்

சகோதரரான மீனாட்சி சுந்தரம் புத்தி பேதலித்து வாழ் நாள் முழுவதும் பயித்தியக்காரராகவே இருந்து 1943-இல் காலமானார்.

‘சுதேசமித்திரன்’ — தலையங்கம்

வ. உ. சி.க்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனை, இந்திய வரலாறு காணாதது என்பதை விளக்கி, சுதேச மித்திரன் ஜுலை 10, 1908-இல் எழுதிய தலையங்கத் தின் தருக்க நியாயச் சிறப்பைக் கருதி, அந்தத் தலை யங்கம் முழுமையாக இங்கு பின்வருமாறு தரப் பட்டுள்ளது:

‘‘ஒருவருக்கு 10 வருஷமும், மற்றவருக்கு ஆயுசு பரியந்தமும் தீவாந்தர சிக்ஷை! நினைக்கையிலே மயிர்க் கூச்செரிகிறது; கை நடுங்குகிறது. இந்தத் துக்கத்தைத் தென் இந்திய ஜனங்கள் முக்கியமாய் சிதம்பரம் பிள்ளையை அறிந்த தமிழ்நாட்டு ஜனங்கள் எப்படி சகிப்பார்கள்? ராஜத்துவேஷக் குற்றங்கள் நம் தேசத்தில் இதுவரையில் அடிக்கடி நேரிடுவதில்லை. நமக்கு ஆப்த நேசராய், தமது ஜன்மதேசம் முதலிலும், இந்தியா இரண்டாவதுமாய்த் தமது இருதயத்தில் குடிகொண் டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வந்த லார்ட் கர்ஸன் ஏழு வருஷம் ஆட்சி நடத்தியதின் பலனாக ராஜத்துவேஷங்கள் குற்றங்கள் நேரிட்டு, ஆங்கிலேய மாஜிஸ்ட்ரேட்டுகளால் தண்டிக்கப்பட்டு வருகின்றன. ஒரு கேசிலும் இந்தக் கொடுமையான சிக்ஷைகள் விதிக்கப்படவில்லை.

‘‘பாலகங்காதர திலகர் 1897-ம் வருஷத்தில் தண்டிக்கப்பட்ட போது அவருக்கு 1 ½ வருஷங் கடுங் காவல் விதிக்கப்பட்டது. பிறகு ஒரு வருஷமாகக் கவர் மெண்டால் குறைக்கப்பட்டது. பிறகு நேரிட்ட கேஸ் களிலும், ஒரு வருஷம், இரண்டு வருஷம் காவல் தண்டனை விதிக்கப்பட்டதேயன்றி, இந்தப் பயங்கரமான சிக்ஷைகள் விதிக்கப்பட்டதில்லை. பம்பாய் ராஜதானியில்

ஒரு பத்திரிகையாசிரியர் மிகுந்த வயது சென்றவர். அவர் ஸெஷன் ஜட்ஜி; 14 வருஷம் தீவாந்தர சிக்ஷை செய்தார். அது ஹைகோர்ட்டில் ஒரு வருஷமாக மாற்றப் பட்டது.

''பஞ்சாப்பிலும், வங்காளத்திலும் ராஜத்துவேஷக் குற்றங்கள் செய்தவர்களுக்கும் இப்படிப்பட்ட தண்டனை கள் இல்லை...''ஸ்வராஜ்யா'' என்ற பம்பாய் பத்திரி கைக்கு இரண்டு குற்றங்களுக்கு 3 வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. ராஜத்துவேஷக் குற்றஞ் செய்ததாக விசாரிக்கப்பட்ட இந்தியர் எவரும் இதுவரையில் தண்டனையடையாமல் விடுபட்டதாக நாமறியோம். ஒவ் வொரு கேஸிலும் கடுமையான தண்டனையே விதிக்கப் பட்டிருக்கிறது. திருநெல்வேலி கேஸ்களிலும் கொடுந் தண்டனை விதிக்கப்படுமென்றே ஜனங்கள் சொல்லிக் கொண்ட போதிலும், இப்படிப்பட்ட அசுரத் தண்டனை களை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. கவர்ன்மெண்ட் பக்கம் கேஸ்களை நடத்திய மிஸ்டர் பௌவர், இது வரையில் சென்னை ராஜதானி, ராஜபக்தி நிறைந்த தேசமாயிருந்தது; ராஜத் துவேஷக் குற்றம் செய்து விசா ரணைக்கு வந்தவர்களேயில்லை; ஆகையால், இந்த ராஜதானி அதன் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், சிவா, சிதம்பரம் பிள்ளை கேஸ்களில் பலமான சிக்ஷைகள் விதிக்கப்பட்டு, இனி ராஜத்துவேஷமுள்ளவர்கள் வெளிக் கிளம்பாமல் செய்ய வேண்டுமென்று ஜட்ஜியைக் கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்டுக் கொண்டவர்கூட இப்படிப்பட்ட தண்டனைகளை மனத்தில் எண்ணியிருக்க மாட்டார். கவர்ன்மெண்ட் வக்கீல் அப்படிக் கேட்டுக் கொண்டிரா விட்டாலும் மிஸ்டர் பின்ஹே குறைவான தண்டனைகள் விதித்திருக்க மாட்டார் என்றே சொல்ல வேண்டும்.''

பாரதியார் கருத்து

வ. உ. சி., சட்டவரம்பிற்குள் நின்று உரிமைகளைப் பெறப் போராட மக்களுக்கு போதனை செய்தார்

என்றும், இதை உணராது, அவருக்கு கொடிய தண் டனை வழங்கியதன் மூலம் வன்முறைக்கு அழைப்பு விடுவது போல் ஆகிவிடுகின்றது என்றும் பாரதியார், 'இந்தியா' இதழில் (ஜுலை 18, 1908) கருத்து தெரி வித்தார்.

பாரதியார் தமது இறுதிக் காலத்தில் ஆங்கிலத்தில் எழுதிய, ''சென்னை மாநிலத்தின் அரசியல் பரிணாம வளர்ச்சி'' எனும் கட்டுரையில் வ. உ. சி.க்கு விதிக்கப் பட்ட கடுந்தண்டனையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மாவட்ட செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி பின்ஹே, வ. உ. சி.க்கு இரண்டு ஆயுள் தண்டனையை விதித்ததை பாரதியார் பின்வருமாறு நையாண்டி செய்துள்ளார்.

''இந்திய சமய நம்பிக்கையின் மறுபிறப்பு கோட் பாட்டை அறிந்தவர்கள். விளையாட்டாக, 'இரு ஜன்மங் களுக்கு'' என்று கூறுவார்கள். இதை வலியுறுத்தியவர் போன்று நீதிபதி இரண்டு ஆயுள் தண்டனையை அன் புடன் வழங்கியுள்ளார்! காட்டுமிராண்டித்தனமான, அதிர்ச்சித் தரத்தக்க, பொருளற்ற இரு ஜன்ம தண் டனையை இரு இருபதுகளாக பகிர்ந்தளித்துள்ளார்.''

மிதவாதிகளும் அதிர்ச்சியுற்றனர்

பாரதியார், வ. உ. சி., சிவா ஆகியோர் தமிழக காங்கிரஸ் மிதவாதிகளை வாய்ப்பேற்பட்ட பொழுதெல் லாம் அரசியல் நோக்கில் கடுமையாகச் சாடியுள்ளனர். சாடப்பெற்ற மிதவாதிகள் கூட, வ. உ. சி., சிவாவிற்கு விதிக்கப்பட்ட கடுந்தண்டனையை அறிந்து அதிர்ச்சியுற்ற னர். மகாகனம் ஸ்ரீநிவாசசாரியார், சென்னை மிதவாதக் காங்கிரஸ் தலைவர் வி. கிருஷ்ணசுவாமி ஐயருக்கு எழுதிய கடிதமொன்றில் 'கூறியதாவது:

''இவ்வளவு கடுமையான தண்டனையை இருபெரும் தேசபக்தர்களுக்கு விதித்திருப்பதைப் பொதுமக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் ஆவேசம், அடக்க உணர்ச்சிகளையும் கடந்துவிடும்.''

பிரிட்டிஷ் அரசின் இந்திய ராஜாங்கச் செயலாளரும் கண்டித்தார்

இந்திய கவர்னர்-ஜெனரல் மிண்டோ பிரபுவிற்கு, இலண்டனில் இருந்து இந்திய ராஜாங்கச் செயலாளர் மார்லி பிரபு ஜூலை, 1908-இல் எழுதியக் கடிதத்தில் பின்ஹே விதித்தத் தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவித் துள்ளார். இதன் ஒரு பகுதி வருமாறு:

''ராஜத்துரோக வழக்குகளில் தற்சமயம் விதிக்கப் பட்டு வரும் பயங்கரத் தண்டனைகளை, ஆழ்ந்த கவலை யுடனும், திகைப்பூட்டும் அச்சத்துடனும் கவனித்துக் கொண்டு வருகிறேன் என்பதை வெளியிட விரும்புகின் றேன்.... திருநெல்வேலி-தூத்துக்குடியைச் சேர்ந்த இருவர் மீதான தண்டனைகளைக் குறிப்பிடுகிறேன். ஒருவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை முற்றிலும் நியாயத்திற்குப் புறம்பானது; மற்றொருவருக்கு பத்தாண்டு கால தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரக்கத்தன மான விஷயங்களை எந்த வகையிலும் என்னால் ஏற்றுக் கொண்டு ஆதரிக்க முடியாது. ஆகவே, இத்தகைய தவறு கள், முட்டாள்தனமான செயல்களைப் பற்றியத் தங்கள் கவனத்தை அவசரமாகக் கோருகின்றேன். நாம் அமைதி யைப் பாதுகாக்க வேண்டும்; ஆனால் அளவுக்கு மீறிய கடுமை, அமைதியான வழியன்று; அது, வெடிகுண்டிற் கான வழியாகும்.''

இவ்வகையானக் கண்டனங்களைப் பொழிவதில் இந்தியாவெங்கும் சுதேச மொழிப் பத்திரிகைகளும், ஆங்கில மொழிப் பத்திரிகைகளும் கலந்து கொண்டன. பொதுமக்கள் கருத்தின் எதிர்ப்பைத் தணியச் செய்ய பின்ஹே வேறு மாநிலத்திற்கு மாற்றப்பட்டார்.

உயர்நீதி மன்றத்தில் வழக்கு

நீதிபதி பின்ஹேவின் தீர்ப்பை எதிர்த்து, வ. உ. சி.யும் சிவாவும் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

இந்த மேல் முறையீட்டின் மீதான விசாரணை 1908 அக்டோபர், நவம்பரில் நடைபெற்றது. குற்றத்திற்கு ஆதாரமாகக் கூறப்பட்டப் பேச்சுகளின் சுருக்கம் உயர் நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டது. இதில் ஒரு பகுதி வருமாறு :

''அனைத்துப் பேச்சுகளிலும் எதிர்ப்புக்குரல் ஒலித்துள்ளது. பூரண சுயராஜ்யத்தை அடைய பகிஷ்காரமும், ஆட்சியாளருடன் ஒத்துழையாமையும் வழிமுறைகளாகக் கூறப்பட்டன. இந்தியாவில் உள்ள அந்நியர்கள் எல்லோரும் வெளியேற வேண்டும் என்பது சுயராஜ்யத்தின் குறிக்கோளாகவும் கூறப்பட்டது. அவர் (பிள்ளை) சுப்பிரமணிய சிவாவுடன் சேர்ந்து தொடர்ச்சியாக பேச்சுகளுக்கு ஏற்பாடு செய்தார். சிவா, அரசியல் பிரசாரத்தைச் செய்ய, அவர் (பிள்ளை) பொருளாதாரத்தின் பல அம்சங்களைப் பற்றியும் பேசினார். ஆனால் அவ்வப்பொழுது ஒவ்வொருவரும் மற்றவர் துறைகளில் பிரவேசித்துப் பேசினர். அவர்கள் இருவரும், இந்த நாட்டிற்கு அந்நியமான அனைத்தும் வெளியேற்றப்பட வேண்டும்; அதுவே சுயராஜ்யத்திற்கும், நலவாழ்விற்கும் உகந்த இலட்சியம் என்று சுட்டிக்காட்டினார்.''

நவம்பர் 4-இல் தலைமை நீதிபதி ஆர்னால்ட் ரைட்டும், நீதிபதி மன்றோவும் கீழ்க் கோர்ட் தீர்ப்பை அங்கீகரித்தனர். ஆனால், தண்டனைக் காலத்தை மாற்றி அமைத்தனர். வ. உ. சி.க்கு அரச நிந்தனைக் குற்றத்திற்காக விதிக்கப்பட்ட ஒரு ஆயுள் தண்டனையை ஆறாண்டு காலத்தீவாந்திரத் தண்டனையாகவும், சிவாவிற்கு உதவியதற்காக விதிக்கப்பட்ட மற்றொரு ஆயுள் தண்டனையை, நான்காண்டு காலத் தீவாந்திரத் தண்டனையாகவும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த இரண்டு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதற்கு மேல் இலண்டன் ''ப்ரீவி கவுன்சில்'' எனும் நீதிமன்றத்திற்கு மீண்டும் மேல் முறையீடு செய்யப்பட்டதில்,

தீவாந்தர தண்டனைக்குப் பதிலாகக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

புதிய புண்ணிய ஸ்தலங்கள்

வ.உ.சி., திலகர், அரவிந்தர் மூவரும் சுதேசியப் பிரசாரத்திலும் ஒருங்கிணைந்து செயலாற்றியதைப் போலவே, சிறைவாசத்தை ஏற்பதிலும் சற்று முன்பும்—பின்புமாக ஒருங்கிணைந்தனர். என்ன அதிசய ஒற்றுமை! 'அலிப்பூர் சதிவழக்கு' எனும் வழக்கின் தொடர்பாக 5-5-1908-இல் அரவிந்தர் கைது செய்யப்பட்டு, விசாரணைக் காலத்தில் தனிமைச் சிறையில் வைக்கப் பட்டார்.

திலகர், அவருடைய மராட்டிய மொழிப் பத்திரிகையான 'கேசரி'யில் (12-5-1908) ''தேசத்தின் துரதிர்ஷ்டம்'' எனும் தலைப்பில் எழுதியக் கட்டுரைக்காக ஜூலை, 1908-இல் ஆறாண்டு காலக் கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றார்.

இம் மூவரும் இருந்த சிறைகளை, ''புண்ணிய ஸ்தலங்கள்'' என வருணித்தார், பாரதியார். 'இந்தியா' இதழில் (ஜனவரி 8, 1908) ''பாரத நாட்டின் புதிய புண்ணிய ஸ்தலங்கள்'' என்னும் தலைப்பில் பாரதியார், சிறைச்சாலைகளைத் தவச்சாலைகளாக்கிய சுதந்திரப் போராட்டப் புனிதர்களைப் பற்றி பின்வருமாறு கருத்தோவியம் தீட்டினார்.

''இப்போது நமது பாரத நாட்டில் அநேக திவ்ய ஸ்தலங்கள் உண்டாயிருக்கின்றன. நமது நாட்டில் ஏற்கனவே அநேக திவ்ய க்ஷேத்ரங்களும் புண்ணிய தீர்த்தங்களும் யாத்திரை ஸ்தலங்களும் இருக்கின்றன. இந்த இடங்களெல்லாம் எப்படிப் புண்ணிய ஸ்தலங்களாய் விட்டன? ஏதோ ஒரு காலவிசேஷத்தில் மஹாதேஜஸ்வியான ஒரு மகான் செய்த தவத்திற்கு மெச்சி கடவுள் அம்மகானுக்கு இஷ்ட பூர்த்தியருளிய இடம் இவை. அதே மாதிரி நமது பாரத நாட்டில் ஸ்வதந்திரக் கிளர்ச்சி

ஆரம்பித்துக் கொஞ்சம் நாள்தான் ஆயிற்று. எனினும் அநேக புண்ணிய ஸ்தலங்கள் உண்டாய் விட்டன. **இந்தப் புண்ணிய ஸ்தலங்களின் விசேஷம் என்னவென்றால் இவைகள் பாரத நாட்டிலுள்ள எல்லா மதத்தினர்க்கும் பொதுவானவைகள்.*** ''ஆமதாபாத்திலிருக்கும் ஸாபர்மதி சிறைச்சாலையை நோக்கும்போது எந்த பாரதனுக்குத் தான் இது பாரத பரம பக்தரான மஹரிஷி ஸ்ரீமான் பாலகங்காதர திலகரின் பொன்னடிகளால் புனிதமாக்கப்பட்ட திவ்விய க்ஷேத்திரம்'' என்று தோன்றாது ... அலிப்பூர் சிறைச்சாலையைப் பார்க்கும் போதே பாரத தேசபக்த சிரோமணியான ஸ்ரீமான் அரவிந்த் கோஷுக்கு பகவான் தனது திவ்விய ஸ்வரூபத்தைக் காட்டிக் காத்து ஆட்கொண்ட மகாபரிசுத்தமான புண்ணிய ஸ்தலமென்று எவன்தான் எண்ணாமலிருப்பான்?

''கோயமுத்தூர் சிறைச்சாலையைப் பார்க்க போகிறவர்களில் யார்தான் நமது தக்ஷிண தேசாபிமானச் சிங்கமான ஸ்ரீயுத சிதம்பரம் பிள்ளையைப் பற்றிச் சிந்தியாமலிருக்க முடியும்?''

கோயமுத்தூர் சென்ட்ரல் சிறையில் வ. உ. சி.யைப் பார்க்க வந்தவர்களிடம், அவர், ''விரைவினில் திரும்புவேன், விடாதீர் சுதேசியம்; தரைமிசை எதுவும் தருவ ததுவே'' என்று தளராக் கொள்கைப் பிடிப்புடன் நவின்றார். சுதேசிக் கப்பல் கம்பெனியைச் சிறப்பாக நடத்தவும் வேண்டுகோள் விடுத்தார்.

வ. உ. சி., கோயமுத்தூர் சென்ட்ரல் சிறையில் மோசமான தனியறையில் வைக்கப்பட்டார். 1912-இல் விடுதலை செய்யப்பட்டார். அவருடைய அரசியல் குரு பர்மாவில் மாண்டலே சிறையில் இருந்து 1914-இல் விடுதலையானார். குருவும், சீடரும் சிறைப்பட்டதையும், விடுதலை பெற்றதையும் பிற்காலத்தில் திலகர் நினைவு நூலில் வ. உ. சி. எழுதிய கட்டுரையில் பின்வருமாறு அறிய முடிகின்றது.

---

* **அழுத்தக்** குறியீடு, மொழிப்பெயர்ப்பாசிரியருடையது.

''1908-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ராஜத் துரோகக் குற்றத்திற்காக எனக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு என்னுடைய குருவும் ராஜத்துரோகக் குற்றத்திற்காக ஆறாண்டு கால தீவாந்தரத் தண்டனைப் பெற்றார். மேல் முறையீட்டில் என்னுடைய தண்டனை ஆறாண்டுகால தீவாந்தரத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. நான் கோயமுத்தூர் சென்ட்ரல் சிறையில் இருந்து 1912-இல் விடுதலை செய்யப் பெற்றேன். என்னுடைய குரு மாண்ட்லே சிறையில் வைக்கப்பட்டார்; 1914-இல் விடுதலையானார்.''

அயல்நாடுகளில் இயங்கிய இந்திய தேசியப் புரட்சிக் குழுக்களில் ''புரட்சித்தாய்' எனப் புகழ்பெற்ற மேடம் காமாவின் கருத்தையும் திலகர்-வ.உ.சி.யின் சிறை வாசம் கவர்ந்தது. ''திலகர், பிள்ளை விஷயங்களில் நீதியின் போலித்தனத்தை நாம் கண்டோம்'' என மேடம் காமா அம்மையார் ஒரு பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

7

செக்கிழுத்தச் செம்மலின் சிறைவாசம்

''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து
கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதும்
காண்கிலையோ?''

— *பாரதியார்.*

வ. உ. சி.யின் ஆறாண்டு கால கடுஞ்சிறைவாசம் முதலில் கோயமுத்தூர் செண்ட்ரல் சிறையில் தொடங்கியது. இங்கு இரண்டரை ஆண்டுகாலமும், அடுத்து கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டு அங்கு இரண்டு ஆண்டுகாலமும் இருந்தார். சிறைச்சாலை பலவித காரணங்களுக்காக வழங்கப்பெறும் சிறைத் தண்டனைக் காலத் தள்ளுபடியாக வ. உ. சி.க்கு ஒன்றரை ஆண்டு கழிக்கப்பட்டது. வ. உ. சி. தமது சிறை வாழ்க்கையைப் பற்றி சுயசரிதையில் எடுத்துரைத்துள்ளார்.

கோயமுத்தூர் சிறையில்

கோயமுத்தூர் சிறைவாசம் ஜூலை 9, 1908-இல் தொடங்கியது. ''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்; நூலோர்கள் செக்கடியில் நோவதுங் காண்கிலையோ'' என்று பாரதியார் இறைவனிடம் புலம்பவும், ''கொள்ளை கொள்ளையாக சிறையிற்பட்ட குறிகள் தோன்றும்; குலவு பிள்ளை சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்'' என்று நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை மனம் வருந்தியும், வ. உ. சி.யின் சிறைவாச வாழ்க்கைக் கொடுமைகளை கவிதைகளாக்கியுள்ளனர்.

பயங்கரமான, கிரிமினல் குற்றவாளிகளுடன் பண்பும்-படிப்பும் நிறைந்த நனி நாகரிகச் செல்வரான வ. உ. சி. ேசர்ந்து வாழ வேண்டியதாயிற்று. ஆனால் இந்தச் சூழலில் 'புடம்போட்ட பொன்' எனும் இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியமர்கத் திகழ்ந்தார் வ. உ. சி.

கடுஞ்சிறைத் தண்டனையாதலால், சிறைவிதிகளின் படி கடுமையான வேலைகளையெல்லாம் வ. உ. சி. செய்யவேண்டியதாயிற்று. முதன்முறையாக சணல் உரிக்கும் இயந்திரத்தைச் சுற்றினார்; கைத்தோல் உரிந்து ரத்தம் கசியும் அளவிற்குச் சுற்றினார்.

விடுதலைப் போராட்டக் களத்தில் வ. உ. சி.யை மக்கள் வலம் வர நிகழ்ந்தக் காட்சி, சிறைக் களத்தில் எண்ணெய் ஆட்டும் செக்கினை வ. உ. சி. வலம் வந்த காட்சியாக மாறியது. ஆம்; பகலெல்லாம் வெயிலில் செக்கினை இழுத்தார். இந்தக் கொடுமையானக் காட்சியை உடன் இருந்த கைதிகள் காணப்பொறுக்காமல் மாற்றுவழி கண்டனர். மேற்பார்வையிட சிறை அதிகாரிகள் வரும் சமயத்தில் மட்டும் வ. உ. சி., செக்கிழுத்தால் போதும் என கைகுவித்து வேண்டி வ. உ. சி.யின் அனுமதியைப் பெற்றனர், கைதிகள்.

கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில் வ. உ. சி., செக்கிழுத்தார் என்ற செய்தியை பாரதியார், 'இந்தியா' இதழில் (28.11.1908) வெளியிட்டார். இவ்வாறு கொடுமையாக நடத்தப்பட்டதை நினைத்தால் உள்ளம் துடிக்கிறது, எழதும் பொழுது கை நடுங்கிறது என்று பாரதியார் உணர்ச்சியலை மோதச் சித்தரித்துள்ளார். வ. உ. சி.யும் தமது சுயசரிதையில் செக்கிழுத்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

வ. உ. சி. வலம் வந்த செக்கு இருகருங்கற்களால் ஆனது; அந்த இரு கருங்கற்களும் 1972-இல் புதையுண்ட நிலையில் 64 ஆண்டுகளுக்குப்பிறகு வ. உ. சி. யின் பிறந்த நூற்றாண்டு விழாக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இரு கற்களில் ஒன்று, சென்னை அரசினர்

தோட்டக் காட்சியகத்திலும், மற்றொன்று கோயமுத்தூர் சிறையிலேயே வைக்கப்பட்டன. 1973-இல் கோயமுத்தூர் சிறையில் கல்லைச் சுற்றி ஒரு நினைவகம் கட்டத்திட்டமிருப்பதாக ஒரு செய்தி வெளிவந்தது. ஆனால் இது நிறைவேற்றப்படாமல் இருந்த அவலத்தை 20.7.87-இல் ஒரு பத்திரிகைச் செய்தி ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' 20.7.87) அம்பலப்படுத்தியது.

சிறையில் பிற கைதிகள் மிகக் கேவலமாகவும் கொடூரமாகவும் நடத்தப்பட்டு வந்ததை வ. உ. சி. நேரில் கண்டார். ஒரு முறை ஜெயிலரின் அடக்கு முறைகளைத் தாங்க முடியாத நிலையில் கைதிகள் சிலர் 'கலகம்' செய்தனர். ஜெயிலர் தாக்கப்பட்டார். 'கலகம்' அடக்கப்பட்டு 34 கைதிகள் மீது வழக்கு தொடரப்பட்டது. ஜெயிலரைத் தாக்கிக் கொலை செய்ய முயன்றதாக மூன்று கைதிகளுக்கு பத்தாண்டு தண்டனை தரப்பட்டது. மற்றவர்களுக்கு மூன்றில் இருந்து நான்கு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் கைதிகள் சார்பில் வ. உ. சி. சாட்சியம் கூறியதைப்பற்றி பின்வரும் செய்தியுள்ளது.

''கைதிகளை மேற்படி ஜெயிலில் மிகவும் கொடூரமாகவும், மிருகங்களொப்ப அற்பத்தனமாக நடத்தப்படுகிறதென்றும், அவர்களுடைய சாப்பாடு மிகவும் மோசமாக உண்ணத்தகாதபடி கல்லும், மண்ணும் கலந்துள்ளதென்றும், அவர்களிடம் அதிகமான வேலை வாங்கப்படுகிறதென்றும், அவர்களுக்கு இளைப்பாற ஓய்வு கொடுப்பதிலும் மற்றும் ஸ்நானம் தூக்கம் முதலிய சௌகரியங்களைக் கவனிப்பதிலும் ஜெயிலதிகாரிகள் மிகவும் அசிரத்தையாயிருக்கிறார்கள் என்றும், இவற்றை முறையிட்டால் ஜெயிலர் காதில் போட்டுக் கொள்கிறதேயில்லையென்றும், இதனால் தான் மனம் வருந்தி கைதிகள் இவ்வாறு ஜெயிலரை அடித்திருக்கக்கூடும் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறதென்றும் ஸ்ரீ பிள்ளையவர்கள் மிக உறுதியாகச் சாட்சி சொன்னார்.''

பிற கைதிகளுடன் வ. உ. சி.யைச் சேர்த்து வைத்தால் மேலும் கலகம் எழும் என்று முடிவு செய்து, தனி அறையில் நூலை முறுக்கேற்றும் வேலையில் வ. உ. சி.யை அமர்த்தினர். சிறையதிகாரிகள். செக்கிழுக்கும் வேலை நிறுத்தப்பட்டது.

சிறையில் வ. உ. சி. படிப்பதற்காக கல்கத்தா 'அமிர்த பஜார்' பத்திரிகை, இந்து, சுதேச மித்திரன் பத்திரிகைகள் ஆகியனவற்றை சிறையதிகாரிகள் அறியா வண்ணம் மறைவாகக் கொண்டு வந்து கொடுத்த 'வார்டன்' ஒரு நாள் பிடிபட்டார்; வழக்கு தொடரப்பட்டது; வார்டனுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தம் பொருட்டு தண்டனை பெற்ற வார்டனுக்கு பணவுதவி அளித்து ஆறுதல் கூறினார். அந்தப் பணத்தைக் கொண்டு அந்த வார்டன் விடுதலை பெற்றதும் கடைவைத்துப் பிழைத்தார் என்று வ. உ. சி. தமது சுய சரிதையில் கூறியுள்ளார்.

செக்கிழுத்தல், நூற்பு வேலைக்குப் பிறகு, வ. உ. சி.க்கு சிறையில் அச்சுக் கோக்கும் வேலை தரப்பட்டது. சிறை சென்ற சமயத்தில் 130 பவுண்டு எடை இருந்த வ. உ. சி., சிறைவாசத்தில் 20 பவுண்டு எடை இழந்தார்.

சிறைத்துன்பம் ஒரு புறமிருக்க, சிறைக்கு வெளியே சுதேசிக் கப்பல் கம்பெனி வீழ்ச்சி பற்றி வந்த துன்பச் செய்தி மற்றொரு புறம் வ. உ. சி.யின் மனவேதனையை அதிகப்படுத்தியது. இந்த வீழ்ச்சியின் கொடுமை என்னவென்றால், எந்த பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக, சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவினாரோ, அந்தக் கம்பெனியின் சுதேசிக் கப்பல்கள், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு விற்கப்பட்டது என்பதுதான். பெற்ற பிள்ளைகள் கடத்தி செல்லப்பட்டால் பெற்றோர் எத்தகைய வேதனையால் துடித்துப்போவார்களோ அத்தகைய வேதனையை சிறையில் வ. உ. சி., தவித்தார். கொடுமைகளிலும் கொடுமையான இந்தப் பேரழிவைக் குறித்து தனக்கே உரிய பாணியில் கடுஞ்சீற்றமுடன் பாரதியார் எழுதியதாவது:

''மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பல்களை விற்று விட்டார்களே! பாவிகள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காளக் குடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய் விட்டாலா தமிழ்நாடு அழிந்து விடும்? பேடிகள்.''

'குதிரை கீழே தள்ளியதோடு குழியும் பறித்ததாம்' என்பதைப் போல சுதேசிக் கப்பல் கம்பெனி நிருவாகிகள், வ. உ. சி.யின் அரசியல் போராட்டம் பாதிப்பினாலேயே சுதேசி கம்பெனி சிதைந்தது எனக் குறைகூறி, நஷ்ட ஈடு தரவேண்டும் என்று கேட்டனர். அடுக்கடுக்காய் வந்தக் கொடுமைகளில் இந்தக் கொடுமையும் தொடர்ந்தது. ஆனால் வ. உ. சி., நிலைகுலையாமல், இந்தப் புதியச் சிக்கல் தொடர்பாக, சுதேசிக்கப்பல் கம்பெனியின் சட்ட ஆலோசகரான ஸி. விஜயராகவாச் சாரியாருக்கு எழுதியக் கடிதத்தில், ''கம்பெனிக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பங்குதாரர்கள் ஏற்பதே நியாயம், அவர்கள் ஏற்க மறுத்தால், தானே கடன்களைச் செலுத்தி விடுவதாக''க் குறிப்பிட்டார்.

இவ்வாறு கொடுமைகளின் தீநாக்குகள் அவரைச் சுற்றிப் படர்ந்த பொழுது, அவருடைய இலக்கிய உணர்வுகள் குளிர்ந்தச் சூழலை உருவாக்கின. கோயமுத்தூர் சிறையில், ஜேம்ஸ் ஆலன் எனும் ஆங்கிலேய அறிஞனின், ''As a man thinketh'' எனும் வாழ்வியல் நூலை தமிழில் ''மனம் போல் வாழ்வு'' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்தார்.

கோயமுத்தூர் சிறையில் இருந்து, கண்ணனூர் சிறைக்கு டிசம்பர் 1, 1910-இல் மாற்றப்பட்டார், வ. உ. சி.

கண்ணனூர் சிறையில்

கோயமுத்தூர் சிறையில் இரண்டரை ஆண்டுகள் கழிந்த பிறகு கண்ணனூர் சிறைவாசத்தை ஏற்றார்,

வ. உ. சி. கோயமுத்தூர் சிறைவாசத்தில் பல்வேறு வேலைகள் காரணமாக அனுபவித்தத் துன்பங்கள், கண்ணனூர் சிறைவாசத்தில் ஏற்படவில்லை. இங்கு சிறையதிகாரிகள் வ. உ. சி.யின் தகுதியை அறிந்து மரியாதையுடன் நடத்தினர் என்று சுயசரிதையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணனூர் சிறைவாசத்தில், மணியாச்சியில் ஆஷ்துரையை, வீரவாஞ்சிநாதன் சுட்டுக்கொன்றச் செய்தியை* அறிந்தார், வ. உ. சி. இந்தச் செய்தியை அவரிடம் தெரிவித்தவர், சிறையின் 'ஜூனியர் ஸப் அஸிஸ்டெண்ட் சர்ஜன்'. செய்தி சொன்னவரிடம் ''நல்லதோர் செய்தி நவின்றாய் நீ, நலம் பெறுவாய்'' என்று வ. உ. சி. கூறியதை அவருடைய சுயசரிதையில் அறிகின்றோம். இதே கருத்திற்கு மாறாக அவருடைய நண்பர் சேலம் ஸி. விஜயராகவாச்சாரியாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் வாஞ்சியின் ''வன்முறை''யை ஆதரிக்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலோட்டமாகப் பார்த்தால் வ. உ. சி.யின் இருவேறு கருத்துகளில் முரண்பாடு இருப்பது போலத் தோன்றும். ஆனால் ஆழ நினைத்துப் பார்த்தால் அதில் 'அரசியல் தந்திரம்' அடங்கியுள்ளதை புரிந்துக் கொள்ளலாம். அக்காலத்தில் அரசியல் தலைவர்கள் சமயோசிதமாக சந்தர்ப்பங்களை அரசியல் தந்திரத்தோடு சமாளித்தனர்.

சேலம் ஸி. விஜயராகவாசாரியார், காங்கிரஸ் தலைவர்களில் புகழ்பெற்றவர். அரசியலில் தீவிரவாதத்தை ஏற்காதவர். அவருக்கு எழுதிய கடிதம் எப்படியும் சிறையில் இருந்து காவல் துறையின் கடுமையானக் கண்காணிப்பின்றி வெளியில் செல்லமுடியாது. ஆகவே இந்தக் கடிதத்தில் அரசியல் தந்திர நோக்கத்துடன் தாம்

---

* 1908-இல் இலண்டனில் கர்சான் வைலியைச் சுட்டுக் கொன்ற மதன்லால் திங்ரா, இந்தியாவில் முஸபர்பூரில் வெள்ளையர் மீது வெடிகுண்டு வீசிய குதிராப்போஸ் ஆகிய இரு வீர இளைஞர்கள் பாரம்பர்யத்தை வளர்த்தார், வாஞ்சி.

வன்முறைக்கு எதிரானவர் என்பதை பிரிட்டிஷ் ஆட்சி அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படி எழுதியிருக்கக் கூடும். காந்தி சகாப்தத்தில் சத்யாக்ரக வழிமுறையை மட்டும் ஏற்று, அகிம்சா நெறியை வ. உ. சி. ஏற்க முன்வரவில்லை என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

கண்ணனூர் சிறையில் கைதிகளின் நலன்களைக் காப்பதில் முனைந்திருந்தார், வ. உ. சி. சில கைதிகளுக்கு தண்டனைக்காலத்தில் கிடைக்கவேண்டிய தண்டனைக் காலத் தள்ளுபடி தராதிருந்ததை அம்பலப்படுத்தி 'இந்து' பத்திரிகைக்கு எழுதினார். இந்தச் செய்தி பகிரங்க மானதும் சம்பந்தப்பட்ட கைதிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 'தள்ளுபடி' கிடைத்தது; இதனால் அவர்கள் விடுதலைபெறவும் உதவிகிடைத்தது.

கோயமுத்தூர் சிறையில் இலக்கியப் பணி செய்தது போன்று, கண்ணனூர் சிறையிலும் இலக்கியப்பணி தொடர்ந்தது. முன்புபோல் மொழிபெயர்ப்பாக இல்லாமல், "மெய்யறிவு", "மெய்யறம்" எனும் மூல நூல்களைப் படைத்தார், வ. உ. சி.

வ. உ. சி.யின் விடுதலை

காலச்சக்கரத்தின் சுழற்சியிலே தோன்றும் வேறுபாடுகள் வ. உ. சி. விடுதலை பெற்றக் காலத்தில் தோன்றின. 1908-இல் சிறை சென்ற சமயத்தில் வழியெங்கும் ரயில்நிலையங்களில் பார்வையாளர்கள் திரண்டெழுந்து வாழ்த்தி ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரக் காட்சி 1912-இல் உருவாகவில்லை.

25.10.1912-இல் திருநெல்வேலி மாவட்ட (சி. ஐ. டி.) துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், ரயில் நிலைய அதிகாரிகளுக்கும் விடுக்கப்பெற்ற அரசாங்க தனி அறிக்கையில் விடுதலை பெற்று வரும் வ. உ. சி.க்கு மகத்தான வரவேற்பு பற்றிய எதிர்பார்ப்பு குறிப்பிடப் பட்டிருந்தது. அறிக்கையின் பின்வரும் பகுதியில் அந்த 'எதிர்பார்ப்பை' அறிகின்றோம்.

''வ.உ.சி., டிசம்பர் 24, 1912-இல் விடுதலை செய்யப்படுவார். உடனே அவரைக் கண்காணிக்க வேண்டும். அவர் போகிற இடங்களை எனக்குத் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத் திற்கே அவர் வருவாரானால் அவரைச் சந்திக்க யார், யார் வருகிறார்கள் என்பதைக் கண்காணிக்க எல்லா ரயில்நிலையங்களிலும் ஆட்களை ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தச் செய்தியை அறிந்த காவல் நிலையங் களில் அவர் வருகை பற்றிய விவரங்கள் குறிப்பிடப் படவேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் அவர் எங்கு போய் இறங்குகின்றாரோ அங்கே அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், அவரைச் சந்திக்கிற வர்களைப் பற்றிக் குறிப்பெடுக்கவும் ஒரு சப்-இன்ஸ் பெக்டரையும், ஒரு தலைமைக் காவலரையும் அனுப்ப வேண்டும். இதை காவல் நிலையத்தின் நாட்குறிப்பில் குறித்து வைத்து அவரைச் சந்திக்கிறவர்கள் எவராயிருந் தாலும் அவர் சந்தேகத்திற்குரியவரென்று முடிவு செய்ய வேண்டும்.''

இவ்வாறு அரசு தரப்பில் எதிர்பார்க்கப்பெற்ற பரபரப் பானச் சூழல் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. சிறைவாயி லில், சுவாமி வள்ளிநாயகம், வ.உ.சி.யின் மனைவி, மக்கள், மைத்துனர், நண்பர் கணபதி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மட்டுமே வந்தனர். சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. விடுதலைபெற்றதற்கு சற்றுமுன்பு 2.11.1912-இல் சேலம் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

சிறையில் தொழுநோயின் வளர்ச்சியை மட்டுமே பெற்றுக் கொண்ட சிவா, தமது அரசியல் தோழரை சிறை வாயிலிலேயே வரவேற்க வந்தது, தோழமைப் பண்பின் விளக்கமாகும். அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு அஞ்சாது வ.உ.சி.யின் போராட்டக் காலத் தில் திரண்டுவந்த மக்கள், தங்கள் வீர நாயகன் சிறை யில் இருந்து வெளிவந்ததும் திரண்டு வராமற் போனது, காலச் ;சக்கரச் சுழற்சியின் வீழ்ச்சியை புலப்படுத்தியது.

வரலாறுகளில் மக்கள் நினைவுகளின் இத்தகைய ஏற்ற-இறக்கங்கள் எவ்வளவோ பதிவாகியுள்ளன, அவற்றுள் வ. உ. சி.க்கு, சிறை மீண்ட பிறகு கிடைத்த ''வரவேற்பும்'' ஒன்று.

விடுதலை பெற்ற பிறகும் அவருடைய அரசியல், தொழிற் சங்கப் பணிகள் தொடர்ந்தன. எவ்வளவோ மாற்றங்களை அவர் சந்திக்க வேண்டியதாயிற்று.

8

சிறைவாசத்திற்குப்பின் தொடர்ந்தப்பணிகள்

கண்ணனூர் சிறைவாசத்திற்குப் பின் வ. உ. சி. தனது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திற்கோ அல்லது தூத்துக்குடிக்கோ போகாது சென்னை நகரத்தில் குடியேறினார்.

குடும்பச் செலவிற்காக ஏதேனும் ஒரு தொழில் செய்ய வேண்டியக் கட்டாயம் வ. உ. சி.க்கு ஏற்பட்டது. வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட வேண்டுமானால், வக்கீல் சன்னது இருக்க வேண்டும். போராட்டக்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்புகளில் ஒன்று அவருடைய வக்கீல் சன்னது :பறிக்கப்பட்டதொன்றாகும்.

பாரம்பர்ய வக்கீல் குடும்பத்தில் வந்தவர், பிழைப்பிற்காக மளிகைக்கடை வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்றால் காலம் செய்த கோலத்தை என்னென்பது? இதில் அவர் வெற்றிபெறாமற் போனதில் வியப்பில்லை. அடுத்து மண்ணெண்ணெய் கடை வைத்துப் பார்த்தார். இதுவும் அவருக்குக் கூடிவரவில்லை. இத்தகைய நிராதரவான, பரிதாபகரமானச் சூழலில் ,ஒரு தேசியத்தலைவர், தமது நண்பர் மண்டயம் ஸ்ரீநிவாஸசாரியார் அவ்வப்பொழுது அளித்த பணவுதவியால் சற்று ஆறுதல் பெற்றார். 'மண்டயம் குடும்பம்' தேசிய வீரர்களுக்கு அளித்த ஆதரவு தனி ஆய்விற்குரியது.

அக்காலத்தில் சென்னையில் வாடியா, அருண்டேல், திரு. வி. கலியாணசுந்தரனார், மா. சிங்கார வேலுசெட்டியார், வி. சக்கரை செட்டியார், என். தண்டபாணி பிள்ளை,

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, செல்வபதி செட்டியார், இராமானுஜுலு செட்டியார், இ. எல். ஐயர் முதலானோர் தொழிற்சங்கங்கள் சிலவற்றை உருவாக்கிப் பாடுபட்டு வந்தனர். இவர்களுள் சிலருடன் வ. உ. சி.க்கு நட்பு ஏற்பட்டது. குறிப்பாக என். தண்டபாணி பிள்ளை, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு ஆகியோருடன் நட்பு கொண்டார் வ. உ. சி. ஏற்கனவே கோரல் மில் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட முன் அனுபவம் வ. உ. சி.க்கு வாய்த்திருந்ததால், மீண்டும் சென்னை நகரத்தில் தொழிலாளர் இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இதே காலகட்டத்தில் சென்னையில் இருந்த சுப்பிரமணிய சிவாவும் வ. உ. சி.யுடன் தொழிற்சங்க நடவடிக்கைகள் சிலவற்றில் பங்கேற்று வந்தார் என்பதும் நினைவிற்குரியது.

புதுச்சேரியில், பாரதியார், அரவிந்தருடன் சந்திப்பு

பிரிட்டிஷ் இந்தியாவில் பயங்கர அடக்குமுறைகளுக்கு மத்தியில் தேசத் தொண்டுகள் ஆற்ற தடை செய்யப்பட்டவர்களில் பலர் பிரெஞ்சு இந்தியாவின் புதுச்சேரிக்கு சென்று விடுதலைப் போராட்டப் பணியைத் தொடர்ந்தனர். இதன் காரணமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், புதுச்சேரியில் வாழ்ந்த இந்திய தேசபக்தர்களை கண்காணித்து வந்தது. பாரதியார், வ. வே. சு. ஐயர், அரவிந்தர், மண்டயம் எஸ். ஸ்ரீநிவாஸசாரியார் ஆகியோர் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தனர்.

'இந்தியா', 'சூரியோதயம்', 'தருமம்', 'கர்மயோகி' முதலான தமிழ் இதழ்களும், 'பாலபாரதர்' எனும் ஆங்கில மாத இதழும் புதுச்சேரியில் இருந்து வெளி வந்தன. 'இந்தியா', சென்னையில் வெளிவந்துக் கொண்டிருந்தபோது அடக்குமுறைக்கு ஆளானதால், புதுச்சேரிக்கு மாற்றப்பட்டது. இந்தியா, கர்மயோகி, பாலபாரதா ஆகியனவற்றிற்கு பாரதியார் ஆசிரியராக

இருந்தார். 'தருமம்', 'சூரியோதயம்' பத்திரிகைகளில் பாரதியார் எழுதி வந்தார். இந்தப் பத்திரிகைகள் அனைத்துமே தமிழக வீரதேசபக்தர்களால் கையேடு களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவையாவும், சென்னை மாநிலத்தில் சட்டரீதியாக நுழையவிடாமல் சென்னை அரசாங்கம் தடை செய்துவிட்டன். புதுச்சேரி யும் பிற இந்தியத் தேசிய வாதிகளுக்கு அரசியல் யாத்திரைக்குரிய இடமாயிற்று.

பாரதியாரின் நெருங்கிய நண்பர்களான, சுப்பிர மணிய சிவாவும், யதிராஜ சுரேந்திர நாத் ஆர்யாவும் புதுச்சேரி சென்று பாரதியாரைச் சந்தித்துத் திரும்பி னர். என வ. உ. சி. தமது புதுச்சேரி பயணத்தைப்பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்:

''கண்ணனூர் சிறையினின்றும் எனது தண்டனைக் காலம் கழித்து விடுதலையடைந்த நான் என் குடும்பத் தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரி முதலிய சென்னைத் தேசபக்தர்களைக் காண வேண்டும் என்ற அவா எனக்கு ஏற்பட்டது. நான் புதுச்சேரிக்குச் சென்றேன்: பாரதி வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்து அங்கு போய் சேர்ந்தேன். பாரதியின் மனைவி மக்களைக் கண்டு களித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும், ஆவிநீர் குடித்தும், அவரது ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும், அகமகிழ்ந்து சின்னாள் கழித்தேன். பாரதியும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொல்லியது போல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை. தேசபக்த ராகவும், தேசத்தலைவராகவுமே விளங்கினார்.''

பொதுவாக, அரவிந்தர் அரசியலைத் துறந்து, ஆன் மிகச் சாதனைகளில் ஈடுபட புதுச்சேரி வந்தார் எனும் கருத்து பரவிய காலத்தில், வ. உ. சி. அரவிந்தரை 'தேச பக்தராகவும், தேசத்தலைவராக'வும் கண்டதாகக் கூறியது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும். அரவிந்தருடன் இந் தேசிய விடுதலைப்போராட்டத்தைப் பற்றிப் பேசிய வ. உ. சி., பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்து வந்தது. ஒருநாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலகம் முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும் என்றும், அதற்கான பணத்தைச் சுலபமாகப் பொது ஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கொண்டிருந்தேன்.''

புதுச்சேரியில் வ. உ. சி.க்கு ஏற்பட்ட இந்தச் சிந்தனைப் போக்கு கவனத்திற்குரியது. புதுச்சேரியில் இருந்து வெளிவந்த முற்கூறப்பெற்றப் பத்திரிகைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்தில் முன்னணியில் நின்றன. பத்திரிகை ஆயுதத்தைப் பயன்படுத்த வ. உ. சி. கண்ட பெருங்கனவு, புதிய சிந்தனையேயானாலும் நனவாகுவதற்குரிய ஆக்கமும், ஊக்கமும் கிடைக்கவில்லை.

இலண்டனில் இந்திய தேசியப் புரட்சி வீரராக இருந்த காலத்திலேயே வ. வே. சு. ஐயர், வ. உ. சி., சுப்பிரமணிய சிவாவின் போராட்டத்தையும், தியாகத்தையும் குறிப்பிட்டு புதுச்சேரி 'இந்தியா பத்திரிகையில்' 'லண்டன் கடிதம்' எனும் பகுதியில் எழுதியவர். அவரையும் வ. உ. சி. சந்தித்தார்.

''இப்பொழுதும் அனேகமாய் அமிழ்ந்துபோய் விட்ட சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைக் கைதூக்கி விட்டு உண்மையான தேசபக்தியுடன் உழைத்துவரும் ஸ்ரீநிவாஸாசாரியாருடைய பிரயத்தனங்களை நாம் சிறியதாக வெண்ணவில்லை'' என்று புதுச்சேரி 'இந்தியா' வில் (ஆகஸ்டு 21, 1909) வ. வே. சு. ஐயர் எழுதியுள்ளார். ஸ்ரீநிவாஸசாரியார் தமக்கு பண உதவி செய்து வந்ததை சுயசரிதையில் வ. உ. சி. குறிப்பிட்டுள்ளார். இத்தகைய அரிய நண்பரையும் வ. உ. சி., புதுச்சேரியில் சந்தித்தார்.

மீண்டும் தொழிற் சங்கப் பணியில்

1918-இல் சென்னை நகரத்தில் ''மெட்ராஸ் லேபர் யூனியன்'' எனும் பெயரில் சென்னைத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக, அன்னி பெசண்டின் ஹோம்ரூல் இயக்கத் தலைவர்களுள் ஒருவரான வாடியாவும், துணைத்தலைவர்களாக காங்கிரஸ் இயக்கத்தின் குத்தி பி. கேசவப் பிள்ளையும், திரு. வி. கலியாண சுந்தர முதலியாரும், செயலாளர்களாக இராமாஞ்சலு நாயுடுவும், செல்வதிபதி செட்டியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னையில் அக்காலத்தில் தொழிற் சங்கங்களில் தொண்டாற்றியவர்களுள் ஒருவராக வ. உ. சி.யையும் குறிப்பிட்டுள்ளார், திரு. வி. க. 'மெட்ராஸ் லேபர் யூனியன்' செயலகம் இருந்த பெரம்பூரில் வ. உ. சி. குடியிருந்தார். இந்தச் சங்கத்தின் தலைமையில் இயங்கிய தொழிற்சங்கங்களில் வ. உ. சி. பணியாற்றினார்.

31.1.1919-இல் ''டிராம்வே யூனியன்'' கூட்டம் ஒன்றில் சுப்பிரமணிய சிவா உரையாற்ற, வ. உ. சி. தலைமையேற்றார். வ. உ. சி., தனது தலைமையுரையில் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டி வைத்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். பொறுத்துக் கொள்ள முடியாத நிலைமை உருவாகும் பொழுதுதான் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் கூறினார். அரசாங்கம், முதலாளிகளுக்குத் தான் உதவி செய்யும், தொழிலாளர்களுக்கு உதவி செய்யாது என்பதையும் எடுத்துரைத்தார். டிராம்வேயில் பணிபுரியும் அனைவரும் தொழிற் சங்க உறுப்பினர்களாக சேர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தொழிலாளர் ஊர்வலத்திற்கு வ. உ. சி. தலைமை தாங்கியதையும், தொழிலாளர் கூட்டத்தில் முழங்கியதையும் பற்றி வ. உ. சி. யின் நெருங்கிய நண்பரான என். தண்டபாணி பிள்ளை பின்வருமாறு எழுதினார்.

''அன்று எல்லாக் கூட்டங்களையும் கைவிட்டு என் தலைமையில் நடந்த இக் கூட்டத்திற்குத்தான் முதன் முதலாக வ. உ. சிதம்பரம் பிள்ளை வந்து ஒலி பெருக்கி யில்லாக் காலத்தில் சிம்ம கர்ஜனை செய்து மேல்நாட்டு வெள்ளாடுகள் க்தறித்துடிக்கும் படியான சொற்பொழி வாற்றிப் பிறகு அதே கூட்டத்தில் திரு. வி. க. வும், 'இந்து' பத்திராதிபர் கஸ்தூரி இராமய்யங்காரும் மற்றும் பலரும் பேசித் தொழிலாளர்கள் கலைந்து போகும்படி கூறி னார். வ. உ. சிதம்பரம் பிள்ளை தலைமையில் தான் மேற்படி இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் கூட்ட மும் யாதொருவித அசம்பாவிதமும் இல்லாமல் நூளைப் பட்டாளம் சென்றடைந்தது.''

நாகப்பட்டினம் இரயில்வே தொழிலாளர் மாநாட் டில் வ. உ. சி., பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளர்களின் மகத்தானச் சக்தி யைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

1920 ஏப்ரல் 14-இல் நாகப்பட்டினத்தில் தொழி லாளர் கூட்டத்தில் வ. உ. சி. பேசியதாவது;

''பிரிட்டிஷ் அரசாங்கத்தில் நான்கு சக்திகள் உள்ளன; அவையாவன, தபால், தந்தி, போலீஸ், ரயில்வே ஆகும். இவை நான்கும் அரசாங்கத்தின் நாற்புறச் சுவர்களும் ஆகும். இவற்றுள் ஒன்று விழுந்துவிட்டால், பிரிட்டிஷ் அரசு உடனடியாக வீழ்ந்துவிடும். ஆகவே, சகோதரர் களே! அரசு உதவும் என்று எதிர் பார்க்காமல், உங்கள் முன்னேற்றத்திற்காக நீங்கள், உங்கள் தொழிற்சங்கத் திற்கு ஒத்துழைப்பு தாருங்கள். விழுப்புரம் மற்றும் சில இடங்களில் உள்ள தொழிலாளர்களிடையே நாங்கள் தொழிற் சங்கங்கள் தொடங்கியிருக்கிறோம். இந்த இடங் களை காவல் துறையின் அறியார்.''

அக்காலத்தில் சென்னையில் தொழிற் சங்க நட வடிக்கைகளில் பலவற்றில் அன்னிபெசண்ட், வாடியா, அருண்டேல் ஆகியோரின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

அரசியல் நோக்கில் அன்னிபெசண்ட்டின் தீவிர எதிர்ப்பாளரான வ. உ. சி., தொழிற்சங்கங்களில் அன்னி பெசண்ட் குழுவினரின் செல்வாக்கு வளர்வதை விரும்பாமல், அவர்களை எதிர்க்குமாறு தொழிலாளர்களைத் தூண்டும் தமிழ்த் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார்.

''சென்னை-தென்மராட்டா ரெயில்வேத் தொழிலாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை'' எனும் தலைப்பில் வ. உ. சி. வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் அன்னி பெசண்ட்டும், அவருடைய தளபதிகளும் தொழிற் சங்கங்கள் பலவற்றில் பொறுப்புகள் பெற்றிருப்பதை எதிர்த்துள்ளார். இந்தப் பிரசுரத்தின் இறுதியில் ''ஓ! இந்தியத் தொழிலாளர்களே! ஓ! இந்திய வக்கீல்களே!, ஓ! இந்தியத் தேசபக்தர்களே! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! நமது விரோதிகளிடமிருந்து விடுபடுங்கள்! மிஸஸ் பெசண்ட் மற்றும் அவரைப் பின்பற்றுவோர்களிடமிருந்து விடுபடுங்கள்.'' ஆனால், இந்த அழைப்பிற்கு மெட்ராஸ் லேபர் யூனியனில் ஆதரவில்லை. திரு. வி. க., தண்டபாணி பிள்ளை, முதலான முக்கியத்தலைவர்களின் ஆதரவு வ. உ. சி.க்கு கிடைக்கவில்லை.

வ. உ. சி., சென்னையை விட்டு, கோயமுத்தூரில் சிலகாலம் வாழ்ந்தபொழுது, அங்கும் அவர் தொழிற் சங்கப் பணி தொடர்ந்தது. கோயமுத்தூரில், தமிழ்ப் பேரறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார், சிறையில் வ. உ. சி.க்கு உதவிய தம் ஜெயில் வார்டன் ஊழியத்தை இழந்த கே. இராமய்யாக் கவுண்டர், ஆர். கே. சண்முகம் செட்டியார், 'ஹோம்ரூல்' இயக்கப் பிரமுகர் என். எஸ். ராமசாமி ஐயங்கார், தமிழ் அறிஞர் சி. எஸ். ராமச்சந்திர செட்டியார், தமிழக கூட்டுறவு இயக்கத் தந்தை டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் முதலான பல நண்பர்களின் ஆதரவு கிடைத்தது. இதன் பயனாக கோயமுத்தூர் தொழிலாளர் ''பேங்கு அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்'' எனும் ஒரு நிறுவனம் அமைக்கப் பட்டது.

தொழிலாளர்களுக்கு கடன் வசதியும், பண்டகசாலையில் உணவுப் பொருட்கள் முதலானவை குறைந்த விலையில் அதிக லாபமின்றி வழங்கப்பட்டது. இந்த வங்கியில் வ. உ. சி. பங்கேற்றார். இவருடைய இந்தப் பணியைப் பாராட்டி காங்கிரஸ் தலைவர் நாவலர் எஸ். சத்திய மூர்த்தி பாராட்டியுள்ளார். இந்தப் பாராட்டுரை பிரபல தொழிற் சங்கத் தலைவரான இ. எல். ஐயரின் 'ஸ்வதர்மா' எனும் இந்தியாவின் முதல் தொழிலாளர் பத்திரிகையில் 1921-இல் வெளிவந்துள்ளது. இதன் ஒரு பகுதி, வருமாறு:

''தொழிலாளர்கள், தங்களுக்காக வங்கிகள், நியாய விலைக் கடைகள், வருங்கால வைப்பு நிதி முதலானவற்றை அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வகையில் கோயமுத்தூர் தொழிலாளர்களிடையே என்னுடைய நண்பர்கள் என். எஸ். ராமசாமி ஐயங்கார், வி. ஓ. சிதம்பரம் பிள்ளை சிறப்பாகப் பணியாற்றுகின்றனர்.''

'ஹோம்ரூல்' இயக்கத்தில்

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில், அயர்லாந்து விடுதலை இயக்கத்தின் தாக்கம் இருந்துள்ளது. இவற்றுள் ஒன்று அங்கு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற 'ஹோம்ரூல்' (சுய ஆட்சி) கிளர்ச்சியாகும். அன்னிபெசண்ட் இங்கிலாந்தில் இருந்த காலத்திலேயே 'ஹோம்ரூல்' இயக்கத்தை நன்கு அறிந்தவர். அப்பொழுதே இந்திய தேசிய விடுதலை இயக்கத்தை நேசித்தவர். அவர் இந்திய தேசிய அரசியலில் தீவிரம், காட்டிய பொழுது, சென்னை மாநிலத்தில் 'ஹோம்ரூல்' இயக்கத்தை 1916-இல் உருவாக்கினார். இதே காலகட்டத்தில், பம்பாயில் திலகர் ஒரு ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கினார். இதற்கு 'இந்தியன் ஹோம்ரூல் லீக்' எனப் பெயரிடப்பட்டது. அன்னிபெசண்ட்டின் இயக்கமான ''ஹோம்ரூல் லீக்''கில் தொடர்பு கொண்டது. திலகரின் ''இந்தியன் ஹோம்ரூல் லீக்''கின் தமிழ்நாட்டுக் கிளையின் பிரசாரப் பொறுப்பை ஏற்றார் வ. உ. சி.

இதற்காக இவருக்கு மாதந்தோறும் ஐம்பது ரூபாய் உதவிப்பணமாகத் திலகரால் வழங்கப்பட்டு வந்தது.

இந்தியன் ஹோம்ரூல் லீக்கின் தமிழ் மாநிலக் கிளையின் சட்ட விதிகளை வகுத்து ஒரு சிறு பிரசுரத்தையும் தமிழில் வெளியிட்டார், வ. உ. சி. வ. உ. சி. யுடன், சுப்பிரமணிய சிவாவும் இணைந்து பிரசாரம் செய்துவந்தார்.

'ஹோம்ரூல்' பிரசாரத்தில் திலகரும், அன்னி பெசண்ட்டும் நட்புறவு கொண்டு இணைந்த பொழுது, வ. உ. சி., அன்னிபெசண்ட்டை \ கடுமையாக எதிர்த்து வந்ததை விட்டு விடவில்லை. சேலத்தில் 20.2.1920-இல் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், பெசண்ட் அம்மையாரை அதிக்கார வருக்கத்தின் ஏஜெண்ட் என்றும், அவரை நம்புவது மிகவும் அபாயகரமானது என்றும் பேசினார், வ. உ. சி.

தமிழகத்தில் 1908 முதற்கொண்டே அன்னிபெசண்ட்டிற்கு எதிர்ப்பு தோன்றியது. திலகர்-அரவிந்தர் தலைமையில் தோன்றிய 'நேஷனலிஸ்ட் பார்ட்டி' எனும் புதிய தேசியக்கட்சியின் தீவிரமான வழிமுறைகளைக் கடுமையாகத் தாக்கி வந்தார், அன்னிபெசண்ட். தமிழ்நாட்டில் பாரதியார், வ. உ. சி., சிவா மூவரும் அன்னிபெசண்ட் மீது மறுதாக்குதல் தொடுத்து வந்தனர். பாரதியார் அன்னிபெசண்ட்டின் 'ஹோம்ரூல்' வேறு; 'தியோசாபிகல் சொஸைட்டி' வேறு எனப் பாகுபாடு செய்து கொண்டு, 'தியோசபிகல் சொஸைடி'யையும், அன்னி பெசண்ட்டையும் எதிர்த்தார். இதற்காக 'பொன்வால் நரி' எனும் அற்புதமான நையாண்டிக்கதையொன்றையும் ஆங்கிலத்தில் 1914-இல் வெளியிட்டார். இந்த உருவகக் கதையில் 'நரி' என்பது பெசண்ட்டையும், 'பொன்வால்' என்பது 'தியோசபிகல் சொஸைடி'யையும் குறிப்பதாகும். பாரதியாரின் ''இந்தியா' இதழ்களில் அன்னி பெசண்ட் எதிர்ப்புப் பிரசாரம் தீவிரமாக நிகழ்ந்து வந்தது. இந்த மூவரில் வ. உ. சி.யும், சிவாவும் இறுதி

வரையில் சமரசமற்ற வகையில் அன்னிபெசண்ட்டை எதிர்த்து வந்தனர்.

முதல் உலகமகாயுத்தம் நடைபெற்று வந்தகாலத்தில் பிரிட்டிஷ் ஆட்சி, இராணுவத்திற்கு இந்தியர்களைச் சேர்ப்பதில் இந்திய அரசியல் கட்சிகளின் ஆதரவைக் கோரியது. இந்தச் சந்தர்ப்பத்தில் வ. உ. சி.யும், சுப்பிரமணிய சிவாவும் வெளியிட்டக் கருத்துகளைப் பற்றி சென்னை அரசாங்கத்தின் தற்காலிக உள்துறைச் செயலாளர் எல். டேவிட்சனின் அரசுக் குறிப்பு வருமாறு:

''வி. ஓ. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் பொது வாழ்க்கையில் மேலும் பங்கேற்றனர். சமீப யுத்தத்திற்கு ஆர்வம் மிக்க ஒத்துழைப்பு வேண்டுமானால், அதற்கு தொடக்கமாக 'ஹோம்ரூல்' கோரிக்கைக்கு ஆதரவு தரப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று பகிரங்கமாக வாதிட்டனர். இரண்டாவதாகக் கூறப்பட்டவர் சேலத்தில் நடைபெற்ற இரு 'ஹோம்ரூல்' கூட்டங்களில் பேசியபொழுது, இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பது என்பது 'ஹோம்ரூல்' வழங்கப்படும் எனும் உறுதிமொழி அறிவிப்பைச் சார்ந்தது என்று குறிப்பிட்டார்.''

தமிழகத்தில் நிலவிய அன்னிபெசண்ட் எதிர்ப்பிற்கு மாறாக அன்னிபெசண்ட் ஆதரவும் நிலவியது. இதை முன்நின்று நடத்தியவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார். இவர் அன்னிபெசண்ட் அம்மையாரை, ''அன்னை வஸந்தா'' என்று பெருமதிப்புடன் குறிப்பிட்டு வந்தார். தமது தேசபக்தன் இதழில் பெசண்ட்டையும், 'ஹோம் ரூல்' இயக்கத்தையும் தீவிரமாக ஆதரித்து எழுதி வந்தார். திரு. வி. க. வின் 'வாழ்க்கைக்குறிப்புகள்' எனும் அரிய ஆவண நூலில் வ. உ. சி., திலகர் சந்திப்பும் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

17.12.1919-இல் திலகரை சென்னை பெரம்பூரில் திரு. வி. க., சுப்பராய காமத் ஆகியோருடன், வ. உ. சி.யும் திலகரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் திலகரின்

அன்னிபெசண்ட் ஆதரவுப் போக்கைப் பற்றி வ. உ. சி, தமது வருத்தத்தைத் தெரிவித்தார். இதன் விவரத்தை திரு. வி. க.வின் ''வாழ்க்கைக் குறிப்புகள்'' நூலில் பின்வருமாறு அறிகிறோம்.

''தென்னாட்டுத் தலைவர் ஒருவர் திலகர் பெருமானை நோக்கி, 'நான் தங்களைத் தலைவராகக். கொண்டவன்; தங்கள் அடிச்சுவட்டைப்பற்றி நடந்தவன்; இப்பொழுது ஒதுங்கி வாளாகிடக்கிறேன். காரணம், தாங்கள் பெசண்ட் அம்மையார் சுய ஆட்சிக்கிளர்ச்சியில் தலைப்பட்டதேயாகும். அவ்வம்மையாரிடத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது. யுத்தகாலத்தில் நாட்டில் பெருங் கிளர்ச்சி எழுமென்று ஊகித்து, அதையொடுக்க வேண்டி, பெஸண்ட் அம்மையார் சுய ஆட்சிக்கிளர்ச்சியில் தாமே வலிந்து புகுந்தார். நாடு ஏமாந்தது. மூன்று மாதக் காவல் என்பது* வெறும் நடிப்பு; பெசண்ட் அம்மையார், அரசாங்கச் சார்புடையவர். தாங்கள் அவ்வம்மையாருடன் கலந்ததைக் குறித்து யான் வருந்தியே நிற்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.''

திரு. வி. க., இங்கு 'தென்னாட்டுத்தலைவர்' என்றது, வ. உ. சி.யாகும். வ. உ. சி.யின் வருத்தத்திற்கு திலகர் கூறிய மறுமொழியையும் திரு. வி. க. பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

''யான் தனிமனிதர் மீது கருத்துச் செலுத்துவதில்லை. என் தேசவிடுதலைக்கு எவர் முயன்றாலும் அவர்தம் முயற்சிக்குத் துணை நிற்பது எனது கடனெனெ உணர்கின்றேன்.... அன்னிபெசண்ட் அம்மையார் உள்ளம் எத்தகையதோ அதை ஆண்டவன் அறிவான். அவ்வம்மையார் நிகழ்த்திவரும் கிளர்ச்சியால் நாட்டில் சுயராஜ்ய வேட்கை வளர்ந்திருப்பது கண்கூடு. யான்

---

* சென்னை அரசாங்கம் அன்னிபெசண்ட்டின் 'ஹோம்ரூல்' இயக்கப் பிரசாரத்தை ஒடுக்குவதற்காக அவரை மூன்று மாதம் வீட்டுக்காவலில் வைத்தது.

விரும்புவது அதுவே. அம்மையார் கிளர்ச்சியைப் போலி என்றும், காவல், வெறும் நடிப்பு என்றும் கருதுகிறீர்கள். போலியும், வெறும் நடிப்பும் நாட்டில் இவ்வளவு எழுச்சியை யுண்டு பண்ணின எனில் நீங்கள் உண்மையில் நின்று கிளர்ச்சி செய்தால் — சிறையில் புகுந்தால் அவை எவ்வளவு எழுச்சியை உண்டு பண்ணுவனவாகும்? ஏன் ஒதுங்கி நிற்கிறீர்கள்? உண்மையை உளங்கொண்டு வாருங்கள் ... பெசண்ட் அம்மையார் கிளர்ச்சியால் நலம் விளைகிறதா? தீமை விளைகிறதா! என்று பார்த்தேன். நலம் விளைதல் கண்டேன்; துணைபோகிறேன். நாளை தீமை விளைவதைக் கண்டால் அவர்தங் கிளர்ச்சிக்குத் துணை போகேன். அதை ஒரு நொடியில் சாய்க்க முயல்வேன் என்று முழங்கினார்.''

திலகரின் இந்த விளக்கம், வ. உ. சி.யிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தவில்லை. திலகர் சகாப்தத்தைத் தொடர்ந்து எழுந்த காந்தி சகாப்தத்திலும் வ. உ. சி.யின் அன்னிபெசண்ட் எதிர்ப்பு தொடர்ந்தது. காந்தி சகாப்தம் வ. உ. சி.யின் அரசியல் வாழ்க்கையில் புதிய மாறுதல்களைச் சந்திக்க வைத்தது.

9

காந்தி சகாப்தத்தில் வ.உ.சி.

இந்திய தேசிய காங்கிரஸ் வரலாற்றில் 1919-ஆம் ஆண்டு ஒரு திருப்பத்தைத் தந்தது. புதிய தலைமை தோன்றியது; புதிய அறப்போர் அறிமுகமாகியது; காந்தி சகாப்தம் எழுந்தது. உலக அரசியல் அரங்கிலும், உள் நாட்டு அரசியல் அரங்கிலும் புதிய அரசியல் சூழல்கள் தோன்றின. ரஷ்யாவில் 1917 அக்டோபரில் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி நிகழ்ந்தது. இது, காலனியாதிக்கவாதிகளை அச்சுறுத்தியது. இதன் விளை வாகவும், இந்திய நிருவாகத்தில் இந்தியர்கள் பங்கெடுப் பதை விரிவுப்படுத்த ''மாண்டேகு-செல்ம்ஸ்போர்டு அறிக்கை'' என்னும் புதிய அரசியல் சீர்திருத்தம் 1918 ஜூலை 12-இல் வெளியிடப்பட்டது.

1918-இல் ஆகஸ்ட் இறுதியிலும், செப்டம்பர் தொடக்கத்திலும் பம்பாயில் நடைபெற்ற காங்கிரசின் அவசரக் கூட்டங்களில் மாண்டேகு-செல்ம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டன. இத னால் : மிதவாதிகள் காங்கிரசில் இருந்து வெளியேறி 'இந்தியன் லிபரல் கட்சி'யை அமைத்தனர்.

இந்திய தேசிய அரசியலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய ஜாலியன்வாலாபாக் படுகொலை இதே ஆண்டில் ஏப்ரல் 13-இல் நடந்தது. ஜெனரல் 'டயர் என்பவன் இந்தப் பயங்கரப் படுகொலையை முன்நின்று நடத்தினான். துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும்வரைச் சுட்டுத்தள்ள உத்திரவிட்டான். டயரின் இந்தத் துப் பாக்கிக் குண்டுகளுக்கு பதில் அளிக்க காந்தியடிகளின் சத்தியாக்ரக-அகிம்சைக் 'குண்டுகள்' அறச் சீற்றமுடன் வெளிப்பட்டன.

ரௌலட் சட்டம் என்னும் கொடிய அடக்கு முறைச் சட்டத்தையும். ஜாலியன்வாலாபாக் படுகொலையையும் எதிர்த்து அகிம்சை — சத்யாக்ரக நெறிகளில் புதிய அரசியல் பேரியக்கத்தை அறிமுகப்படுத்தி நடத்த காந்தியடிகள் ஒருவரால்தான் முடிந்தது. இந்த அறப்போர் நெறிகளின் பேராற்றலை தென்னாப்பிரிக்காவில் ஒத்திகைப் பார்த்து வெற்றி கண்டவர் காந்தியடிகள். திலகர் சகாப்த மறைவில் வெற்றிடம் தோன்றி விடுமோ எனும் அச்சத்தை நீக்க காந்தி சகாப்தம் உதயமாயிற்று.

1919-ஆம் ஆண்டில் அமிர்தசரசில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் காந்தி சகாப்தம் தொடங்கியது. இந்திய தேசிய காங்கிரசின் 34-வது ஆண்டு மாநாடாகக் கூடிய அமிர்தசரஸ் காங்கிரசில் முன்னணித் தலைவர்களான திலகர், காந்தியடிகள், அன்னிபெசண்ட், அலிசகோதரர்கள், சி. ஆர். தாஸ், எம். ஏ. ஜின்னா, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு ஆகியோர் கலந்துக்கொண்டனர். தமிழ்நாட்டில் இருந்து சேலம் ஸி. விஜயராகவாச்சாரியார், சி. பி. ராமசுவாமி ஐயர், கஸ்தூரி ரங்க ஐயங்கார், 'சுதேச மித்திரன்' ஏ. அரங்கசாமி ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி முதலான பலர் அமிர்தசரஸ் காங்கிரசிற்குச் சென்றனர். மோதிலால் நேரு தலைமையில் காங்கிரஸ் கூடியது.

இந்த அமிர்தசரஸ் காங்கிரசிற்கு செல்லப் பயணச் செலவிற்காக பணவசதியில்லாமல் இருந்த வ. உ. சி.க்கு, அவருடைய நண்பர் என். தண்டபாணி பிள்ளை செய்த ஏற்பாட்டில் ஈ. வே. ராமசாமி நாயக்கருடன் வ. உ. சி., அமிர்தசரஸிற்கு சென்றார்.

அமிர்தசரஸ் செல்லும் வழியில் பூனா அடைந்ததும் அங்கிருந்தத் திலகரின் சீடர்கள் வ. உ. சி.யை அடையாளங்கண்டு மகத்தான வரவேற்பளித்தனர். இதுவரை மூன்றாம் வகுப்பில் பயணம் செய்துவந்த வ. உ. சி.க்கு பூனாவில் இருந்து முதல் வகுப்பில் செல்லும் பயண வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.

அமிர்தசரஸ் காங்கிரசில் வ. உ. சி. பேசியதாக தகவல் இல்லை. மாண்டேகு-செல்ம்ஸ்போர்டு சீர்திருத் தங்களை காங்கிரஸ் கண்டனம் செய்து தீர்மானம் நிறைவேற்றியது. ''கிடைத்தைப் பெற்றுக் கொண்டு மேலும் பெற்றுக் கொள்ளக் கிளர்ச்சி செய்ய'' திலகர் பரிந்துரைத்தார். ஆனால், காந்தியடிகள் முற்றிலுமாக அந்தச் சீர்திருத்தங்களை எதிர்த்தார்.

நேருஜி தமது சுயசரிதையில் அமிர்தசரஸ் காங்கிர சின் பெரும்பாலான பிரதிநிதிகளும், அவர்களுக்கும் மேலாக வெளியே கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்க ளும் காந்தியடிகளின் தலைமையை எதிர்நோக்கினர் என்று குறிப்பிட்டுள்ளார். ''காந்திஜிக்கு ஜேய்'' என்றும் முழக்கம் எதிரொலித்தது. மாண்டேகு-செல்ம்ஸ் போர்டு சீர்திருத்தங்களை முற்றிலுமாக ஏற்க வேண்டும் என வலியுறுத்திய அன்னிபெசண்ட் ஏமாற்றத்துடன் சென்னை திரும்பினார்.

காந்தி சகாப்தத்தை முன்னெடுத்துச் சென்ற ரௌலட் சட்ட எதிர்ப்பு, சத்யாக்கரகம் ஆகிய இரண்டையும் ஏற்றுக் கொள்ள முன்வந்த வ. உ. சி., அகிம்சை நெறியை ஏற்க மறுத்துவிட்டார்.

அமிர்தசரசில் இருந்து சென்னை திரும்பிய அன்னி பெசண்ட் அம்மையாருக்கு வரவேற்பளித்து ஓர் ஊர் வலம் நடத்தத் திட்டமிட்டார், திரு. வி. கலியாண சுந்தர முதலியார். இந்தத் திட்டத்தை வ. உ. சி. எதிர்த்தார். இந்த வரவேற்பு, ஊர்வலம் காங்கிரஸ் கட்சியின் சார் பில் ஏற்பாடாகவில்லையென்றும், தொழிலாளர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்படுவதாகவும் விளக்கமளித் தார், திரு. வி. க. ஆயினும், அன்னிபெசண்ட்டிற்கு ஏற்பாடான வரவேற்பை எதிர்த்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன; மறுப்புக்கூட்டங்கள் நிகழ்ந்தன. ஆயினும் திட்டமிட்டபடி 11.1.1920-இல் ஊர்வலமும், வரவேற்பும் நிகழ்ந்தன. குத்தி பி. கேசவப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடந்தது; திரு. வி. க. நன்றி

கூறிப்பேசினார். இந்தக் கூட்டத்தைக் கண்டனம் செய்து அன்று மாலையிலேயே சென்னை கடற்கரையில் நடை பெற்றக் கூட்டத்தில் வ. உ. சி. பேசினார். இதன் தொடர் பாக, திரு. வி. க., தமது ''வாழ்க்கை குறிப்புகள்'' எனும் நூல் கூறியுள்ளதாவது:

''அவர் வாய் பெசண்ட் அம்மையாரையும், என்னை யும் ''வாழ்த்தியது.'' எப்படி வாழ்த்தியது? வசை மலர் களால் வாழ்த்தியது; அம்மலர்கள் பத்திரிகை நிருப நேயர்களால் திரட்டப்பட்டன; அம்மையாருக்கும் எனக் கும் அனுப்பப்பட்டன. அன்னிபெசண்ட் அம்மையார் வண்டி, 'தேசபக்தன்' நிலையத்தின் முன் காணப்பட்டது. யான் ஓடி வந்தேன். அம்மையார் என்னை வண்டியில் ஏறுமாறு கூறினர்; ஏறினேன். 'நேற்றைய கடற்கரை நிகழ்ச்சி உமது செவிக்கு எட்டியதா? என்று கேட்டார்; எட்டியது என்றேன். 'யான் பிராட்லாவினிடம் பயின்ற வள். எத்தகைய வசைகளையும் யான் தாங்குவேன்.''

அன்னிபெசண்ட் அம்மையார் ரௌலட் சட்டத்தை எதிர்க்கவில்லை. காந்தியடிகளின் சத்யாக்ரகத்தையும் அங்கீகரிக்கவில்லை. ஆனால், திரு. வி. க. இவ்விரண்டை யும் காந்தியடிகள் வழியே ஏற்றுக்கொண்டார். தமது இந்தக் கருத்தை அன்னிபெசண்ட் அம்மையாரிடமும் தெரிவித்தார்.

ரௌலட் சட்ட எதிர்ப்பில்

வ. உ. சி. அமிர்தசரஸ் காங்கிரசிற்கு செல்வதற்கு முன்பே ''ரௌலட் மசோதா''வை எதிர்த்துப் பேசியுள் ளார். சென்னையில் 1919 பிப்ரவரி 12-இல் சுப்பிர மணிய சிவா ஏற்பாடு செய்த கூட்டத்தில் வ. உ. சி. பேசினார். சுமார் 4000 மக்கள் கூடியிருந்தனர். வ. உ..சி. அப்பொழுது பேசியது இந்திய அரசாங்கத்தின் 1918-1919-ஆம் ஆண்டிற்கான மாதமிருமுறை அறிக்கை யில் ஆங்கிலத்தில் பதிவாகியுள்ளது. இதில் கூறப்பட் டுள்ளதாவது:

''பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மை, தன்னிச்சை யான அக்கிரமம், அநீதி, குரூரம் காரணமாகவே, அதற்கு எதிரான சதிகள் தூண்டப்பட்டன. இதை எதிர்ப்பவர் களுக்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. நாட்டை விட்டு ஓடிவிடவேண்டும் அல்லது அரசாங்கத்தின் வழியில் இருந்து வெளியேறிவிட வேண்டும் அல்லது அரசாங்கத் திடமிருந்து விடுபட வேண்டும்.''

16.3.1919-இல் 'இந்தியன் ஹோம்ரூல் லீக்'கின் சார்பில் சென்னை கடற்கரையில், ரங்கநாதநாயுடு தலைமையில் 'ரொளலட் மசோதா' எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் சுப்பிரமணிய சிவா. இதில் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், அனுமந்தராவ், தண்டபாணி பிள்ளை, பாஷ்யம் அய்யங்கார், ஆதிநாராயண செட்டியார், சுப்பிரமணிய சிவா ஆகியோருடன் வ. உ. சி.யும் பேசினார். அவர்கள் அனைவரும் காந்தியடிகள் தலைமையைப் பின்பற்ற வேண்டும் என்றும், சாத்விக எதிர்ப்பைக் கைகொள்ள வேண்டும் என்றும் அவையினரை ஊக்கப்படுத்தினர்.

வ. உ. சி. பேசியபொழுது சாத்விக எதிர்ப்புக் கொள்கையை ஆதரித்தார். ரௌலட் மசோதாவை எதிர்க்க சாத்விக எதிர்ப்பைப் பின்பற்றுவது மூலம், அந்த மசோதா விலக்கிக் கொள்ளப்படுவதோடு சுய ராஜ்யமும் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார். சிறை செல்லப் பயப்படக் கூடாது. சிறைவாழ்க்கை விரும்பத்தக்கது என்றும் அவையோரிடம் எடுத்துரைத் தார், வ. உ. சி. இந்தச் செய்தி தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள விடுதலை இயக்கத்தின் வரலாறு தொகுதி 5-இல் கூறப்பட்டுள்ளது.

17.3.1919-இல் ''ரௌலட் சட்ட எதிர்ப்புக் குழு'' வின் சார்பில் சென்னையில் நடைபெற்றக் கூட்டத்திலும் வ. உ. சி. பேசினார். இந்தக் கூட்டத்திற்கு கஸ்தூரி ரங்க அய்யங்கார் தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் காந்தியடிகள் பேசிய பின்னர் மதுரையைச் சார்ந்த

ஜார்ஜ் ஜோசப் ஆங்கிலத்திலும், வ. உ. சி., தமிழிலும், ஹரிசர்வோத்தம ராவ் தெலுங்கிலும் பேசினார்கள். டி. வி. கோபால்சாமி முதலியார் நன்றி கூறினார்.

காந்தியடிகளுடன் ஒரே மேடையில் வ. உ. சி. பேச வாய்ப்பேற்பட்டது, வ. உ. சி.யின் அரசியல் வாழ்க்கையில் புதியதொரு அனுபவமாகும்.

காந்தியடிகள் தலைமைப்பற்றி

காந்தியடிகள் சென்னைக்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்பு ரௌலட் சட்டத்தை எதிர்க்கும் சத்யாக்ரக உறுதி மொழியை வலியுறுத்த நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் வ. உ. சி.யும் உரையாற்றினார். அன்றைய பேச்சில் வ. உ. சி., காந்தியடிகளின் ஆன்மிக சக்தியைப் பாராட்டிப் பின்வருமாறு பேசினார்.

''மிருக சக்தியைப் பெருக்குவதில் மேற்கு நாட்டார் திறமைசாலிகள். இந்த மிருக சக்திக்கும் ஆன்ம சக்திக்கும் நடைபெறும் இந்தப் போரில் ஆன்ம சக்தியானது வெற்றி பெறுவது உறுதி. நாட்டின் உண்மையான பக்தர்கள் யார் என்பதை இனங்கண்டு கொள்வதற்கு இதுவே தகுந்த தருணமாகும். மகாத்மா காந்தி தலைமையின்கீழ் இந்தியா முழுவதும் சாத்விக எதிர்ப்பை மேற்கொள்வதற்கும் இதுவே காலமாகும். சாத்விக எதிர்ப்பில் நாம் உறுதியாக இருந்தால் அது நாம் சுயாட்சி பெறுவதற்கு நிச்சயம் உதவும்.''

அரசியலை ஆன்மிகமயப்படுத்த முனைந்த காந்தி சகாப்தத்தில் பேசப்பட்ட வ. உ. சி.யின் இந்தப் பேச்சு, 'இந்து' இதழில், 10.3.1919-இல், வெளிவந்தது. திலகர் 1920-இல் காலமாவதற்கு முன்பு தேசிய அரசியலில் உருவாகி வந்த காந்தியடிகளின் தலைமையை வ. உ. சி. சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகளின் சத்யாக்ரக நெறிமுறையை ஏற்க முடியாமல் அவருடைய நெருங்கிய சென்னை நண்பர்

ஜி. ஏ. நடேசன் உட்பட சிலர் அறிக்கை வெளியிட்டனர். இவர்களுடைய போக்கை எதிர்த்த சத்யமூர்த்தி, கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆகியோருடன் சேர்ந்து வ. உ. சி.யும் அந்த அறிக்கையை எதிர்த்தார் என்ற செய்தியை, 'தமிழ்நாட்டில் காந்தி' (ஆசிரியர், அ. இராமசாமி) எனும் நூலில் அறிகின்றோம்.

காந்தியடிகள் உருவாக்கிய சத்யாக்ரக உறுதிமொழியைப் பொதுக்கூட்டத்தில் படித்து தாம் ஏற்றதோடல்லாமல், பிறரும் ஏற்க வேண்டும் என வ. உ. சி. அழைப்பு விடுத்தார். வ. உ. சி.யின் இந்தப் பேச்சைப்பற்றியச் செய்தியை ஓர் அரசாங்க உயர் அலுவலரின் உத்தியோகப் பூர்வமானக் குறிப்பில் பின்வருமாறு அறியமுடிகிறது.

''28.4.1920-இல் தூத்துக்குடியில் நடைபெற்றக் கூட்டத்தில் வ. உ. சி. அவையோரை நோக்கிக் கூறியதாவது. 'சிறைக்கு செல்லாமல் சுயராஜ்யம் கிடைத்து விடும் என்று நினைக்காதீர்கள். நாம் சுயராஜ்யம் பெற்றுவிட்டால் பல அடுக்குமாடி வீட்டில் வாழலாம்; நானும் அரசன் போல் இருப்பேன்.... நீங்கள் சுயாட்சி பெற வேண்டுமானால், அது சமாதான வழியில் வராது. சத்யாக்ரக நெறியைத் தவிர வேற எதையும் நீங்கள் நாட வேண்டும்.''

வ. உ. சி.யின் இந்தப் பேச்சின்மீது நடவடிக்கை எடுக்க வழியுள்ளதா என்பதை அறிய, அரசு தரப்பு வழக்கறிஞர் — 'அட்வகேட்ஜெனரல்' — ஆராய்ந்த கருத்து கூறக் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆயினும், அரசாங்க வழக்கறிஞர் 21.5.1920-இல் தெரிவித்த தமது கருத்தில், வ. உ. சி.யின் பேச்சில் ராஜத்துரோகம் தொடர்பானது எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார்.

காந்தியடிகள் ஊக்குவித்த 'கிலாபத்' இயக்கத்திலும் வ. உ. சி. ஈடுபாடு கொண்டார். 19.3.1920-இல் சென்னை மாநிலக் கல்லூரிக்கு எதிரில் கடற்கரையில் ''கிலாபத் நாள்'' கொண்டாடப்பட்டது. திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தலைமை வகித்தார். மௌல்வி

ஜியாவுதீன் முகமது சாகப், கான் பகதூர் அப்துல் குர்துஸ் பாதுஷா சாகப், ஸி. அப்துல் ஹக்கீம் சாகப், ஹரிசர்வோத்தம ராவ், ஏ. அரங்கசாமி ஐயங்கார், வி. சக்கரை செட்டியார், முனகலா ஜமீன்தார், டாக்டர் யூ. ராமராவ், டாக்டர் சுப்பராயன், டாக்டர் நஞ்சுண்ட ராவ், சகோதரி பாலாம்பாள், கஸ்தூரி ரங்க ஐயங்கார், ஸ்ரீ. ஆதிநாராயண செட்டியார், டி. வி. வெங்கடராம ஐயர், ஜி. ரங்கய்ய நாயுடு ஆகியோர் பேசினர்.

1917 அக்டோபர் சோஷலிசப் புரட்சியைக் கண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அச்சமுற்றதை மனதில் கொண்டு மேற்படிக் கூட்டத்தில் வ. உ. சி. பேசிய பொழுது ரஷ்யப் புரட்சி வீரர்களான போல்ஷ்விக்கு களைப்பற்றிக் குறிப்பிட்டார். இந்தச் செய்திக்குறிப்பு அரசாங்க ரகசிய அறிக்கையில் பின்வருமாறு வெளி வந்தது:

"துருக்கியர்களுக்கு எதிராக (பிரிட்டிஷ் அரசு) முடி வெடுத்தால், முன்னேறிக்கொண்டுவரும் போல்ஷ்விக்கு கள், இந்தியாவிற்குள் நுழைந்தால், முன்புபோல் யுத்தத் தின் பொழுது இந்துக்களும், முஸ்லீம்களும் ஆட்களையோ, பணத்தையோ (பிரிட்டிஷ் அரசுக்கு) தரமாட்டார்கள்."

"'போல்ஷ்விஸம்' பீடு நடைபோடுகிறது" எனும் கருத்து பரவத்தொடங்கிய காலம், அக்காலம். இந்திய தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களில் பலர் அந்த இயக்கத்தைப் பாராட்டியுள்ளனர்.

பொதுக் கூட்டங்களில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்து வ. உ. சி. பேசி வந்தாலும், அந்தக் கொள் கையை ஏற்பதில் உறுதிபட நிற்கவில்லை என்பதை 17.8.1920-இல் சுதேச மித்திரனில் வெளிவந்த பின் வரும் செய்தி சுட்டிக் காட்டியது.

"ஜனங்களுக்கு சக்தியையும் தைரியத்தையும், உண்டு பண்ண வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். ஒத்துழையாமையை அனுஷ்டிப்பதால் ஜனங்கள

கோழைத்தனமடைந்து விடுவார்கள். ஆனாலும் (முடி வில்) இக் கமிட்டியின் தீர்மானப்படி நடக்க நான் தயா ராக இருக்கின்றேன்.''

இங்கு 'கமிட்டியின் தீர்மானப்படி' என்பதை சற்று விளங்கிக் கொள்ள வேண்டும். 15.8.1920-இல் சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டி கஸ்தூரி ரங்க ஐயங்கார் தலைமையில் கூடி ஒத்துழையாமைத் திட்டம் பற்றி நான்கு மணி நேரம் ஆலோசித்து இறுதியில் ஒத்துழையாமை இய்க்கத்தின் கொள்கையையும், குறிக் கோளையும் ஏற்றுக் கொள்வதென்றும், ஆனால் அதன் திட்டத்தைப்பற்றி மற்றொரு முறை கூடி மீண்டும் ஆலோசிப்பதென்றும் முடிவு செய்தது. இதைத்தான் ''கமிட்டியின் தீர்மானப்படி'' என்று வ. உ. சி. குறிப் பிட்டார்.

ஒத்துழையாமைக்கு எதிராக இறுதியான முடிவை 1920 கல்கத்தா 'ஸ்பெஷல்' காங்கிரஸ் கூடவிருந்த போது எடுத்தார், வ. உ. சி. காங்கிரசில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் வரும் சமயத்தில் பலப்பரீட்சை தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் திலகர் மறைவு ஒரு மாதத்திற்கு முன்பு நிகழ்ந்துவிட்டது. பலப்பரிட்சையில் தீர்மானத்தை எதிர்க்க வ. உ. சி. முன் நின்றார். ராஜாஜி தீர்மானத்தை ஆதரிக்க தீவிரமாகப் பாடுபட்டார். எஸ். சத்திய மூர்த்தி, கல்கத்தா காங்கிரஸ் தலைவர் சித்தரஞ்சனதாஸை ஆதரித்து, சட்ட சபை பிரவேசத்திற்கு வழிவகுக்கும் தீர்மான நிறைவேற்றத் திற்குப் பாடுபட்டார். அன்னிபெசண்ட் அம்மையார் ஒத்துழையாமை தீர்மானத்தை அடியோடு எதிர்த்தார். இவ்வாறு தமிழகப் பிரதிநிதிகள் பல்வேறு நோக்கு களைக் கொண்டிருந்தனர். காந்தியடிகளின் சத்யாக்ரக நெறியைக் கடுமையாக எதிர்த்ததால் அன்னிபெசண்ட் டின் அரசியல் வீழ்ச்சி தொடங்கியது.

வ. உ. சி., தம்முடன் கல்கத்தா காங்கிரசிற்கு வந்த தமிழகப் பிரதிநிதிகளிடையே ஒத்துழையாமை

தீர்மானத்திற்கு எவ்வாறு ஆதரவு திரட்டினார் என்பதைப்பற்றி உடன் சென்ற நாமக்கல் கவிஞர் விளக்கிய விடத்தில், வ. உ. சி.க்கு அகிம்சா தர்மத்தில் நம்பிக்கை யில்லாததைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்:

''அவருக்கு அஹிம்சை மார்க்கத்தில் அணுவேனும் நம்பிக்கையில்லை. பகைவனை வெல்லுவதில் பரிசுத்தம் பார்க்க முடியாது என்பதும், போர் மூண்டுவிட்ட பின் புண்ணியம், பாவம், பொறுமை என்றெல்லாம் ஆலோசிக்க அவசியம் இல்லையென்பதும் அவருடைய கொள்கை. போர்த்தொடுக்கும் காரணம் மட்டும் சரியானதா என்று பார்க்க வேண்டும். அது நியாயமானதென்று நிச்சயித்து விட்டால் போரின் முறைகளைப்பற்றி நின்ற பார்த்துக் கொண்டிருப்பது கோழைத்தனம் என்பதே அவர் கொண்டது. இந்த நம்பிக்கை அவருடைய மனப்பூர்வமானது.''

கல்கத்தா சென்றடைந்தப் பிறகும் ஓய்வில்லாமல் தமிழகப் பிரதிநிதிகள் தங்கியிருந்த இடத்திற்கென்று காந்தியடிகளின் தீர்மானத்திற்கு எதிரான ஆதரவு திரட்ட முயற்சித்தார். ஆனால், அவருக்குக் கிடைத்த ஆதரவு, மிகச் சொற்பமே. கல்கத்தா காங்கிரசில் வ. உ. சி. பேச வாய்ப்பேற்படவில்லை. திலகரின் சீடரான ஜோசப் பாப்டிஸ்டா என்பவர் பேசினார். அவர் பேச்சின் ஒரு பகுதி வருமாறு: ''அமிருதசரஸில் திலகர் ஒத்துழைப்பை ஆதரித்தார். அவருடைய உண்மையான சீடர்களில் நானும் ஒருவர். சட்ட சபைகளை பகிஷ்கரிக்காமல் சிறந்த தேசியத் தலைவர்களை அங்கு அனுப்புவதே சிறந்ததென்பது திலகரின் கொள்கை.''

'தேசபந்து' சித்தரஞ்சனதாஸ், விபின் சந்திரபால், சாமன்லால், அன்னிபெசண்ட், சத்தியமூர்த்தி, எம். ஏ. ஜின்னா, லாலா லஜ்பத்ராய் முதலானோர் காந்தியடிகள் தீர்மானத்தை எதிர்த்த போதிலும், தீர்மானத்திற்கு ஆதரவாக 1586 வாக்குகளும், எதிராக 864 வாக்குகளும் பதிவாயின. சென்னை மாநிலத்தில்

இருந்து சென்றப் பிரதிநிதிகளில் காந்தியடிகளுக்கு ஆதர வாக 161 பேர்களும், எதிராக 145 பேர்களும் வாக்களித்தனர்.

கல்கத்தா சிறப்பு காங்கிரசின் முடிவு, காந்தியடி களின் அரசியல் தலைமை, அரசியல் வழிமுறைகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

''கல்கத்தாவில் காந்தியடிகளின் அகிம்சை தீர்மானம் நிறைவேறியதிலிருந்து சிதம்பரம் பிள்ளையவர்களின் அரசியல் வாழ்க்கை அடங்கிவிட்டது. காந்தியடிகளை எதிர்க்க முடியாதென்று கண்டு ஒதுங்கி விட்டார்.'' இவ்வாறு நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை கூறியுள்ளார்.

1920 ஆகஸ்ட் 4-இல் சென்னையில் திலகர் மறைவு குறித்த கூட்டம் நடைபெற்றது. கஸ்தூரி ரங்க ஐயங்கார் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தார். வ. உ. சி., வழிமொழிந்து பேசிய பொழுது தமது குருவையும், தலைவரையும் இழந்த நிற்பதாகக் குறிப்பிட்டார். ''திலகர் ஒத்துழையாமை மூலம் 'சுய ஆட்சி' பெறவிரும்ப வில்லையென்றும், ஆனால் தம் கைவசம் உள்ள ஒவ் வொரு சட்ட சம்மதமான ஆயுதத்தையும் பயன்படுத்த விரும்பினார்'' என்றும், 'திலகர் வழியில் 'சுய ஆட்சி' பெறப் பாடுபடுவோம் என்றும் பேசினர், வ. உ. சி.

காந்தி சகாப்தத்தில் தமது இறுதி முடிவாக திலகர் வழியை வலியுறுத்திய வ. உ. சி., கல்கத்தா காங்கிரசிற்கு சென்று வந்த பிறகு காங்கிரசில் இருந்து வெளியேறுவ தாக ஓர் அறிக்கை வெளியிட்டார்.

காங்கிரசில் இருந்து விலகியது, அவருக்கு மகிழ்ச்சி அளித்திருக்காது என்பதில் ஐயமில்லை. காங்கிரசில் அவருக்கிருந்த பெருந்தகுதி வியப்பிற்குரியது. அந்த அமைப்பை மற்றெதைக்காட்டிலும் அவர் நேசித்தார். உண்மையில் அவர் காங்கிரஸ் வாதி என்பதனாலேயே முதலில் இரு ஆயுள்தண்டனைக்குள்ளானார். ஆனால்

தமது அரசியல் குரு திலகரை இழந்ததும் துடுப்பில்லாத படகு புயலில் அலைக்கழிக்கப்பட்டதுபோல அவர் நிலைமை ஆகிவிட்டது. காந்தி சகாப்தத்தில் தோன்றிய புதிய நிலைமைகளுடன் ஒத்துப்போக மனமில்லாமல் காங்கிரசில் இருந்து விலக முடிவெடுத்தார்.

கல்கத்தா சிறப்பு காங்கிரசிற்கு வ.உ.சி.யுடன் சென்று வந்த சுப்ரமணிய சிவாவும் காங்கிரசின் முடிவு மிக்க ஏமாற்றம் தந்ததாகக் குறிப்பிட்டு, தமது நண்பர் சின்னமுத்து முதலியாருக்கு 13.9.1920-இல் பின்வரு மாறு கடிதம் எழுதினார்.

''நான் கல்கத்தாவிலிருந்து நேற்று திரும்பி வந்து சேர்ந்தேன். காங்கிரஸ் மகாசபை ஒருபோக்கில் முடிந் தது. அனுபவம் மிகுந்த தலைவர்களனைவர்களுடைய யோசனைகளை காந்தி எதிர்த்து, தன் மனம் போன போக்கில் காரியங்களை நடத்திக் கொண்டார். மகமதி யர்கள் குருடர்கள் போன்று அவரைப் பின்பற்றினார் கள். காந்தி, காங்கிரசை ஊழல் செய்துவிட்டார்.'' காந்தியடிகள் தீர்மானத்தை எதிர்த்த சித்தரஞ்சனதாஸின் சுயராஜ்யக் கட்சியில் சுப்ரமணிய சிவா மிக்க ஆர்வ முடன் பங்கேற்றார்.

அரசியல் இரட்டையர்களான வ.உ.சி.யும், சுப்ர மணிய சிவாவும் காந்தியடிகள் கொள்கைகளுக்கு ஏற்பத் தங்களைப் பொருந்திக் கொள்ள விரும்பவில்லை.

1921 மார்ச்சில் கோயமுத்தூரில் மலபாரில் முஸ்லீம் கள் கிளர்ந்தெழுந்து நடத்திய 'மாப்ளா புரட்சி'யைப் பற்றி, கிலாபத் இயக்கத்தின் ஒருபகுதியாகக் கருதி, வ. உ. சி. பேசினார். இதற்காக அவர் மீது இந்தியக் குற்றவியல் சட்டம் 108-வது பிரிவின் கீழ் ராஜத் துரோகப்பேச்சிற்காக வழக்கு தொடுக்கப்பட்டது. இதற் காக அவர் சொந்த முறையில் காப்புறுதி கொடுக்க வேண்டியதாயிற்று. இதற்குப்பிறகு அவர் அரசியலில் இருந்து விலகி விட்டார்.

காந்தியடிகளுடன் அரசியல் உறவை விலக்கிக் கொண்ட வ. உ. சி., 1915-இல் காந்தியடிகளுடன் கடிதத் தொடர்பு கொண்டு அதில் தமது வறுமை நிலையைக் குறிப்பிட்டதை இங்கு நினைவு கூர்தல் அவசியமாகும்.

தென்னாப்பிரிக்காத் தமிழர்கள் சார்பில், அங்கிருந்த தேசபக்தர் தில்லையாடி வேதியப்பப் பிள்ளை வ. உ. சி. யின் குடும்பத்திற்கு நிதியுதவி திரட்டினார். அக்காலத்தில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கலை எதிர்த்து அறப்போர் நடத்தி வந்தார். காந்தியடிகள் இந்தியா திரும்பிய பொழுது அவரிடம் தாம் திரட்டிய நிதியை வேதியப்பப் பிள்ளை, வ. உ. சி.யிடம் சேர்த்திடக் கொடுத்தனுப்பினார். ஆனால், என்ன காரணமத்தினாலோ அந்த நிதியுதவி வ. உ. சி.யிடம் சேரவில்லை. வேதியப்பப் பிள்ளை தமிழகம் வந்த பிறகுதான் வ. உ. சி. செய்தியறிந்தார். அப்பொழுது அகமதாபாத்தில் தங்கியிருந்த காந்தியடிகளுக்கு வ. உ. சி., கடிதம் எழுதி. பணம் வந்துசேராததை நினைவூட்டினார். இந்தக் கடிதம்* 22.3.1915-இல் வ. உ. சி.யின் மயிலாப்பூர் முகவரியான 40, பரிபூர்ண விநாயகக் கோயில் தெருவில் இருந்து எழுதப்பட்டது. இதில் ஒரு பகுதி வருமாறு.

''நானும் என் குடும்பத்தினரும் கடந்த ஓராண்டு காலமாக சில தென்னாப்பிரிக்கா இந்தியர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தோம் என்பதைத் தங்களிடம் நேரில் நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன். இப்பொழுது கூட அவர்களிடம் நிதியுதவிக் கேட்டிருக்கின்றேன். இந்த நிலைமையில் எனக்கு சேரவேண்டிய பணத்தை, வழங்கப் படுவதற்கு தயார் நிலையில் உள்ள பணத்தை நான் வேண்டாம் எனக் கூற எந்தக் காரணமும் இல்லை.

---

* ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற இந்தக் கடிதம் வ. உ. சி.யின் கையெழுத்துடன் முழுமையாக இந்நூலில் பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளது.

தற்பொழுது, என்னுடையச் சூழல்களில் நான் பணத்தை வேண்டாம் என்று மறுத்தால், எனக்கும் என்குடும்பத் திற்கும் தவறிழைத்தவனாவேன்.''

வ. உ. சி.யின் இந்த அரிய கடிதம், தமிழ்நாடு அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் பாது காத்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால், காந்தி நூல்கள் தொகுதிகளில் இந்தக் கடிதம் விடுபட்டு போய் இருப் பது, வியப்பிற்குரியது.

காந்தியடிகளிடம் தமது வறுமைச் சூழலை, மனந் திறந்து குறிப்பிட்ட வ. உ. சி., மீண்டும் வக்கீல் தொழில் புரிய முயன்றார். வெள்ளையரான நீதிபதி இ. எச். வாலஸ் உதவியதால் வக்கீல் சன்னத்தைப் பெற்றார், வ. உ. சி. மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட சமயத்தில், அந்நியரான ஆங்கிலேயர் செய்த பேருதவியால் உளம் நெகிழ்ந்த வ. உ. சி. நன்றியறிதலையும் மிக்க சான்றாண்மையுடன் தெரிவித்தார். ஆம்; தம்முடைய மகனுக்கு நீதிபதி வாலஸ் நினைவாக வாலீஸ்வரன் என்று பெயரிட்டார்.

அரசியல் போராட்டம், வாழ்க்கைப் போராட்டம் இரண்டிலும் கடுஞ் சோதனைகளைச் சந்தித்து வந்த வ. உ. சி., கோவில்பட்டியில் மீண்டும் வழக்கறிஞர் தொழிலாற்றத் தொடங்கினார். அங்கு சில காலம் இருந்தப் பிறகு மறுபடியும் தூத்துக்குடிக்குத் திரும்பினார்.

மீண்டும் காங்கிரசில்

கொள்கை வேற்றுமை காரணமாக ஒருசமயத்தில் காங்கிரசில் இருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும், நூற்றுக்கு நூறு தேசியவாதியான வ. உ. சி., ஏழாண்டுகள் கழித்து மீண்டும் காங்கிரசில் சேர்ந்தது வியப்பன்று. 1927-இல் சேலத்தில் நடந்த மாகாண அரசியல் மாநாட்டில் வ. உ. சி. தலைமையேற்றார். தமது தலைமையுரையில் மீண்டும் காங்கிரசில் சேர்ந்த தைப்பற்றி விளக்கினார். வரலாற்று முக்கியத்துவம்

வாய்ந்த இந்த உரையின் ஒரு பகுதியை வ. உ. சி. புகழ் பரப்பிய முன்னோடி, ம. பொ. சிவஞானம் தமது ''மகத்தான தேசபக்தர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை'' (1972) எனும் ஆங்கில நூலில் வழங்கியுள்ளார். இதனுடைய தமிழாக்கம் பின்வருவது.

''நான் காங்கிரசில் மீண்டும் சேர்ந்தது ஏன் எனில், கல்கத்தா சிறப்பு காங்கிரசிற்கு முன்பு இருந்த நிலைமை மறுபடியும் காங்கிரஸ் பெற்றுள்ளது. முக்கியமாக நீதி மன்றங்களை பகிஷ்கரித்தல், கல்லூரிகளில் இருந்து வெளியேறுதல், அமைச்சரவைகளில் இருந்து விலகுதல் முதலான என்னுடைய கொள்கைக்கு எதிரான, இந்த வழிமுறைகள் இப்பொழுது கைவிடப்பட்டு விட்டன. காங்கிரசில் இருந்து விலகிய நான் பல ஆண்டுகளாக காங்கிரசில் மீண்டும் இணைவதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

''என்னுடைய உற்ற நண்பரும், மற்றும் உங்களைப் போன்ற நண்பர்களும் சரியான சமயத்தில் இந்த மாநாட்டிற்கு தலைமையேற்கப் பணித்தீர்கள்; சரியான சமயத்தில் உதவி செய்தீர்கள். ''அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் அமைதியான முறையில் போராடிக் கொண்டிருந்த பொழுது, தேசபக்தி உணர்வு இல்லாமல் நீங்கள் ஓடிப்போய்விட்டீர்கள்'' என என்னைப்பற்றி ஒரு வழக்கறிஞர் (பாரிஸ்டர்) கேவலமாகப் பேசியதை நான் மறக்க இயலாது. இவர் மட்டுமன்று, ஒரு பத்திரிகையாளர் என்னைத் தாக்கி இழிவுபட எழுதியதையும் என்னால் மறக்க இயலாது. அந்தப் பத்திரிகையாளர், ''தாய்நாட்டிற்குத் துரோகம் செய்து சிதம்பரம் அரசாங்கத்திடம் இலஞ்சம் வாங்கி விட்டார்'' என்று எழுதினார். தேசபக்தி நாளுக்குநாள் வளரக்கூடியது: அது தேய்வடையாது; அல்லது அழிந்துவிடாது. வெளிச்சமிருக்குமிடத்தில், இருள் எவ்வாறு இருக்காதோ, அதேபோல் தேசபக்தியுணர்வு எனும் பேரொளி பரவி இருக்கும் பொழுது துரோக இருள் இருக்க முடியாது. என்னை ஏசியவர்களுக்கு இந்த உண்மை தெரியுமா? திலகரின் சீடராக

என்னைப் பெருமைப்படுத்தி மக்கள் பேசும் நன்னாட்கள் வந்துவிட்டதை அறிய மிக்க மகிழ்ச்சி கொள்கின்றேன்.''

தேசபக்தர்களுக்காக வாதாடினார்

சேலம் மாநாட்டைத் தொடர்ந்து காங்கிரசில் வ. உ. சி. தீவிரமாகப் பணியாற்றுவதற்குரியச் சூழல் தொடரவில்லை.

வக்கீல் தொழிலில் மீண்டும் பணியாற்றத்தொடங்கியக் காலத்தில் தேசபக்தர்கள் மீதான அரசாங்க வழக்குகளில் ஊதியம் வாங்காமல் வாதாடுவதை கடமையாகக் கொண்டிருந்தார் வ. உ. சி.

தூத்துக்குடி தேசபக்தரான அ. மாசில்லாமணிப் பிள்ளை 1930-ஆம் ஆண்டில் உப்பு சத்யாக்ரகத்தின் போது கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு தொடரப்பட்ட பொழுது, அவருக்காக வ. உ. சி. வாதாடினார், இதன் தொடர்பாக மாசில்லாமணிப் பிள்ளை அவர்களுக்கு கோவில்பட்டியில் இருந்து 9.7.1930-இல் எழுதியக் கடிதத்தில் உள்ள பின்வரும் சொற்றொடர்கள் வ. உ. சி.யின் தேசபக்தியுணர்வை எடுத்துரைக்கின்றன.

''தேசாபிமானிகள் பேரில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு கேசிலும், மிக மிக அற்பக் கேசிலும், எதிர்வாதம் செய்து கவர்ண்மெண்டாரும், கோர்ட்டாரும், போலீசாரும் தேசாபிமானிகள் சம்பந்தமாகச் செய்யும் செயல்களையெல்லாம் உலகறியச் செய்ய வேண்டுமென்பதே என்னுடைய சித்தாந்தம்.''

தேசபக்தர்களுக்காக வாதிடுவதில் வ. உ. சி. கொண்டிருந்த ஈடுபாட்டை நேரில் பழகி கண்டறிந்த தியாகி எஸ். என். சோமயாஜுலு எழுதியுள்ள பின்வரும் பகுதி, இங்கு, கவனத்திற்குரியது:

''அன்றொரு நாள் தூத்துக்குடியில் ஒரு கூட்டம்; அக்கூட்டத்தில் திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்,

வேலூர் கோடையிடி குப்புசாமி முதலியார், பண்ருட்டி தெய்வ நாயகையா, சிதம்பரம் நைனியப்பப் பிள்ளை முதலியோர் பேசினார். வந்தது, சீற்றம் வெள்ளைய னுக்கு; தொடுத்தான் ராஜத்துவேஷக் குற்றச்சாட்டை. 'இந்தியன் பீனல் கோடு' 108-வது செக்ஷன்படி ஜாமீன் வழக்கு. அவ்வழக்கு கோவில்பட்டி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் நடந்தது. அவ்வமயம் வழக் குரைஞராக இருந்த வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், அவ்வழக்கை நடத்தினார்கள். அப்போது நானும், மறைந்த தலைவர் காமராஜும், விருதுநகர் முத்துசாமி அவர்களும் வழக்கு நடந்தபோதெல்லாம் கூடவே இருந்து, வழக்குக்கும் தேசபக்தர்களுக்கும் உதவி செய்து வந் தோம். ஆனால், வ. உ. சிதம்பரனார் அவர்கள் வழக் குரைஞராக மட்டும் விளங்கவில்லை; இல்லத்தில் அமுது படைக்கும் அன்னதாதாவாகவும் விளங்கினார். நீதி மன்றத்தில் வ. உ. சிதம்பரனாரின் நாவிலிருந்து சரமாரி யாகக் கேள்விக் கணைகள் புறப்பட்டன. வழக்கு முடிந் தது. ஜாமீன் கொடுக்கப்பட வேண்டும் எனத்தீர்ப்புக் கூறப்படாததில் வியப்பில்லை! அந்நிய அரசல்லவா! முடிவைக் கேட்டதும் தேசபக்தி மீதூரலால் கண்ணீர் விட்டு அழுது அவர்களைச் சிறைக்கு வழி அனுப்பினார், வ. உ. சி. அவர்கள். இதுதான் என் உள்ளத்தைத் தொட்டு மெய்சிலிர்க்க வைத்த சம்பவம்.''

1931-இல் கோவில்பட்டியில் கள்ளுக்கடை மறியல் தொடர்பாக தியாகி எஸ். என். சோமயாஜுலு உட்பட பலர்மீது வழக்கு தொடரப்பட்டது. அவர்களுக்கான வக்கீல்களில் வ. உ. சி.யும் ஒருவர். இதைப்பற்றியும் தியாகி எஸ். என். சோமயாஜுலு கூறியிருப்பதாவது:

''கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்ட எங்களை உட் கார வைக்கவில்லை. திரு. வ. உ. சிதம்பரனார் அவர்கள் தேசபக்தர்களை உட்கார அனுமதிக்காவிடில் தானும் உட்காரப் போவதில்லை என்று எடுத்த எடுப்பிலேயே போர்க்கணையைத் தொடுத்தார்கள். எங்களைக் கைது

செய்த போலீஸ் டிபுடி சூப்பிரண்டெண்டு திரு. அப்பா துரைப் பிள்ளையை மூன்று நாட்கள் கூண்டில் கால் கடுக்க, கால்கள் பின்னிட நிற்க வைத்து, ஓய்ந்து போகும் படி குறுக்கு விசாரணையை நடத்தினார்! இதில் வியப்பு, நின்றவர்கள் உட்கார்ந்திருந்தோம்; உட்கார்ந்த அதிகாரி நின்று கொண்டே இருந்தார். இதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.''

இவ்வாறு பல தேசபக்தர்களுக்காக வ. உ. சி நீதி மன்றங்களில் வாதாடிய பொழுதெல்லாம், காந்தியடி களின் தன்னேரில்லாதச் செல்வாக்கை உணர்ச்சிபூர்வ மாக அறிந்தார்.

அரிசன ஆலயப்பிரவேசத்திற்காக 1933-இல் காந்தி யடிகள் 21 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்ட பொழுது வ. உ. சி. பெருங்கவலையுற்றார். அவ்வமயம் தூத்துக்குடி காங்கிரஸ் பிரமுகர் திரு. மு. சி. வீரபாகு அவர்களிடம், ''தம்பி, மகாத்மாவின் உயிரை எப்படியும் காப்பாற்ற வேண்டும். அரிசனங்களுக்குக் கோவில் களைத் திறந்துவிட நகரமக்களிடையே கையெழுத்து வாங்குங்கள். நான் முதற் கையெழுத்து போடுகிறேன்'' என உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார், வ. உ. சி.

1934 சனவரி 24-இல் தூத்துக்குடிக்கு வருகை தரவிருந்த காந்தியடிகளுக்கு எவ்விதம் வரவேற்பு அளிக்க வேண்டும் என்பதை விளக்குவதற்காக 1933 டிசம்பர் 10-இல் ஒரு பொதுக் கூட்டம் வ. உ. சி. தலைமையில் நடைபெற்றது. காந்தியடிகளின் பதி னெட்டு நிருமாணத்திட்டங்களில் ஒன்றான தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவு கோரி வ. உ. சி. தமது, தலைமை யுரையில் கூறியதாவது:

''இந்த நகரவாசிகள் செய்த மாபெருந் தவத்தினால் மகாத்மா காந்தி இந்நகருக்கு வர இருக்கிறார். அன்ன வரைக்கண்ட பின் மக்கள் யாவரும் தங்களுடைய மூட நம்பிக்கைகளை விட்டுவிட வேண்டும்; தீண்டாமை என்றும் பேயைத் துரத்த வேண்டும்.''

பிராமணரல்லாதார் நலன்களில்...

காந்தி சகாப்தத்தில், சென்னை மாநிலத்தில், பிராமணர், பிராமணரல்லாதார் எனும் சமூக பிரச்னை, அரசியல் இயக்கமாக உருவெடுத்தது. 1916-இல் டாக்டர் டி. எம். நாயர், பிட்டி. தியாகராச செட்டியார் முதலான பிராமணர்ல்லாதத் தலைவர்கள் முயற்சிகளினால் "பிராமணரல்லாதார் அறிக்கை" எனும் கொள்கை விளக்கம் வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில் 'ஜஸ்டீஸ் பார்ட்டி' எனப் பெயர் கொண்ட 'நீதிக்கட்சி' பிராமணரல்லாதார் நலன்களுக்காக அமைக்கப்பட்டது, இந்தக் கட்சி, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு காட்டவில்லை. மாறாக, தேசிய இயக்கத்தை எதிர்த்தது.

பிராமணர், பிராமணரல்லாதார் அரசியல் பிரச்னையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாகக் கொண்டு செலுத்தக் கூடாது எனும் கருத்துக்கொண்ட காங்கிரசில் இருந்த பிராமணரல்லாதத் தலைவர்கள் நீதிக்கட்சியை எதிர்க்க காங்கிரசிற்குள்ளேயே ஒரு தனி அமைப்பை நிறுவினார்கள். இதற்கு "மெட்ராஸ் பிரசிடென்ஸி அசோசியேஷன்" என்ற 'சென்னை மாகாணச் சங்கம்' எனும் பெயரைச் சூட்டினார்கள்.

1917-இல் சென்னை மாகாணச் சங்கம் தோன்றியது. இந்த அமைப்பின் தோற்றத்தைப்பற்றி திரு. வி. க., பின்வருமாறு, விளக்கமளித்துள்ளார்.

"காங்கிரசின் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதவர் நலனை நாடுவதென்று உறுதி செய்யப்பட்டது. திவான் பகதூர் கேசவப் பிள்ளை தலைவராகவும், லாட் கோவிந்ததாஸ், சல்லா குருசாமி செட்டியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், நாகை பக்கிரிசாமிப் பிள்ளை, சீகாழி சிதம்பரநாத முதலியார், தஞ்சை ஸ்ரீநிவாச பிள்ளை, ஜார்ஜ் ஜோசப்

முதலியோர் உதவித் தலைவர்களாகவும் தெரிந்தெடுக்கப் பட்டனர். அமைச்சராகத் தி. வி. கோபால சாமி முதலி யாரும், குருசாமி நாயுடுவும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், சக்கரை செட்டியாரும் யானும் தெரிந்தெடுக் கப்பட்டோம். காரியங்கள் பெரிதும் தி. வி. கோபால சாமி முதலியாரால் கவனிக்கப்பட்டு வந்தன. சென்னை மாகாணச் சங்கத்தின் கொள்கை தென்னாட்டு முழு வதும் பரவ டாக்டர் வரதராஜுலுவால் பிரசாரஞ் செய்யப்பட்டது.''

''1919-இல் ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் ராஜப்பிரதிநிதி செல்ம்ஸ்போர்ட் பிரபு திரும்ப அழைத்துக்கொள்ளப்பட வேண்டும் எனும் தீர்மானத்தை முன்மொழிந்து திரு. வி. க. ஆவேசமாகப் பேசினார். இந்த மாநாட்டில் வ. உ. சி.யும் கலந்து கொண்டார். ஆனால் பேசினாரா? என்பதைப்பற்றி செய்தி இல்லை. சென்னை மாகாணச் சங்கத்தின் தீவிர உறுப்பினராக வ. உ. சி. இருந்தார்.

1920-இல் திருநெல்வேலியில் நடைபெற்ற இருபத் தாறாவது சென்னை மாநில அரசியல் மாநாட்டிற்கு எஸ். சீனுவாசய்யங்கார் தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட் டத்தை ஆதரிப்பதா, வேண்டாமா? என்பதைப்பற்றிக் கடுமையாக விவாதம் நடைபெற்றது. இறுதியாக ஆதரிப் பது என்று பெரும்பான்மையோரால் முடிவு செய்யப் பட்டது. இந்த மாநாட்டில் அரசு வேலை வாய்ப்புகளில், பிராமணர்-பிராமணரல்லாதாருக்குரியக் கொள்கையை வற்புறுத்தி பின்வரும் தீர்மானத்தை வ. உ. சி. கொண்டு வந்ததாக 'இந்து' பத்திரிகையில் (ஜுன் 25, 1920) செய்தி வெளி வந்தது.

''இந்த மாநிலத்தில் நிலவும் தற்பொழுதைய நிலைமை களைக் கவனத்தில் கொண்டு, அரசு பொது வேலை களிலும், கௌரவ உத்தியோகங்களிலும் பிராமண,

பிராமணரல்லாத சமூகங்களுக்கு போதுமான பிரதி நிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.''

1927-இல் ஜூலை 2-இல் கோயமுத்தூரில் நடை பெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டில் கலந்துக் கொண் டார். இந்த மாநாட்டில் ''வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம்'' பற்றியும், காங்கிரசில் பிராமணர் ஆதிக்கம் பற்றியும் வ. உ. சி. பேசினார். 1927-இல் வெளிவந்த (ஜூலை - டிசம்பர்) ''இந்தியன் காலாண்டு ரிஜிஸ்டர்'' ((Indian Quarterly Register) எனும் வெளியீட்டில் முற் கூறிய வ. உ. சி.யின் பேச்சு ஆங்கிலத்தில் பின்வருமாறு வெளிவந்துள்ளது:

''தீர்மானத்தை ஆதரித்து சிதம்பரம் பிள்ளை பேசிய தாவது. காங்கிரசின் அமைப்பாளர்கள், பிராமண ரல்லாதவர்கள். ஆனால் இப்பொழுது அதிகாரம் பிராமணர்களிடம் உள்ளது. இப்பொழுது எடுக்கப்படும் நடவடிக்கை அந்த அதிகாரத்தை மீட்டுக் கொள்வதற் காகத்தான். சுய ஆட்சிக்காகப் பாடுபடும் பிராமணரல் லாத சிறந்த தேசபக்தர்கள் காங்கிரசில் உள்ளனர். இந்தச் சிறந்த பிராமணரல்லாதவர்களுடன், நீதிக் கட்சியின் பிராமணரல்லாதவர்கள் இணைந்து சுய ஆட்சிக்கு பாடு பட்டால், வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கருத்தில் இருந்து கரங்கிரஸ் விலகி நிற்காது. இந்தியாவில் பல்வேறு வகுப்பு களும்; சமூகங்களும் இருக்கின்றவரையில் அவர்கள் அனைவரும் காங்கிரசில் கண்டிப்பாக சேரவேண்டும்.''

இந்த மாநாட்டின் விவாதங்களில் ஆர். கே. சண் முகம் செட்டி, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, திரு. வி. க., ஈ. வெ. ராமசாமி நாயக்கர், சுரேந்திர நாத் ஆர்யா, ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் கலந்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த மாநாட் டின் விளைவாக நீதிக் கட்சியின் பிரமுகர்கள் பலர் காங்கிரசில் சேர்ந்தனர்.

பிராமணர்-பிராமணரல்லாதார் பற்றிய கருத் தோட்டம் 1920-களில் அரசியல் தளத்தில் மிகவும்

பரவலாகப் பேசப்பட்டது. அப்பொழுது தமிழகம் வந்த காந்தியடிகள் தமது சுற்றுப் பயணத்தில் இந்தக் கருத் தோட்டம் பற்றி விவாதிக்க வேண்டியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்னையில் வ. உ. சி.யின் நிலைப்பாடு பற்றி விடுதலைப் போராட்ட வீரரும், ஆய்வாளருமான ம. பொ. சிஞானம் கூறியுள்ள பின்வரும் கருத்து, கவனத்திற்குரியது.

''நீதிக்கட்சி வ. உ. சி.யை இணைத்துக் கொள்ள முயன்றது. சுயராஜ்யத்தைக் குறிக்கோளாகக் கொண்ட வ. உ. சி., சாதிவேற்றுமைகளை வளர்த்த நீதிக்கட்சியில் சேர மறுத்து விட்டார். பிராமணரல்லாதவர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதில் அவர் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். பல துறைகளில் பெரும்பான்மையான பிராமணரல்லாதார் பின்தங்கியிருந்ததைப்பற்றி அவர் பெரிதும் வருத்தமுற்றிருந்தார். தமது ஆழ்ந்த வருத்தத்தை தம்முடைய பேச்சுகளில் வெளியிட்டுள்ளார். ஆனால் அதற்காக பிராமணர்-பிராமணரல்லாதார் சாதிவேற் றுமைகளின் அடிப்படையில் ஓர் அரசியல் இயக்கத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை.''

வ. உ. சி. யின் அரசியல் வாழ்க்கையை முதலில் இருந்து முடிவு வரையில் அறிந்தவர் எவரும் அவருடைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வையும், விடுதலை வேட்கையையும் குறைத்து மதிப்பிடத் துணிய மாட்டார்கள்.

1935-இல் காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் தூத்துக்குடி வந்தபொழுது, நோய்வாய்ப்பட் டிருந்த வ. உ. சி.யைச் சந்தித்தார். அன்று மாலை நடந்தப் பொதுக்கூட்டத்தில், ''சிதம்பரம் பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறைவாசத்தை அறிந்து வருந்தியவர் களுள் நானும் ஒருவன். எனது தேசாபிமானம் மேலும் தீவிரமாக அதுவும் ஒரு காரணமாகும்'' என்று மன நெகிழ்ச்சியுடன் வ. உ. சி.யைப் பாராட்டினார்.

மரணப்படுக்கையில் இருந்த நிலைமையிலும் இந்திய விடுதலையைப்பற்றியும், காங்கிரஸ் கட்சியைப் பற்றியும் சிந்திப்பதிலேயே தோய்ந்து உறைந்திருந்தவர் வ. உ. சி.

''எனது கடைசி நாட்களை காங்கிரஸ் காரியாலயத்தில் கழிக்க விரும்புகின்றேன். என்னை என் வீட்டிலிருந்து காங்கிரஸ் கமிட்டிக்கு கொண்டுபோகவும்'' என்று தமது நண்பர் தூத்துக்குடி தேசபக்தர் மு. சி. வீரபாகு அவர்களிடம் கேட்டுக் கொண்டார், வ. உ. சி.

வ. உ. சி. அமரரானார்

வ.உ.சி. 1936 நவம்பர் 18-இல் இரவு 11.30 மணி அளவில் சிவபதம் அடைந்தார். வ. உ. சி.யின் இறுதி யாத்திரையை காங்கிரஸ் பொறுப்பேற்று நடத்தியதை, சுதேச மித்திரன் (நவம்பர் 21-இல்) பின் வருமாறு வெளியிட்டது.

''அரிய தேச பக்தர் ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை தமது இல்லத்தில் காலமானார். நகரமெங்கும் செய்தி சீக்கிரத்தில் பரவி யாவரும் துக்க சாகரத்தில் ஆழ்ந்தனர். துக்கத்தை தெரிவிப்பதன் அறிகுறியாக ஆங்காங்கு கறுப்புக் கதர்க் கொடிகள் தொங்கவிடப் பட்டன. மளிகைக் கடை முதலாளிகள் கடைகளை அடைத்தார்கள். கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்ட விமானத்தில் ஸ்ரீமான் பிள்ளையின் பிரேதம் பல நூற்றுக்கணக்கான காங்கிரஸ்வாதிகளும் அபிமானிகளும் மௌனமாகச் சூழ்ந்துவர தேசிய பஜனையுடன் இடுகாட்டிற்குக் கொண்டுபோகப்பட்டது.''

வ. உ. சி.யின் இறுதி மூச்சு பாரதியாரின் **''என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்''** எனும் தேசியப் பாடலைக் கேட்டுக் கொண்டே நின்றது. அவருடைய ஆராவேட்கை ''சுதந்திரத் தாகமாகவே'' இருந்தது என்பதற்கு இதுவே தலைமைச் சான்று; இறுதிச் சான்று. இந்தப் பாடலைப் பாடுமாறு அவர் காங்கிரஸ் தொண்டரான சிவகுருநாதனைப் பணித்தார்.

வ. உ. சி. அமரராகி ஓராண்டுக் கழிந்தப்பிறகு 24.10.1937-இல் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி நவம்பர் 18-ந்தேதியை வ. உ. சி. தினமாகக் கொண்டாடவேண்டும் என முடிவு செய்தது. இந்தச் செய்தி காரைக்குடி, 'ஊழியன்' இதழில் (29.10.1937) வெளிவந்துள்ளது.

திலகர் சகாப்தத்தில் மாபெரும் தேசியத் தலைவராக மலர்ந்து, காந்தி சகாப்தத்தில் கருத்து வேற்றுமைகள் சிலவற்றினிடையேயும் காங்கிரஸ் பண்பாட்டுக் காவலராகவே மறைந்தார், வ. உ. சி.

காங்கிரஸ் பண்பாட்டின் இரு கண்களாக நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் விளங்கியதற்கு வ. உ. சி.யும் சிறந்ததொரு சான்றாவார். தேசியம் வளர்த்தத் தமிழில் அவருடைய தமிழ் இலக்கியப் பணிகள் என்றும் பாராட்டுதலுக்குரியன.

10

வ. உ. சி. யின் தமிழ்த்தொண்டு

உலகெங்கும் தேசிய எழுச்சியுடன், இலக்கியப்புத்தெழுச்சியும் உடன் நிகழ்வாக அமைந்துள்ளதை வரலாற்றில் கண்டு வருகின்றோம். இந்தியாவிலும் பண்டைய இலக்கியங்கள் மீதான பெருமிதவுணர்வு, தேசிய எழுச்சியின் ஒரு கூறாகவும், தேசிய எழுச்சியின் விளைவாக புத்திலக்கிய எழுச்சியும் பின்னிப் பிணைந்தது என்பதையும் வரலாற்றில் தெளிவுற அறிகின்றோம்.

சிறைவாசம் பலரை இலக்கியவாணர்களாக உருவாக்கியதையும், உருவாக்கி வருவதையும் வரலாறு அறிவித்துக் கொண்டு தான் வருகின்றது. வ. உ. சி. யும் சிறைவாசமே தம்மை நூலாசிரியராகச் செய்தது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். ''எனது இருபதாவது வயது முதல் யான் கனவிற் கண்டு வந்த 'நூலாசிரியன்' என்னும் பெரிய பெயரினை யான் நனவிற் காணச் செய்தது சிறைவாசமே'' என்று சாற்றியுள்ளார்.

வ. உ. சி. யின் இலக்கியவுணர்வு, அவருடைய குடும்பப் பாரம்பர்யத்தின் வழியே வந்தது. 1905-லேயே அவர் பாரம்பர்யத் தமிழ்ப் புலவர்களால் பாராட்டப் பெற்றவர். மதுரை 'விவேகபாநு' எனும் தமிழ் மாத இதழ் பாரம்பர்யத் தமிழ்ப் புலவர்களால் நடத்தப் பெற்று வந்தது. இதில் (ஏப்ரல், 1905) குறிப்பிடப் பெற்றுள்ள பின்வரும் செய்தி, வ. உ. சி. யின் தமிழ் உணர்வு, அவருடைய தீவிர அரசியல் உணர்வுக்கும் முந்தியது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

''தூற்றுக்குடி வக்கீலும் தமிழ் வித்துவான்கட்குத் தாய் போன்ற பரோபகாரியும், நூலாராய்ச்சியிலேயே

நெடு நேரம் போக்கி மகிழ்பவரும் ஆகிய ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை''.

1901-இல் மதுரையில் தமிழ்ச்சங்கம், மதுரையில் கூடிய சென்னை மாநில காங்கிரஸ் மாநாட்டையொட்டி அமைக்கப்பட்டது. இந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் (1867-1911), ''தேசாபிமானமும், மதாபிமானமும், பாஷாபிமானமும்'' நிறைந்தவர் என்று அவர் காலத்திலேயே புகழ் பெற்றவர். அவருடைய செல்வாக்கின் காரணமாக காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்கு தமிழறிஞர்கள் திரண்டு வந்திருந்தனர். இந்த மாநாட்டில் தான் மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட வேண்டும் என பாண்டித்துரைத் தேவர் பரிந்துரைத்தார்.

புரவலரும், புலவருமான அவர் வேண்டுகோளிற்கு ஏற்ப 1901 செப்டம்பர் 14-இல் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை அமைத்தார் பாண்டித்துரைத்தேவர்.

பண்டைய தமிழ் மன்னர் ஆட்சியில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் தோன்றின என்பது நெடுங்கால வரலாற்றுச் செய்தி. மிக நீண்டகால இடைவெளிக்குப் பிறகு பாண்டித்துரைத் தேவர் உருவாக்கியத் தமிழ்ச் சங்கம் நான்காவது தமிழ்ச் சங்கம் என்று தமிழ் நெஞ்சங்களால் பாராட்டப்பெற்று வருகின்றது.

பாண்டித்துரைத் தேவரும், வ. உ. சி. யும் தேசியத்தால், தமிழ்ப் பற்றால், சைவசமயத் தொண்டால் நட்புறவு கொண்டவர்கள். வ. உ. சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனிக்காக, பாண்டித்துரைத் தேவர் தமது ஜமீனைச் சார்ந்த பாம்பூர் எனும் கிராமத்தை இரண்டு இலட்சத்துக்கு விற்றுப் பெற்றப் பணத்தை வழங்கினார்.*

---

* 1961, சனவரி 4-இல் சென்னை இந்தியன் எக்ஸ்பிரஸ், சண்டே ஸ்டாடண்ட் எனும் இதழில் டி.ஏ.சீனிவாசன் என்பவர் ''பாண்டித்துரைத் தேவர், நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவினார்'' எனும் தலைப்பில் எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. உ. சி. அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்ததற்கு, மகிழ்ச்சி தெரிவித்து, அவருக்கு பாண்டித்துரைத்தேவர் 12-5-1905-இல் பின் வரும் கடிதத்தை எழுதினார்.

''தாங்கள் இச்சங்கத்தின் கல்வி அங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபிவிர்த்திக்கு வேண்டு வனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வெய்தினேன். இவ்வாறு அன்பு கூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்''.

வ. உ. சி.யின் தமிழ்த் தொண்டுகள், கவிஞர், மொழி பெயர்ப்பாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர் முத லான பல நோக்குகளில் ஆய்வுக்குரியன.

கவிஞர்

பண்டையத் தமிழ் மரபுக் கவிஞராகவே வ. உ. சி. விளங்கினார். பாரதியாரைப் போல தேசியப் பாடல் களைப் புனைய வ. உ. சி. நாட்டம் கொள்ளவில்லை. ''கவிராயர்'' என்ற பட்டப். பெயர் தொன்றுதொட்டே வ. உ. சி.யின் குடும்பத்தோடு வழங்கப்பட்டு வந்துள்ளது.

வ. உ. சி.யின் கவிதைத் திறனை அவருடைய 'பாடற் றிரட்டு' எனும் தனிப் பாடல்களின் இரு பாகங்களிலும் 'சுயசரிதை'யிலும், 'மெய்யறம்' மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகளிலும் அறிகின்றோம்.

சிறை செல்வதற்கு முன்பு இயற்றிய தனிப் பாடல் கள் முதல் பாகத்திலும், சிறையிருந்த காலத்தில் எழுதியத் தனிப் பாடல்கள் இரண்டாம் பாகத்திலும் வெளிவந் துள்ளன. இவ்விரண்டு பாகங்களும் ஒன்றாகச் சேர்க்கப் பட்டு 1915-இல் தனிநூலாக வெளிவந்தது. இந்நூலின் 'பாயிர'த்தில் வ. உ. சி., கூறியுள்ளதாவது :

''இப்புத்தகத்திலுள்ள முந்நூற்றெண்பது பாக்களில் ஏறக்குறைய ஒருநூறு கடவுளைப் பற்றிக் கூறுவன

மற்றொரு நூறு ஒழுக்கம் முதலியவற்றைப் பற்றிக் கூறுவன; மீது நூற்றெண்பதும் எனது சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் யான் எழுதியவை. இப்பாக்கள் யான் என்ன சமயத்தைச் சேர்ந்தவன் என்பதையும், எனது மனம் எதனை முதன்மையாகப் பற்றி நிற்கின்றதென்பதையும், யான் சிறையில் எனது காலத்தை எவ்வாறு கழித்தேனென்பதையும், எனது சுற்றத்தார்களிலும் நண்பர்களிலும் யார் யாரை எவ்வெவ்வாறு யான் நேசித்து வருகிறேனென்பதையும், எனக்கு அவர்கள் என்ன என்ன உதவிகள் செய்துள்ளார்களென்பதையும் யான் எனது சிறைவாசத்தில் எவ்வித மேம்பாட்டை அடைந்துள்ளேனென்பதையும் வெளிப்படுத்தும்.''

இந்த நூலில் சில பாக்கள் இயற்றப் பெற்ற நாட்களைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன. முதல் குறிப்பு 6-9-1904-இல் இயற்றப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. திரு. வ. சண்முகம் பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்த போது சொல்லிய பாக்கள் இந்த நாளில் இயற்றப் பட்டுள்ளன.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிப் பெரும் புகழ் கொண்ட பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் இருபத்திரண்டாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டார். அவ்வமயம் வ. உ. சி. அவர்கள் பாண்டித்துரைத்தேவரை வாழ்த்தி இயற்றிய கவிதை விழாவில் அவராலேயே படிக்கப்பட்டது. இந்தக் கவிதையில் முற்காலப் பாண்டிய மன்னர்களின் தமிழ்ப் பணிக்கும், பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப் பணிக்கும் இடையே தான் கண்ட ஒரு முக்கிய வேறுபாட்டை வ. உ. சி. எடுத்துரைத்தார்

தமிழ் வளர்த்த முற்காலப் பாண்டிய மன்னர்கள் திருவருட்பயனைச் சேரும் வழியைப் பற்றி உரைக்கவில்லை. அதுவுமல்லாமல் அயல் இடங்களுக்குச் சென்று, சொற்பொழிவுகள் செய்யவுமில்லை. ஆனால், பாண்டித்துரைத்தேவர் தமிழோ சைவம் வளர்த்து அயல்

இடங்களுக்குச் சென்று உரையாற்றியும் வந்துள்ளார். இங்கு வ. உ. சி.யிடம் தமிழையும், சைவத்தையும் இரண்டறக் காணும் நோக்கு தொடக்க காலத்திலேயே இருந்ததைக் காண்கின்றோம்.

தனிப் பாடல்களில் நாம் அறியத்தக்க ஒன்று, அவருடைய மொழிநோக்கு. 'ஆரியம்', 'செந்தமிழ்' மொழிகளிடையே உயர்வு—தாழ்வு பற்றியக் கருத்துகள் அவ்வப்பொழுது வெளிப்பட்டுக் கொண்டு வருவதை தமிழ் மொழி—இலக்கிய வரலாற்றில் கண்டு வருகின்றோம். இரு மொழிகளையும் சமநோக்குகளில் பார்த்துப் பாராட்டுதலையும் வரலாற்றில் காண்கின்றோம்.

வ. உ. சி.யின் மொழி—இலக்கிய நோக்கில் இவ்விரு மொழிகளைப் பற்றிய அவருடைய கருத்துகள் இரண்டை பின்வரும் பாடல்களில் அறிய முடிகின்றது.

1. ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்
ஓரியலே கற்றாலும் ஓதாராங்—கீரடியில்
நாற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல் ஒன்றங்
கேற்படநாம் கண்டதுண்டோ இன்று.

2. ஆரியமும் செந்தமிழும் ஆராயின் செந்தமிழில்
ஆரியநன் நூலெல்லாம் ஆகியுள—சீரியநம்
செந்தமிழில் இன்றுமுள சீர்சான்ற நூல்களுக்கோ
அந்தமிலை காண்மின் அடுத்து.

மேற்காணும் இருபாடல்களில் வ. உ. சி. ஐயமற தமிழின் உயர்வைச் சாற்றியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் திருக்குறள் போல் சம்சுகிருத மொழி நூலில் காண இயலுமோ என்று வினா தொடுத்துள்ளார், வ. உ. சி. இரண்டாவதாக தமிழ் மொழியில் தொடர்ந்து நூல்கள் முடிவில்லாமல் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன என்னும் இந்த நிலை சம்சுகிருத மொழியில் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தமிழில் சுயசரிதையை கவிதையாகப் படைப்பதை 'நவீனமானது' என்று பாரதியார் 1910-இல் குறிப்பிட்டார். தமது 'ஸ்வ சரிதை'யின் தொடக்கத்தை 'கனவு' எனும் தலைப்பில் தனி நூலாக 1910, நவம்பரில் முதன் முதலாக வெளியிட்டார் பாரதியார். இந்தச் சிறிய நூல் அரசாங்கத்தாரால் 1911-இல் தடைசெய்யப் பட்டது. தேசிய உணர்வுடன் ஆங்கிலேயருக்கு எதிராக சில கருத்துகள் கூறப்பட்டுள்ளதாக ஆட்சியாளர் கருதியதால் தடை செய்யப்பட்டது. இதை எதிர்த்து பாரதியார் 'இந்து' பத்திரிகைக்கு எழுதியக் கடிதத்தில் எழுத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முகவுரையில் சுயசரிதையைக் கவிதையாகப் படைப்பதைப் பற்றியத் தமது கருத்தை பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

''இச்சிறிய செய்யுள் — நூல் விநோதார்த்தமாக எழுதப் பட்டது.... இதன் இயல்பு தன் கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது. இஃது தமிழறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத்தக்கதுதானா என்று பார்த்திடும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் பதிப்பிடுகிறேன்.''

வ. உ. சி. தமது சுய சரிதையை ''காவியமுறை'யில் சிறையில் எழுதத் தொடங்கிவிட்டார்; சிறைவாசத்திற்குப் பிறகு முடித்தார். ஆனால் நூல் வடிவில் 1946-இல், அவர் மறைவிற்குப் பிறகு, வெளிவந்தது. சுய சரிதையின் உள்ளடக்கச் செய்திகள் ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. சுய சரிதைக் கூறுகளில் பெரும்பான்மையான அரசியல் செய்திகளாக அமைந்துள்ளதால், வ. உ. சி.யின் சுய சரிதை தேசிய அரசியல் இயக்க வரலாறாகவும் பெருமளவில் அமைந்துள்ளது.

1915-இல் வெளிவந்த ''வள்ளியம்மை சரித்திரம்'' எனும் நூல் வெண்பா யாப்பில் அமைந்தது என்பதும்,

அதன் உண்மை ஆசிரியர் வ. உ. சி., என்பதும் இந் நூலின் முன் பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

கவிதை வடிவில் கடிதம் ஒன்றை வ. உ. சி. எழுதி, கடித இலக்கியப் பணியாற்றியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்க மாத இதழான 'செந்தமிழ்' ஆசிரியர் பேரறிஞர் மு. ராகவய்யங்கார் அவர்களுக்குத்தான் கவிதை வடி வில் கடிதம் எழுதினார்.

''பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்'' எனும் தலைப்பில் பேரறிஞர் மு. ராகவய்யங்கார் தேசாபி மானக் கண்ணோட்டத்தில் எழுதினார். இந்தக் கட்டுரை யின் பின்வரும் இறுதி வரிகள், கட்டுரையாளரின் உள்ளத் துடிப்பை உணர்த்துவன.

''இத்தகைய விரிந்த சிந்தனையும், தேசாபிமானமும் கொண்டு, 'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தினூக்கு, இடைக்கண் முரிந்தார் பலர்' என்றவாறில்லாமல், தள ராத உறுதியுடன் நின்று நல்லறிஞர்கள் நம்மவர்க்கு வழிகாட்ட முயல்வாராயின், யாவரும் அவ்வழியையே பின்பற்றி நல்வாழ்வு பெறுவர் என்பது திண்ணம்''.

வ. உ. சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சிகள், மு. ராகவய்யங்காரின் கட்டுரையின் அடிநாதத்தை ஒத்தனவாகும். ஆகவே, வ. உ. சி. அவர்களின் தமிழ் நெஞ்சத்தை இந்தக் கட்டுரை கவர்ந்ததில் வியப்பில்லை. தமது பாராட்டை 28-10-1907-இல் எழுதியக் கடிதக் கவிதையில் தெரிவித்தார். கடிதத்தின் தொடக்கத்தில் சமஸ்கிருதமும், தமிழும் 'இருமணிகள்' என்று குறிப் பிட்டுள்ளார்.

வ. உ. சி.யின் பாராட்டுதலைப் பெற்ற மு. ராகவய்யங் கார், அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, ''செந்தமிழி''ல் வெளிவந்த அவருடைய ''வீரத்தாய்மார்கள்'' எனும் கட்டுரைக்காக பாரதியாரின் பாராட்டுதல்களையும் பெற்றார். 18-10-1907-இல் பாரதியார் எழுதிய கடிதத் தில், பின்வருமாறு, ராகவய்யங்காரைப் பாராட்டியுள்ளார்.

''தங்கள் பாண்டியத்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'ஸ்வதேச பக்தி' என்ற புது நெருப்பிற்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்.''

வ. உ. சி.யின் தமிழாய்விற்கு 'தமிழ்தாத்தா' டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் உதவி செய்துள்ளார். அவருடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவின் பொழுது, வ. உ. சி. வாழ்த்துப் பாக்களைக் கொண்டு பாராட்டினார். தமது பாராட்டில் டாக்டர் உ. வே. சா. வின் பதிப்புப் பணியின் சிறப்புகளை நெஞ்சாரப் போற்றியுள்ளார்.

தேசபக்தச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயர் மறைவு குறித்து வ். உ. சி. எழுதிய இரங்கற்பாக்கள் பத்து வெண்பாக்களாக சுதேசமித்திரனில் 27-5-1916-இல் வெளிவந்தன. இவற்றுள், ஒன்று பின்வருவது:

தமிழ்மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவுள்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க்—கமிழ்
தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு.

மெய்யறம்

வ.உ.சி.யைக் கவர்ந்தத் தமிழ் இலக்கிய நூல்களுள் முதன்மையானது, தலையாயது, திருக்குறளே. திருக்குறள் கருத்துகளைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்கி, ''மெய்யறம்'' எனும் செய்யுள் நூலை வெளியிட்டார், வ.உ.சி. இந்நூல் அவராலேயே வெளியிடப் பெற்ற மூன்றாவது நூலாகும்.*

---

* ''மனம் போல வாழ்வு'', ''அகமே புறம்'' எனும் இருநூல்களைத் தொடர்ந்து மூன்றாவதாக வெளிவந்த இந்த நூலில், ''நன்றி கூறல்'' எனும் பகுதியில் வ. உ. சி. கூறியுள்ளதில் பின்வரும் செய்திகள் குறிப்பிடத்தக்கன.

1. எனது இருபதாவது வயது முதல் யான் கனவிற் கண்டு வந்த ''நூலாசிரியன்'' என்னும் பெரிய பெயரினை யான் நனவிற் காணச் செய்ததும்,

அக்காலத்தில் ஹைகோர்ட்டு வக்கீலாக, சேலத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த சி. இராஜகோபாலாச்சாரி (பிற்கால ராஜாஜி) 'மெய்யற'த்தைப் பாராட்டி எழுதியதாவது :

''இந்நூலிற் கூறியுள்ள அருமையான பொருள்களை யான் இனிதுரைத்தேன். இந்நூலை யான் பெரிதும் மதிக்கின்றேன். முற்காலத்திய திருவள்ளுவர் குறளை,

---

2. எனது குடும்பத்தார்க்குத் தொன்றுதொட்டு வழங்கி வருகிற ''கவிராயர்'' என்னும் பட்டப் பெயரை யான் வேண்டும் சமயங்களில் உபயோகித்துக் கொள்ளச் செய்ததும்,

3. யான் அடைந்துள்ள (தாக நினைத்துக் கொண்டிருக்கிற) கடவுள் ஞானத்தையும், தமிழ் ஞானத்தையும் யான் அடையச் செய்ததும்,

4. சென்ற ஒன்றரை வருஷ காலமாக யான் பொருளீட்டு முயற்சியில் பிரவேசிக்க முடியாது கடன் கொண்டும், இரந்துண்டும் சிவனடியானாகச் செய்ததும்,

5. யான் சென்ற 1908-ம் வருஷத்தில் அடைந்த ஆறுவருஷ (நாடு கடத்தல்)த் தீர்ப்பே.

6. ஆதலால் அவ்வரிய தீர்ப்பை யான் பெறுவதற்கு முதற்காரணமாயிருந்த எனது முந்திய கருமங்களுக்கும், துணைக்காரணராய் நின்ற சில ஐரோப்பிய பிரபுக்களுக்கும் யான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.''

முதல் இரு நூல்களில் மொழிப் பெயர்ப்பாசிரியராகப் பெயர் பெற்ற வ. உ. சி., 'மெய்யறம்' மூலம் நூலாசிரியராகவும், ''கவிராயராகவும்'' பெயர் பெற்றார். இந்த அறநூலிலும் அரசாங்க விரோதச் செய்திகள் இருக்குமோ என ஐயமுற்று சென்னை அரசு கருத்தறிய, அரசாங்கத் தமிழ் மொழிப் பெயர்ப்பாளரிடம் இந்நூலை அனுப்பியது. குறிப்பாக பின்வரும் வரிகள் (தொழில் அதிகாரத்தில் வருவன) கோடிட்டுக் காண்பிக்கப்பட்டன.

1. அரியநற் றொழில்சில வறிதலோர் கடனாம்.
2. படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க.
3. படைவகுத் தமர்செயு நடையெலா மறிக.
4. புவிகடல் விண்மிசை போவன வூர்க.
5. எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக.
6. உழவ்வா ணிகங்கைத் தொழில்சில வறிக.

இந்த வரிகளிலும், பிறவற்றிலும் அரசாங்கத்திற்கு எதிரானக் கருத்துகள் இல்லை என்றும், அதனால் மேல்நடவடிக்கைகளுக்கு அவசியம் இல்லையென்றும், அரசு தமிழ்மொழிப் பெயர்ப்பாளர் தமது கருத்துரையில் தெரிவித்தார். (அரசு ஆணை எண். 2519 — நீதி-ரகசியம் — 16-11-1914)

— மொழிபெயர்ப்பாசிரியர்

இக்காலத்திய கருத்துகளால் மணப்படுத்தி அற்பக் கல்வி யுடையாரும் உணரத்தக்கவாறு செய்யலாமென்பதை இந்நூல் காட்டுகின்றது.''*

மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தண வியல், மெய்யியல் என்று ஐந்து இயல்களைக் கொண்ட 1250 செய்யுள்களைக் கொண்டது, 'மெய்யறம்'. வாழ் வியல் நூலாக வெளிவந்த இந்த நூலை, சுப்பிரமணிய சிவா, அவருடைய 'ஞானபாநு' எனும் மாத இதழில் (செப்டம்பர், 1914) விரிவாக விமர்சனம் செய்துள் ளார். அதில் ஒரு பகுதி, பின்வருவது:

''அரசியல், ராஜாங்க விவகாரங்களில் மனத்தைச் செலுத்துகின்ற ஒவ்வொருவரும் படித்து, மனனம் பண்ணத்தக்கது. நாம் பிள்ளையவர்களுடன் நெடு நாளாக நெருங்கிப் பழகியிருக்கின்றோமாயினும் அவருக்கு ராஜதர்மத்தில் இவ்வளவு அறிவிருக்குமென்று நாம் நினைக்கவில்லை. 'அரசியல்' படிக்கப் படிக்க ஆனந்தத் தைத் தருகின்றது; அறிவை பெருக்குகின்றது.'' வ. உ. சி. யுடன் ''நெருங்கிப் பழகிய'' சுப்பிரமணிய சிவாவே, வ. உ. சி.யின் அரசியல் ஞானத்தை இந்த நூலில் ஆழ அறிந்து வியப்புற்றார் எனும் செய்தியும் வியப்பிற் குரியதே.

மெய்யறிவு

நீதிநெறி ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தும் நோக் கில் வ. உ. சி. இயற்றிய மற்றொரு செய்யுள் நூல், ''மெய்யறிவு''. நூறு வெண்பாக்களைக் கொண்ட இந்த நூலின் தோற்றம் குறித்து நூலின் பாயிரத்தில் வ. உ. சி., கூறியுள்ளதாவது:

''இராஜநிந்தனைக் குற்றத்திற்காக யான் நாடு கடத் தல் தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர் சிறையில் வசித்த

---

* ''வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் இயற்றிய பாடற்றிரட்டு'' எனும் நூலின் விளம்பரப் பகுதியில், 'மெய்யறம்' பற்றிய மதிப்புரையாக வெளி வந்துள்ளது.

காலத்தில் என் பக்கத்தில் வசித்துக் கொண்டிருந்த மற்றக் குற்றவாளிகளுக்குப் பல பாவங்களையும் அவற்றால் இம்மையிலும் மறுமையிலும் விளையும் கேடுகளையும் அவற்றை நீக்குதற்குரிய மார்க்கங்களையும் அடிக்கடி யான் எடுத்துக் கூறுவதுண்டு. ஒருநாள் அக்குற்றவாளிகளிற் சிலர், "பல பாவங்களையும் தொகுத்துச் சில பாக்களாகச் செய்து கொடுத்தால் அவற்றை நாங்கள் மனப்பாடம் செய்து வைத்து அடிக்கடி நினைத்துக் கொள்வோம்" என்று கூறினர். அவர் சொற்படி அன்றிரவு அந்நூலின் 'மறங்களைதல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன். அவற்றை அவர்கள் மனப்பாடம் செய்த பின்னர் அவர்களது விருப்பப்படியே இந்நூலின் 'அறம் புரிதல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன்.

"பின்னர் இவ்விருபது வெண்பாக்களையும் இரண்டு அதிகாரங்களாக்கி, அவற்றிற்கு முன்னும் பின்னும் சில அதிகாரங்களைச் சேர்த்து மொத்தம் நூறு வெண்பாக்களாக்கி அவற்றை 'மெய்யறிவு' என்னும் பெயருள்ள இந்நூலாக உருவகப்படுத்தினேன்."

மொழிப்பெயர்ப்பாசிரியர்

வ. உ. சி.யின் மொழிபெயர்ப்புப் பணி, ஜேம்ஸ் ஆலனின் (1864-1912) ஆங்கில நூல்கள் சிலவற்றில் இருந்து தொடங்கியது. வ. உ. சி.யின் தோழர்களான பாரதியாரும், சுப்பிரமணிய சிவாவும் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் சில நூல்களை மொழிபெயர்த்துள்ளனர். அவர்கள் இருவரும் இந்து சமயப் பண்பாட்டுத் தொடர்பான நூல்களைத் தமிழாக்கம் செய்துள்ளனர். ஆனால், வ. உ. சி., ஜேம்ஸ் ஆலனின் நூல்களை முதன் முதலில் மொழிப் பெயர்ப்பிற்குத் தேர்ந்தெடுத்தார். ஜேம்ஸ் ஆலன், இந்திய ஆன்மிகத் தத்துவச் சிந்தனையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். "கீழ்நாட்டாரே

மெய்ஞானக் கருவூலம்'' என்று ஜேம்ஸ் ஆலன் அடிக்கடி கூறுவதுண்டு என வ. உ. சி. குறிப்பிட்டுள்ளார். பாரதி யாரும், ஜேம்ஸ் ஆலனை, ''அந்நிய தேசத்தாராயினும், நமது தேசத்து வேதாந்த சாஸ்திரத்தின் உண்மைகளை நன்கு தெளிந்துணர்ந்த அறிஞர்'' எனப் பாராட்டியுள் ளார். 1905-லேயே வ. உ. சி., ஜேம்ஸ் ஆலனின் நூல் களை ஆர்வமுடன் படித்திருக்கிறார்; அப்பொழுதே சில நூல்களைத் தமிழாக்கம் செய்யவும் முடிவு செய்தார். ஆனால், அந்த முடிவைச் செயலாக்கச் சிறைவாசம் துணைபுரிந்தது.

மனித வாழ்விற்கு அடிப்படையான அறிநெறிகளை எளிய முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும் எனும் கொள்கையைக் கடைப்பிடித்தவர் வ. உ. சி. ''உயிர் களுக்கு உதவுதலே கடவுளை ஆராதித்தல்'' தமது கொள்கை என்று வ. உ. சி. கூறியுள்ளார். இதற்கிணங் கவே, ஜேம்ஸ் ஆலனின் சில நூல்களைத் தமிழாக்கம் செய்தார், வ. உ. சி.

"Out of the Heart" எனும் நூலை, ''அகமே புறம்'' என்றும்; "From poverty to power" எனும் நூலின் முதல் பாகமான "The way of peace" என்பதை, ''சாந்திக்கு மார்க்கம்'' என்றும்; இரண்டாம் பாகமான, "The path of prosperity" என்பதை, ''வலிமைக்கு மார்க்கம்'' என்றும்; "As a man thinketh" எனும் நூலை, ''மனம் போல் வாழ்வு'' என்றும் தமிழாக்கம் செய்து வெளியிட்டார்.

மொழி பெயர்ப்பில் தமிழ் மரபைப் பெரிதும் போற்றினார். ஆங்கில மொழி மரபில் கூறப் பெற் றுள்ள சில அறவுரைகளை, அப்படியே தமிழில் தரா மல், அவற்றோடு ஒத்தத் தமிழ் முதுமொழிகளைப் பயன் படுத்தியுள்ளார்.

தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்ய திட்டமிட்டதாகவும் தெரிகின்றது. ''மனம் போல் வாழ்வு'' எனும் நூலின் முன்னுரையில் திருக்குறள் — அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததாகக்

கூறப்பட்டுள்ளது. ஆனால், இதைப் பற்றிய மேல்விவரம் கிடைக்கவில்லை.

பதிப்பாசிரியர்

தமிழில் பதிப்புத் துறை வளர்ச்சியில் பேரறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை, 'தமிழ் தாத்தா', உ. வே. சாமிநாதய்யர் முதலானோர் வழிகாட்டினர். பழந்தமிழ் நூல்கள் கண்டெடுக்கப் பெற்று பல்வேறு விளக்கக் குறிப்புகளுடன் அச்சேறி வெளிவந்ததும், தமிழ் உணர்ச்சியில் புதிய வலிவும் பொலிவும் ஏற்றம் பெற்றன.

திருக்குறள் பதிப்பு

வ. உ. சி.யும் பதிப்புத் துறையில் ஆர்வம் கொண்டார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, திருமணம் செல்வக் கேசவராய முதலியார், பேராசிரியர் த. கனக சுந்தரம் பிள்ளை, பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணியம் பிள்ளை ஆகியோர் உதவியுடன் பதிப்புத் துறையில் தமது பங்களிப்பை நல்கினார். அவருடைய உயிர் மூச்சாக விளங்கிய திருக்குறள் மீது அவர் கவனம், பதிப்புத் துறையில், முதன் முதலில் சென்றது. பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர் திருக்குறளின் உரையாசிரியர்கள் ஆவர். இவர்களுள், மணக்குடவர் உரை, வ. உ. சி.யைக் கவர்ந்தது. 1918-இல் திருக்குறள் அறத்துப் பாலுக்குரிய மணக்குடவர் உரையை வெளியிட்டார். இதற்கு முன் மணக்குடவர் உரை அச்சேறவில்லை என்பதும், அதை வ.உ.சி.யே முதன் முதலில் அச்சேற்றித் திருக்குறள் உரைப் பதிப்பிலே முன்னேற்றம் கண்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்தப் பதிப்பில் திருக்குறளில் மூலபாட பேதங்களில் தமக்கென சில திருத்தங்களையும் செய்தார் வ. உ. சி.

தொல்காப்பியப் பதிப்பில் வ. உ. சி.யின் பங்களிப்பும் உண்டு. 1928-இல் "தொல்காப்பியம்—இளம்

பூரணர் உரை''யைப் பதிப்பித்தார். பதிப்புரையில் தமது தொல்காப்பிய ஈடுபாட்டை பின்வருமாறு குறிப்பிட்டார். ''தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப் பாகுபாடு, செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருப்பதைக் கண்டேன்.''

தொல்காப்பியப் பதிப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் முதல் இரு இயல்களான அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டிற்குமான இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்தார், வ. உ. சி. பொருளதிகாரத்தின் மற்ற ஏழு இயல்களையும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையுடன் இணைந்து பதிப்பித்து வெளியிட்டார்.

வ. உ. சி.யுடன் இணைந்து பதிப்பித்ததைப் பற்றி பேராசிரியர் எழுதியதாவது.

''தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மற்ற ஏழு இயல்களையும் வெளியிட வேண்டும் என்ற ஆத்திரம் வ. உ. சி. அவர்களுக்கு மிகுதியாக இருந்தது. அவற்றை நான் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் என்று வ். உ. சி. அவர்கள் விரும்பினார்கள். இவர்களிட்ட ஆணையை நானும் மேற்கொண்டு தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுவதையும் பதிப்பித்தேன். அப்பதிப்பு எங்கள் இருவர் பெயராலும் வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு* பதிப்பகத்தில் இருந்து வெளிவந்தது.

வ. உ. சி. அவர்களும், ''ஏழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியர் யான்—உண்மையில் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களே'' என்று ஒளிவு மறைவில்லாமல் பாராட்டி எழுதினார்.

---

* வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு (1826-1891), சிறந்த தேசபக்தர், இதழாசிரியர், பேரறிஞர், பலமொழிப் பதிப்பாளர். சென்னையில் பதிப்பகம் நடத்தியவர். தெலுங்கரான இவர் வ. உ. சி.யிடம் பெருமதிப்பு கொண்ட வர்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் முப்பெரும் பிரிவுகள் கொண்ட தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரப் பகுதியையும் வ. உ. சி. பதிப்பித்தார். 1928-இல் தொல்காப்பியம் இளம்பூரணர் உரையோடு, எழுத்ததிகாரத்தின் ஆறாவது, ஏழாவது பிரிவுகளான உருபியல், உயிர் மயங்கியல் பதிப்பிக்கப்பட்டது. ஒன்பது இயல்களுள் இந்த இரண்டு இயல்கள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டது.

1936-இல் தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையுடன் ஆறு, எழு, எட்டு, ஒன்பதாம் பிரிவுகளான மெய்ப்பாட்டியல், உவமஇயல், செய்யுளியல், மரபுஇயல் ஆகியன பதிப்பிக்கப்பட்டன.

தொல்காப்பியத்திற்கு, திருக்குறளைப் போலவே பலர் உரைகள் எழுதியுள்ளனர். நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகியோர் வெவ்வேறு இயல்களுக்கு, அதிகாரங்களுக்கு, சிலவற்றிற்கு, மட்டும் உரைகண்டுள்ளனர். ஆனால், தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்டவர், இளம்பூரணர். இந்தச் சிறப்பின் காரணமாக இவர் 'உரையாசிரியர்' என்றும் குறிப்பிடப்பட்டு வருகின்றார். இவரிடத்தில் வ. உ. சி.க்கு மிக்க மதிப்புண்டு.

இன்னிலை பதிப்பு

வ. உ. சி. பதிப்பித்த 'இன்னிலை' எனும் நூலின் பதிப்பு, அவர் ஏமாற்றப்பட்டதை, அவர் காலத்திற்குப் பிறகு, அறிய வைத்தது. பதிப்புத் துறையில் சில சமயம் போலி நூல்கள் புகுந்து குழப்பத்தை ஏற்படுத்திவிடக் கூடும். பழஞ்சுவடிகளைத் தேடுவோரின் 'இலக்கியப் பசி'யைப் பயன்படுத்திக் கொண்டு ஏமாற்றிய புலவர் சிலரும் இருந்துள்ளனர். அவர்களுள் ஒருவர், 'இன்னிலை' எனும் நூல் தமிழ் இலக்கியப் பாகுபாடுகளில் ஒன்றான' பதினெண்கீழ் கணக்கு நூல்கள்'' பிரிவைச் சார்ந்தது எனப் போலியுரை புகன்று வ. உ. சி.யை

ஏமாற்றிவிட்டார். வ.உ.சி.யும் பொய்யுரையைத் தேர்ந்து தெளியாமல் நம்பிவிட்டார். வ.உ.சி. மறைவிற்குப் பிறகு இந்த உண்மை விளக்கப்பட்டது.

உரையாசிரியர்

வ.உ.சி. உரையாசிரியராக தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள எடுக்கப் பெற்ற முதன் முயற்சி, தொல்காப்பியத்தில் தொடங்கியதெனலாம். ஆனால் இந்த முயற்சியை அவர் கைவிட்டதற்கானக் காரணத்தைக் கூறியுள்ளார். "இளம் பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரையெழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன்." இவ்வாறு அவர் பதிப்பித்த "தொல்காப்பியம், இளம்பூரணர் உரை"யின் முன்னுரையில் கூறியுள்ளார்.

திருக்குறள் உரையாசிரியராக

